பாலு
பிரதர்ஸ்
பொங்கல் மலர்

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது

வசனம்: மு. கருணாநிதி பாடல்கள்: கண்ணதாசன்

விநியோகிப்போர்:

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை உள்பட: ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி: வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சித்தூர், பாண்டிச்சேரி உள்பட: கீதா பிக்சர்ஸ், குடியாத்தம்: திருச்சி, தஞ்சை, காரைக்கால் உள்பட: ராணி பிக்சர்ஸ், திருச்சி: கோவை, நீலகிரி: கோயம்புத்தூர் பிக்சர்ஸ், கோயம்புத்தூர்; சேலம்: ஸ்ரீ ஆறுமுகம் பிக்சர்ஸ், பொள்ளாச்சி: மலபார்: ராதாகிருஷ்ணா பிலிம்ஸ், ஆலப்புழை: மைசூர் ஸ்டேட், தென் கன்னடம், குடகு: யசோதா பிலிம்ஸ் கார்ப்பரேஷன், பங்களூர்-2: சென்னை நகரம்: ராஜேஸ்வரி பிலிம்ஸ், சென்னை; இலங்கை: சிலோன் என்டர்டெய்ன்மென்ட்ஸ் லிமிடெட், கொழும்பு: எம். எம். எஸ்: ஜியான் சிங் & கோ., லிமிடெட், சிங்கப்பூர்.

ஜனவரி
4 முதல்
N. Sabhapathi B.A.
NEWS AGENT,
20. BANADURAI KOSAVAN ST.
KUMBAKONAM.
வேலைக்காரி
மகள்
ராஜ்யம் பிக்சர்ஸ்
தயாரிப்பு.........
தமிழ்
டைரக்ஷன் ரங்கநாததாஸ்
மேற்பார்வை. பிரஸாத்
சென்னை
வெலிங்டன்
பிராட்வே
மற்றும்
தமிழ்நாடெங்கும்
BELL
RELEASE

எமது நூல்கள் எதிர்காலப் படிக்கட்டுகள்!

எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

அறிவுப் பணி செய்து ஆனந்தம் காண்போம்!

அண்ணா தீட்டியவை

ரோமாபுரி ராணிகள்	2-4-0
கம்பரசம்	1-8-0
குமரிக்கோட்டம்	1-0-0
கற்பனைச் சித்திரம்	1-0-0
சிறு கதைகள்	1-0-0
பணத்தோட்டம்	1-0-0
வர்ணாஸ்ரமம்	0-12-0
நிலையும் நினைப்பும்	0-12-0
ஆறு கதைகள்	1-0-0
நாம்	1-0-0
கபோதிபுரக் காதல்	1-4-0

படித்து மகிழ்வீர்!

அரங்கண்ணல்
ரோம் 1-8-0
ரஸ்புடீன் 1-8-0
இதய கீதம் 0-12-0

வில்லாளன்
இருளும் ஒளியும் 1-8-0

மதியழகன்
நன்றி யாருக்கு 1-0-0
அறிவின் தூதர்கள் 0-12

விரைவில் வெளிவருபவை

மு. கருணாநிதி தீட்டிய
தெருக்கூத்து (*கற்பனை ஓவியங்கள்*)
நாடும் நாடகமும்
மந்திரி குமாரி (*நாடகம்*)
ஒரே முத்தம் (,,)
இரத்தக் கண்ணீர் (*சரித ஓவியம்*)
நாம் (*திரை ஓவியம்*)

அரங்கண்ணல் தரும்
புழுதி மேடு (*சிந்தனை ஓவியங்கள்*)

கே. எ. மதியழகன் தீட்டிய
புதுமைத் தாகம் (*கட்டுரை*)

தில்லை வில்லாளன் தரும்
கிழவனின் கனவு (*நாடகம்*)

ப. வாணன் தீட்டிய
ஏமாற்றம் (*சிறு கதைகள்*)

அறிவு விருந்துகள்

*

வாணன்
ரஷ்ய இலக்கியம் 1-8-0

மு. கருணாநிதி
விடுதலைக் கிளர்ச்சி 1-0-0
பூந்தோட்டம் 0-3-0

சிற்றரசு
சாக்கிய சிம்மன் 1-0-0
கொலம்பஸ் 1-0-0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம், திருச்சி.

வியாபாரிகள் அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்

தோழர் சி. பி. சிற்றரசு

எழுதியவை

1. போர்வாள் ...1—0—0
2. எமிலிஜோலா (*முதற்பாகம்*) ...1—0—0
3. எமிலிஜோலா (*2-ம் பாகம்*) ...1—0—0
4. இரத்தத் தடாகம் ...1—0—0
5. சாய்ந்த கோபுரம் ...1—0—0
6. மதி (*நாடகம்*) ...1—0—0
7. தங்க விலங்கு (*நாடகம்*) ...1—0—0
8. விடுதலை வீரன் ...1—0—0
9. சுதந்திரத் தந்தை ரூசோ ...1—0—0
10. மந்திர முட்டை ...1—0—0
11. விஷக் கோப்பை ...1—0—0
12. ஜோதிப் பெண் ...1—0—0
13. மார்டின் லூதர் ...0—10—0
14. வெங்கலச் சிலை ...0—8—0

தோழர் **கி. மனோகரன்**

எழுதியது

15. உரிமைக் குரல் ...0—10—0

தமிழ் மன்றம்

தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி

மலர் 11

திராவிடநாடு

இதழ் 29 30

★ திராவிடர் திருநாள் ★

காற்றால் ஆடும் கதிர் ஒலி, கானமாகக் கேட்கிறது, அவனுக்கு! நிமிர்ந்து பார்க்கிறான்-பொன்னாடை போர்த்தியதுபோலக் காட்சி தருகின்றன, கழனிகள். அங்கே-கையிலே கருக்கரிவாள் ஏந்தி, கக்கத்திலே அறுத்த நெற்கதிர்களோடு, அன்னமெனச் செல்கிறாள், அழகு மனைவி. வீட்டைப் பார்க்கிறான்-வெண் சுண்ணம் அடித்து கூட்டி மெழுகியதால், அங்கே ஒளிவிடும் அழகு அவனுக்கோர் புது உணர்வு தருகிறது. அங்கே-சிற்றாடை தடுக்க - தத்தை போல் தாவி-நிலாமுற்றத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறாள்-சின்ன மகள். கமலக் கரங்களால், தும்பைப் பூக்களைக் கொட்டுகிறான் குறுநடைச் சிறுவன்! பிள்ளைக் கனி!! - ஆகா, அந்தத் தும்பைப்பூவின் நிறம்தான் எவ்வளவு வெண்மையானது-அதையும் மிஞ்சும் அந்த உழவனின் உள்ளம்தான் எத்தகையது. பாடுபடுகிறான்-தசைகள், அசையாத நேரமில்லை, அவனுக்கு. உழைப்புதான்! உழைப்பிலே மலர்கிறது, செந்நெல் கதிர்கள்!—ஆனால், 'கதிர்' கண்டதும், தனக்கு 'வாழ்வளிக்கும்' தாயை மறந்துவிடவில்லை. பலன் பெற்றதும், பலன் தந்தோரை மறக்கும் பதரல்லவே அவன்! அதனால் 'மாதாவுக்கு' மரியாதை செய்யநினைக்கிறான். தன்னையும், தன்னைச் சார்ந்திருக்கும் கோடானுகோடி உயிர்ராசிகளையும் உய்விக்கும் அன்னை வழங்கும் பரிசைக் கண்டு பரவசமடையும் அவன், விழா கொண்டாடுகிறான்! விளைச்சல் விழா! வியர்வை பயன் தந்த நாளைக் குறிக்க ஓர் விழா! பலன் கருதாது பரிசளிக்கும் பூமியன்னையின் ஞாபகார்த்தமான விழா!-ஏன், அவனுக்குப் பெருமிதம் வராது? "பூமியிருக்கும் வரை எனக்கேது கவலை?" என்று பூரிப்போடு பார்க்கிறான். அந்தப் பூரிப்பிலே, உலகமே, காட்சி தருகிறது, மனக் கண்ணில். நிமிர்ந்து பார்க்கிறான்! தனது 'குப்பத்தில்' கோலமிடும் கோதையர் கும்பல்! குடமெடுத்தேகும் குலமாதர் வரிசை! மலர் சூடி மகிழும் மகளிர்—அவர்தம் மொழிகாடியேகும் வீரர்! பள்ளுப் பாட்டு! பரவசகீதம்!!— அவனது அரும்பு மீசைகளிலே, அவன் இதயத்திலிருந்து ஓடும் இன்ப மூச்சுகள், தாக்குகின்றன. வீரம் கொட்டும் விழிகளிலே கனிவு வழிகிறது! முறுக்கேறிய உடம்பினிலே குதூகலம்!! ஏறு நடைபோடுகிறான்—'எமக்கு நிகர் யாரிங்கே?' என்பது தென்படுகிறது, அவன் தோற்றத்தில்.

*

இத்தகைய உழவனைக் கண்டார், உலகப் பெரியார்! உளம் மகிழ வரைந்தார், "உழுதுண்டு வாழ்வாரே, வாழ்வார் — மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்று. வள்ளுவப் பெருந்தகை சித்தரித்த, 'உழுதுண்டு வாழ்வாருடன்', இன்றைய உழவரை நினைத்துப் பார்த்தால், நெஞ்சு சிலிர்க்கும்! 'ஏர்பிடித்தவனுக்கே பார் ஆளும் வேந்தன் அடைக்கலம்'—என்றோர், நிலை, தமிழகத்தில் இருந்ததுண்டு. அந்தத்தமிழகமா, இன்று? இல்லை! இல்லை!! மிடுக்கோடு பார்க்கும் உழவன் இல்லை — ஆளரசுக்கு அடிமைப்பட்டு கூனல் முதுகாகிப் போன 'ஏழை' இருக்கிறான். ஆனால், அந்த 'ஏழை'யிடம் பரம்பரைக் குணம் மட்டும் மாறிப்போய் விடவில்லை! தமிழ்ப் பண்பு, காய்ந்து போகவில்லை! தன்னையும் உலகையும் வாழ்விக்கும் 'தாயை'ப் போற்றத் தவறவில்லை, அவன். உடல் கறுத்து விட்டது—ஆனால் உள்ளம் 'தும்பை'ப்பூவாகவேயிருக்கிறது. அவனால் உலகம் வாழ்கிறது! வள்ளுவப் பெருந்தகை வர்ணிப்பதுபோல, அவனைத்தான் அரசுக் கட்டிலேறியோர் உள்பட அனைவரும் எதிர்பார்க்கின்றனர்! அவன், பலன் கருதாத பூமியன்னையின், புத்ரனாகவே தன்னைப் பாவித்துக் கொண்டிருக்கிறான்! ஆனால், அவனால் பலன் பெறும் அரசோ, அவனை ஏமாளியென்று எண்ணிக் கொண்டிருக்கிறது!! எனினும், அவன், தன்னுடைய 'நன்றி காட்டும்' விழாவை நடத்தத் தவறவில்லை! பொங்கலை—மறந்துவிடவில்லை!!

கவ்விக் கொண்டிருக்கும் காரிருளில் ஒரு ஒளிச்சிதர்—இன்றைய பொங்கல் நாள், தமிழகத்திலே, ஒரு பொன்னாளாகயிருந்த காலம் ஒன்று உண்டு! ஆனால், இன்று அந்தப் பொன், தூசுகளாலும் தூர்த்தர்களின் கழுகுப்போக்காலும், ஒளியிழந்து கிடக்கிறது. பழைய மாட்சியும், பண்டையப் பெருமையும் 'இல்லை' யென்றாலும், சிதறிய வைரத்தின் சிறுதுளிபோல, நமது சிந்தையில் ஒளியிட்டுக் கொண்டிருக்கிறது.

அதனாற்றான், இந்த நாளை, இன்னும் தமிழகம் மறக்கவில்லை. விளைச்சல் விழா!— விளைச்சல் வேறெங்கோ, கொட்டிச் செல்லப்பட்டாலும், நாம்கொண்டாடத்தவறாமலிருக்கும்விழா. இத்தகையப் பண்பு நம்மிடையே ஒளியிழந்திருந்த காலம்போய், இன்று ஓரளவாவது சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. தூசுபோக்கவும், நல்லறிவு பரப்பவுமான நற்பணி வளர்ந்து வருகிறது-இனப்பற்று,

மொழிப்பற்று, நாட்டுப்பற்று எனும் வகைகளில்.

இந்த ஆனந்த நாளிலே, அரசுபீடத்திலமர்ந்தும் உழைப்பவன் வாழவழி செய்யாது, உழுமுதலையும் உதை தருவதையும் ஆட்சிப் பாதையாகக் கொண்டிருக்கும் ஆட்சியினருக்கும் ஒன்றை அறிவுறுத்த விரும்புகிறோம்.

அந்த அறிவுரையும், வள்ளுவர் வழங்கியதுதான். "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" என்றார் அப்பெரியார். அந்தப் படை வளர்ந்து வருகிறது—அதனை எண்ணிப் பாரீர்!—என்று அரசினருக்கு அறிவுறுத்துகிறோம்.

புதுநிலை வளரவும், புதுவாழ்வு விரையவும், வள்ளுவர் கண்ட திரு அகத்தைப் பெறவும் இந்த இன்ப நாளில், உறுதி யெடுத்துக்கொள்வோம். வாழ்க திராவிடம்! வருக இன்பம்!!

திராவிட நாடு திராவிடருக்கே—சென்னை தமிழருக்கே!

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் அவர்கள்மூலம் பொதுமக்களுக்கும் என் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்பம் பொங்குக, நமது இல்லங்களில், வாழ்வில், இன்பம் பெறுவதுடன், எல்லோரும் இன்புற்றிருக்க வழிவகை காணும் தூயபணியினைத் தொடர்ந்து செய்து வருவதற்கான, புத்துணர்ச்சி கிடைக்கட்டும் இந்தத் திருநாளில்.

புதியதோர் பிரச்சினை—ஆனால் எதிர்பாராததல்ல—நம்முன் நிற்கிறது.

காரணமற்ற தயக்கததுக்குப்பிறகு, நேரு சர்க்கார், நாட்டின் நல்லறிவாளர்கள் அனைவரும் வற்புறுத்தி வந்ததும், காங்கிரஸ் வாக்களித்ததுமான மொழிவழி அமைப்புக்கு, இசைவு கூறிவிட்டது—மகிழ்கிறோம்.

டில்லியின் மந்தப்போக்கை நீக்க ஆந்திரமக்கள் கிளர்ச்சி செய்தனர்—வெற்றி கண்டனர்—அவர்களின் கிளர்ச்சிக்கு உரமூட்ட தியாகத் தீயிலே வீழ்ந்தார் பொட்டி சிராமுலு—வீரவணக்கம் புரிவோம் அவருக்கு.

ஆந்திர மாகாண அமைப்புக்கானவன செய்ய வாஞ்சு எனும் நீதிபதியும் வந்துள்ளார்—துவக்க வேலை நடைபெறுகிறது.

மொழிவழி அமைப்பு எனும் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் எவரும், எந்தக் காரணம் காட்டியும், சென்னையைத் தமிழகத்திலிருந்து பிரிக்க இயலாது—பித்தரும் எத்தரும் தவிர பிறர் எவரும், சென்னை, தமிழகத்தின் தலைநகர் என்பதை மறக்கத் துணியார்.

ஆனால் ஆந்திரத் தலைவர்கள் என்போரில் சிலர் மறுக்கின்றனர்—மதராஸ் மனதே — என்கின்றனர்—இல்லையானால் மதராஸ் டெல்லிக்கே என்கின்றனர்—சிலர், மதராசில் பகுதியேனும் எமக்கு என்கின்றனர்—சிலர் ஒரே கவர்னர் இருக்கட்டும்-ஹைகோர்ட் பொதுவாக இருக்கலாமே! என்கின்றனர்.

தமிழர் தலைவர்கள் அனைவரும் தமிழகத்திலே உள்ள எல்லா முற்போக்குக் கட்சிகளும் இன்று ஒன்றுபட்டு நின்று, ஆந்திரத் தலைவர்களின் பேராசையையும் பிடிவாதத்தையும் ஒழித்துக் கட்ட முன் வந்துள்ளனர்,

சென்னை மட்டுமல்ல, மொழிவழி அமைப்பு எனும் திட்டத்தின்படி, தமிழ் மொழி பேசுவோர் பெருவாரியாக உள்ள பகுதிகள், வெள்ளையராட்சியின்போது, நிர்வாக வசதிக்காக, வேறு மாவட்டங்களுடன் தொடுத்துவிட்டுள்ள பகுதிகள் யாவும் தமிழருக்கே திருப்பித் தரப்படவேண்டும்.

இதற்கான நற்பணியினை அண்மையில் திருத்தணியில் நடந்தேறிய, 'எல்லை மாநாடு' செவ்வனே துவக்கிவைத்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆந்திரத் தலைவர்களின் நீதியற்ற போக்கைக் கண்டிப்பதுடன், தமிழகத்தின் உரிமையைப் பாதுகாக்கும் பணியில், தனது பங்கினைச் செலுத்த வாக்களித்திருக்கிறது.

தி. மு. க. மாநில மாநாட்டிலே இதுபற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுமாறு கிளைக்கழகங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மொழிவழி அமைப்புடன், மற்றவர்கள் திருப்தி அடைகிறார்கள்.

தி. மு. க. மொழிவழி அமைப்புமட்டும் போதாது, மத்ய சர்க்காரின் எதேச்சாதிகாரப் பிடிப்பிலிருந்து, நாம் விடுபட்டாகவேண்டும் என்ற அடிப்படைத் திட்டத்தை மீண்டும் வலியுறுத்துகிறது.

திராவிட நாடு திராவிடருக்கே! சென்னை தமிழருக்கே!!

சென்னை மேயர், இந்தப் பிரச்சினைபற்றி ஓர் ஆய்வுக் குழு அமைத்தகாலை, நான், தி. மு. க. வின் கருத்தை அவருக்குக் கூறி, மொழிவழி அமைப்பின்படி, தமிழருக்குச் சென்னையும், சித்தூர் மாவட்டத்திலே தொடுக்கப்பட்டுள்ள தமிழ்ப் பகுதிகளும் கிடைத்தாகவேண்டும் என்பதற்காக எடுத்துக்கொள்ளப்படும் எந்தக் கூட்டு முயற்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் துணைபுரியும் என்பதை எடுத்துரைத்திருக்கிறேன்.

எனவே கிளைக்கழகத் தோழர்கள், இந்தப் பிரச்சினை பற்றி, தி. மு. க. வின் கருத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கக் கேட்டுக் கொள்வதுடன், இது சம்பந்தமாக, தி. மு. க. மாநில மாநாட்டிலே நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தையும் விளக்கிவைக்கக் கோருகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை.

திராவிட நாடு

பொங்கல் மலர்

★

ஓவியவல்லுநரான பாவு பிரதர்சார், குறள் அடிகளை வைத்து வரைந்திருக்கும் வண்ண ஓவியங்களைச் சென்னையில் நடைபெறும் கண்காட்சியில், பல்லாயிரக் கணக்கானோர், கண்டு மகிழ்கின்றனர்—நாள்தோறும். அந்த கருத்தோவியங்களில் இரண்டினை மகிழ்ச்சியோடு வெளியிட்டுள்ளோம். குறளடிகளை விளக்கும் மேற்படி ஓவியங்களை. நமது இதழில், தொடர்ந்து வெளியிடவும் எண்ணியுள்ளோம்.

★

14—1—53

விலை ரூ 1.

தெருக்கூத்து

மு.கருணாநிதி

காட்சி 1

வளமை குலுங்கிடும் வயற்காடுகள். பொன் முத்துக்களைச் சுமந்து நிற்கும் நெற்றாட்களின்மீது கதிரவனின் ஒளிபட்டு ஜரிகையென மின்னுகின்றன. வயலின் பக்கத்தேயுள்ள பசும்புற்றரைகளில் கொழுத்த பசுக்களும், அவைகளோடு கொஞ்சிக் குறும்பு விளைக்கும் கொழுந்துக் கன்றுகளும் காட்சி தருகின்றன.

மலர்களிலே பனி தூங்க—கனி தாங்கியபடி மரங்கள் நின்றிட—தோகை விரித்த மயிலும்—துள்ளியாடும் மானும்—கானமெழுப்பும் குயிலும்—களிநடம் புரியும் சிறுமியரும் எழிலூட்டிட சோலைகள் காட்சி வழங்குகின்றன.

எங்கிருந்தோ ஒரு தேன்குரல் கிளம்புகிறது. குயில் கவனிக்கிறது, வாயடைத்துப்போய்! மயில் ஆடாமல் நின்றுவிட்டது, மயக்கத்தால்! மானும் மழலை மொழியினரும் குரல் வந்த திக்கு நோக்கி திறந்த கண்ணை மூடாமல் நிற்கின்றனர்.

“சிங்கமும் மானும் உலவுங்காடு
செந்தமிழ்த் திருநாடு......
எங்கும் இல்லையே இதற்கொரு நாடு
இந்த உலகினில் ஈடு......!!!”

இசையை முன்னே அனுப்பி தொடர்ந்து வந்தாள் மேடைக்கு, அந்த துள்ளும் இளமை அள்ளும் அழகு சேர் ஆரணங்கு. ஒடிந்துவிழும் கொடியிடை, ஒய்யார நடனமாயிருந்தது. அவள் பாடினாள், பாடினாள், பாடிக்கொண்டேயிருந்தாள். அழகு சதிராடும் அவள் விரல்கள்வழியே விழியை எங்கேயோ தூதுவிடுத்தாள். தூது முடிவதற்குமுன் புலியொன்று பாய்ந்தது மேடையில். புலியைத் தொடர்ந்து அவள் எதிர்பார்த்த வீரனும் பாய்ந்தான். அந்தப் புதுமொழியாள் சிறிது கலங்கினாள். வீரன் பேச ஆரம்பித்தான்.

வீரன்:—வஞ்சிக் கொடியே! அஞ்சாதே! புலியை அடக்கினால் தானே இங்கப் புள்ளி மானை அணைக்க முடியும் என்றால்! இதோ பார்.

வீரன் புலியின்மீது பாய்ந்தான். பயங்கரமான போராட்டம் நடைபெற்றது. புலியின் நீண்ட கோரமான நகங்கள் அவன் இருதயத்தைப் பெயர்த்தெடுக்க முயற்சித்தன. புலியின் அகண்ட வாய்க்குள்ளே அவன் வணங்காமுடி அகப்பட்டுக் கொள்ளுமோ என்று அவள் துடித்தாள். புலியின் கால்களை வீரன் பிடித்துக் கொண்டான். நெற்கதிர்களைக் களத்தில் போட்டு கீழே அடிப்பது போல, வீரன் புலியை பலமுறை தரையில் அடித்தான். புலி தோல்வியுற்றது. அதைக் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு காதலியிடம் சென்றான். காதலன் கன்னத்திலே புலியின் பற்களால் ஏற்பட்ட ரத்தத்தை எல்லாம் அவள் தன் முத்தத்தால் துடைத்தாள். அப்போது காதலியின் தகப்பன் அங்கு ஓடி வந்தான். வயது சென்ற கிழவன். ஆனால் வாட்டமற்ற மேனி. அவன் கையிலே வில்லும், அம்புப் பெட்டியும் இருந்தது. அந்த அம்புப் பெட்டி மீன் வடிவத்திலே செய்யப்பட்டிருந்தது.

வீரன் கையிலே வில்லையும், மீன் வடிவ அம்புப் பேழையையும் தந்தான். வீரனும் புன்னகை நீட்டி பெற்றுக்கொண்டான்.

கிழவன்:—திராவிட வீரனே! திண்தோளனே! ஆகாகா! உன்னைப்பார்க்க உலகப்பஞ்சிய நான் செய்த பேறு பெரும்பேறு! ஒரு கையிலே வில்! ஒரு கையிலே புலி! தோளிலே மீன்வடிவ அம்புப் பேழை! புலி—வில்—கயல் கொண்ட வீரனே ...இதோ என் மகள் தமிழ் என்னும் பொன்னார் மேனியளை உனக்களிக்கிறேன் — வாழ்க நீவிர் வளமெலாம் பெற்று!

உடனே மான்—மயில் நடனம் ஆரம்பமாகிறது. மழலைக் குழந்தைகள் குதிக்கின்றனர், உற்சாக மிகுதியால். குயில் கூவுகிறது. மலர்கள் அவர்கள் கழுத்தில் மாலைகளாக மாறிவிடுகின்றன.

“வாழ்க வாழ்கவே
வலிவுமிக்க வீரர் வாழ்கவே!
வளமை கொண்ட தமிழை வாழ்வில்
துணையாக் கொண்ட வீரர் வாழ்கவே!”

[காட்சி முடிகிறது.]

காட்சி 2

அழகான மாளிகை. அங்கே மூன்று அரசிருக்கைகள். வானத்தையே கூரையாக்கி விட்டனரோ என வியக்கும் வண்ணம் வைரங்கள் பதித்த அந்த அத்தாணி மண்டபத்திலே அமைச்சரும், ஆட்சி அலுவலரும் அமர்ந்திருக்கிறார்கள். பாண்டிய மன்னன் பாடிக் கொண்டே மேடைக்கு வருகிறான். இல்லை இல்லை... கொலு மண்டபத்திற்கு வருகிறான்.

(பாட்டு)

“தோண்டினால் தங்க முண்டு—பகைவர்
தீண்டினால் சீறும் சிங்கக் குணமுண்டு—அவர்கள்
வேண்டினால் கருணையுண்டு—அந்தப்
பாண்டிய நாட்டின் பெரும்
மன்னவன் வந்தேனே...
வந்தேனே... வந்தேனே...
தாண்டிட அஞ்சுவர்!—எதிரிப்
பூண்டுகள் அழித்திடுவோம்

எங்கள் எல்லைக் கோட்டை
தாண்டிட அஞ்சுவரே!
சங்கம் வளர்த்தோம்—மதுரைச்
சங்கம் வளர்த்தோம்
பங்கமில்லாத பல காவியம்
கொடுத்தோம்
வங்கம் கலிங்கம் வணங்கிட
மீன் கொடி பொறித்தோம்
வளையாபதி, குண்டலகேசி
நிலையா மெனும் சிலப்பதிகாரம்
சீவக சிந்தாமணியுடனே-நாவலர்
புகழ் மணிமேகலை தந்தோம்
தமிழ் வளர்த்தோம்
தக தரி கிட தக தமிழ் வளர்த்தோம்.
பாண்டிய பெருமன்னன் வந்தேனே
பாண்டிய பெருமன்னன் வந்தேனே"

பாண்டியன் அமருகிறான். அதைத் தொடர்ந்து சொக்குப்பச்சை பட்டுடை பூண்டு சோழமன்னன் பாடிக்கொண்டு வருகிறான்.

(பாட்டு)

"நஞ்சை குலுங்கும் தஞ்சையுடனே
வஞ்சிகள் கொஞ்சும்-பகைவர்
அஞ்சும்-யாரையும் மிஞ்சும்
பஞ்சமில்லாத பாங்குறு நாட்டின்:
வெஞ்சமர் வரினும் வீரமோடெதிர்த்திடும்
சூரர்கள் நாங்களே! சோழர்கள் நாங்களே!
ஏழடுக்கு மாளிகை
மேழிச் செல்வ மேதைகள்
ஆழி சூழ்ந்த நாட்டினன்
சோழ மன்னன் நானுந்தான்
சோபிதமாய் வந்தேனே......
வந்தேனே...... வந்தேனே......"

சோழன் இருக்கையில் அமர, வாளை வீசியபடி வருகிறான் சேரன்.

(பாட்டு)

"வீரம் மலிந்த நாடு
தீரம் செறிந்த நாடு
பாரில் சிறந்த நாடு
போரில் புலிகள் நாடு
சேரர் வாழ்ந்திடும் நாடு
சிங்காரப் பொன்னாடு
திராவிடத்தின் செல்வனுவான்
திகழ்சேர செங்குட்டுவன்
புகழ்சேரப் போர் முனையில்
கன கவிசயர்களின்
கழுத்தொடியக் கல்லேற்றி
கங்கையிலே நீராட்டி
கால் கடுக்க நடக்க வைத்து
வேல் விடுத்து, வில் எடுத்து-கலை
நூல் பல படித்து-கண்ணகிக்கு
சிலை வடித்து-வடவர்களின்
திமிர் ஒடித்த, வல்லமையாளர் நாமே-
வந்தேனே...... வந்தேனே......
வெற்றித் தமிழ் வேந்தன் வந்தேனே.

(மூவரும் சேர்ந்து பாடுகிறார்கள்)

"சோழ-சேர-பாண்டியர் நாம்
வாழ வைக்கும் திரு இடத்தை
கோழைக் கொள்கை குவியாவண்ணம்
ஏழை மக்கள் ஏங்கா வண்ணம்
வானில் பறந்திடும் நம் கொடிகள்
தாழப் பறந்திடும் நிலைமை வரா வண்ணம்
தடுத்திடுவோம்......
எகிப்து; யவனம் கிரேக்க நாட்டிற்கே
ஏற்றுமதி செய்திடுவோம்
மயில் மிளகு யானைத் தந்தம்
ஒயிலாகக் கொண்டு செல்லும் கப்பல்
ஓட்டிடுவோம்—பகையை
வாட்டிடுவோம்—"

மூவரும் பாடி முடிந்ததும், அவையோர் அனைவரும் ஆனந்த மேலிட்டால்

"அரசர் பெருந்தகைகாள்
நீவிர் வாழ்க வாழ்க"

என உரக்கக் கூவுகின்றனர். அப்போது அங்கே ஒரு ஆட்டையும் மாட்டையும் ஓட்டிக்கொண்டு ஒரு முனிவர் நுழைகிறார். முனிவரைக் கண்ட மூவேந்தரும்.

வணக்கம்
வணக்கம்
வணக்கம்

என மொழிந்து வரவேற்கிறார்கள்.

முனிவர்:—நமஸ்காரமென்று நல்ல மொழி இருக்க ஏனப்பா வணங்கி வணங்கி வளைகிறீர்கள்?

சேரன்:—வணக்கம், வண்டமிழ்ச் சொல்லன்றோ?

முனிவர்:—தீந்தமிழ்தான்! ஆனால் நமஸ்காரம் எத்திக்கும் புகழும் தித்திக்கும் தெய்வீகச் சொல்லன்றோ!

பாண்டியன்:—தெய்வீகம்! (ஆச்சரியமாய்) அது என்ன புது வார்த்தை சோழரே!

சோழன்:—யானுமறியேன் தோழரே!

முனிவர்:—பாராளும் பைத்யக்காரர்களே! தேச பக்தி முற்றி தெய்வ பக்தியற்று தேய்ந்துவிட்டீர்கள். இகலோகத்து இன்பத்திலே மிதக்கிறீர்கள், பரலோகமென்று ஒன்றிருப்பதை மறந்துவிட்டீர்கள்.

சேரன்:—பரலோகமா?... அப்படியா?... நமது வட நாட்டுப் படையெடுப்பிலேயுங்கூட அந்த லோகத்தைக் கண்டோமில்லை.

முனிவர்:—படை வீரன் வேடத்திலே பார்க்க முடியாத லோகமப்பா அது! பக்தர் உடையிலே காணவேண்டும் அந்த திவ்ய லோகத்தை! போர்க்கருவிகள் கூடாது, புனிதமான விபூதி அணிய வேண்டும். கச்சை கட்டக் கூடாது. களம்நுழைதல் ஆகாது. சாலி—கமண்டலம்—காடு—பின்னர்—கடவுளின் லோகம் காண

லாம்!—"வீரனே வாளை எடு!" இது விண்ணுலகப் பாதைக்கு யந்திரமாகாதப்பா—"விபூதி யணிவீர் வீரர்காள்!" இந்த உத்திரவு வேண்டும். உடனேவரும் பரலோகத்தின் அழைப்பு. பாதையா கேட்கிருய்; பரலோகத்திற்கு—பார்; பரலோகத்தின் பாதையை!—

[பாட்டு]

பரலோக மென்ருெரு ஸ்தலமிருக்குது
இகலோக வாசிக்கு இன்பமளிக்குது
பாம்பை யணிந்த பரமசிவனும்
பக்கத்தில் பார்வதியுடனிருப்பார்—அங்கே
யாரிருந்தாலும் அம்மையை அணைத்தபடி
இருப்பார்
பன்னிருகையான் முருகனுக்கு பத்தினி இரண்டு
கன்னியர் சூழ்ந்த லோகமடா அது—கற்கண்டு!
பன்னீர் தெளிக்கும் பாவையர் ஒரு கோடியடா!
தண்ணீர் எல்லாம் சோமா சுரா பானமடா!
இந்திரன் என்ருெரு தேவனுண்டு,
அவனிடமுள்ள பெண்கள் பூச் செண்டு!
ஊர்வசி, ரம்பை, திலோத்தமா
யார்பசியும் ஆற்றும் மேனகா
சர்க்கரைப் பந்தல்—தேன் மழை போலே
சக்ரதாரி லக்ஷ்மி சரஸ்வதி பிர்மனும் மேலே
லோகத்தில் உள்ளார்......அவர்களைக்காண
ஆயிரங் கோயில்கள் கட்டவும் வேண்டும்
கும்பாபிஷேகம் செய்யவும் வேண்டும்
ஆரியதர்மம் அனுஷ்டிக்க வேண்டும்......
அருந்தவங்கள் பலவும் இயற்றவும் வேண்டும்
தவங்கள் பலவும் இயற்றவும் வேண்டும்......"

பாட்டு முடிகிறது. முனிவர் பேசுகிருர்.

முனி:—மன்னர்களே! அமைச்சர் பெருமக்களே! இந்தக் கமண்டல தீர்த்தம் சாப்பிடுங்கள்!

சோழன்:—தீர்த்தமா?...

முனிவர்:—ஆமாம்...ஆரிய தீர்த்தமென்பார்கள் இதை! அருந்துங்கள் சிறிது!...

எல்லோரும் தீர்த்தம் சாப்பிடுகிருர்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் எல்லோரும் மயங்கி விழுகிருர்கள்.

(திரையில் பாட்டு)

"தாழ்ந்ததடா தமிழன் தலை......
வீழ்ந்ததடா தமிழன் மானம்.
அந்தோ புகுந்ததடா ஆரிய வாடை
கட்டி விட்டார் தமிழ் வீரத்திற்கு பாடை!
தாழ்ந்ததடா தமிழன் தலை!"

(காட்சி முடிகிறது)

காட்சி 3.

முனிவர் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிருர். மூவேந்தர் பாதை பூசை செய்கிருர்கள். அப்போது வாளேந்திய வனிதாமணிகள் வீரநடனம் ஆடிக் கொண்டிருக்கிருர்கள். அந்த நடனத்தை முனிவர் ஆவேசமாகப் பார்க்கிருர். மங்கையரின் கையிலே உள்ள வாட்கள் எல்லாம் சட சடவெனக் கீழே சரிகின்றன. வாட்கள் இருந்த கரங்களிலே ஜபமாலைகள் தொங்குகின்றன.

"ஆண்டவனே சரணம்" என்ற பாட்டு ஆரம்பமாகிறது. பக்திரசம் ததும்பும் நடனம். முனிவர் கலகலவெனச் சிரிக்கிருர்.

(காட்சி முடிகிறது)

காட்சி 4

முதல் காட்சியில் வந்த திராவிட வீரனும் அவன் தமிழ்க் காதலியும் சோர்ந்துபோய் நிற்கிருர்கள். அவர்களருகே அவர்களின் மக்கள் மூவர் நிற்கிருர்கள் வாட்டமுற்ற நிலையில்

(பாடுகிருர்கள்)

"தில்லையிலே நடராசனுக்கு தங்க வீடு
இல்லையே நாம் தங்க ஒரு குடிசை வீடு
ஆறுகால பூசையாமே ஆண்டவனுக்கு
சோறு கண்டு பல நாளாச்சு சோர்ந்து
போனோமே"

இப்போது அங்கே ஒரு பருத்த மனிதன் வருகிருன். அவனிடம் திராவிட வீரன் கேட்கிருன்

"அய்யா! ஐந்து நாட்களாய் பட்டினி! பசியால் துடிக்கும் பச்சிளங் குழந்தைகள் அன்னை முகம் பார்க்க-அவள் என் முகம் பார்க்க-நான் ஆண்டவன் முகம் பார்க்க-ஆண்டவன் எங்கள் முகம் பார்க்கவில்லை; அய்யா!"

பருத்த மனிதன்:—ஆண்டவனின் தூதன்தான் நான்! பர்மா, மலேயா, இலங்கை, தென்னுப்பிரிக்கா ஆகிய இடங்களில் நீங்கள் பிழைப்பு தேட ஆண்டவன் ஆணையிட்டுள்ளான். உடனே என்னுடன் புறப்படுங்கள்.

பெண்:—பிறந்த நாட்டில் பிழைக்கக் கூடாதா?

பருத்த மனிதன்:—கூடாது! அதற்கு வேறு நாட்டார் இருக்கிருர்கள். அவர்கள் வருவார்கள். உம்; உடனே புறப்படுங்கள். கடவுள் உத்திரவு!

பெண்:—அய்யா கடவுளுக்கு நீங்க என்ன வேணுங்க?

பருத்த மனிதன்:—நான்தான் கங்காணி. கடவுளின் சொந்தக்காரன். பசித்த மக்களே! பாட்டாளிப் புழுக்களே! உங்கள் பட்டினி ஊர்வலம் பர்மா, மலேயா, சிலோன் நோக்கி புறப்படட்டும்.

கங்காணியைத் தொடர்ந்து திராவிட வீரனின் குடும்பம் புறப்படுகிறது. எதிரே ஒரு பூனைக்குட்டி, குறுக்கே ஓடுகிறது. புலியை வென்ற அந்த வீரன், "அய்யோ அபசகுனம்" என்கிருன். திரை விழுகிறது.

காட்சி 5

கடலில் கப்பல் போகிறது.

'தேயிலைத் தோட்டத்திலே' என்ற பாட்டுடன் முடிகிறது.

[தெருக்கூத்தும் முடிகிறது.]


நானிலம் போற்றிட, நற்கலை வளர்ப்போம்
BALU BROS
பாலு பிரதர்ஸ்
ஆர்ட்டிஸ்ட்ஸ்,
2, தாயார் சாகிப் தெரு, மவுண்ட் ரோட், சென்னை-2.

பொன்னொளி

"புத்த மார்க்கம் மீண்டும் இங்கு பொலிவு பெறுகிறது, நமது சர்க்காரின் சின்னமாக அசோக சக்கரம் இருப்பது காணீர்! கருத்தற்ற காரியமல்ல அது" என்று சர். ராதா கிருஷ்ணன் கூறினர், சாஞ்சியில், புத்த மார்க்கப் பெரியோர்கள் கூடியிருந்த மாண்பு மிகுந்த மன்றத்தில்.

புத்தரின் முக்கியசீடர்களான சாரிபுத்தர், மகாமொகலன்னர் ஆகியோரது நினைவுச்சின்னங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்—சாஞ்சியில், தனியாகக் கட்டடம் அமைத்து, அந்த நினைவுச் சின்னங்களைப் புனிதப் பொருள் என்று பக்தியுடன் கொண்டாடி புனிதவிழா நடத்தினர். பண்டித ஜவஹர் பேசினர்—பல்வேறு நாடுகளிலிருந்தும் புனித விழாவுக்கு வந்திருந்த பெரியோர்கள் பேசினர்—டாக்டர் ராதா கிருஷ்ணன், அதுபோது பேசியது கேட்டு, புத்த மார்க்கத்திலே உள்ளவர்கள் மட்டுமல்ல, புத்த மார்க்கத்தின் மாண்புகளை மதித்திடும் அறிவுடையோர் அனைவருமே களித்திருப்பார்கள். உறுதியுடனும் உவகையுடனும், கேட்போர் சிந்தையிலே மகிழ்ச்சி பொங்கும் விதமாக அல்லவா, டாக்டர் பேசினர்—புத்த மார்க்கம் மீண்டும் ஈண்டு பொலிவு பெறுகிறது! என்று — பொதுப்படையாகக் கூறுவது போதாது என்று, ஆதாரமும் காட்டினர்—அசோக சக்கரம் நமது ஆளவந்தாரின் சின்னம், காணீர்! என்று. உண்மையாகவே, டாக்டரின் பேச்சு, புத்த மார்க்கத்தவருக்குப் புதியதோர் நம்பிக்கையையே கொடுத்திருக்கும். ஆனல்......!!

நடைபெற்றது விழா! பேசப்பட்டது களிப்பூட்டும் சொல்!! மறக்கமுடியாது!! எனினும், டாக்டர் சொன்னபடி, புத்த மார்க்கப் பொலிவு தெரிகிறதா? மக்கள் காண்கிறார்களா அந்தப் பொலிவை? அந்தப் பொலிவைக் காணவிடுகிறார்களா, மக்களை! உவகையூட்டும் விதமாகப் பேசிய டாக்டரின் பெயரே,

சி. என். ஏ.

ராதாகிருஷ்ணன்! புத்த மார்க்கப் பொலிவா தெரிகிறது? அந்தோ! இல்லையே! அந்தப் பொலிவு, இன்று இந்நாட்டிலே இருந்தால், மக்களிடை இத்துணை நலிவு இருக்குமா? இன்று இல்லை, என்பது வருத்த மூட்டுகிறது —பரவாயில்லை—அந்தப் பொலிவை மீண்டும் காண, முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவா என்று பார்த்தால், நன்றாகத் தெரிகிறது, முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதுமட்டுமல்ல, அந்த நோக்கமே அரும்பிடக் காணோம் என்ற உண்மை—அந்த உண்மை உள்ளத்தில் வேதனையையல்லவா மூட்டிவிடுகிறது! இந்த நிலையில், டாக்டர், புத்த மார்க்கப் பொலிவு மீண்டும் தெரிகிறது, என்று பேசினது கேட்டால், சிரிப்பதா, பெருமூச்செறிவதா, என்று தெரியவில்லை! பெரியவர், டாக்டர்! அவர் கூறுகிறார், மிகச் சாமான்யர்களும் அறிந்திருக்கும் உண்மைக்கு மாறானதை! இருள் கப்பிக்கொண்டிருக்கிறது, டாக்டர் முழுநிலவு காணீர் என்கிறார்! சனாதனம் எக்காளமிடுகிறது; டாக்டர், சாக்கியர் தந்த சன்மார்க்கம்; நம் மார்க்கமாகத் திகழ்கிறது என்று உரைத்தார். உண்மை நிலைமை என்ன?

புனித விழாவிலே கூடியிருந்தோருக்கு, புத்தபிரானிடம் பற்று கிடையாது என்றோ, புத்த மார்க்கத்திடம் மதிப்பு கிடையாது என்றோ கூறவில்லை. பாராட்டினர்! கொண்டாடினர்! வணங்கினர்! ஆம்! விழா, நடைபெற்றது! ஆனால், புத்த மார்க்கத்தின் பொலிவு, நாட்டுக்குத் தேவை என்று உள்ளூற உணர்ந்தனரா—அந்தப் பொலிவின் பயனைப் பெற, முயற்சி எடுத்துக்கொள்வதாக, வாக்களித்தனரா? இல்லை!

சோமநாதர் கோயிலைப் புதுப்பிக்கும் வேளையில், சோமநாதருடைய பெருமை சொல்லொணாதது என்று பேசுவதுபோல, கும்பமேளாவில் கலந்துகொள்ளும் போது, பாபத்தைப் போக்கிக்கொள்ள இதுவே சிறந்த வழி என்று கூறுவதுபோல, விநாயகசதுர்த்தியன்று ஆனைமுகத்தானே அவனியைக் காப்பான் என்று அகவல் பாடுவதுபோல, துர்க்கை பூஜையின் போது, 'மாதாவி'ன் பெருமையை நெஞ்சு நெக்குருகப் பாடுவதுபோல, சாஞ்சியில் நடைபெற்ற விழா, புத்த மார்க்கத்தைச் சார்ந்ததாகையால், புத்த மார்க்கமே புனித மார்க்கம் என்று புகழுரையைச் சொரிந்தனரே யன்றி, உண்மையாகவே புத்த மார்க்கம் தந்த, புதிய, அருமையான கருத்துகளை, பொலிவுள்ள கருத்துக்களை மீண்டும் பரப்பவேண்டும் என்ற முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதா? டாக்டர், பதில் கூற மறுப்பார்! எந்தெந்த இடத்தில், எதை எதைக் கூறுவது, பொறுத்தமாமோ, அதன்படி பேசினேன் என்றுதான் கூறுவார்—அதுவும் நெருங்கிய நண்பர்களிடம்! புத்த மார்க்கத்தினால், நாடு ஒரு காலத்தில் பெற்றிருந்த நிலை யாது? மக்களிடம் விளக்க முன் வருவாரா? வர, நேரிராது! வேறு எவரேனும், அந்த விளக்கத்தைக் கூறிடும்போதாவது, புன்னகையைப் பரிசாக அளிப்பரோ? பரிசுகூடத் தேவை யில்லை, எதிர்ப்பு செய்யாமலாவது இருப்பரோ? இல்லை, இல்லை, நிச்சயமாக எதிர்ப்புக் காட்டத் தவறார்! விழாக்களிலேயோ, புகழ்வார், போற்றுவர், பூரிப்பர், பூரிப்படையச் செய்வர். டாக்டர் ராதாகிருஷ்ணன் மட்டுமல்ல, வேறு புலரும்-பொதுவாகவே, "மேதைகள்"! ஏன்? ஏனு? என்ன நஷ்டம் அதனாலே அவர்களுக்கு! புத்தமார்க்க விழாவிலே இரண்டோர் 'உபசாரமொழி' புகல்வது என்ன சிரமம்; புகன்றுவிட்டால், நஷ்டம் என்ன ஏற்படப் போகிறது! புத்த மார்க்கத்தைப் புகழ்ந்து பேசியதுடன் அந்த மார்க்க மாண்புகளை நாடு பெறப் பாடுபடுவது தொடர்ந்து செய்யப்படவேண்டும் என்றால், கஷ்டம், நஷ்டம்! புகழுரை தந்தவர்கள் அது போன்ற நோக்கம் கொண்டவர்களா! இருந்தால், நாடு முன்னேறி விட்டது, மக்கள் புதுவாழ்வு பெற்றுவிடப் போகிறார்கள், என்று, கூவிக் கூத்தாடலாமே, களிப்புடன்! அஃதல்ல, அவர்கள் நோக்கம்! நடைபெறுவது விழா, நாலு நல்ல வார்த்தைகள் சொல்லி வைப்போம், நஷ்டமென்ன அதனாலே, என்பது அவர்கள் நோக்கம்!

புத்த மார்க்கம், ஒரு புதிய பாதையை வகுத்துத் தந்தது.

புத்த மார்க்கம், பழைய பாதை வழி சென்றால், மானிட வர்க்கம், பெற வேண்டிய பெரு நிலையைப் பெற முடியாது, என்று எடுத்துரைத்தது.

புத்த மார்க்கம், புரோகித மார்க்கம், பட்டர்களிடம் வெள்ளை உள்ளத்தாரைச் சிக்கிடச் செய்யும் சூதுத் திட்டம் என்று எச்சரிக்கை செய்தது.

புத்த மார்க்கம், பழைய மார்க்கத்தினர், வலியுறுத்திக் கட்டிக் காத்துவந்த ஜாதி முறையினால், சமுதாயம் சின்னபின்னப்படும் என்பதை எடுத்துக்காட்டி, மனிதகுலம் ஒன்றுதான், என்ற உண்மையை உரைத்தது.

புத்த மார்க்கம் வேள்வியை மறுத்தது—வேள்வி செய்வதற்கென 'பட்டயம்' பெற்றிருந்த 'ஜாதி' முறையைக் கண்டித்தது.

மருட்டும் குருமார்கள், குருட்டுத்தனம் மிகுந்த சீடக் கூட்டம்—என்றநிலைமை, நாதனை அறியும் நல் வழி அல்ல, என்று நாட்டுக்கும் உலகுக்கும் புத்த மார்க்கம் உணர்த்துவித்தது.

இந்தப் புது முறையை, புதிய பொலிவை, இப்போது காண்கிறோமா? காணவேண்டும் என்ற கருத்து கொண்டோர் எவ்வளவு தொகையினர் உளர்! அனைவரும் அறிவர், புத்த மார்க்கத்தின் மூலம் புகுத்தப்பட்ட 'பொன்னொளி'யை, மீண்டும் பழைய முறை எனும் 'அந்தகாரம்' கப்பிக்கொண்டது என்பதை, எனினும் டாக்டர் பேசுகிறார், எங்கள் சின்னம் அசோக சக்கரம்! என்று. நெஞ்சறிந்த பொய் என்பது மட்டுமல்ல, வெந்த புண்ணிலே வேலல்லவா அந்தச் சொல்!!

தாளச் சத்தமும் மேளச் சத்தமும், தத்தினம் பாடுவதும். வெந்ததைப் பிரசாதம் என உண்பதும், வேடமணிவதும், வேற்றுமை வளர்ப்பதும், பாத்திரை என்பதும், கோத்திரம் பார்ப்பதும், மனிதர் உய்யும் மார்க்கமாகாது, மனதைத் தூய்மைப்படுத்தி, ஆசாபாசங்களை விட்டொழித்தால் மட்டுமே மனித குலம் உய்வுபெறும் — என்று புதிய போதனை செய்தார் புத்தர்!

எந்தச் சத்தமும் குறையவில்லை—வலுக்கிறது—எந்த வேடமும் கலையப்படவில்லை — புதுப் புது வேடதாரிகள் புறப்பட்டவண்ணம் உள்ளனர்—வீண் ஆரவாரவிழாக்களும் விலாப்புடைக்கத் தின்பதும் விளையாட்டம் நடத்துவதும் ஓயக்காணோம்; புத்தமார்க்கப் பொலிவு மீண்டும் காணப்படுகிறது என்கிறார் வேதாந்தி; சந்தேகம் கொள்வோர், அசோகச் சக்கரத்தைக் காணீர் என்று ஆதாரம் காட்டுகிறார்! எவ்வளவு நெஞ்சழுத்தம்! நெஞ்சழுத்தம் மட்டுமா? எவ்வளவு நம்பிக்கை, இந்த மக்களிடம் எதையும் பேசலாம், எப்படியும் பேசலாம், என்று!

புத்தமார்க்கப் பொலிவு மீண்டும் இங்கே தெரிகிறதாம்.

தெரிகிறதா, என்று பாருங்கள், நாட்டிலே இன்று தெரியும் காட்சிகளிலே ஏதேனும் ஒன்றை, மனக்கண்முன் நிறுத்திக்கொண்டு.

சிறுமதியாளர்கள் செய்யும் சில்லரைச்சேட்டைகளை விட்டுத் தள்ளுங்கள். காவடி தூக்கிடும் கருத்தற்றவன், வீதியில் புரளும் வீணன் எச்சலை உண்ணும் ஏதுமறியாதான், மரத்தைச் சுற்றிவரும் 'மகராஜிகள்' இவர்களைக்கூடப் பார்க்கவேண்டாம் —பாமரர்!

படித்தும், பஞ்சாங்கம் பார்க்கும் பயங்கொள்ளி, பட்டாளத்திலே சேர்ந்த பிறகு சகுனம் பார்க்கும் பழமைவிரும்பி, இவர்களையும் பார்க்கவேண்டாம் — பரிதாபத்துக்குரியவர்கள்.

குடியாட்சியின் தலைவர் பாபு ராஜேந்திரபிரசாத் இருக்கிறாரே, பீகாரில் தேசியப் புயலை உண்டாக்கிய வீரர், அவரைப் பாருங்கள்!

அவருடைய அறிவாற்றலை அனைவரும் அறிவர்—மாற்றாரும் அவருடைய நாணயத்தை, சந்தேகிப்பதில்லை. சாது.

நாட்டு விடுதலைப்போரிலே, அவர் —காட்டிய வீரம், அபாரம். பட்ட கஷ்டநஷ்டம் அமோகம்! காந்தியத் தியாகத்தீயிலே புடம்போட்ட தங்கம்! இவைகளை மறுப்பார் இல்லை!

வம்பு வல்லடிக்குப் போகாதவர்! சூழ்ச்சி சூது தெரியாதவர், என்று எல்லாக் கட்சியினரும் கூறுவர். அப்படிப்பட்ட பாபு ராஜேந்திரரை மனக்கண்முன் கொண்டுவாருங்கள்.

அதோ, டில்லிப் பட்டணத்தில், சாம்ராஜ்யாதிபதிகளும், ரணகளச் சூரர்களும், உலாவிய டில்லியில், உலகிலே உள்ள வியக்கத்தக்க மாளிகைகளிலே ஒன்றான, 'ராஷ்ட்ரபதி பவனில்', கொலு வீற்றிருக்கிறார். குற்றமென்று கூறவில்லை. இந்தியாவுக்கு ஆட்சித் தலைவராகவருபவர், குடிசையிலே வாழவேண்டும் என்று கூறினாரே காந்தியார், என்று குத்தலுக்குக் கூறவில்லை! பாபு, ராஷ்ட்ரபதிபவனிலே இருப்பது கண்டு, கேலி பேசவில்லை. இருக்கிறார், எழில் மிக்க மாளிகையில்—இந்திய துணைக் கண்டத்தின் முடிசூடா மன்னராக!

அதோ, அமெரிக்க நாட்டுத் தூதுவர், அவருடைய கரம் குலுக்குகிறார்!

இதோ, நார்வேநாட்டு நல்லெண்ணத்தூதுக் குழுவினர்! பாபு, அவர்களுடைய கரத்தைக் குலுக்கி வரவேற்கிறார்.

இதோ, இந்திய துணைக் கண்டத்தின் 'பாராளுமன்றம்' நிறைவேற்றிய மசோதா—அதனைச் 'சட்டம்' என்ற உயர்நிலை பெறச்செய்வதற்கு, அவருடைய கையொப்பம் தேவை—பாபுவின் கரம், அதற்காக, எழுதுகோலை எடுக்கிறது!

அவர் பரோடாமன்னர்—இவர் ஜெய்ப்பூர் வேந்தர் — இதோ பம்பாய் கவர்னர்—இவர், படைத்தலைவர்—இவர்கள், பாபுவின் கரத்தைக் குலுக்கி, மதிப்பும் மகிழ்ச்சியும் பெறுகிறார்கள்!

அந்தக் கரம்—உலகப் பேரரசுகள், சிற்றரசுகள், உள்நாட்டு அரசாளும் வாய்ப்புப்பெற்றோர், ஆகியோரின் கரங்களைக் குலுக்கியகரம்—முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்களின் வாழ்வுக்கு, வழிகாட்ட வேண்டிய பொறுப்பும், வாய்ப்பும் பெற்ற கரம், சாஞ்சித் திருநாள் நடைபெற்ற நாட்டிலே, காசிக்ஷேத்ரத்திலே, இருநூறு பிராமணர்களின் பாதத்தைக் கழுவிற்று! தெரிகிறதா காட்சி? இருநூறு 'பிராமணர்கள்' — வெள்ளியாலான மனைகள்மீது உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் — முப்பது கோடி மக்களின் முடிசூடாமன்னர், வருகிறார், பூதேவர்களைத் தரிசிக்கிறார், வெறிபிடித்தலைந்த வெள்ளை ஏகாதிபத்யத்துக்குத் தலைசாய்த்தறியாத வீரர், வெள்ளிமனைமீது அமர்ந்திருக்கும் வேதியர் முன்பு சிரம் தாழ்த்துகிறார் — அம்மட்டோ — ஆட்சி புரியும் கரத்தால், உலக ஆட்சி மன்றத்தின் உறுப்பினர்களை, 'கௌரவப்படுத்திய' கரத்தால், இருநூறு முப்புரியினரின், பாதங்களைக் கழுவினார்!! இந்தப் பெருமையைத் தனக்குத்தந்த பூசுரர்களுக்கு, தலா பதினொரு ரூபாய் தட்சணையும்தந்தாராம்!எப்போது? உரிமை வேட்கையும் சமத்துவ வேட்கையும், குக்கிராமங்களிலேயும் காணப்படும், நமது நாட்களில்! நாடாளும் நல்லவர், காலைக் கழுவினார்-அவர்கள் பிராமணர்கள் என்பதால்! அதைச் செய்ய வேண்டிய காரியமென்று எண்ணி, அவருக்கு இருக்கும் எவ்வளவோ அலுவல்களுக்கு இடையிலே, அவரை பேட்டிகாண, பல்வேறு நாட்டுப் பிரமுகர்கள் காத்துக் கொண்டிருக்கும் நிலைமைக்கு இடையிலே, இருநூறு திருப்பாதங்களை, பக்திச் சிரத்தையோடு கழுவினார்—அந்தப் புண்யத்தைத் தனக்கு அளித்ததற்காக, தட்சணையும் தந்தார்! தெரிகிறதா, காட்சி! ஊர்பேர் அறியாத, பார்ப்பனர்கள், வெள்ளி மனைமீது — உலக வரலாற்றிலே இடம் பெற்ற பாபுராஜேந்திரர், அவர்களுடைய காலைக் கழுவுகிறார்! திரள்திரளாக மக்கள், நாட்டு விடுதலைப்போர் நடாத்திய நல்லவரைக் காண!!

அவரோ, பாபத்தைப் போக்கிக் கொள்ளவும் புண்யத்தைப் பெறவும், பகவானுடைய அனுக்கிரகத்தைப் பெறவும், பார்ப்பனருடைய காலைக் கழுவிக்கொண்டிருக்கிறார்! ஜே! ஜே! ஜே!! என்று மக்கள் வெளியே முழக்கமிடுகிறார்கள், மகிழ்ச்சியுடன்! ஸ்வாமி! ஸ்வாமி! என்று பாபு, பக்திப்பரவசத்துடன், கூறுகிறார், ஒன்று, இரண்டு, மூன்று, என்று உயர்தர அதிகாரிகள், இருநூறு'வரை கணக்கெடுக்கிறார்கள்! ராஷ்டிரபதி பவனிலிருந்து, இங்கே அவர் வந்தார், அவருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டு காசிமகாராஜா அரண்மனையில் காத்துக்கொண்டிருக்கிறார், இருநூறு முப்புரியினர்—ஆற்றோரத்திலே இருந்துவந்தார்கள், குளக்கரைக்குத்தான் மீண்டும்செல்வார்கள் - அவர்களுடைய 'பாதங்

களை' இவர் கழுவுகிறார்! பீரங்கி இருந்தால் என்ன, துப்பாக்கி இருந்தால் என்ன, துரைமகன் என்ற விருது இருந்தால் என்ன என்று வீராவேசமாகக் கேட்டவர்தான் வெள்ளையர்களை நோக்கி—வெறும் தர்ப்பைதான் இருக்கிறது வேதியர்களிடம்—எனினும், காலைக் கழுவுகிறார், அப்போதுதான் கடவுளின் அருளுக்குத்தான் பாத்திரமாக முடியும் என்று! டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறுகிறார், புத்த மார்க்கத்தின் பொலிவு மீண்டும் தெரிகிறது என்று. தெரிகிறதா, நண்பர்களே, தெரிகிறதா? கண்ணும் கருத்தும் பழுதாகாத காங்கிரஸ் நண்பர்களே, தெரிகிறதா நாட்டின் நிலைமை? எங்கெந்த நாட்டுக்காரன், இதனைப் படம்எடுத்தானோ — எங்கெந்த நாட்டிலே மக்கள் இதைக் காண்கிறார்களோ — என்னென்ன பேசிக்கொள்கிறார்களோ—இங்கே, டாக்டர் பேசுகிறார், அசோக சக்கரத்தைப் பாரீர் என்று! அசோக சக்கரம், சின்னம்! ஆரியருக்கு அடிவருடுவதுகூட அல்ல, காலைக்கழுவி, கதிமோட்சம் கோருபவர், அந்த சர்க்காரின் முதல் அதிகாரி! பாபு ராஜேந்திரர், தங்கள் காலைக்கழுவிய போது, அந்த இருநூறு பார்ப்பனர்கள்மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்திலே உள்ள பார்ப்பனர் அவ்வளவு பேரும், மார்பை முன்னாலே நிமிர்த்தி அல்லவா நடந்திருப்பர்! ஆரிய தர்மம் மீண்டும் அழகுறப் பிரகாசிக்கிறது — புரோகித மார்க்கப் பொலிவு மிகவும் நன்றாகத் திகழ்கிறது, என்று அவர்கள் கூறினால், வேதனை ஏற்படும் பகுத்தறிவாளர்களுக்கு, ஆனால் மறுத்துக் கூறமுடியாதே! இந்த நிலையிலே நாடு இருக்கும்போது, டாக்டர் ராதாகிருஷ்ணன், புத்த மார்க்கப் பொலிவு தெரிகிறது என்று புனித விழாவிலே பேசுகிறார்!!

கருத்துப் புரட்சி ஏற்படாத நாட்களிலே, நாடும் காடும், வீடும் தோட்டமும்போல நெருங்கி இருந்த நாட்களிலே, வீரனும் தீரனும், வாளும் வேலும் தவிர வேறு ஆயுதங்கள் பெற்றிராத நாட்களில், மரத்தடியிலே பள்ளிக் கூடமும், மலர்த் தோட்டங்களிலே பர்ணசாலைகளும் இருந்த காலத்தில், எதிர்த்தால் இடி விழும், தொட்டால் பஸ்மீகரம் என்று மக்களும் மன்னரும் நம்பிக்கொண்டிருந்த காலத்தில், புத்ரகாமேஷ்டி யாகம் செய்து வம்சவிருத்தி கோரியவர்கள் வாழ்ந்த நாட்களிலே, வேதத்தில் இல்லாதது ஒன்றுமில்லை, வேறெதிலும் இதிலுள்ளது இல்லை, என்று எவரும் நம்பியிருந்த நாட்களில், ஆரியக் குருமார்களின் அடிபணிய அரசர்கள் முன்வந்ததும், காலைக் கழுவி கதி மோட்சம் தேடிட காவலர் காத்துக்கொண்டிருந்ததும், ஆச்சரியமில்லை; வசிஷ்டரும் வியாசரும், கண்வரும் அத்திரியும், காகபட்டரும் பிறரும் பெற்றிலை பெருமைக்குரியதென்று பிரமாதப்படுத்துவதிலே பொருள் இல்லை; காலம் அப்படிப் பட்டது, ஆனால் இப்போது, இணையில்லாத ஆராய்ச்சி மலர்ந்திருக்கும் இந்நாளில், இலண்டனும் பாரிசும், நியூயார்க்கும் மாஸ்கோவும் போய் வருவது பந்தடிமைதானத்துக்கும் சிங்காரத்தோப்புக்கும் போய் வருவது போன்ற சாதாரணக் காரியம் போலாகி விட்ட, வேகமான நாகரீகத்தின் விறு விறுப்பு உள்ள நாட்களில், பர்ணசாலைகள் ஒழிந்து போய் பண்டகசாலைகளிலே பணியாட்களாகி பாழும் வயிற்றைக் கழுவிடும் நிலைக்குப் பார்ப்பனர்கள் துரத்தப் பட்டுவிட்ட இந்த நாட்களில், புரோகிதரின் நடை உடை பாவனை நையாண்டிக்குரியதாகி விட்ட நவநாகரீக நாட்களில், சந்தியாவந்தனத்தை மறந்தவர்களும் 'சர்வம் கூட்டு மயம் ஜகத்' என்ற காரிய வாதத்தை, நாலு வேதத்திலும் மேலானது என்று கண்டு கடைப்பிடிப்போரின் தொகை பூசுர இனத்திலே பெருகி இருக்கும் இந்த நாட்களில், துப்பாக்கிக்கு அஞ்சாத தீரர்களும், தூக்குமேடை சென்ற தியாகிகளும், சிறை புகுந்த தொண்டர்களும் செக்கிழுத்த பெரியோர்களும், நாட்டை மீட்க அறப்போர் தொடுத்த ஆண்மையாளர்களும், தோன்றிய நாட்டிலே, எமது தரிசனம் ஜென்மசாபல்யம் தரும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, எங்களைத் தேடி யாத்திரை செய்து வந்து, எமது காலைக் கழுவினால், தனது பாபம் கழுவப்படும் என்று கருதி, பக்திச் சிரத்தையோடு, மேலோர் நாங்கள் என்பதை மேதினி அறியும் விதமாக, எம்மை வெள்ளிப்பீடத்திலே எழுந்தருளச் செய்து, தட்சணையும் தந்து, எமது ஆதிபத்யத்தை அவனி அறியச் செய்தாரே, ராஷ்ட்டிரபதி பாபுராஜேந்திர பிரசாத், இதுவல்லவோ உண்மையான பெருமை—வசிஷ்டர் பாதத்திலே மன்னர்கள்வீழ்ந்தார்களாம், அந்தப் பெருமை ஒரு பெருமையா — உலகம் வியப்படைந்து விட்டது என்று உரத்த குரலில் எவனெவனோ கூவும் இந்த நாட்களிலே, பரந்த பாரத் வர்ஷத்தின் பரிபாலனாதிபதி, முப்பது கோடிக்கு மேற்பட்டமக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஜனாதிபதி, காலைக் கழுவினாரே, இதுவன்றோ பெறற்கரிய பெருமை—இதனைக் கண்டன்றோ உலகம் வியப்படையும்! ஜடாமுடி தாரியின் பாதத்திலே மணிமுடி தரித்தவன் பாரத் வர்ஷத்திலே வீழ்ந்து வணங்கிய காலத்திலே, பாரத் வர்ஷத்திலே மட்டுமல்ல, உலகிலே எங்குமே, குருமார்கள் காலிலே கொலுப் பொம்மைகள் வீழ்ந்து வணங்குவது தான் முறையாக இருந்தது! புத்தனும், புதுப் புதுக் கருத்தூட்டும் புரட்சிக்காரர்களாம், அரசுகளைக் கவிழ்த்தவர்களாம், அன்னக் காவடிகளை ஆற்றல் பெறச்செய்த வீரர்களாம், வால்டேராம் ரூசோவாம், லிங்கனும் லூதராம், மார்க்சாம் லெனினும் கமாலாம் சன்யாட் சென்னும், —நீட்டோலை படிக்கிறார்கள் இவர்களைப் பற்றி — இவர்களெல்லாம் தத்தமது கைவரிசையைக் காட்டியான பிறகு, எமது காலைக் கழுவுகிறார் உலகவீரர் பட்டியலில் பெயர் பொறிக்கப் படவேண்டிய தகுதி பெற்ற, ராஷ்ட்ரபதி! இதனினும், பெருமையை, இங்கு மட்டு மல்ல, எங்கேனும் கண்டதுண்டா—என்று சனாதனி கேட்பது, தெரிகிறதா! நிலை இது—நாடு இது — நாட்டின் பெரும் தலைவர் போக்கு இவ்விதம் —விழாவிலே பேசியதோ, புத்தப் பொலிவு மீண்டும் தோன்றத் தொடங்கி விட்டது, என்று!

புத்த மார்க்கம்,, இப்படிப்பட்ட பொருளற்ற, குல பேதத்தை மட்டுமல்ல, ஜாதி ஆணவத்தை வளர்க்கக் கூடிய முறைகளைக் கண்டித்து, எழுப்பப்பட்ட அறிவுப் புயல்.

அரசுகளை ஆட்டிப் படைத்து வந்த வேத மார்க்கம், மனித குலத்

தின் மாண்பையே மாய்த்துவிடும் என்று எடுத்துரைத்த பகுத்தறிவு மார்க்கம், புத்த மதம்.

வேத மார்க்கத்தவர் திண்டாடித் தவிக்கும் விதமான அறிவுப் பிரசாரம் நடாத்தி, பாமரனும் ஏற்றுக் கொள்ளும் அளவுக்குப் புத்தறிவு புகட்டி, மனிதகுல மேம்பாட்டுக்குத் தேவையான பண்புகளை எடுத்துக் காட்டிய, புத்த மார்க்கம், எளிதிலே கிடைத்ததல்ல—இந்த அறிவாயுதத்தைக் காண சித்தார்த்தர் பட்டபாடு கொஞ்சமல்ல.

அரச மன்றங்களிலெல்லாம் ஆரியக் குருமார்கள் ஆதிக்கம் பெற்றிருந்த காலம்.

காலாகாலத்தில் மழை பெய்யாவிட்டாலும், கொடிய நோய் ஏதேனும் ஏற்பட்டாலும், போர் மூண்டாலும், பூபதிக்குப் புத்ரபாக்கியம் இல்லை என்றாலும், வேள்விகளைச் செய்து, விசேஷ பலன்களைப் பெற முடியும் என்ற நம்பிக்கை ஆழப் பதிந்திருந்த காலம். படைபலத்தை விட அதிகமாக, பூஜாபலத்தை நம்பிக்கொண்டு, மன்னர்கள் இருந்த காலம்.

சோமதேவனுக்கும், இந்திரனுக்கும், வாயுவுக்கும், வருணனுக்கும், அக்கினிக்கும் மற்றும் பல தேவதைகளுக்கும், 'யாகம்' செய்யப்பட்டு, ஒவ்வோர் வகையான யாகத்தின் மூலமும் ஒவ்வோர் விதமான 'பலன்' கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், நாடாள்வோர் இருந்த காலம். ஓம குண்டத்தருகே கிளம்பும் வேத மந்திர ஒலிக்கு ஈடான சக்தி வாய்ந்த குரல், வேறெதற்கும் இல்லை என்று பலரும் நம்பிக்கொண்டிருந்த நாட்கள். வேள்வி நடத்தவும் வேத மோதவும் 'பிராமண'ர்களுக்கு மட்டுமே பிறப்புரிமை உண்டு என்ற 'தர்மம்' எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த காலம்.

பிராமண மார்க்கம், ஈடு எதிர்ப்பற்று அரசோச்சி வந்த நேரம்.

ஜாதி முறையைச் சந்தேகிக்கவோ, எதிர்க்கவோ, முடியும் என்ற எண்ணமே, ஏற்படாத நாட்கள்.

கடவுள், அவரவர்களுக்கென்று, குலத்தையும், ஒவ்வோர் குலத்துக்கென ஓர் தர்மத்தையும், ஏற்கனவே அமைத்து வைத்து விட்டிருக்கிறார், எனவே, அந்த தர்மத்தைத் தவறினால் ஆண்டவனால் அழிக்கப்படுவர், என்ற அச்சம், எவர் உள்ளத்திலும் குடிகொண்டிருந்த காலம்.

வீராதி வீரனும், சாம்ராஜ்ய சிருஷ்டிகர்த்தாக்களும், பிராமண மார்க்கத்துககு அடிபணிந்தாலொழிய வாழமுடியாது என்ற அளவுக்கு, வைதீக மார்க்கத்துக்கு ஆதிக்கம் இருந்த காலம்.

விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் பிரம்மாண்டமான கோயில்கள் கட்டப்பட்டு, வேந்தர்களின் காணிக்கைகள் குவிக்கப்பட்டு, வேதமோதிகளின், ஆதிக்கத்தின் கீழ் விடப்பட்டிருந்த காலம்.

ஆலய அதிபர்களாக ஆரியக்குருமார்கள் வீற்றிருந்தகாலம்.

அவர்களின் தாய்மொழியான, சமஸ்கிருதம், 'தேவபாஷை' என்பதை, அனைவரும் ஏற்றுக்கொண்டிருந்த நாட்கள்.

ஜெபமாலை, செங்கோலை ஆட்டிப் படைத்த காலம்.

பூஜாரியின் கண் செல்லும் வழி செல்ல—பூபதிகள் காத்துக்கிடந்த காலம்.

வங்கம், கலிங்கம், துளுவம், பாஞ்சாலம், நேபாளம், கூர்ஜரம், மகதம், அங்கம், எனும் எந்த அரசிலும், வைதீக பிராமண மார்க்கமே, ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த காலம்.

வேதமார்க்கம், வேள்விமுறை, ஜாதி அமைப்பு, குலதர்மம், மந்திர உச்சாடன பலம், எனும் இம்முறைகளுக்கு, மேலானவைகளாகவோ, இவைகளைப்போன்றவைகளாகவோ வேறு ஏதேனும் இருக்கிறதா, என்ற கேள்வியும் பிறக்காதகாலம்.

வேதமார்க்கத்தின் பயனாக, ஜாதி முறையும், ஜாதி முறையின் பயனாக, பிராமண ஆதிக்கமும் ஏற்பட்டிருக்கிறதே, இது சரியா, பயன் தருவது தானா என்பதுபற்றி, எண்ணமும் எழாமலிருந்தது,

வேதமோதி வேள்வி நடாத்துவதன் மூலம், இகத்திலே, இடுக்கண்களைந்து கொள்ள முடியவில்லையே, வாழ்க்கையிலே ஏற்படும் கஷ்டங்களும், பஞ்சம், பிணி, போர், கலகம், முதலிய பெரும் நாசப் புயல்கள் வீசாமல் தடுக்க முடியவில்லையே, இங்கிலேயிலே, வைதீக மார்க்கம், என்ன சாதித்துவிட்டது, என்று எவரும் கேட்கத் துணியவில்லை.

சாந்தி இல்லை-சமர்கள் ஏராளம்! ராஜகோலாகலத்துக்குக் குறைவில்லை, ராப்பட்டினிகளுக்கும் குறைவில்லை! கண்டாரைக் கொல்லும் கட்டழகியருக்கும் காதல் வாழ்க்கை நடத்தும் சீமான்களுக்கும் குறைவில்லை-கண்டுகொண்டிருக்கும் போதே, ஊன், உருகி, எலும்புக்கூடாகி, மடியும், பஞ்சைகளுக்கும் குறைவில்லை!

இன்பத்துக்கு அருகே துன்பம்! செல்வத்துக்கு அருகே வறுமை! அரண்மனைக்கருகே அன்னக்காவடிகள்! சாந்தோபதேச மண்டபத்துக்கருகே பாசறைகள்! மாயப் பிரபஞ்ச உபதேசியாருக்குப் பக்கத்திலே, மண்டலம் பல ஜெயித்து, மணிமுடியின் ஜொலிப்பை அதிகப்படுத்திடும், கூர்வாள் ஏந்திய படைத்தலைவர்! இப்படி இருந்தது — இவ்வண்ணமிருப்பது சரியா என்ற கேள்வியும் எழாமலிருந்தது.

மழை இல்லையா, வருண பூஜை செய்வோம் — மாற்றானை வெல்ல வேண்டுமா, மற்றோர் யாகம் செய்வோம் — ஆடுகள், பசுக்கள், (முக்கியமான நேரத்திலே நரபலியும் கூட) அறுத்துப் போட்டு, வேள்வி நடாத்துவோம் — விசேஷ பலன் கிடைக்கும் என்று குருமார்கள் கூறக் கேட்டு, கோல்கொண்டோன் அதுபோலவே செய்திடும் காலம்.

அந்தக் காலத் திரையைக் கிழித்துக்கொண்டு கிளம்பிற்று, கதிரொளி—கபிலவஸ்து நகரில்.

ஆரிய மார்க்கத்தின் கோட்டையாக விளங்கிய அரண்மனைக்குளிருந்தே கிளப்பிற்று, ஆரியத்தை ஒழிக்கும் அறிவொளி!

அரச வம்சத்தை ஆட்டிப் படைத்த ஆரிய மார்க்கத்தை எதிர்த்திடும் ஆற்றலுள்ள ஆண்மகனொருவன், அதே அரச வம்சத்திலிருந்தே கிளம்பினான்!

ஆரிய மார்க்கத்தினர், எதிர்பார்த்திருக்கவே முடியாத இடத்திலிருந்து கிளம்பிற்று, புத்தொளி—புத்த மார்க்கம்.

பூர்வ புண்ய பலனால், அரசனாகப்

பிறந்து, பிராமண ஆசிர்வாத பலனுல் வாழ்ந்துவரும், எத்தனையோ 'ராஜா'க்களிலே, ஒருவர்தான்,

அவர், மற்ற மன்னர்களைப் போலவே, ஆரியத்துக்கு, செல்வத்தையும் அன்பையும் காணிக்கையாக அளித்தவர்தான் – அறிவுப் புரட்சிக்கென அவர் ஓர் ஒப்பற்ற காணிக்கையை — சித்தார்த்தரைத் தருவார் என்று ஆரியம், எண்ணியிருந்திருக்கமுடியாது. ஆரிய ஆசீர்வாதபலனுலேயே, தமக்கோர் ஆண் மகவு பிறந்தது என்றுதான், மன்னர் எண்ணிக் களித்திருப்பார். அவர் என்ன கண்டார், தங்கத் தொட்டிலில் புன்னகை தவழும் முகத்துடன் உள்ள அக்குழந்தை மக்களின் எண்ணத் துறையிலே, பெரியதோர் புயலைக் கிளப்பப் போகிறது என்று.

இளவரசர் பிறந்திருக்கிருர்!— என்றுதான் மக்கள் எண்ணிப் பூரித்தனர்-புதுமார்க்கப் போதகர் பிறந்தார், என்று எங்ஙனம் அறிவர்.

அரண்மனையில் தாதியரும் ஊழியரும் சீராட்டிப் பாராட்ட, மன்னரும் அவர்தம் மனையாட்டியும் மகிழ்ந்து கொண்டாட, சித்தார்த்தர் வளர்த்து வந்தார்.

ஆரியரும், தமது அடிபணிய புதிய ராஜகுமாரன் வளர்ந்து வருகிருன் என்றுதான் எண்ணினர்.

எல்லா அரசிளங்குமரர் போலவே அவருக்கும் திருமணம் நடந்தது-பேசும் பொற் சித்திரம் அவருக்குக் கிடைத்த இல்லாள்! இன்பப் பெருக்காம், குழந்தையும் பிறந்தது-இன்னமும் என்ன வேண்டும்? பொன் விலங்கு போதுமான அளவுக்குப் பூட்டப்பட்டு விட்டது! சித்தார்த்தருக்குள் புத்தர் இருப்பது யாருக்கும் தெரியவில்லை-எதிர்கால அரசர் மட்டுமே அனைவர் கண்களுக்கும் தெரிந்தார்.

அவர் கண்களிலேயோ, மனிதன் தெரியலானுன்.

வறுமையின் பிடியிலே சிக்கிய மனிதன்.

மரணத்தால் தழுவப்பட்டுவிட்ட மனிதன்!

இந்தக் காட்சிகளைக் கண்டார் சித்தார்த்தர், மெள்ளச்சிரித்தார்!

மனிதன் என்ருல் இதுதானு! — என்று சிந்தை குழம்பிய நிலையில் கேட்டார் சித்தார்த்தர் — "வேறன்னவாம்! மனிதன் என்ருல் மலர் முகவதி, அவள் தரும் மதுநிகர் இன்பம், மழலை மொழிக் குழவி, மணம் தரும் தோட்டம், மந்தகாசம் தரும் அரண்மனை, அதிகாரம் தரும் அரசு, இவ்வளவுதான் என்று எண்ணிக்கொண்டாய்! மனிதன், துக்கம், பிணி, மரணம், எனும் கொடிய பிடிகளிலே சிக்கிக் கொள்ளக் கூடிய மிக மிக பல ஹீனன், என்ருர் புத்தர்! ஏன்? என்று அச்சத்துடன் கேட்டார் சித்தார்த்தர்-இதுவரையாரும் கேட்காத கேள்வி இது, என்ருர் புத்தர்-பதில் கிடைத்தாக வேண்டுமே, பதில் கிடைக்காவிட்டால் மனக் கொந்தளிப்பு அடங்காதே என்று கூறினர் சித்தார்த்தர். 'பதில் தெரிய வேண்டுமா-தேடு, கிடைக்கும் என்ருர் புத்தர். தேடத் தொடங்கினர்-அரண்மனை, அழகு மனைவி, அன்புக்கனி, எதுவும் அவரைத் தடுக்க முடியவில்லை-தேடினர், தேடினர்-காடுகளில் காணுறுகளில், கடும் தவத்தில், குருமார்களிடத்தில், தேடாத இடமில்லை-நாடாத முறை கிடையாது-சித்தார்த்தருக்கு விடை கிடைக்கவில்லை, விசாரம் மேலிட்டது-கிடைக்குமிடத்தை விட்டு வேறு எங்கெங்கோ தேடி அலைகிருயே!-என்று கேலி பேசினர், உள்ளே இருந்தவர்-எங்கே இருக்கிறது, என்று கேட்டார் சித்தார்த்தர்-உன்னிடமே இருக்கிறது, உள்ளத்திலேயே இருக்கிறது என்ருர் உள்ளுறைபவர்-புன்னகைபிறந்தது-பேரறிவு கிடைத்தது.

சித்தார்த்தர், புத்தரானுர்— சிறுமதியாளரின் செருக்கும் பகையும் அவரைத்தொடவும் சக்தியற்றுப் போயின. அவருடைய அறிவுரை கேட்க, ஆயிரமாயிரம் மக்கள் கூடுகின்றனர்! அவர் நடமாடும் காடுகள், நாடுகளாகின்றன! அவர் தங்கும் இடம், புனிதம் பெறுகிறது! அவர் மொழி, புது வழியைக் காட்டுகிறது.

மன்னராகி மணிமுடி தரித்து, படை பலத்துடன், சித்தார்த்தர், வேறு அரசுகளுக்குள் சென்றிருந்தால், அவரை வாளும் வேலும், கரியும் பரியும், ஆளும் அம்பும், சதியும் பிறவும், எதிர்த்துத் தாக்கியிருக்கும்-வென்ருல், தோற்ற மன்னர்கள், பொருமையால் அவரைத் தூற்றியிருப்பர்—தோற்றுப்போயிருந்தால், வெற்றி பெற்ற வேந்தன், அவரை, விரட்டி விரட்டி அடித்திருப்பான்.

இதோ வருகிருர் புத்தர்-அரசர்கள், எதிர்கொண்டழைக்கிருர்கள். அவர் பார்க்கிருர், மன்னர்கள், தங்களைப் பாக்கியசாலிகளென்று கருதிப் பூரிக்கிருர்கள். அரசுகள் பல, அவர் இட்ட கட்டளையை நிறைவேற்ற முன் வருகின்றன. அரசர் பலர், அவருக்கு ஏவலராகின்றனர். புதியதோர் சாம்ராஜ்யம், போரும் புகையும் இன்றி, அன்பும் அறமும் கொண்டு ஆக்கப்பட்டு விட்டது.

வேத நிந்தகன்—என்று வெறுப்புடன், ஆனுல், மெதுவாகத்தான், கூறுகிருர்கள், வைதீக மார்க்கக் குருமார்கள்.

வாதத்திற்கு இழுத்து, வம்பு வல்லடியில் ஈடுபட வைப்போம், என்று எண்ணி, பிரபஞ்சத்தின் ஆதி அந்தம் கூறவல்லாயோ, மரணத்துக்குப்பின் ஜீவன் உள்ள நிலையை அறிந்துரைக்க வல்லாயோ ஆதி மத்யாந்தரகிதனின் அந்தரங்கத்தை அறிந்திடும் ஆற்றல் பெற்ருயோ? — என்று ஆர்ப்பரிக்கின்றனர், ஆரிய குருமார் சிலர். அவர் புன்னகை புரிகிருர். என் கடன், இவ் உலகிலே உள்ள மக்கள் தூயவர்களாக வாழ்வதற்கு என்ன வழி என்பதுபற்றிய எண்ணத்தை வெளியிடுவதுதான் — என்று கூறுகிருர். சுழலில் சிக்க மறுக்கிருரே, என்று சூது மதியினர் ஆயாசமடைகின்றனர், அவரோ, அரசுபல வென்று, முரசு கொட்டியபடிச் செல்கிருர்.

வேதத்தை — வேள்வியை — ஜாதியை— பேதத்தை — அவர் அறவே கண்டித்துவருகிருர்.

காட்டிடை உலவி, காய்ந்த புல்லினைக் காட்டி, தீ மூட்டி, ஆண்டவனின் படைப்புகளைக் கொன்று அதிலே கொட்டி, மந்திரம் ஜெபித்து, அதன் மூலம், மக்களை ஈடேற்றும் வேள்வி முறையை, அவர் மடைமை, கொடுமை, என்று கண்டிக்கிருர். ஆரியம் நிணறுகிறது.

நிரீஸ்வரவாதி! — என்று நிந்திக்கிருர்கள்—அவரை—ஆனுல் உரத்த குரலில் அல்ல! புத்தர்பக்கம் காட்

டவர் திரண்டெழுந்து நிற்கின்றனர்.

மன்னர்களுக்குப் புதியதோர் சிக்கல் ஏற்பட்டு விட்டது. மக்கள் புதியதோர் மகானிடம் சொக்கிக் கிடக்கிறார்கள்; அவரோ புதியதோர் மார்க்கத்தைக் காட்டுகிறார்; அந்தப் புதிய மார்க்கமோ, பூசுரத் தலைவர்கள் கூறிவரும் கொள்கைகளை மறுப்பதாக இருக்கிறது; அந்தப் பூசுரத்தலைவர்களோ, தங்களுக்குப் பரம்பரைக்குருமார்கள்; அவர்களின் ஆசீர்வாத பலம் இல்லாத அரசு ஆண்டவனால் அழிக்கப்பட்டு விடும் என்று அச்சம் வேறு இருக்கிறது; இந்நிலையில், என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தனர், மன்னர்கள்.

புத்தமார்க்கத்தை அலட்சியப் படுத்திடவோ முடியவில்லை. மக்கள், அதன் வயப்பட்ட வண்ணமிருக்கிறார்கள். பழய வைதீக பிராமண மார்க்கத்தையோ அடியோடு வெறுத்துத்தள்ளி விடுவதற்கில்லை பல இடங்களிலே, அரசமதமாக இருக்கிறது ஆரியம். இந்தச்சிக்கல். மன்னர்களுக்கு.

மக்களின் மனதை மயக்கி, அதன் மூலம், மன்னர்களை மருளச் செய்து மண்டலம் பலவற்றிலும் வெற்றி கொள்ளும் புத்த மார்க்கத்தை எதிர்த்தொழிக்கும் ஆற்றல் இல்லை, ஆரிய மதத் தலைவர்களுக்கு. அலட்சியப்படுத்திப் பார்த்தனர் — பலனில்லை. அவன் ஓர் மாயாவி, மக்களை வசியப் படுத்துகிறான், என்று பேசிப்பார்த்தனர், பலன் இல்லை! அவன் வேதநிந்தகன், நாஸ்திகன், என்று தூற்றிப் பார்த்தனர், அதிலும் பலன் இல்லை. அருளொழுகும் கண்களுடன் புத்தர், இந்த அவனியையே தன் அரசுக்குக் கொண்டு வந்து விடுவார் போல் தெரிந்தது, அஞ்சினர்.

எதிர்த்தொழிக்க முடியாததை, அடுத்துக் கெடுத்துவிடலாமல்லவா! அச்சம் கொண்ட ஆரியத் தலைவர்களின், மனதிலே இந்த எண்ணம் உதித்தது, புதிய நம்பிக்கை கொண்டனர். புத்தரைப் புகழ்ந்து பாராட்டுவதை, அவர் உரை கேட்கும் விழாக்கள் நடத்துவதை, தடுக்கவில்லை; தாராளமாக இவை நடைபெறட்டும், அவர் ஓர் அருளாளர்; அவருடைய அன்பு மார்க்கம், ஆதிமகரிஷிகள் அறியாததல்ல; உபநிஷத உண்மைகளையே தான், புதிய முறையில், அந்த உத்தமர் எடுத்துரைக்கிறார்-என்று பேசலாயினர்.

இந்தப்போக்கு, சிக்கலைக் கண்டு சிந்தை நொந்துகிடந்த மன்னர்களுக்கு, மிகவும் பிடித்தமானதாகி விட்டது.

பழைய மார்க்கத்தையும்கைவிடாமல், புதிய மார்க்கத்தையும் இகழாமல், எம்மதமும் சம்மதமே, என்ற போக்கைக்கொண்டனர். புத்தரின் பொன்மொழிகளையும் போற்றினர், முனிபுங்கவர்களின் முதுமொழிகளையும் போற்றினர். ஆலயங்களும் அமைத்தனர், ஆதி தெய்வங்களுக்கு; புத்த மடங்களும் கட்டித் தந்தனர், புதிய மார்க்கத்தினருக்கு. மன்னர் உதவி புரியக் கண்டு; ஆரிய குருமார்களும் மகிழ்ந்தனர். தங்கள் ஆதிக்கத்தை ஓரளவு அசைத்திடும் ஆற்றல் கொண்ட புதுப்புயலை, எதிர்ப்பதை விட, சற்றுப் பொறுத்துக்கொண்டிருந்துவிட்டு, அதன் வேகம்தணிந்த பிறகு, மீண்டும் ஆதிக்கவேட்டை ஆடலாம் என்று திட்டமிட்டனர். வேட்டைக்காரனின் பறை ஒலி கேட்டதும், அடர்ந்த புதருக்குள் பதுங்கிக் கொள்ளும் சிறுத்தை போல, ஆள் அரவம் கேட்டதும், புற்றுக்குள் புகுந்து கொள்ளும் பாம்பு போல, ஆரியமார்க்கம், புதிய வேகத்துடன் கிளம்பி, திக்கெட்டும் வீசிய புத்தமார்க்கத்தைக் கண்டு, பதுங்கிக் கொண்டது.

சிவவிஷ்ணு ஆலயங்கள் எப்போதும் போலிருந்தன — சிகை வளர்த்து, ஜெபமாலை ஏந்திய குருமார்களும் வழக்கம்போல எங்கும அரச அவையிலும் இருந்து வந்தனர்; திருவிழாக்கள் எப்போதும் போலவே நடைபெற்று வந்தன, ஆனால் இவைகளிடம், மக்களுக்கு முன்பிருந்த ஆர்வம் இல்லை; அவர்களின் மனமெல்லாம், புத்தர் காட்டிய புது நெறியிலே, சென்று படிந்தது.

புத்தமார்க்கம், மக்களைக் கூவி அழைத்தது — அதிலும், சமூகத்திலே, ஜாதியினால்தாழ்த்தப்பட்டுக் கிடந்த மக்களை, தங்கள் மீட்சிக்கு ஓர் வழி உண்டு என்ற நம்பிக்கை கொள்ளும்படிச் செய்தது. ஆண்டவன் அருளைப் பெறுவது, பாமரராகிய நம்மாலும் ஆகக்கூடிய காரியம்தான், அடவிசென்றுக் கடுந்தவம் புரிந்தால்தான் அவன் அருள் பெறலாம், வேதாகமம் தெரிந்தால்தான் திருவருள் பெறமுடியும், வேள்வி செய்தால்தான் விமோசனம் கிடைக்கும், பூதேவரின் ஆசி இருந்தால்தான் இகத்திலும் பரத்திலும் இன்பம் கிடைத்திடும், என்று பழைய மார்க்கம் கூறிவந்தது! இது தங்களால் முடியாத காரியம் என்பதால், நாட்டுப் பெருங்குடி மக்கள், தங்கள் விடுதலையும் விமோசனமும் யாராவது ஓர் குருவினாலேதான் தேடித்தர முடியும் என்று எண்ணி, மேய்ப்பவன் அழைத்துச் செல்லும் இடம் செல்லும் மந்தை போலிருந்தனர். புத்தரோ, புதிய பாதை வகுத்துக் காட்டினார்—வேதம் வேண்டுவதில்லை—வேள்விசெய்ய வேண்டுவதில்லை — தவம் தேவையில்லை, அதற்காக, ஊசி முனைமீது நிற்பது, மண்டையை உருக்கும் வெயிலில் நிற்பது, நீரில், நெருப்புக் குண்டத்தில், தலைகீழாக, முட்பாயின்மீது, இவ்விதமெல்லாம் இருந்தாக வேண்டும், என்பதில்லை—எல்லையற்ற இன்பம் பெற, மனத்தூய்மை வேண்டும், நல் வாழ்க்கை வாழ வேண்டும், இது உன்னால் செய்யக் கூடிய காரியம்தான், என்று கூறித் தைரியமும் தன்னம்பிக்கையும் ஊட்டினார்.

ஆரியம், எல்லா நிலைகளுக்கும், பூர்வகர்மத்தையே காரணமாகக் காட்டிற்று; அவன் அரசனாக இருப்பதும் இன்னொருவன் அன்னக்காவடியாக இருப்பதும்; ஒருவன் பொன்மேனியனாக இருப்பதும், மற்றொருவன் புழு நெளியும் புண் கொண்ட உடலுடன் இருப்பதும், ஒருவன் செல்வத்தில் புரள்வதும் வேறொருவன் வறுமையால் வாடுவதும், எல்லாம், ஏற்கனவே, தீர்மானிக்கப்பட்ட திட்டம்; தரப்பட்ட தீர்ப்பு; ஏற்படுத்தப்பட்ட அமைப்பு; கடவுளின் திட்டம்; இதை மாற்றவோ, எதிர்க்கவோ, இது கண்டு மனம் குமுறவோ, கூடாது; செய்திடின் மற்றும் பாபம் வந்து சேரும்-அந்தப் பாப மூட்டைகளைச் சுமந்து கொண்டு, நரகம் சென்று நாசமாக வேண்டும், என்று கூறி வந்தது.

புத்தமார்க்கமோ, ஒழுக்கம் ஆசையைக்களைதல், அன்பு எனும் அருமுறைகளைக் கடைப்பிடித்தால், மக்கள் பேரின்பம் பெற முடியும் என்ற நம்பிக்கையைத் தந்தது.

மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையை,—தேவ பாஷையில் அல்ல—மக்களின் மொழியில் கூறிற்று புத்தமார்க்கம்.

புத்த மார்க்கத்தினரின் ஒழுக்கமும் உயர் பண்பும், அன்பு நெறியும், அற உரையும், மக்களை, ஆரியத்தளைகளை நொறுக்கிடும் நிலைக்குக் கொண்டுவந்தது. அஞ்சிய ஆரியம் மூலைசென்றது, முக்காடிட்டுத் திரிந்தது, பிறகு புத்த மார்க்கத்துக்கு 'முகஸ்துதி' செய்யலாயிற்று! நெஞ்சிலே மூண்ட பொறாமைத் தீயை மறைத்துக்கொண்டு, புத்த மார்க்கத்தின் பொன்மொழிகளைத்தாமும் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ற வண்ணம், ஆரிய மார்க்கத்தின் முறைகளையும் திருத்தி அமைத்துக் கொள்வதாகக் காட்டிக்கொண்டது. ஆனால் சமயம் கிடைத்தபோதெல்லாம், கலகமூட்டிவிடுவதும், மோதுதல்களை உண்டாக்குவதுமாக இருந்தது. சிலர், வஞ்சக நினைப்புடனேயே புத்தமார்க்கத்தை தழுவிக் கொண்டு, உள்ளிருந்தே கேடு செய்யலாயினர்—நாளந்தா பல்கலைக் கழகமே தீயோரால் தீக்கிரையாக்கப் பட்டது! புத்தருக்குப் பிறகு, இந்தக் கேடுதரும் முறை புதிய வலிவு பெற்றது. மீண்டும் மக்களை மயக்கினர் மதவேடமிட்டு — மன்னர்களும் கிடைத்தனர்—சமர்கள், சச்சரவுகள் கிளம்பலாயின! அடுத்துக் கெடுத்தல் எனும் முறை ஆரியத்துக்கு வெற்றி தரலாயிற்று. புயல் ஓய்ந்து விட்டது — புறப்படலாம் வெளியே என்று, கிளம்பினர்—கலகம், குழப்பம், பெருகிற்று—ஆரியம் மீண்டும் அரசோச்சக் கிளம்பிற்று.

தெளிவற்றோரின் மனதிலே பொருளற்ற கதைகளும், மருளூட்டும் நிகழ்ச்சிகளும், எளிதிலே மாற்றத்தை உண்டாக்கி விடுகிறது.—இந்நிலை, ஆரியத்துக்கு மெத்தப் பயன்பட்டது.

மனதை நெகிழச்செய்யும் பிரச்சார முறையான கலையை ஆரியம் மிக மிகத் திறமையுடன் தங்கள் கருவியாக்கிக்கொண்டது.

புத்தரை இகழ்வதில்லை — மாறாகப் புகழ்ந்தனர். எந்த அளவுக்கு என்றால், தமது தெய்வங்களிலே ஒருவர், என்ற அளவுக்கு—எந்த முறையிலே என்றால், புத்தர் போதித்ததும் ஆதிரிஷிமார்கள் போதித்ததும், அடிப்படையிலே ஒன்று தான், எனவே புத்தமார்க்கத்தைக் கொண்டாடுவதற்காக, மூதாதையர் மார்க்கமான ஆரியத்தை விட்டு விடத்தேவையில்லை, என்றுபேசும் முறையிலே!!

ஆரியத்துக்குக்கிடைத்த பிரசார சாதனம்,—கலை.

பாட்டு, கூத்து, கதை—இவை மக்கள் மனதிலே, இலகுவாக ஆரியக்கருத்துக்களைப் பதியவைத்தது. சிற்பம் இந்தக்கருத்துக்களை, மக்கள் மனதிலே நிகழச் செய்வதற்கான நீண்டகாலத் திட்டமாயிற்று!

மெள்ள மெள்ள, கள்ளத்தனம் வென்றது—வெள்ளை உள்ளத்தினர் பலியாயினர்—புத்தமார்க்கம் புனிதவான்களிடம் அடைக்கலம் புகுந்தது — வெளிநாடுகளிலே ஒளி வீசிற்று—பிறந்த நாட்டிலே, மீண்டும் ஆரியமே, அரசமார்க்கமாகி விட்டது — பாமரரை அணைத்துக் கொண்டது. புத்தர், மகாவிஷ்ணுவின் அவதாரம், என்று புகழ்வது போலப்பேசி, பகவான் மகாவிஷ்ணு புத்தாவதாரத்தின் போது, இன்னின்ன பெருஞ்செயல்களைச் செய்தார், பக்தகோடிகளே! இராமவதாரத்தில், கிருஷ்ணவதாரத்தில், பகவான் செய்த திருவிளையாடல்களைக் கேளீர் என்று பேசினர்—மக்கள் வீழ்ந்தனர்.

இதுபோல, புத்தமார்க்கத்தின் மூலம், இந்நாட்டுப் பெருங்குடி மக்கள் பெற்றிருக்கக்கூடிய பெரும் பலனை, புத்தறிவை, புத்தொளியை, பொற்கதிரை, பாழ்படுத்தி சனாதனச்சேற்றிலே மீண்டும் மக்களைத் தள்ளிற்று! சேறு, சந்தனமணம் வீசுகிறது என்று பாமரர் நம்பினர்—சொக்கினர். ஓரளவுக்கு மக்களுக்கு விழிப்பு ஏற்பட, பல நூற்றாண்டுகள் தேவைப்பட்டன. உலகப் பேரறிவாளர்களின் உரைகளையும் பகுத்தறிவாளரின் பேச்சையும், மக்கள் கேட்டுக் கேட்டு, நமது நாட்களிலே மெள்ள திருந்தலாயினர்—ஆரியம் சீறிக் கிளம்பித் தாக்குகிறது.

நிலை இது நாடு, இவ் வண்ணம்.

நடந்த சதி, சரிதத்தை ஊன்றிப் படித்துச் சிந்திப்பவருக்கு விளங்குகிறது—எனினும், எந்த புத்த

..மார்க்கத்தை, நாட்டின் மார்க்கமாக விடாமல் செய்துவிட்டனரோ, எந்த புத்த மார்க்கத்தைச் சுட்டுப் பொசுக்கத் தமது ஆற்றல் அத்தனையையும் செலவிட்டனரோ, எந்த புத்த மார்க்கத்தை மறைந்திருந்தும் உடனிருந்தும, உபசாரம் பேசியும், உட்கலகம் விளைவித்தும் ஒடுக்கினரோ, அந்த புத்த மார்க்கத்தை, நாட்டிலே பெரும் அளவிலே பரவி, ஆரியத்தை வேரறக் களையும் அளவுக்குப் பரவிடமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டதாக நம்பிக்கை பிறந்ததும், அதே புத்த மார்க்கத்தை வெறுப்பதாக வெளியே தெரிய ஒட்டாதபடி தந்திரமாக நடந்துகொண்டும், பாராட்டுதலைக் கூடத் தந்துகொண்டும், வாழ்ந்து வருகிறது, ஆரியம். ஜாதி இருக்கிறது—ஜாதியை ஆதரித்துப் பேசும் அறிஞர்களும் உலவுகிறார்கள்—அமெரிக்காவரை சென்று பேசுகிறார்கள்! மூட நம்பிக்கை இருக்கிறது—மூதாதையர் தந்த பொக்கிஷம் இது — இதனை இழக்கலாமா என்று மூட மதியினருக்குச் சூது மதியினர் சாகசமாகக் கூறியபடிதான் உள்ளனர்! கட்டுக் கதைகள் காவியம்! வெட்டி வேலைகள், ஆசாரம்! வீணருக்கு வாழ்வளிக்க, திருவிழாக்கள்! எலலாம் இருககிறது—எதையும் ஆதரிக்கும், துணிவும் இருக்கிறது!! இல்லாமலா, பாபு ராஜேந்திரர், இருநூறு பார்ப்பனர்களின் காலைக் கழுவினார்—நாட்டிலே 'ரோஷ' உணர்ச்சி தலைகாட்டவில்லையே! காசியில் கால் கழுவினது போதாது என்று, ராமேஸ்வரமும் வர இருக்கிறார், ராஜேந்திரர்—கால்களைத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள், குருமார்கள்! இந்நிலையிலே நாடு இருக்கிறது, டாக்டர், புத்த மார்க்கப பொலிவு தெரிகிறது, என்று பேசுகிறார்.

குழந்தையைக் கொன்று குளத்தில் போட்டுவிட்டு, அதன் காதணியைக் கொண்டுவந்து, கதறும் தாயிடம் கொடுத்து, இதை அணிந்துகொண்டு உன அருமைக் குழந்தை துள்ளி விளையாடுவதை இப்போது நினைத்துக் கொண்டாலும், என் நெஞ்சம் வெடித்துவிடும்போலிருக்கிறது, என்று கூறிடும் கதைபோல — கதையிலேயும் இப்படிப்பட்ட காதகன் காணப்படமாட்டான் — புத்த மார்க்கத்தைப் பரவாதபடி தடுத்து, புத்த மார்க்கத்தின்மூலம் கிடைத்த பொன்னொளியைக் காண முடியாதபடி மக்களைக் கருத்துக் குருடர்களாக்கிவிட்டு — இப்போது புத்த மார்க்கம், புனித மார்க்கம், அதன் பொலிவு மீண்டும் ஈண்டு தெரிகிறது என்று, புகழுரை வழங்குகிறார்கள்.

புத்த மார்க்கப் பொலிவு உள்ளபடி நாட்டிலே காணவேண்டுமென்றால், புத்த மார்க்கப் பொன்னொளி மீண்டும், மக்களுக்குத் தெரிய வேண்டுமானால், மக்களின் அறிவுக் கண்கள் திறக்கப்படவேண்டும்—கருத்தைக் கெடுக்கும் கயமை, எந்த பெயருடன் உலவினாலும், எத்தனை உயரத்திலே ஏறிக்கொண்டிருந்தாலும், அதனை அழித்தொழிக்கும் ஆண்மையாளர்கள் முன்வரவேண்டும். டாக்டர் ராதாகிருஷ்ணன் போன்றார், சாஞ்சி விழாக்களிலே பேசிடும் உபசார மொழிமூலம், அந்தப் பொன்னொளியைப் பெற்றுவிட முடியாது—அந்தப் பொன்னொளியைப் பெற, போர்க்கோலம் பூண்டுள்ள பகுத்தறிவாளர்களின் கரம் வலுக்கவேண்டும்! உங்கள் கரம், என்ன செய்யப் போகிறது? புத்தரின் பொன்மொழிகளை மக்கள் உள்ளபடி அறிந்துணர, ஆரிய அந்தகாரத் திரையைக் கிழித்தெறியும் ஆண்மைமிக்க காரியத்தைச் செய்யப்போகிறதா, அல்லது, பாபு ராஜேந்திரர் செய்ததுபோல, புரோகிதரின் காலைக் கழுவப் போகிறதா!—என்று கேட்டால், கோபம் வேண்டாம் நண்பர்களே—கோபம் வேண்டாம்—பதில் வேண்டும்—செயல்மூலம்! ❀

நாகனர் நாட்டிலே.........!

[இரா. செழியன்]

"மழை தவறி விட்ட , ஏரி வரண்டு விட்டது; குடி தண்ணீர் இல்லாமல் நகரமக்கள் கஷ்டப்படுகின்றனர்."

"மழையா? இந்தப் பாப பூமியில் எப்படிப் பெய்யும்? தெய்வபக்தி தான் குறைந்து விட்டதே! மழை வேண்டுமென்றால் பகவத்தியானம் செய்யுங்கள், பஜகோவிந்தம் பாடுங்கள்."

உணவுக் குறைவு, பஞ்சம் தலை தூக்குகிறது."

"அவ்வளவுதானே, பஜகோவிந்தம் பாடுங்கள்! எல்லாம் தீர்ந்து விடும்."

"பட்டினி கிடக்கிறார்கள், பசியால் துடிக்கிறார்கள் செத்து விட்டார்கள். சீரழிகிறார்கள்."

"பஜகோவிந்தம், பஜகோவிந்தம்."

ஆச்சாரியார், சென்னையில் மந்திரி சபைக்குள் நுழைந்ததிலிருந்து, எதற்கெடுத்தாலும் பஜகோவிந்தத்தையே பதிலாகத் தந்துவருகிறார். பத்திரிகைகளும் அவரது வேத மொழிக்குப் பக்கம் பக்கமாக விளம்பரம் தருகின்றன. "மகான் வந்தார், மந்திரி சபை அமைந்தது பிரார்த்தனை செய்தார், மழை பெய்தது." என்றெல்லாம் எழுதுகின்றன. அந்த அர்ச்சனைகளை யெல்லாம் ஆச்சாரியாரும் ஏற்றுக்கொள்கிறார்.

சென்னையில் நடைபெறவிருந்த பாகிஸ்தான்—இந்தியா கிரிக்கெட் போட்டிப் பந்தயம், மழை பெய்ததால் தடைப்பட்டது. பந்தயத்தைப் பார்க்க விருந்த பல்லாயிரக் கணக்கான அபிமானிகள் மனம் நொந்தனர், மழை ஏன் வந்தது?" என வானைப் பார்த்துச் சினந்தனர். ஆச்சாரியாருக்கு இது பொறுக்கவில்லை. தன்னுடைய பிரார்த்தனையால் வந்த மழையை இந்தவேடிக்கைக் காரர்கள் தூற்றுவதா என்று எண்ணினர் "கிரிக்கெட்பந்தயத்தை விடத் தேசம் முக்கியமானது, மழைபெய்ததற்கு நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்." என்றார் அன்பர் ஆச்சாரியார்.

ஆனால் அந்தப் பொல்லாத மழைக்கு ஆச்சாரியாருடைய நன்றியைக் காப்பாற்றிக்கொள்ளத்தெரியவில்லை. மழை வலுத்தது, காற்றும் அதனுடன் கலந்தது, கடுமையான புயல் வீசியது. தஞ்சை திருச்சி ஜில்லாக்கள் அலங்கோலமாயின. ஆச்சாரியாரின் நன்றி அவலமாயிற்று.

கோரமான புயல். ஏராளமான சேதம். அப்பொழுதும் ஆச்சாரியார் பின்வாங்கவில்லை.

"இந்தக் கஷ்டங்கள் எல்லாம் ஆண்டவன் சோதனைகளாகும். இவற்றை வேதாந்த மனப்பான்மையுடன் எடுத்துக்கொள்ள வேண்டும்". புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சை திருச்சி ஜில்லாக்களைப் பார்வையிடச் சென்ற ஆச்சாரியார் இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இடிந்த வீடுகள், பிரிந்த கூரைகள், வீழ்ந்த பிணங்கள், அழிந்த மாடு கன்றுகள், சாய்ந்த தென்னந்தோப்புகள், சரிந்த வாழைத் தோட்டங்கள், நீர் நிறைந்து நாசமான வயல்கள், நீர் வழியும் கண்களுடன், சோகமாக நிற்கும் குடியானவர்கள்; இவைகளின் மத்தியில் நின்றுகொண்டு கீதையின் அன்பர் வேதாந்தம் பேசுகிறார், யுத்த களத்தில் நின்று கீதாசிரியன் வேதமொழி சொல்லியதைப்போல. "உதவி வருமென்று சொன்னார்கள்; எதிர்பார்த்து ஏமாந்தோம். உதவி ஒன்றும் வரவில்லையே!" என்று ஏக்கத்துடன் தங்கள் குறைகளைச் சொல்லிய குடியானவர்களிடம் "வேதாந்த மனப்பான்மையுடன் இருங்கள்" என்று ஆச்சாரியார் கூறுகிறார்.

உதவி கேட்டனர், உபதேசம் கிடைத்தது.

மிதிலைநகரம் தீப்பற்றி எரிந்து பாழான காட்சியைக் கண்ட பொழுதுகூட ஜனகன் தன் வேதாந்த விசாரணையிலிருந்து எழாமலிருந்தான் என்று இதிகாசம் கூறுகிறது. ஆனால் ஆச்சாரியாரோ அவரையும் மிஞ்சிவிடுகிறார். ஜனகன் தான் இருந்த இடத்தை விட்டுப் பெயராமல், விசாரணையைத் தொடர்ந்து நடத்தினன் என்று இருக்கிறது. ஆச்சாரியார் பாழான இடங்களுக்கே போய். அங்கு பரதவிக்கும் மக்களுக்கே வேதாந்த உபதேசம் செய்கிறார்.

தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் விளைந்துள்ள சேதத்தை, வெறும் வேதாந்தம் பேசித் தீர்த்துவிட முடியாது, பஜகோவிந்தம் பாடி மாற்றிவிட முடியாது. சுமார் ஐந்துகோடி ரூபாய் நஷ்டம் என்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது. நேரில் பார்த்து வந்தவர்கள் பத்து கோடியிலிருந்து பதினைந்து கோடி ரூபாய் வரை சேதம் என்று, சொல்லுகிறார்கள். நானூறு பேர்கள் இறந்திருக்கிறார்கள். இரண்டு லட்சம் வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளன. இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட ஆடு மாடுகள் செத்துவிட்டன. தோட்டம், துரவுகளில் ஏற்பட்ட சேதத்துக்கு அளவேயில்லை. "அணுகுண்டால் தாக்கப்பட்ட இடத்தைப்போலக் காட்சியளிக்கிறது" என்று ஒருவர் சொன்னார். இவ்வளவு சேதத்தை ஈடுபடுத்தத் தனிப்பட்டவர்களால் முடியாது. சென்னைசர்க்காரால் கூட முடியாது. மத்திய சர்க்கார் உதவ வேண்டும். ஆனால் உதவி வந்ததா?

தலைவர் ராஜேந்திரபிரசாதிடமிருந்து ஆயிரம் ரூபாயும் அனுதாபச் செய்தியும் வந்தது; பிரதமர் நிவாரண நிதியிலிருந்து முப்பதினாயிரம் ரூபாய் கிடைத்தது. ஏற்பட்டுள்ள சேதத்துக்கு இந்த நன்கொடை எந்த மூலை? நாகப்பட்டினத்தில் இடிந்தபோன ஆஸ்பத்திரிக்குக் காம்பவுண்ட் சுவர் கட்டக்கூட இந்தப்பணம்போதாது.

இந்த முப்பத்தோராயிரம் ரூபாயைத் தவிர வெளிமாகாணங்களிலிருந்து நமக்கு உதவி கிடைக்கவில்லை.

"பீகாரில் பூகம்பம்" என்றதும் பிரசாத் அறிக்கை விட்டார்; தென்னாட்டிலிருந்து ஏராளமாகப் பணம் அனுப்பப் பட்டது. வங்கத்தில் பஞ்சம் என்றதும் தென்னாட்டிலிருந்து பணம் வசூலித்து அனுப்பப்பட்டது. இப்பொழுது தென்னாட்டில் புயலால் சேதம், இரண்டு ஜில்லாக்கள் நாசமாயின என்று கேள்விப் பட்டதும், வடநாட்டிலிருந்து குறிப்பிடத்தக்க உதவி எதுவும் வரவில்லை.

டில்லி பார்லிமெண்டில் புயலால் நேர்ந்துள்ள நிலையை விவாதிக்க அவசரத் தீர்மானம் வந்த பிறகுதான், மத்திய சர்க்கார் "தென்னாட்டில் புயலாமே" என்று விழித்துக் கொண்டு தகவல்கள் சேகரிக்க ஆரம்பித்தனர். பின்பு "சென்னை சர்க்கார் உதவி ஒன்றும் கேட்கவில்லை. கேட்டால்கவனிக்கப்படும்" என்று உள்நாட்டு உதவி மந்திரி பதிலளித்தார். வீடுபற்றி எரிவதைப் பார்த்துக் கொண்டிருப்பவன் "வீட்டிற்குச் சொந்தக்காரன் என் உதவியை நாடவில்லையே" என்பது போல, நீரில் மூழ்குபவன் கூக்குரலிட்டும் "அவன் எனக்கு அறிமுகமாகாதவன், அதனால் எப்படிக் காப்பாற்றுவது?" என்று கரையிலிருப்பவன் சும்மாவிருப்பது போல, மத்திய சர்க்கார் இருக்கிறது.

இதே விபத்து வடநாட்டில் ஏற்பட்டிருந்தால், டில்லி இந்நேரம் கொந்தளித்திருக்குமே! பணத்தை வாரியிறைத்திருப்பார்கள், நெருக்கடியைத் தீர்க்க ஒரு இலாகவே ஏற்பட்டிருக்கும், விரைவாக உதவி கொடுத்திருக்கும். வடநாட்டில் அகதிப் பிரச்சினை உண்டானது, அதற்காகக் கோடிக் கணக்கில் பணம் செலவிட்டு, நிர்மாணத் திட்டங்கள் அளிக்கப் பட்டன; ஒரு புது மந்திரியே அதற்காக நியமிக்கப்பட்டார்.

காஷ்மீரத்தில் "பிடாரிகள்" புகுந்து கலகம் செய்கின்றனர் என்றதும், இந்திய சர்க்கார் தனது படையை உடனே அனுப்பி வைத்தது. அதற்காக இதுவரை ஏறத்தாழ இருநூறு கோடிரூபாய் செலவிட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் செலவிட்டிருக்கிறது என்று சொல்லும்பொழுது அந்தப்பணம் மக்கள் கட்டிய வரிப்பணமாகும். அதில் தென்னாடும் பங்கு கொடுத்திருக்கிறது. உதவிமட்டுமல்ல, தென்னாட்டுப் போர் வீரர்கள்கூடக் காஷ்மீரச் சண்டையில் பங்கெடுத்துள்ளனர்.

புயலால் தாக்கப்பட்ட தென்னாட்டுக்குத் தலைவர் ராஜேந்திரபிரசாத் அனுதாபச் செய்தி அனுப்பியது டிசம்பர் ஒன்பதாந்தேதி. இரண்டுநாள் கழித்து காஷ்மீர்ப் போர் வீரர்களைப் பாராட்டும் கூட்டத்தில் அவர் பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார். "மழை காலத்தில் காஷ்மீர் குளிர்பொறுக்க முடியாது. அந்தக் கடுமையான குளிரையும் ஏற்றுக்கொண்டு தென்னாட்டு வீரர்கள் தீரத்துடன் போராடியிருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள மகத்தான சேவையை நம்தேசம் என்றென்றும் பெருமிதத்துடன் நினைவில் வைத்துக் கொள்ளும்"

காஷ்மீரத்தில் ஏற்பட்ட ஆபத்தைத்தடுக்க தென்னாட்டு வீரர்கள் தீரம் தேவையாயிருக்கிறது. ஆனால் காவிரிக்கரையில் ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தடுக்க மத்திய சர்க்கார் முன்வரவில்லை.

மகன் காஷ்மீரத்தின் கடும் பனியில் போர் வீரனாகக் காவல் புரிகிறார். தந்தையோ, காவிரிக்கரையில் புயலால் நாசமான தன் வயலைப் பார்த்துக் கண்ணீர் விட்டபடி உட்கார்ந்திருக்கிறான்.

சர்க்காரும் போர்க்களத்தில் ஏராளமாகச் செலவு செய்கின்றனர். நாட்டின் வயற்புறத்தில் சிறு அளவு உதவியாகச் செலவிடக்கூட மனமின்றி இருக்கின்றனர்.

"விவேகமற்ற வெளிநாட்டுக் கொள்கையால் இந்தியா சீரழிகிறது. தன் சக்திக்குமீறிய அளவு பணத்தைப் படைபலத்தில் செலவிடுகிறது. காஷ்மீரப் பிரச்னையைச் சுலபத்தில் தீர்த்திருக்கலாம். ஆனால், இந்திய அரசாங்கம் பயனற்ற போரை அங்கு நடத்துகிறது." என்று அம்பேத்கார் மத்திய அரசாங்கத்து மந்திரி பதவியிலிருந்து விலகியபொழுது கூறினார்.

நிதி மந்திரியாயிருந்த ஜான் மத்தாய் கூறியிருக்கிறார். அவரும் அம்பேத்காரைப்போலவே, கொள்கை வேறுபாட்டால் மத்திய சர்க்கார் மந்திரி பதவியிலிருந்து விலகினார். அவர் கூறியதாவது, "காஷ்மீர் பிரச்னையில் சீக்கிரம் முடிவு காணாவிடில், கடுமையான பொருளாதாரச் சீரழிவு உண்டாகும்—கடுமை என்றால் மக்களால் தாங்கமுடியாத அளவுக்கு நிலைமை மோசமாகும். பிரிவினைக்குமுன், முழு இந்தியாவுக்கும் 110 கோடி ரூபாய் படைக்காகச் செலவிடப்பட்டது. பிரிக்கப் பட்டபின், பாகிஸ்தான் நீங்கிய இந்தியாமட்டும் ஆண்டு ஒன்றுக்கு 180 கோடி ரூபாய் படைபலத்தில் செலவு செய்கிறது."

இருவரும் மத்திய சர்க்காரில் பொறுப்புவாய்ந்த பதவிகளில் இருந்தவர்கள், நிலைமையை நன்கு தெரிந்தவர்கள். சட்ட மந்திரியாக இருந்தவர் கூறுகிறார் "விவேகமற்ற கொள்கை; சுலபத்தில் தீர்த்திருக்க வேண்டிய பிரச்சினைக்குப் போர்" என்று. நிதிமந்திரியாக இருந்தவர் "படைபலத்தில் இவ்வளவு அதிகம் செலவிட்டால் நாட்டின் பொருளாதாரநிலை பயங்கரநிலை அடையும்" எனக் கூறுகிறார்.

இந்தியாவின் வருமானத்தில் சரிபாதி படைபலத்துக்காகச் செலவிடப் படுகிறது. "விவேகமற்ற வெளிநாட்டுக் கொள்கையால்" ஏராளமானவரிப்பணம்பாழாகிறது. ஆனால் பஞ்சப் பிரதேசங்களை வளப்படுத்த, பாரிகளைக் காப்பாற்ற, புயல் வீசிய பகுதிகளுக்கு உதவிதர மத்தியசர்க்காரால் முடியவில்லை, நம் வரிப்பணம் பயன்பெறவில்லை.

போர்முனையில் ஏராளமாகச் செலவு செய்யப்படுகிறது. ஏர்முனையில் இம்மியளவும் உதவி செய்வதாகக் காணோம்.

புயல் வீசியதால் குடிசைகள் அழிந்தன, பயிர் நாசமாயிற்று: பாழடைந்த வயலைப் பார்த்து உழவன் கலங்குகிறான். நமது குறைகளை மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து உதவி வாங்கித்தரக்கூடிய நிலையிலிருக்கும் ஆச்சாரியாரோ பஜகோவிந்தம் பாடுகிறார். டில்லி ஆதிபத்தியமோ வரிப்பணத்தில் பெரும் பகுதியைப் படைபலத்தில் செலவு செய்துவிட்டு, நமது குறைகளைக் கவனிக்காமல் இருக்கிறது.

இது இன்றைய காட்சி, தமிழகத்தின் சோக சித்திரம், புகைபடிந்த படம்.

சங்ககால ஏட்டைப் புரட்டினால் மற்றொரு காட்சி வருகிறது. தமிழகத்தின அரசு தமிழகத்திலேயே இருந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி.

கரிகால் வளவனுக்குப் பின் அவன் மகன் கிள்ளிவளவன் புகார் நகரில் சோழ அரசனாக அரசேற்றான். கரிகாலனைப் போலவே இவனும் வீரத்திலும் கொடையிலும் மேம்பட்டு விளங்கியதாகத் தெரிகிறது.

கிள்ளிவளவன் காலத்தில் சோழரின் வீரம் காக்கப்பட்டது. புலிக் கொடி உயர்ந்து பறந்தது. ஆனால் அரசன் ஓயாத போரில் ஆர்வங் காட்டி வந்தமையால் நாட்டின் மற்றக் காரியங்கள் சரிவர நடைபெறவில்லை. வாய்க்கால்கள் செம்மைப்படுத்தப்படாமல் தூர்ந்துவிட்டன. வயல்கள் வளம் குன்றின, விளைவுகுறைந்தது. உழவுத்தொழில் தடைபட்டது. உழவர்கள் பலர் போர்வீரர்களாகவும், வேறுதொழில்களிலும் ஈடுபட்டனர். கரிகால் வளவன் காலத்தில் "வேலி ஆயிரங்கலமாக விளைந்தது" என்று பெருமைப் படுத்தப்பட்ட காவிரி நாட்டில், வயல்கள் பொலிவிழந்து விளங்கின.

காவிரியின் வளத்தில் இருந்த சோழநாட்டுச் சிற்றூர்களில் வெள்ளைக்குடி என்பதும் ஒன்று. அந்த ஊரில் நாகன் என்ற புலவர் இருந்தார். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினமையால் நாகனார் என்று மரியாதையுடன் அழைக்கப்பட்டார். வெள்ளைக்குடி என்ற ஊரைச் சேர்ந்தவராதலால் வெள்ளைக்குடி நாகனார் என்று நாடெங்கும் சிறப்பிக்கப்பட்டார். அவர் நாட்டின் நிலையையும், அரசனின் போக்கையும் எண்ணிமனம்நொந்தார். சோழ அரசன் 'போர்! போர்!' என்று படைவீரரை சேர்த்து, போர்முனையில் ஆர்வத்துடனிருந்தான். "வெற்றி! வெற்றி!" வளவன் வென்றான், வாழ்க அவன்கொற்றம்! 'வஞ்சி சூடிய சேரன் அஞ்சி ஓடினான்.' 'மீனக்கொடியோன் மின்னல்வேகத்தில் தோற்கடிக்கப்பட்டான்' இத்தகைய வீரச்செய்திகள் புலவர் காதில் விழாமலில்லை; அவை கேட்பதற்கு நன்றாயிருந்தன. ஆனால் கண்ணெதிரே! தூர்ந்து கிடக்கும் வாய்க்கால்! அதனருகே சோர்ந்து உட்கார்ந்திருக்கும் உழவன்! மழை பெய்யவில்லை, நீர்நிலைகள் வரண்டன. பாடுபட்டதற்குத் தக்க பலனின்றி உழவர் மனம் நொந்தனர். ஒவ்வொருவரும் அரசனுக்குத் தரவேண்டிய இறை (வரி) பாக்கிவிழுந்தது. புலவர் நாகனாரே தாம் செலுத்தவேண்டிய வரியை செலுத்த முடியாமல் இருந்தார். கடைசியில் வேறு வகையின்றி அரசனையே நேரில் காண்பது என வெள்ளைக்குடி நாகனார் புறப்பட்டு வந்தார்.

அரசன் தங்கியிருந்த இடத்தில் வெற்றிமுரசு ஒலித்துக்கொண்டிருந்தது, கொடைமுரசு வேறொருபுறம் ஒலிசெய்தது. போர்முரசைச் சூழ்ந்து, தாம்பெற்ற வெற்றிகளைக் கூறி ஆரவாரித்துக்கொண்டிருந்தனர் வீரர்கள். அரசன் கிள்ளிவளவனும் வெற்றி உவகையுடன் தன் அமளிமிசை அமர்ந்திருந்தான். புலவர் வந்திருக்கிறார் என்றதும்தனது வெற்றிகளைப் பாட அவர் வந்திருக்கிறார், மிகச்சிறந்த பரிசில் ஏதாவது கொடுத்து அனுப்பலாம் என அரசன் நினைத்தான்.

"பெரியோய்! மண் செறிந்த உலகத்தில் இனிய தமிழ் நாட்டிற்கு உரிமையாளர் சேரசோழ பாண்டியர் மூவருள்ளும் அரசு என்றுசிறப்பித்துச் சொல்லப்படுவது உனது அரசேயாகும் என்ற பொருள்பட

"மண்திணி கிடக்கைத்
தண்தமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை
மூவ ருள்ளும்
அரசெனப் படுவது
நினதே பெரும"

என்ற அடிகளைப் பாடினார். மூவேந்தருள்ளும் தன்னைச் சிறப்பித்துக் கூறியது கேட்டு அரசன் அகமகிழ்ந்தான்.

"பாண்டியனை வென்றேன், சேரனைக் களத்திலே ஓடச்செய்தேன். மாற்றரசர் என்முன் மண்டியிட்டனர். வெற்றி வீரன், அவர் ஏற்ற வகையில்தான் பாடுகிறார், என்று இறும்பூதெய்தினான்.

அரசனின் மகிழ்ச்சி புலவரின் புன்னகையை வரவழைத்தது. அரசு முதன்மையானது இவனது வெற்றியை மட்டும் வைத்து அவர் கூறவில்லை. "அரசே! ஞாயிறு நான்கு திக்கில் தோன்றினாலும், வெள்ளி தெற்கு நோக்கி ஓடினாலும், காவிரியில் வருகிற தண்ணீர் என்றும் தடைப்படுவதில்லை. இடையறாது வருகிற காவிரிநீர் பல வாய்க்கால்கள் வழியே ஓடிக் கரும்பு சூழ்ந்த வயல்களைச் செழிப்புறச் செய்கிறது. அவ்வாறு செழித்த கரும்புகளின் வெள்ளிய பூக்கள் அசையும் நாடென்று சொல்லப்படுவது உனது காவிரி நாட்டையேயாகும், என்று தொடர்ந்தார். கரும்புத்தோட்டம் என்றதும் எதிரில் வேல்களைத் தாங்கிவரும் படைவீரர்கள் கவனம் வந்தது. வேலின் நுனிகள் வெண்மையாகப் பிரகாசிப்பதைக் கண்டு, கரும்பின் பூக்களுக்கு அவற்றை உவமானமாகச் சொன்னார்.

"அலங்கு கதிர்க் கனலி
நால்வயின் தோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி
தென்புலம் படரினும்
அந்தண் காவிரி
வந்துகவர்பு ஊட்டத்
தோடுகோள் வேலின்
தோற்றம் போல
ஆடுகட் கரும்பின்
வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே"

புலவர் நாட்டு வளப்பம் கூறுகிறார் என்று அரசன் நினைத்தான். ஆனால் அடுத்த அடியில்

ஆங்க
நாடுகெழு செல்வத்துப்
பீடுகெழு வேந்தே
நினவ கூறுவல்
எனவ கேண்மதி"

என்றார். "அத்தகைய நாட்டுச் செல்வத்தையுடைய வேந்தனே! நான் உனக்கு சில சொல்லப் போகிறேன்; கேட்பாயாக" என்று புலவர் கூறியதும் அரசன் நிமிர்ந்து உட்கார்ந்தான். புலவரின் குரல் கட்டளையிடுவதுபோலிருந்தது. உறுதியடைந்து, கம்பீரமாக ஒலித்தது, "அரசனே! நீதி வழுவாத நிலையில் செங்கோல் இருக்கிறது: குறையிரந்து வருபவர்களுக்கு எளியனாகக் காட்சியளித்து, அவர்களது குறையைக் கேட்டு, உடனே ஆவன செய்யவேண்டும். அப்பொழுது தான் வேண்டிய காலத்து மழையைப் பெற்றவர்போல, அவர்கள்

மகிழ்ச்சி அடைவார்கள்'' என்றார் புலவர். தான் குறை சொல்ல வந்திருப்பதையும், அதைக்கேட்டு உடனே உதவிசெய்யவேண்டுமென்பதையும், குறிப்பாகத் தெரிவித்தார்.

அரசனுக்கு மேல் இருந்த ஆடம்பரமான பெரிய வெண் கொற்றக் குடை புலவரின் கண்ணில்பட்டது. குடி மக்கள் பல தொல்லைகளால் வருந்தும் பொழுது, அரசனின் பெரிய குடை ஏளனமாக அவருக்குப்பட்டது. அந்தக் குடை அரசனுக்கு வெயில் மறைக்க ஏற்பட்டதல்ல; துன்பமுற்ற குடிகளுக்கு நிழலை—குளிர்ச்சியை தரவே இருக்கிறது என்று புலவர் நினைத்தார்; அதை வெளிப்படையாகவே அவர் சொல்லுகிறார்.

''கண்பொர விளங்குநின்
விண்பொரு வியன்குடை
வெயில் மறைக் கொண்டன்றோ
அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல்
வளவ''

அரசனுக்குக் கிடைத்துள்ள செல்வம், பலம் எல்லாம் குடிமக்களுடைய துன்பத்தைபோக்கச்சேகரிக்கப்பட்டவை. அதை அரசன் தன் சொந்த வாழ்வைக் குளிர்ச்சிப்படுத்த—இனிதாக்கப் பயன்படுத்தக்கூடாது என்பது புலவர் கருத்து.

அடுத்தபடி தான் சொல்ல வந்த முக்கிய அறிவுரையை வெளியிடுகிறார். ''போர்க்களத்தில் எதிரிகளை முறியடித்து நின் படை வீரர் தரும் வெற்றிக்கு அடிப்படை, வயல் ெளில் உழவர் முயற்சியில் விளைகிற நெல்லின் பலனே யாகும்''

''பொருபடை தரூஉங்கொற்றமும்
உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன்
பயனே''

அரசனுக்குத் திகைப்பு வந்தது. வீரத்தைப் பற்றிப் பாடுகிறார் என்பது போய், போர்வீரன் தரும் வெற்றியைவிட, உழவன் தரும் பலனே மேல் என்று பாடுகிறாரே என்று கவனித்தான். வெண்மையான அலகுகளை உடைய வேல்களைத் தாங்கிய வீரர்கள்—அவர்கள் நாட்டின் செல்வமென அரசன் நினைத்தான்; இந்தப் புலவரோ வெண்மையான பூக்களையுடைய கரும்புகளைத் தாங்கி நிற்கும் உழவர்களே மேல் என்கிறார். வாள் தரும் வெற்றியைவிட, கலப்பை தரும் பயன் பெரிது என்று புலவர் உரைக்கின்றார்.

உழவர் ஞாபகம் அரசனுக்கு வந்தது. கால மழை தவறியது, விளைவு குறைந்தது. அதனால் உழவர் வேறு வேறு வேலைகளுக்குச் சென்றனர். இயற்கையில் ஏற்பட்ட தவறுகளுக்கு அரசன் எப்படிப் பொறுப்பாளி? என்ற கேள்வி எழும். அதை எதிர்பார்த்துச் சொல்லுகிறார் வெள்ளைக்குடி நாகனார்

''மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக்
கண்ணகன் ஞாலம்''

என்றார். துன்பம் எப்படி நேர்ந்தாலும், இயற்கைக் கோளாறோ, செயற்கையால் ஏற்பட்டதோ, காவலன் அத்துன்பங்களைக் களைந்து மக்களைப் பாதுகாக்காவிட்டால், உலகம் அவனைப் பழித்தே கூறும்.

புலவர் கூறியது உண்மையெனப் பட்டது. போர்முனையில் புலியெனத் திரிந்தவனுக்கு ஏர்முனையில் வாடுவோரின் துன்பம் தெரிந்தது, தெளிவுபெற்றான். புலவரும் சாந்தமடைந்து, மிக அழகான அறிவுரையுடன் பாட்டை முடித்தார் ''இவற்றையெல்லாம் நன்கு அறிந்த நீ இனிமேலாவது உறுதியில்லாதவர்களின் ஆலோசனைகளை மேற்கொள்ளாது ஏர் பிடிப்போரைப் பாதுகாத்துவா! பின் உன் பகைவரும் உன்னடிவந்துபணிவர்''

உழவர்களால் செலுத்தப்படாது மிகுந்திருந்த வரியை கிள்ளிவளவன் உடனே தள்ளினான். வாய்க்கால்கள் செம்மைப்படுத்தப் பட்டன, வயல்கள் கொழித்தன, நாடு செழித்தது.

வெள்ளைக்குடி நாகனார் சோழன் கிள்ளிவளவனுக்கு அறிவுறுத்தப் பாடிய இந்தப் பாடலை புறநானூற்றில் காணலாம்.

அந்த நிலையையும், தற்பொழுதுள்ள நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவு மாறுதலைச் காண்கின்றோம்.

வெற்றி வீரனாகத் திரும்பிய வேந்தனையே புலவர் ஏறிட்டுப் பார்த்து ''களத்திலே உன் வீரர்கள் கொடுத்த வெற்றிபெரிதல்ல; நெற்களத்திலே உன் உழவர்கள் தரும் வெற்றியே பெரிதானது'' என்று நாட்டின் நலத்துக்காகப் போராடினார், வேந்தனும் திருந்தினான், நாடும் நலம் பெற்றது. ஆனால் நம் டில்லி சர்க்காரோ காஷ்மீர் போரில் கலந்து இருநூறு கோடி ரூபாயையும் நான்கு ஆண்டுகளையும் செலவிட்ட பின்னும் வெற்றியா, தோல்வியா என்று நிச்சயிக்கமுடியவில்லை. பிரச்சனை தீராவிட்டால் இன்னும் பலகோடி ரூபாய்கள் செலவாகும். முடிவு என்ன ஆகும் என்று தெரியாத நிலையிலே ''போர்முனையில் ஆகும் செலவைக் குறைத்து, ஏர்முனையில் ஆக்கவேலைகளைச் செய்.'' என்று நேரு சர்க்காருக்கு அறிவுரைகூற நாகனார் போன்று நெஞ்சுரம் படைத்தோர் இப்பொழுது யாரும் இல்லை. யாரேனும் சொன்னாலகூட டில்லி சர்க்காரின் காதில் ஏறுவதில்லை.

வெள்ளைக்குடி நாகனாரால் வேந்தனை நேரில கண்டு குறைகளைச் சொல்ல முடிந்தது, வேந்தனால் நிலைமையைப் புரிந்துகொண்டு, உதவி செய்யவும் முடிந்தது, இப்பொழுது நம்மை ஆளும் சர்க்கார் டில்லியில் கண்ணுக் கெட்டாத தூரத்தில் இருக்கின்றது. நமது குறைகள் அவர்களுக்குத் தெரிவதில்லை, புரிவதுமில்லை. இங்கு இருக்கும் முதன்மந்திரி ஆச்சாரியாரோ பஜகோவிந்தத்தைப் பாடிவிட்டுப் போய்விடுகிறார்.

காஷ்மீரம் டில்லிக்கு அருகாமையில் இருக்கிறது. அதற்காகச் சர்க்கார் ஏராளமான பொருளைச் செலவிடுகின்றனர். காஷ்மீரப் பிரச்சினையில் நேரு சர்க்கார் காட்டும் அக்கரையில் நூற்றில் ஒரு பங்கு காவிரிக்கரையின் பக்கம் திரும்புவதில்லை.

நம் நாடு தாங்க முடியாத அளவுக்குப் போர் முனையில் செலவாகிறது, ஏர் முனையில் செய்யவேண்டியதைச் சிறிதளவுகூடச் சர்க்கார் கவனிப்பதில்லை. போர்முனை—ஏர்முனை இவ்விரண்டில் ஏர் முனையே நாட்டின் உயிர்நாடியாகும். ஏர் முனையைப்பாழாக்கிவிட்டால்,போர் முனையில் எவ்வளவு வெற்றிகள் கண்டாலும் அவை எத்தகைய பலனையும் தராது.

சீனத்துச்சேதி

K.A.மதியழகன்.

சீன நாட்டின் ஹூனான் மலைச் சாரலின் மீது அழகிய துடி துடிப்பு நிறைந்த ஓர் இளைஞன்-இருபதாண்டுப்பிராயத்தினன்—இருபதாம்நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலே ஓர் நாள் மாலை உலாவிக்கொண்டிருக்கிறான். நன்றாக உடுக்கப்படாத உடையும் காற்றிலே அசைந்தாடும் அவனது கேசமும், சுடர்விடும் அவனது கண்களும் மஞ்சுதோய்ந்த மலைச்சிகரங்களிலே அவன் மனம் இல்லை; வேறு எங்கோ சிந்தனை லோகத்திலே இருக்கின்றான் என்பதை தெளிவுபடுத்துகின்றன. அவன்கண் முன் நின்ற ஹூனான் மலைச்சாரல் தெரிகிறது. கற்பனைக் கண்களிலே சீனதேசம் முழுவதும் நர்த்தனமாடுகிறது—வடக்கே மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும் பிரிக்கும் நான்ஷான் மலைத்தொடர்—மேற்கே திபேத் பீடபூமி—தெற்கே காண்டன்நதிக்கும் சிவப்பு நதிக்கும் இடையேயுள்ள மண்டிலம்—சீனத்து மக்கள் நீல நதியே என்று செல்லப் பெயரிட்டு அதனை பசும் பட்டாக உருமாற்றிக் காண்பிக்கும் பொன்மயமான ஆரஞ்சுத் தோட்டங்கள் — மூங்கில் இலை மேல்தூங்கும் பனிநீர்—"சீனாவின் துயரநதி"(China's Sarrow) என்ற பழிப்பெயரை ஏற்ற ஹூவாங்கோ நதி — அது திசைமாறிப்போன செய்தி — அதன் கோரக்கொடுமைக்கு பலியான மக்கள்—மாரிக்காலத்தில் வீசும் மஞ்சள்காற்று—அது மணல் மேடாக்கும் மன வேதனை—பருவ மாறுதலிலே வீசும் பயங்கரப் புயற் காற்றின் சீற்றம்—பெருவெள்ளத்தால் உடைக்கப்படும் ஆற்றின் கரைகள்—உடைந்த ஆற்றைக் கண்டும் உடையாத உள்ளம் பெற்ற உழவர் பெருமக்களின் நெஞ்சு வீரம் — அவர்தம் உழைப்பின் அறுவடை தரும் ஆனந்தம் அத்தனையும் அவன் மனக்கண் முன்பு மின்வெட்டுகின்றன. சீனத்தின் சிறப்புக்குக்காரணமான குடியான குலமே, நீ வாழ்க! என அவனையும் அறியாமல் அவன் வாய் முணுமுணுக்கிறது. காடு கழனியானதும், வரண்ட நிலம் வளம் கொழிக்கும் வயல் வெளியானதும் கடவுள் கடாட்சமுமல்ல வானவரின் வரப்பிரசாதமுமல்ல; விவசாயியின் வியர்வையின் விளைவு என்று சொல்லிக் கொள்ளுகிறான். அரும்பு மீசை வாலிபனின் முகத்தில் இறுமாப்புடன்கூடிய மகிழ்ச்சி மலர்கிறது. காரணம் அவன் பிறந்தது குடியானவ குலம். அந்தக் குலம் குவலயத்தை வாழவைக்கிறது என்பதிலே அவனுக்கு ஓர் பெருமை. இந்த எண்ணம நெடுநேரம் நிற்கவில்லை. அவன்முகத்தில் இருள் படர ஆரம்பிக்கிறது. மீண்டும் சிந்தனை சுழல்கிறது. அவனோ கவிதா வெறிகொண்டவன், புலமையிலே ஆர்வம் மிக்கோன், நாட்டுப் பற்றுப் பூண்டோன். அவனது கவிதா வெறி, அறிவுத்தாகம், சீனத்து இலக்கியங்களிலே, வரலாற்றிலே, கதைகளிலே, காவியங்களிலே உழவரைப்பற்றித் தீட்டியிருக்கும் சேதிகளைத் தெரிந்து கொள்ளத் துடித்தது.

ஏடு பல நாடினான்,அவைகளிலே உழவனைத் தேடினான்!

வகை வகையான கதைப்புத்தகங்களிலே, காவிய நூல்களிலே, உழவர் பெருமக்களல்ல; யார் யாரோ தெரிந்தனர், தேவையில்லாதவர்கள், தேவனருள் பெற்றவர்கள், தேன்மொழி மாதர்கள், கார்மேகத்தைப் பற்றியும் கதிரொளியைப்பற்றியும் காவிய மிருந்தது. கலப்பையைப் பற்றியும், களத்துமேட்டைப்பற்றியும்கவிதை காணோம். பஞ்சு வம்சத்தினரின் அரண்மனைக் கோலாகலக் காட்சிகள் இருந்தன.

பளபளக்கும் கட்கத்தின் ஒளி பிரகாசித்தது. போர்க்களத்திலே ஏற்பட்ட இரத்தச்சேறு இருந்தது. கொவ்வை இதழும் குங்கும அதரமும் படைத்த கோமளவல்லிகளின் கோணல்சேட்டைகள் இருந்தன. ஆனால் குடியானவ குலத்தின் வியர்வையைப்பற்றி ஒரு வரி காணோம். வேதனையைப்பற்றி ஒரு வார்த்தை காணோம். சீனத்தைச் சிங்காரச் சித்திரச் சோலையாக்க ரத்தம்சொரிந்த தோழர்களைப்பற்றி துண்டு துணுக்குக்கூட அகப்படவில்லை. மறைக்கப்பட்ட மறக்குல மாணிக்கங்களே! நாட்டின் முதுகெலும்புபோன்ற தொண்ணூறு சதவிகித தூயவரைப்பற்றிப் பேசாத ஏடுகள், அவர்களை உறிஞ்சிக் கொழுத்து பரிமள வாழ்வு நடத்தும் பத்துச்சதவிகித பாதகர்களைப் பற்றி பதிகங்கள். ஏமாந்த காலத்தில் புலிவேஷம் போடும் புல்லர்களுக்குப் பொதுமக்கள் பலியாவதா? மாளிகைக் கோமானுக்கும் மண்டிலக் குறுநில மன்னனுக்கும் தான் விளைவித்த தானிய மணிகளைக் குவித்துவிட்டு தரித்திரனாய் ஏழை உழவன் உழல்வதா? அவனுக்கு விமோசனம், விடுதலை எதுவுமே கிடையாதா! சீனத்து நெடுஞ்சுவரே! கடும் காற்றிற்கும் கொடும் பனிக்கும் சுடும் வெயிலுக்கும் அஞ்சாமல் காலமெனும் பருவ மாறுதலால் மாற்றுருவம் கொள்ளாமல் நிற்கும் சீனத்து நெடுஞ்சுவரே! நீ சொல்.

தலைமுறை தலைமுறையாக சீனத்து உழவர்கள் உன் மடியிலே விளைத்த ஆற்றல் மிக்க காரியங்களை மறந்து விட்டாயா? யாங்ட்ஸி நதி நீரமே! ஹூவாங்கோ நதி நீரமே! நீங்கள் சாட்சியம்கூறுங்கள், இது நீதிதானா என்று. குடியானகுலம் கொடுமைக்காரர்களின் ஆட்டக்காயாக இருக்கும் நிலை அஸ்த மனமாக வேண்டும். அவர்கள் உழைப்பின் பயனை எத்தர்கள் கையிலே இருந்து பிடுங்கி, அவர்களே அனுபவிக்கும் புதுவாழ்வு பெறவேண்டும்;அதற்கு என் வாழ்நாளை அர்ப்பணித்து விட்டேன் என உறுதி பூண்டான்

அந்த இளைஞன். அந்த இளைஞனிடம் ஆற்றல் மிக்க படை ஏதுமில்லை. அவனும் அசகாய சூரனுமல்ல. ஹூனான் மலைச்சாரலிலே உள்ள சாதாரண அரிசி வியாபாரியின் மைந்தன். அவ்வளவுதான் அவனது கனவு நினைவாக நாற்பது ஆண்டுகள் பிடித்தன. அரிசி வியாபாரியின் மைந்தன் அரசபீடமேறினான் 1949-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலே பீகிங்நகரிலே பெருமிதத்துடன். அந்த விசித்திர புருஷன்தான் நாற்பதாண்டுகளுக்கு முன் குடியானகுலம் நாடாளும் உரிமை பெறவேண்டும் எனக்கனவு கண்ட—செயலில் உருவாக்கிய மாவீரன் மாசேதுங். சீனத்துப்புது வாழ்வுக்கும் பழைமையென்னும் போதை வாழ்வுக்கும் இடையே உள்ள தூரம் புதிய பொருளாதாரக் கருத்துக்களால் கடக்கப் பட்டது என்பது முழுவரலாறு அல்ல என்பது மட்டுமல்ல. மாசேதுங் சீனமென்ற நாடக அரங்கில் கதாநாயகனாக் காட்சி அளிப்பதற்கு முன் நாடகமேடை அமைத்து தந்த நல்லவர்களை மறக்கும்—மறைக்கும் நன்றிகெட்ட செயலாகும். கட்டாந்தரையில், களர் நிலத்தில பொதுவுடைமைவித்துமுளைக்காது, விதை தூவுவதற்குமுன்பு நிலத்தைப் பண்படுத்த வேண்டும் என்பதற்கு சீனத்துச் சரித்திரம் சிறந்த அத்தாட்சி. அந்த அனுபவங்களிலேயிருந்து மாசேதுங் பாடம் பெற்றிருக்க வேண்டும். சீனத்தின் விடுதலைப்போர் சென்ற நூற்றாண்டின் மத்தியிலேயே துவங்கியது. மஞ்சு வம்சத்தினருக்கு எதிராக ஹங்சு—சுவான் (Hung-Hsu:chuan) என்பவன் தலைமையில் டெய்பிங் புரட்சி என்று சொல்லப்படும் விடுதலைக் கிளர்ச்சியைக் கொடிநாட்டு விழா எனக் குறிப்பிடலாம். ஆண் பெண் சமத்துவம், இருதார மணத்தடை, அடிமை ஒழிப்பு, விபசாரத்தடுப்பு, காலைக் குறுக்கிக்கொள்வது, நீண்ட சடை வளர்ப்பதை எதிர்ப்பது போன்ற சீர்திருத்தங்களை ஹங்—சு—வான் நாட்டின் முன் வைத்தான். காலம் அந்தக் கருத்துகளை ஜீரணிக்கும் பக்குவம் பெறவில்லை. எனவே டெய்பிங்புரட்சி தோற்றது. அதன் தலைவன் செல்வாக்கிழந்தான்.

இரண்டாவது கட்டம் எண்ணப் புரட்சியிலே ஏற்பட்ட மாறுதலாகும். யென்பூ (Yen Fu) என்பவரும், காங்-யூ-வை (Kang-Yu-Wei) என்பவரும், பகுத்தறிவு இயக்கம் பரவுவதற்கு காரணமாய் இருந்தனர். கன்பூஷியஸ் போதனைகளின் அடிப்படையிலே இவர்கள் பிரச்சாரம் செய்தனர். டார்வினின் மனித தோற்ற வரலாறும் ஏடம் ஸ்மித்தின் பொருளாதார நூல்களும் மொழிபெயர்க்கப் பட்டன. ஆனால் சண்டமாருதமெனக் கிளம்பிய சமுதாய சீர்திருத்தம் அரண்மனைச் சீமான்களின் அடக்கு முறைக்குப்பலியாகி நசுக்கப்பட்டது. ஆனால் மக்கள் மனதிலே நடப்பட்ட புதுக் கருத்துக்கள் செத்துவிடவில்லை. காலத்தை நோக்கிக் காத்துக் கிடந்தது.

மூன்றாவது கட்டம் சன்யாட்சன் மஞ்சு வம்சத்திற்கு எதிராக நடத்திய தீவிரப்போராட்டமாகும். பதின்மூன்று படையெடுப்புகள் தோல்வியடைந்தன. ஆனாலும் சன்யாட்சனுக்கு 1911-ல் வெற்றி மாலை கிடைத்தது. விடுதலை, சமத்துவம், உலகத் தோழமை என்ற முக்கொள்கைகள் சீன விடுதலை இயக்கத்திற்குக்கொடுத்த கருவூலமாகும்.

1919-ஆம் ஆண்டு மேத் திங்கள் 4-ம் நாள் ஜப்பான் நிபந்தனைக்கு எதிராக 'துவக்க நாள்' கொண்டாடினர் சீனக் குடியானவர். வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல சான்டங்கை ஜப்பானுக்கு கொடுத்துவிட்டனர் வல்லரசுகள் என்ற சேதி அதே நாளில் வார்சேல்ஸிலிருந்து கிடைத்தது. சீனத்தின் தன்மானத்திற்கோர் அறைகூவல் என மாணவர்உலகு கொதித்தெழுந்தது! மற்றவர் போர்க்கோலம் பூண்டனர். கிளர்ச்சி அடக்கப்பட்டாலும் அது விட்டுச்சென்ற அடிச்சுவடுகள் மறையவில்லை.

இந்தச் சம்பவங்களும், தோல்விகள் தந்த படிப்பினைகளுமே மாசேதுங்கை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றன.

குடியானவரைப் போற்ற, சீனத்தில் குடியானவரின் குடியரசு மலர்ந்ததுவிட்டது. உழவுக்கு உயர்விடம் அளிக்கும் திராவிடம் திக்கற்றுத் தேம்பித் தவிக்கிறது, வளமான நஞ்சையைப் பற்றியும், வண்ணத் தடாகத்தைப் பற்றியும், உழவர் தம் சிறப்புப் பற்றியும் எழுதாத புலவனில்லை; இடம் பெறாத ஏடு இல்லை. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் — மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் — இவையெல்லாம் ஏட்டிலே உள்ள எழிலோவியங்கள். நாட்டிலேயோ உண்டுகளித்திருப்போர் ஊராள்கின்றனர். உழவன் வறுமைத் தேளால் கொட்டப்பட்டு உழல்கிறான். அவனது உரிமைகள் மிட்டா மிராசுகளிடம் ஜமீன், ஜாகீர்களிடம், மடாதிபதிகள் மகேஸ்வரர்களிடம் சிக்கிச் சீரழிகிறது. வாரம், குத்தகைஎன்ற தளைகள் அவன் உடல் முழுவதும் பிணிக்கப்பட்டிருக்கின்றன. இந்த இருள் அகன்று புதுவாழ்வு மலரப் பொங்கல் நாள் புதிய நம்பிக்கையை தாட்டும். சீனத்துச் சேதி சீரழிந்த திராவிடத்திற்கு அறிவிக்கும் உண்மை, பாடம், படிப்பினை எல்லாம் அதுதான்.

அன்பர்களுக்கும்!

ஏஜண்டுகளுக்கும்!!

அறிவிப்பு

1953-ஆண்டு காலண்டர்

சென்ற வாரம் வெளிவந்த காலண்டர்கள் அத்தனையும் விற்பனையாகிவிட்டபடியால் மீண்டும் இரண்டாவது வெளியீடாக விடுபட்ட பல தலைவர்கள் படத்தையும், தாங்கி இவ்வாரம் வெளியிடுகிறோம்.

தேவையுள்ளவர்கள் முன் பணம் அனுப்பக் கோருகிறோம். வி. பி. பி. கிடையாது.

"அழகு நூல் இல்லம்"
10, பாட்டர்ஸ் தெரு
கெல்லீஸ் சென்னை 10.

ரொட்டித்துண்டு

சி.என்.அ

அன்றையத் தபாலில் வந்த சொந்தக் கடிதங்களைப் பிரித்துப் படிக்கும் போதே ஆலை முதலாளி ராவ்பகதூர் ரங்கநாத பூபதிக்கு, ஆத்திரம் பொங்கிற்று. கடந்த பதினைந்து நாட்களாக, அவருக்கு ஆத்திரமூட்டும் கடிதங்களே வந்து கொண்டிருந்தன. தலைவிதி, தலைவிதி, என்று மெள்ளக் கூறிக் கொண்டே, கடிதங்களைப் பார்த்துக் குப்பைக் கூடையிலே கசக்கி எறிந்துகொண்டிருந்தார். அவருடைய 'பார்யை' சுப்புத்தாயம்மாள் காப்பி கொண்டுவந்தாள்—ராவ்பகதூரின் முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் விதமாக இருந்தது. இன்று என்ன விசேஷம், தபாலில்? என்று சுப்புத்தாய் கேட்க, எல்லாம் அதே விசேஷம்தான்! பெற்று வைத்தாயே, எனக்கு ஒரு மகனை, என் தலைக்குத் தீம்புதேடும் தடியனை! என்று வெறுப்புடன் கூறிக் கொண்டே, கடிதங்களிலே கவனம் செலுத்தினார்.

சுப்புத்தாய், சில விநாடி இருந்து விட்டுப் போய்விட்டார்கள். ராவ்பகதூரின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தது, ஒரு கடிதம். அது இது:—

சிவமயம்

புகழேந்திபுரம்
6—5—50

லட்சுமீ கடாட்சம் பரிபூரணமாகப் பெற்ற ராவ்பகதூர் ரங்கநாத பூபதிக்கு, தங்கள் அன்பனும், சிரஞ்சீவி பாரத்பூஷணத்துக்கு ஆசிரியராக இருந்தவனுமான, வாத்தியார் வரகுணநாதப்பிள்ளை எழுதிக்கொள்ளும், கடிதம்.

பிரமானந்தமான மனதோடு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நாலு நாட்களாகவே தங்களுக்கு எழுதவேண்டும் எழுதவேண்டும் என்ற எண்ணம். தங்களுக்கு உள்ள எவ்வளவோ வேலைகளுக்கு இடையிலே, நானும் ஒரு கடிதம் எழுதித் தங்களுக்குத் தொல்லைதருவது சரியாக இராது என்று எண்ணினேன். ஆனால், எழுதாவிட்டால், மனது கேளாது என்பதால், எழுதுகிறேன்.

தாங்கள், சிரஞ்சீவி பாரத்பூஷணனுக்கு ஆசிரியனாக என்னை அமர்த்தியபோது, நான் சொன்னது தங்களுக்கு நினைவிலிருக்கும் என்றே நம்புகிறேன். உலகம், உங்களுடைய ஐஸ்வரியத்தைக் கண்டு ஆச்சரியப்படுகிறது. சம்பத்குமாரரான தங்கள் மகன் பாரத்பூஷணனோ, கலைமகளின் கடாட்சத்தைச் சம்பூரணமாகப் பெற்று, உலகமே வியந்து பேசக்கூடிய, பெரிய மேதாவியாகப்போகிறான். அவனுக்கு இப்போதே உள்ள அறிவு எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது, என்று நான் சொன்னேன். என் வாக்கு எப்போதும் பலிக்காமலிருப்பதில்லை. இப்போது பாரத்பூஷணன், எவ்வளவு பிரமாதமான புகழ் பெற்று இருக்கிறான், என்பதைக்கண்டு நான், ஆனந்த சாகரத்திலே மூழ்கினேன். தங்கள் மனமும் பூரித்துத் தான் போயிருக்கும். தங்கள் கிருஹ லட்சுமி ஸ்ரீமதி சுப்புத்தாயம்மாள் அவர்களின், மனமகிழ்ச்சிக்கு எல்லை இருக்கமுடியாது.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய் — என்ற தெய்வப்புலவர் வாக்கு பொய்யாமோ! பாரத்பூஷணனுக்கு ஆசிரியனாக இருந்த ஒரு காரணத்தாலேயே, நான் இப்போது பெருமையும் பூரிப்பும் அடைகிறேன் என்றால், தங்களின் ஆனந்தத்தின் அளவு எவ்வளவு இருக்குமென்று கூறவும் முடியுமோ!

உலக இலக்கியங்களிலே ஒன்று என்று சான்றோர் அனைவரும் கொண்டாடும் நூலை இவ்வளவு சிறு பிராயத்திலே எழுதியபாரத்பூஷணனை, வாழ்த்தாதார் இல்லை! பாராட்டாதார் இல்லை! மேதை — பேரறிஞன் — புதுமைக் குறளாசிரியன் — புரட்சி எழுத்தாளன் — தென்னாட்டு வால்ட்டேர்—நாலாவது சங்கத்தை நிறுவும் நடை உடையான் —நாவலன்—என்றெல்லாம், பாரத்பூஷணனைப் பலரும் புகழ்ந்து கூறும்போது, நான் ஆனந்தக் கூத்தாடுகிறேன். அவனுக்கு நான்தான் ஆசிரியன், என்று நான் கூறும்போது, அவர்களெல்லாம், என்னையும் புகழ்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் இணையிலா இலட்சிய ஏடு, என்று ஒரு தினத்தாள் எழுதுகிறது. ஏழை எளியோரின் கண்ணீரைத் துடைத்து, அவர்களை அறப்போருக்கு அணிவகுத்து நிற்கச் செய்யும் வீர முழக்கம், இந்த ஏடு, என்று ஒரு பிரசங்கி பேசுவதை நானே கேட்டேன். உலக மகா சிரேஷ்டர்களின் உத்தமமான கருத்துக்களை எல்லாம், இக்காலத்துக்கு ஏற்ற விதமான நடை அழகுடன் தீட்டிக் காட்டப்பட்டிருக்கும் காவியம், என்று, ஒரு ஆசிரியர் என்னிடம் சொன்னார்.

பாரத்பூஷணன், இவ்வளவு அருமையான காவியத்தைத் தீட்டும் அளவுக்கு அறிவாற்றல் கொண்டவனாக இருப்பது மட்டுமல்ல, செல்வக் குடியில் உதித்த திருக்குமாரன், ஏழை எளியவரின் கஷ்டத்தை இவ்வளவு தெளிவாக உணர்ந்து, அவர்களை வாழவைக்கும் முறையை இவ்வளவு அழகாக எடுத்து எழுதின தன்மையைக் கண்டுதான், அறிஞர் உலகு அகமகிழ்ந்து பாராட்டுகிறது. தேன் கூட்டினைச் சிதைத்துத் தேனைப் பிழிந்தெடுத்துப் பருகும் காடியின் செயலுக்கும், ஏழை எளியவரின்

உழைப்பை உறுஞ்சிக் கொழுக்கும் பாதகர்களுக்கும் உவமைவைத்து எழுதப்பட்டிருக்கும் பகுதியை படித்துப் படித்து ரசிக்கிறார்கள். எலும்புக் கூடாகிவிட்ட ஏழையை, ஏன் அப்பா, இப்படி இருக்கிறாய், என்று ஒருவன் கேட்க, என் சதையும் இரத்தமும் நாயப்பருக்குத் தந்துவிட்டேன், என்று கூறுகிறானாம் ஏழை! என்னே, இதிலே உள்ள அருமையான கருத்து. பசி, பட்டினி, மனிதனை மிருகமாக்கி விடுகிற வர்ணனையைப் படிப்போரெல்லாம் கண்ணீர் விடுகிறார்கள். பாரத்பூஷணன், எப்படித்தான், ஏழையின் உள்ளத்தை இவ்வளவு நன்றாகக் கண்டறிந்து ஓவியம்போலத் தீட்ட முடிந்தது—அவனோ குபேரசம்பத்திலே உள்ளவன்—வறுமைத்தேள் கொட்டுவதும், அதனால் வாழ்வு துடிப்பதும் எப்படித் தெரியமுடிந்தது—என்று ஆச்சரியப்படுகிறார்கள் அனைவரும். புத்தபிரான் ராஜகுமாரனாகப்பிறந்த போதிலும், மானிடருடைய துக்கத்தைக் கண்டறிந்து 'ஞானம்' பெற்று, உலகுக்கே ஞானாசிரியனாக விளங்கினார். என்று சரித்திரம் கூறுகிறது, இதோ பாரத்பூஷணன் சரித்திரத்தை நமக்கு நடத்திக் காட்டுகிறார் என்று, ஒரு பெரிய தேசபக்தர் பேசினாராம்.

''ஏழையின் வியர்வை சிந்தாமல், பூமிக்கு அடியில் தூங்கிக்கொண்டிருக்கும் வைரமும் தங்கமும், கடலுக்கு அடியிலே படுத்துறங்கும் முத்தும், உனக்கு எப்படிக் கிடைத்தது!

ஏழையின் கைத்திறன் இல்லாத ஒரு 'பண்டம்' உண்டா, காட்டு!

அவன் வாழ்விலே நிம்மதியை ஏற்படுத்தாவிட்டால், உன்னையும், உன் உலகத்தையும் அழித்துவிடுவான். அம்பாரிமீது ஏறிக்கொண்டதால், யானையைக் கொடுமைப் படுத்தலாம் என்று எண்ணாதே, யானைக்குக் கோபம் பிறந்தால், அதன் காலின் கீழ், கூழாகி விடுவாய்!''

இப்படிப்பட்ட தீப்பொறி பறக்கும் வாசகங்களை, பார்த்தால் பரமசாதுபோல இருக்கும் பாரத்பூஷணன், எழுதியது, எனக்குக்கூட ஆச்சரியமாக இருக்கிறது.

பகவானுடையகிருபையால்,பாரத்பூஷணன் தீர்க்காயுசாக இருந்து, பழைய காலத்துச் சங்கப் புலவர்களின் பெருமையைக் காட்டிலும் அதிகமான பெருமை பெற்று விளங்கவேண்டும் என்று ஆசீர்வாதம் செய்கிறேன்.

'ரோட்டித்துண்டு' விலை பதினைந்து ரூபாய்—நானோ பரமஏழை—ஆகவே வாங்கி முழுவதும் படித்து ரசிக்க முடியவில்லை. இரவல் கேட்டாலும், யாரும் தருவதில்லை. அந்தப்புத்தகத்தை, அருமையான பொக்கிஷம் போலப் போற்றிக் காப்பாற்றுகிறார்கள். தாங்கள் என்மேரில் அன்பு வைத்து, உடனே, எனக்கு ஒரு 'ரோட்டித்துண்டு' அனுப்பிவைக்கக் கோருகிறேன். கிடைத்ததும் என்னுடைய மாணாக்கனும் தங்கள் மகனுமான பாரத் பூஷணனின் திறமையைப் பாராட்டி, அருமையான அகவல் இயற்றலாம் என்று துடியாய்த் துடிக்கிறேன். பாரத் பூஷணனுக்கு கடிதம் எழுதினேன்—பதில் இல்லை. பெரிய ஆராய்ச்சியில் மூழ்கி இருக்கும் அந்தப் பேரறிஞனுக்கு நேரம் கிடைப்பதும் அரிதுதான். எனவே தங்களுக்கு எழுதினேன். உடனே ஒரு 'ரோட்டித்துண்டு' அனுப்பவும்.

தங்கள் அன்பு மறவாத
அகவலாசிரியன் வாத்தியார்,
வரகுணநாதப் பிள்ளை.

படித்து முடித்ததும், ஒரு பெருமூச்சுடன், ''இப்படியும் ஒரு பைத்யம் இருக்கு!'' என்று மெள்ளக் கூறியபடி, வேறோர் கடிதத்தை எடுத்துப் பிரித்தார், படிக்க. அது, இது:—

பூதப்பாண்டி
6—5—50.

புரட்சி ஓங்குக!

ஆதிக்க வெறி பிடித்து அலையும் ஆலைமுதலாளி ரங்கநாதர் எனும் பட்டம் பெற்ற பணக்காரப் பைசாசமே!

என்னைப்போன்ற எத்தனையோ ஏழைகளை அழித்தாய். நாங்கள் பாடுபடுகிறோம், பலன் காணவில்லை என்று கூறினது குற்றமென்று கொக்கரித்தாய், ஏழைகளை, ஈனரும் புழுக்குச் சமானமென்று இறுமாப்புடன் பேசி, ஏசினாய். உலகம் முன்னேறிக்கொண்டு வருகிறது, இனி, முதலாளிகளின் கொட்டம் அடக்கப்பட்டே தீரும், என்று நாங்கள் கூறின போது, கத்துகிறார்கள், குலைக்கிறார்கள், என்று திமிராகப் பேசினாய்—மறக்கவில்லை.

குண்டடிபட்ட புலி. உறுமும், சீறும். ஆனால் கடைசியில் சாகும். என்று கூறுகிறார் பாரத்பூஷணன்! படித்துப் பார்!

'கூலிக்காரப் பயல்கள்'—என்று கேவலமாக எங்களைக் கூறினாய், கொடியவனே! ஆளப்பிறந்தவர்கள் — ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் பெற்றவர்கள் — உழைப்பு என்ற ஒப்பு உவமை இல்லாத செல்வத்தைப் படைத்தவர்கள் — என்று எங்களைக் குறிப்பிட்டிருக்கும் 'ரொட்டித்துண்டு' — வெறும் புத்தகமல்ல, உங்களுடைய சூதுக் கோட்டையைத் தூள் தூளாக்கும் வெடிகுண்டு!

ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து, பணக்காரன் குவிக்கும் பவுன்கள் மூட்டை மூட்டையாக மாளிகைகளிலே உள்ளன—ஆனால் அவைகள் எல்லாம் ஒரு காலத்தில், வெடிகுண்டுகளாகி, மாளிகைகளை மண்மேடுகளாக்கும்—என்று பாரத்பூஷணன் எழுதி இருப்பதைப்படிக்கும் போது, எங்கள் நரம்புகள் புடைக்கின்றன என்பதை அறிந்துகொள். உன்போன்றவர்களின் சூழ்ச்சி, வஞ்சகம், பேராசை, வெறிக்குணம் ஆகியவற்றை எங்களால்கூட, அவ்வளவு நன்றாக எடுத்து எழுத முடியாது. பாரத்பூஷணனின் புரட்சி ஏடான, ரோட்டித்துண்டு, மிகமிகத் தெளிவாக்கிவிட்டது, உன்போன்றாரின் குணநிசயத்தை. பொறுமையாலும், போக்கிரித்தனத்தாலும், என்போன்றவர்கள், உன்போன்ற பணக்காரர்களை ஏசுகிறோம் என்று பசப்பிக்கொண்டிருந்தாயே, பாதகனே! படித்துப்பார், 'ரோட்டித்துண்டு' பாரத்பூஷணன்எழுதியது!! பாரத்பூஷணன் யார்? உன் மகன்! உன் மகனுக்கா, உன்னிடம் பொறுமை இருக்கும்! இல்லை! இல்லை!! முக்காலும் இல்லை! பாரத்பூஷணன், இலட்சியவாதி ஏழை பங்காளன்; எனவேதான், புரட்சி ஏடு தீட்டினான், புதிய பாதையைக் காட்டினான்! பணம்காக்கும்பிசாசே!

உன்னிடம் கோடி ரூபாய் இருந்தும் யார் உன்னை மதிக்கிறார்கள்! பாரத்பூஷணனுக்கு, நாடே மரியாதை காட்டுகிறது! ஏழைகள் பாரத்பூஷணன் படத்தைப் பூஜை செய்கிறார்கள். ஒவ்வொரு தொழிற் சங்கமும் 'ரோட்டித்துண்டு' வாங்கத் தவறுவது கிடையாது.

உனக்கு மகனாகப் பிறந்ததால், பாரத்பூஷணனால், உன்போன்றவர்களின் போக்கை, உள்ளது உள்ளபடி படம் பிடித்துக்காட்ட முடிந்தது. எங்களுடைய மனக்கொதிப்புத்தான், உனக்கு மகனாக வந்து பிறந்தது, என்பதை அறிந்துகொள்.

இப்படிக்கு
உன்னால் ஆலையிலிருந்து
நீக்கப்பட்ட,
மேகநாதன்.

ஆலை முதலாளிக்கு அடக்கமுடியாத ஆத்திரம் பிறந்தது. என்ன செய்வது! கடிதம்தானே எதிரே, மேகநாதன்மட்டும் இருந்திருந்தால் கழுத்தை நெரித்து விட்டுக்கூட இருப்பார். கடிதத்தைக் கசக்கிக் கீழே வீசினார். தலையில் கை வைத்துக்கொண்டார், எழுந்தார், கீழே கிடந்த கடிதத்தை எடுத்தார், சுக்கு நூறாக் கிழித்தார் — குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, ஒரு கடிதம் எழுதலானார். அது, இது:—

ஆலையூர்
7—5—50

சிரஞ்சீவி பாரத்பூஷணனுக்கு, ஆசிர்வாதம். மிகவும் மன வேதனையுடன் இதை எழுதுகிறேன். நீ, மேல்படிப்புக்கு போகும்போதே, நான் உனக்குச் சொன்னேன், படித்தவரையில் போதும். ஒழுங்காக ஆலை வேலையைக் கவனித்துக் கொண்டு, குடும்பக்கௌரவத்தைக் காப்பாற்று என்று. பிடிவாதமாக பி. ஏ, எம். ஏ. என்று ஆசை காட்டினாய். செல்லப்பிள்ளை நீ, உன் தாயாருக்கு; நானும்சம்மதித்தேன். படிக்கப்போன நீ, இப்போது செய்திருக்கும் காரியம் என்ன! நம்முடைய 'மானம்' போகிற விதமாக நடந்துகொள்ளலாமா? ரொட்டித் துண்டு—பழைய சோறு—கந்தல் துணி—இதெல்லாம் ஒரு புத்தகமா! நீயா, எழுதுவது! வயிற்றுச் சோற்றுக்குத் தாளம்போடும் வறட்டுப் புத்திக்காரர்கள்போல. ஏழையைப் பணக்காரன் கெடுக்கிறான் என்று எழுதவா உன் அறிவு பயன்பட வேண்டும்? இதற்கா நீ, எனக்கு மகனாகப் பிறந்தாய்! நீ, எழுதிய புத்தகத்திலே உள்ளது அவ்வளவும், என்னை அவமானப்படுத்துவதாகவும், என்னிடம் கூலி வாங்கிப் பிழைக்கும் கும்பலை, என்மீது ஏவி விடுவதுமாக இருக்கிறது; வெடிகுண்டடா இது, புத்தகமல்ல, என்று ஒரு வெறிப்பயல் எனக்கே கடிதம் எழுதுகிறான். ஒரு ஏடு எழுதி, புகழ்பெற எண்ணுவது படித்த உனக்குச் சகஜம்தான். எழுது! அறிவாளி என்று புகழ் பெறு! எனக்கும் என் மகனைப்புகழ்வது சந்தோஷம்தான். ஆனால், எதை எழுதுவது! பணக்காரக் கொட்டத்தை அடக்கப் பாரிப் பட்டாளத்தைத் திரட்டு, என்று எழுதுவது. பணம் திரட்டி, நானா, போகிறபோது மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு போகப்போகிறேன். எல்லாம், உன் சொத்து அல்லவா! உன்னைப் பெற்று வளர்த்து, உனக்கு வேண்டியதை வாரி இறைத்துவரும், என்னை இவ்வளவு கேவலப்படுத்தி, ஊரார் பகையை என்மீது ஏவி விடுவது தான், நீ படித்த படிப்பின் இலட்சணமா? துரோகி! என்வயிறு எரிகிறது! பிழைக்கத்தெரியாத சிலபேர் வழிகள் உன்னைப் புரட்சி எழுத்தாளன் என்று புகழ்வதற்காக, சொந்தத் தகப்பனுருக்குத் துரோகி ஆகி விடுவதா! சுரண்டிப் பிழைக்கும் சுகபோகிகள் என்று ஏசி இருக்கிறாயே, நீ, யாரடா அப்பா! பிறந்தும், கையிலே கடப்பாரையும் மண்வெட்டியும் தூக்கிக் கொண்டு, வேலைக்குச் சென்றாயோ! உனக்கு 'ஆயா' வேலை பார்த்தவளுக்கு மட்டும், மொத்தத்திலே ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறேன். நல்ல தமிழ்ப் பண்டிதருக்கு மாதம் முப்பது ரூபாய் கொடுத்து, உனக்குப் பாடம் சொல்லிவைத்தேன். உன் எழுத்துத் திறமையை, ஒரு கம்பராமாயணம், திருவெம்பாவை, தாயுமானவர், இப்படிப்பட்ட அருமையான விஷயத்தைப்பற்றி எழுதிக் காட்டக்கூடாதா. பெரிய எழுத்தாளன், மேதாவி, என்ற பெருமை கிடைக்காதா! ஒரு, டி. கே. சிதம்பரநாத முதலியார், மறைந்துபோன தமிழ்ப் பாடல்களை எல்லாம், இந்தத்தள்ளாத வயதிலே சிரமப்பட்டுத் தேடித்தேடி எடுத்து வெளியிட்டு, பெரிய மேதை என்ற பெயர் வாங்கி வருகிறாரே! அதைப் பார்த்துமா, உனக்குப் புத்தி வரக்கூடாது! சர், பட்டம் வாங்கி, உலகத்திலேயே பெருமை பெற்று உலாவும், சண்முகம் செட்டியார், உன்போல, ஓட்டைப் பாண்டம், குடிசை வீடு, என்றா எழுதினார்? சிலப்பதிகாரத்தின் அருமையை எழுதினாரே, மடையா! அவருக்கு அதனாலே எவ்வளவோ பெருமை உண்டாகவில்லையா! பொன்னியின் செல்வன்—போன்ற ஒரு கதை எழுதலாகாதா! வேலும் வில்லும் போன்ற ஒரு ஆராய்ச்சி நூல் எழுதக்கூடாதா! இப்படிப்பட்ட புத்தகங்களை எழுதி எவ்வளவோ பேர், புகழ் பெற்று இருக்க, நீ, ரோட்டித் துண்டு எழுதி, என் மானத்தைத் தொலைக்கிறாய். பசுவைக் கொன்று செருப்புத்தானம் செய்தவன் கதை போல, என்னை ஏசி, நீ, மேதாவி என்று பெயர் எடுப்பதா? புத்தி கெட்டவனே! சோற்றுக்கு வழி இல்லாத சிலதுகள் உன்னைப் புகழ்ந்து, என்ன பிரயோஜனம்! கலைக்கு உதவுமா? ஏன், உன் புத்தி இப்படிக் கெட்டுவிட்டது. ஒவ்வொரு பரீட்சையிலும், என் முகதாட்சணியத்துக்காகத்தானே, நல்ல மார்க்கு கொடுத்தார்கள், உனக்கு. நீ, அறிவாளியாகி விட்டாய், என்றால், எப்படி அது? என் பணமடா, என் பணம்! நீ, என்னைக் கண்டித்துப்புத்தகம் எழுதுகிறாய். எவ்வளவு திமிர்! இனி, உன் முகத்திலே கூட விழிக்க உத்தேசமில்லை. ஒருகாலணா கூட என் சொத்திலே உனக்குக் கிடையாது. அக்ரமக்காரன் சொத்தாச்சே! நீ, அநியாயத்தை அழிக்கப் பிறந்த தர்ம வீரன், உனக்கு ஏன், அந்தச் சொத்து? தம்படி கிடையாது, தம்படி! ஆமாம், அவ்வளவும், சுத்தானந்த பாரதியார் பேருக்கு எழுதி வைத்து விடப் போகிறேன். நீ, 'ரொட்டித் துண்டு' போதாதென்று, கருவாடு, கல்லறை, இப்படி, எதையோ எழுதிக் கொண்டு, புரட்சி வீரனாகிவிடு! என் மகனா, நீ! மடையன்!!

இப்படிக்கு,
ராவ்பகதூர்.

கடிதத்தை எழுதி, உறையிலிட்டு, பாரத்பூஷணனின் முகவரியை எழுதியான பிறகு, அவருக்கு ஓரளவுக்கு, நிம்மதி ஏற்பட்டது. வேலைக்காரனை அழைத்தார்—உடனே தபாலில் போடு, என்று கூறி, கடிதத்தைக் கொடுத்துவிட்டு, மற்றக் கடிதங்களை, அப்படியே குப்பைக் கூடையில் தள்ளிவிட்டு, யாரங்கே? என்று அழைத்தார். "நான்தானுங்க மருதை!" என்று கூறியபடி, வேறோர் வேலையாள் வந்து நின்றான். "நீ, எப்படா, வந்தே? எங்கே வந்தே?" என்று அதட்டிக் கேட்டார், ஆலை முதலாளி — ஒரு கடிதத்தை அவரிடம் நீட்டியபடி, "சின்ன எஜமானரு அனுப்பினாருங்க" என்றான் மருதை. அவன் கொடுத்த கடிதம் இது:—

(மிகவும் இரகசியம்)

சிங்காரபுரம்
6—5—50

அன்புள்ள அப்பாவுக்கு, பாரத் எழுதிக் கொண்டது. ஒரு பெரிய ஆபத்திலே சிக்கிக்கொண்டேன். விஷயம் என்னவென்றால், என்னோடு காலேஜிலே படிக்கும் கதிர்வேலு என்ற மாணவன், 'ரொட்டித் துண்டு' என்ற விஷயமாகக் கத்தை கத்தையாக ஏதேதோ எழுதி வைத்திருந்தான். அவனுக்குப் பணக் கஷ்டம் இருந்தது. அதனால், அவன் தன்னுடைய பெட்டிகளை அடகு வைத்தான்—பத்து ரூபாய் கடன் கொடுத்தேன் — அந்தப் பெட்டியிலே ரொட்டித் துண்டு இருந்தது. படித்துக் கொண்டிருக்கும் போது, வேறோர் மாணவன், வந்து விட்டான். இது யார் எழுதியது, மிகவும் நன்றாக இருக்கிறது, என்றான். அவன் 'போர்க்கோலம் பிரஸ்' சொந்தக்காரர் பூமிநாதப் பிள்ளையினுடைய மகன். நான் எழுதியது தான் என்று விளையாட்டாகச் சொன்னேன். அவன், பூமிநாதப் பிள்ளையிடம் சொல்லி இருப்பான் போலிருக்கிறது—அவர், அதைப் புத்தகமாகப் போட வேண்டும் என்று கூறி, ஆயிரம் ரூபாய்க்குச் 'செக்' கொடுத்ததுடன், இலாபத்தில் சரிபாதி தருவதாகவும் எழுதிக் கொடுத்தார். கதிர்வேலுக்குத் தெரியாது. புத்தகம் வெளிவருவதற்குள், கடுமையான ஜுரம் அவனுக்கு — தர்ம ஆஸ்பத்திரியில் இருந்தான். புத்தகம் வெளி வந்த பிறகு, பிரமாதமான புகழ் — பணமும் நல்லபடி கிடைத்திருக்கிறது— மொத்தத்தில் என் பங்கு மட்டும், பத்தாயிரம் கிடைக்கும் என்று தெரிகிறது. மேலும், இந்தப் புத்தகத்தை எழுதியதற்காக, உலக எழுத்தாளர் மாநாடு, பாரிசில் கூடுகிறதே, அதற்கு வருமாறு எனக்கு அழைப்பும் வந்திருக்கிறது. செலவு, மகாநாட்டாருடையது.

இவ்வளவுக்கு இடையிலே, கதிர்வேலு கடுமையான ஜுரமாகப் படுத்துக் கொண்டிருந்தான். இப்போது, உடல் நிலை சரியாகி விட்டது. என்னிடம் சண்டைக்கு வந்தான்—நான், என்ன செய்வது — விஷயம் வெளியே தெரிந்தால், அவமானம்—அவனை எப்படி எப்படியோ சமாதானம் செய்து பார்த்தேன்—முடியவே இல்லை. அதனால், ஆத்திரம் ஏற்பட்டது எனக்கு. நன்றாக அடித்துவிட்டேன். இப்போது அவனை ஒரு இடத்திலே, கட்டிப் போட்டுப் பூட்டி வைத்திருக்க ஏற்பாடு செய்து விட்டேன். மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. புத்தகம் எழுதினது நானல்ல, என்று வெளியானால், சகிக்கமுடியாத அவமானம் ஏற்படுவதுடன், என் பிற்கால வாழ்க்கைக்கும் பங்கம் விளையும். எனவே, என்ன செய்தாவது, கதிர்வேலுவின் வாயை மூடியாக வேண்டும். அவனோ முதலைப்பிடிக்காரன்—விடமாட்டான். இப்போது அவனை மறைத்து வைத்திருக்கவே தினம் பத்து ரூபாய் செலவு செய்கிறேன். எனவே தாங்கள் உடனே இங்கு புறப்பட்டு வந்து, இதற்கு ஒரு தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நமது பண்ணையிலும், ஆலையிலும், அதிருப்தியாக இருந்துவந்த தொழிலாளிகள் எல்லாம், 'ரொட்டித் துண்டு' படித்துவிட்டு, என்னிடம் நம்பிக்கை வைத்து, புகழ்ந்து, தினமும் எழுதுகிறார்கள். தொழிலாளர்களின் தோழன் என்ற நல்ல பெயரை எனக்கு வாங்கித்தந்த 'ரொட்டித் துண்டு' உண்மையில் கதிர்வேலு எழுதியது, என்று உலகத்துக்குத் தெரிந்தால், என் நிலைமை மோசமாகிவிடும். நானும் பல யோசனைகள் செய்து செய்து பார்க்கிறேன், தெளிவு ஏற்படவில்லை. உங்கள் நண்பர், டாக்டர் தாமுவைக்கொண்டு, ஏதாவது ஒரு வகையிலே இந்தச் சிக்கலைத் தீர்த்துக் கொள்ளலாமா என்று எண்ணுகிறேன். கதிர்வேலு காலேஜிலே, சதா ஏதாவது உளறிக் கொண்டே இருப்பான். அதனால் அவனை இங்கு ஆசிரியர்களும், மாணவர்களும், லூஸ்—கிராக்—செமி — என்றெல்லாம் கேலி செய்வார்கள். டாக்டர் தாமுவின் உதவிகிடைத்தால், கதிர்வேலுவை, பைத்யக்கார ஆஸ்பத்ரியிலேயேகூடச் சேர்த்து விடலாம். எனக்கு எது சரி என்று தெரியவில்லை. ஒரே பயமாக இருக்கிறது. அதனால் தான், இந்தக் கடிதத்தை, பணம் செலவானாலும் பரவாயில்லை என்று, வேலைக்காரன் மருதை மூலம் அனுப்புகிறேன். உடனே புறப்பட்டு வரவும். இன்று இரவு எனக்குப் புதுயுக எழுத்தாளர் சங்கத்திலே விருந்து, நாளையத் தினம் தங்களை எதிர்பார்க்கிறேன். கடிதத்தைப் படித்ததும் கொளுத்தி விடவும்.

தங்கள் அன்புள்ள மகன்,
பாரத்பூஷணன்.

கடிதத்தைப் படித்ததும், ராவ்பகதூரின் முகம் செந்தாமரையாகி விட்டது. "துப்பாக்கிக்குப்பிறந்தது பீரங்கியாகத்தானே இருக்கும்! சுப்புத்தாயீ! சுப்புத்தாயீ!" என்று ஆனந்தம் பொங்கி வழியும் குரலில் கூப்பிட்டார்!

காரணம்

"அறிஞர்களும், சிந்தனையாளர்களும் அகில உலகத்திலும் நற்கியாதி பெறுவதற்கு அவர்களுடைய அறிவுமட்டிலுமோ, சிந்தனா சக்தி மட்டிலுமோ காரணமல்ல. பொது நலனுக்குகந்த பல காரியங்களைப் பற்றி அவர்கள் நாட்டுமக்களுக்கு நல்ல போதனை செய்கிறார்கள்; சுயநலமற்ற சிந்தனைச் சிதர்களைக் கொட்டுகிறார்கள்; சொந்தப்புகழுக்கும் செருக்குக்கும் தலை சாய்க்காமல், அடக்கத்தையே அணிகலனாகக்கொண்டு, அவர்கள் அமைதியுடன் தங்கள் அறிவைப் பொதுவுடைமையாக்குகிறார்கள். அவர்களுடைய பெருமைக்கு அதுவே காரணம்"

தோரோ.

திராவிட குடியேற்றக் கொள்கைகள்

"சரித்திரத்தையும் இலக்கியத்தையும் சிறிதும் படிக்காமலும் ஆராயாமலும் வெறும் புதைபொருள் சின்னங்களை அரைகுறையாக அறிந்துகொண்டும் அச்சின்னங்களை நேரில் பார்க்காமல் அறிக்கைகளின் மூலமும், பத்திரிகைகளின் மூலமும், பார்த்துக்கொண்டு ஆகாயக்கோட்டைகளை ஆராய்ச்சித் துறையில் கட்டுவது நிபுணத்துவத்திற்கு அழகன்று. இப்படிப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் தென்னாட்டிற்கு வந்து, செய்திகளை நேரில் கண்டும், தமிழ் முதலிய மொழிகளை நேரில் படித்தும் பிறகு ஆராய்ச்சிகளை எழுதினால் நன்ருக இருக்கும்" என்று இந்தக் கட்டுரையில், கோவைக் கிழார்–இராமச்சந்திரன்செட்டியார் B. A B. L. அவர்கள் வலியுறுத்துகிருர். இந்தக் கட்டுரை "கலைக் கதிர்" இதழில் வெளிவந்ததாகும்.

மக்கள் நடமாட்டங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்த ஐரோப்பிய ஆசிரியர்கள், எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அந்நாட்டுமக்கள் பிற நாடுகளிலிருந்தே அந்நாட்டிற்கு ஒரு காலத்தில் வந்திருக்கவேண்டும் என்று உறுதியுடன் கூறுகிருர்கள். அண்மையிலே பல ஆராய்ச்சியாளர்கள் இந்த நடமாட்டக் கொள்கைகளைப் பற்றிப் பல உறுதியான கருத்துக்களை வெளியிட்டு வருகிருர்கள். அவைகளுக்குச் சான்றுகளும் இருப்பதாகக் கூறுகிருர்கள். ஒவ்வொரு குலமும் பிற நாடுகளிலிருந்து வெவ்வேறு காலங்களில் வந்திருந்தால் அந்த நாட்டிலே பண்டைய காலத்தில் இருந்த குடி எது என்பதைப்பற்றிச் சரியான சான்றுகளுடன் அவர்கள் விளக்குவதில்லை. பொதுவாக எல்லா ஆசிரியர்களும், மத்திய ஆசியாவிலிருந்தே வெவ்வேறு மக்கள் பிற நாடுகளுக்குக் குடியேறினர்கள் என்றே கூறுகிருர்கள். அப்படி எல்லாக் குலங்களும் மத்திய ஆசியாவிலிருந்து குடியேறியிருந்தால் அந்த இடம் எத்தனை மக்களை உற்பத்தி செய்ததோ என்பது மிகவும் வியக்கத்தக்க ஒரு செய்தி ஆகும். முதலில் திராவிடர்கள் அங்கிருந்து வந்தார்கள்; பிறகு ஆரியர்கள் அங்கிருந்து கிளம்பினர்கள்; அந்த ஆரியர்களிலும் பல பிரிவுகள் இருந்தன; ஒன்று இந்தியாவிற்கும் சிற்றப் பிரிவுகள் ஐரோப்பாவிற்கும் சில பாரசிகத்திற்கும் சென்றன என்றெல்லாம் கூறுவர். அந்தக் கொள்கையை உண்மையெனக் கொள்ளின் மத்திய ஆசியா மிகச் செழிப்பு வாய்ந்த குடிப்பெருக்கத்தைக் கொண்டதாக இருந்திருக்கவேண்டும் அல்லவா? அப்படி இருந்திருக்குமா?

அண்மையிலே வியன்னா நகரத்தில் 'பண்டைக்கால ஆராய்ச்சி மகாநாடு' என்ற ஒரு பெரிய மகாநாடு நடைபெற்றது. அதில் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல அறிஞர்கள் வந்து ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்தினர். அவைகளில் ஒன்று தென் இந்தியாவில் நிகழ்ந்ததாகக் கூறும் திராவிடக் குடியேற்றத்தைப் பற்றியது. அதனை நிகழ்த்தியவர் டாக்டர் பூரர் ஹைமன்டார்ப் [Dr. Furer Haimendorf] என்ற ஐரோப்பிய அறிஞர். அவர் சொல்லியன: 1. மத்திய ஈரானிலிருந்து உயர்ந்த பண்பாடு கொண்டிருந்த திராவிடர்கள் தென் இந்தியாவிற்கு இரும்பு நாகரிகத்தைக் கொண்டுவந்தார்கள். 2. ஈரானிலிருந்து தரை வழியாகப் பலூஜிஸ்தானம் புகுந்து மேற்குக் கடலோரமாகச் சென்று மைசூர்ப் பீடபூமியை அடைந்தார்கள். 3. அவ்வாறு தென்னிந்தியாவிற்குத் திராவிடர்கள் வந்த காலம் கி. மு. 300 என்று ஏறத்தாழக் கூறலாம். ஆனல் அதற்கு முந்தியல்ல–இந்தக் கொள்கைகளை மேற்படி அறிஞர் வற்புறுத்திப் பேசியபோது இந்தியாவிலிருந்து சென்றிருந்தவர்கள் ஆறு அறிஞர்கள்தான். ஆனல் மகாநாட்டிற்கு வந்திருந்தவர்களின் தொகை 800-ஆகும். இந்தியாவிலிருந்து சென்றவர்களில் ஒருவர் மட்டும் அக்கொள்கைக்குத் தடை எழுப்பினராம். தொல்காப்பியம், திருக்குறள் இவைகளைக் கொண்ட தமிழ் இலக்கியம் முழுவதையும் ஆராய்ச்சி செய்யாமல் திராவிடர்கள் கி. மு 300-ல்தான் வந்தார்கள் என்று சொல்வது சரியாகாது என்றும் கூறினராம். ஆனல் அம்மாநாட்டில் தலைமைவகித்த பேராசிரியரோ டாக்டர் சொன்ன கருத்துக்களைத் தாம் ஒப்புக்கொள்வதாகவும் தமிழ் ஆசிரியர்கள் சொல்லும் கோட்பாடுகள் உதிகப்படியானதாகவும் உரைத்தாராம். இந்த முக்கியமான மகாநாட்டிற்குத் தென் இந்தியப் பல்கலைக் கழகத்தார்கள் எவரையும் அனுப்பாதது வருந்தத்தக்கது. மேலும் தென்னிந்தியாவிலும் கூட புதைபொருள் ஆராய்ச்சியில் போதுமான வேலை நடத்தப்படவில்லை. அவ்வாறு நடத்திச் சரியான சான்றுகளைக்கொண்டு தங்கள் கோட்பாடுகளைத் தென்னிந்திய மக்கள் நிறுவவேண்டியது அவர்கள் கடமை என்று மேலே கூறிய செய்தியை வெளியிட்ட எழுத்தாளர் சங்கம் வெளியிட்டிருக்கிறது. ஐரோப்பிய டாக்டர் கூறிய கருத்துக்களுக்கு ஆதாரம் அண்மையிலே மைசூர்ச் சீமையில் தோண்டின புதையல்களே சான்றுகளாம்.

பிறகு தென் நாட்டுச் செய்தித்தாள்கள் பலவற்றிலும் இந்தக் கொள்கை வெளியாக, சில அறிஞர்கள் இதனைக் குறித்து எழுதியும் வெளியிடத் தொடங்கினர்கள். சில நாட்களுக்கு முன்வந்த 'இந்துப்' பத்திரிகையில் ஓர் ஆசிரியர் இதனைத் தழுவி எழுதித் திராவிடர்கள் தென் இந்தியாவின் மிகப் பூர்வீகக் குடிகள் என்று சில பேர் பெருமை பேசிக்கொள்வது இப்போது தகர்த்தெறியப்பட்டதென்றும் திராவிடர்களும் பிற நாட்டினர் போல மேற்கிலிருந்தே வந்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்டு விட்டதென்றும் அது நடந்த காலம் கி. மு. [illegible]

என்று ஐரோப்பிய நிபுணர் கூறியிருப்பதாகவும், ஒரு வேளை இன்னும் சிறிது பண்டையகாலம் என்று கொண்டாலும் கி. மு. 1000-ல் இருக்கலாம் என்றும், அவர்களில் சிலர் மைசூர்ப் பீடபூமி வழியாக வந்திருக்கலாம் என்றும், மற்றும் சிலர் ஒரிசா வழியாக வந்திருக்கக் கூடும் என்றும் ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார். இந்தக் கொள்கைகள் எப்படிப்பட்டவை என்றும், எதுவரையும் நாம் ஒப்புக்கொள்ளக் கூடியவை என்றும் ஒரு சிறிது ஆராய்வோம்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் திராவிடர்கள் அல்லது பண்டைத் தமிழர்கள் தென்னிந்தியாவிற்குக் குடியேறி வந்தார்கள் என்றால், அது ஆரியர்கள் வடநாட்டிற்கு வந்ததன்பின் வெகு நூற்றாண்டுகளுக்குப் பின்பே ஆகும். அதன்படி ஆரியர்கள் வடநாட்டிற்கு வந்த பிறகு, அங்கே நன்றாக வேரூன்றி ஆளத் தொடங்கிய பின்னர் ஈரானி [பாரசீகத்தி]லிருந்து தமிழர்கள் வடநாடு மூலமாகத் தென்நாட்டிற்கு வந்தார்கள் என்று ஏற்படும். அதுவரையும் தென்நாட்டிலே எந்த வகுப்பினர்கள் இருந்தார்களோ, அவர்கள் என்ன ஆனார்களோ என்ற வகையில் இந்த நிபுணர்கள் யாதொன்றும் கூறவில்லை. தமிழர் நாகரிகமும் அவர்களுடைய அரசியலும் கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தென்னாட்டில் இருந்தது என்பதற்குப் பல இலக்கிய ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளை அறியாது ஐரோப்பிய நிபுணர் தமிழர்களைப் பிந்தியவர்கள் என்று கூறும் நோக்கத்துடன் எழுதியிருக்கின்றார், என்றே எண்ணவேண்டும். கி. மு. 3-ம் நூற்றாண்டு என்றால் அசோகருக்குப் பிந்தி ஆகும். அசோகர் புத்த சமயத்தைப் பெருக்குவதற்குத் தெற்கே தம் மக்களை அனுப்பியபோது, தெற்கே தமிழர்கள் குடியிருந்திருக்கின்றனர். இதையெல்லாம் அறியாமல் காலத்தைப் பின்னே தள்ளிக் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இராமாயணக் கதை முழுவதும் கற்பனை என்று கொள்ளாமல் அதன் அடிப்படைச் செய்தி சரித உண்மை என்று கொள்ளுவர். அதாவது வடநாட்டிலிருந்து ஆரியப் படையெடுப்பு தென்னாட்டிற்குச் சில ஆயிர ஆண்டுகளுக்குமுன் வந்திருந்ததென்பது எவரும் ஒத்துக் கொள்ளுவார்கள். அக்காலத்தில் தென்னாட்டில் திராவிடர்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் நல்ல பண்பாட்டோடு இருந்தார்கள் என்றும் இக்காலத்தில் நம்புகிற ஒரு செய்தி ஆகும். ஆகவே அந்தச் செய்தியை இந்தப்புதியஐரோப்பியக் கொள்கையினால் மாற்றிவிடக் கூடுமா? இராமாயணப் படையெடுப்பில் தென்னாட்டில் திராவிடர்கள் இராமல், பின்னாலே வந்திருந்தால், தென்னாட்டில் இருந்த மக்கள் யாரோ என்பதற்கு இப்புது ஆராய்ச்சியாளர் என்ன கூறுகிறார்? தமிழ்நாட்டு மூவேந்தர்களும் அந்தக்காலத்தில் செழிப்புடன் ஆண்டு வந்தார்கள் என்ற செய்தியை மறுத்தற்கு என்ன சான்றுகள் இருக்கின்றனவோ, இதனையும் ஆராய வேண்டும்.

இனிச் சிந்துநதி தீரத்தில் கண்டுபிடித்த புதை பொருள்களின் ஆராய்ச்சியால் அந்த நாகரிகம் ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன் இருந்த நாகரிமாகத் தெரிவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள். அந்த நாகரிகம் ஒருதனிப்பட்ட நாகரிகம். அது திராவிடர்கள் நாகரிகமாகுமென ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ளார்கள். அது நிகழ்ந்த காலம் கி. மு. 40 நூற்றாண்டுகளுக்குமுன் என்பர். அப்படியாயின் அந்த நாகரிகத்தைக் குறித்து புதுக் கொள்கையாளர் என்ன கூறுவரோ? கி. மு. மூன்று நூற்றாண்டுகள் முன்தான் திராவிடர்கள் பாரசீகத்திலிருந்து தென்னாட்டிற்கு வந்திருந்தால் சிந்து நதி தீரக் கலாசாரத்திற்கும் திராவிடர்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லாமல் போய்விடும். அப்படியாயின் சிந்து நதிப் பண்டைக்குடிகள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்? இதனைப்பற்றிப் பண்டைய ஆராய்ச்சி முழுதும் செல்லத்தக்கதன்று என்று மறுத்துவிட்டுப் புதிதான கொள்கைகளைப் பரப்புகிறார்களோ!

பண்டைய தமிழ் நூல்களின்படி இப்போதைய தமிழ்நாடு குமரி முனைக்குத் தென்பால் வெகுதொலைவில் சென்றிருந்ததென்றும் அங்கே தமிழர்கள் சிறந்த பண்பாட்டோடு வாழ்ந்தனர் என்றும் பிற்காலத்தில் அந்த நாடு கடல்கொண்டதென்றும் அறிகிறோம். இந்தவிவரங்கள் தமிழ் அறியாத மேலைநாட்டு நிபுணர்களுக்கு எவ்வாறு தெரியும்? பிறர், மொழி பெயர்த்து எழுதிய சிலகட்டுரைகளைப் படித்து ஒன்றுக்கொன்று முரண்பட்ட கோட்பாடுகளை எழுதிவைப்பது எளிது. கூடியமட்டிலும் மற்ற மக்களுடைய பெருமையைக் குறைப்பதே இவ்வித மக்களுக்குப் பெருமை என்க. இவ்வாறே முன்னாளில் இந்தியாவிற்கு வந்த கிழக்கிந்தியக் கம்பெனி அலுவலாளர்கள் தமிழிலே தென்னாலிராமன் கதைகள் பஞ்சதந்திரக்கதைகள் போன்ற தாழ்ந்த இலக்கியங்களைத் தவிர வேறு இல்லை என்று எழுதிவிட்டார்கள். தமிழில் புதைந்து கிடக்கும் மணி மணியான இலக்கியங்களை அன்னார் அறியவில்லை. அதே காரணத்தினால்தான் தற்போது ஐரோப்பாவில் பிதற்றித் திரியும் நிபுணர்களும்ஆராய்ச்சி என்ற முறையில் கண்டதை வெளியிடுகிறார்கள். அவைகளைப் பின்பற்றி நமதுநாட்டுமக்களும் ஒத்துப் பாடுகிறார்கள். என்னே அறியாமை!

கடைச்சங்கத்தார்காலம் கிறிஸ்து ஆண்டுத் தொடக்கத்தில் ஏற்பட்டது என்று எல்லா அறிஞர்களும் ஒத்துக்கொள்கிறார்கள். அந்தக் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே இடைச்சங்கமும் முதற்சங்கமும் இருந்தன. அந்தக் காலத்து நூல்கள் மறைந்தன. இடைச் சங்கத்திலேயே தொல்காப்பியம் இலக்கணமாக இருந்தது—ஒரு இலக்கணம் ஏற்படுவதற்கு அதற்குமுன் பல இலக்கியங்கள் இருந்திருக்கவேண்டும். "இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்" முறையாகும். நாட்டுமொழி நிரம்பப் பெருகி இருந்தால் அன்றி இலக்கணம் வளரமுடியாது. நீக்ரோ மொழிகளுக்கு இலக்கணம் உண்டா? இலக்கியம் இருந்தாலன்றோ இலக்கணம் ஏற்படும். ஆகவே, தொல்காப்பியர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே இலக்கியங்கள் பல தமிழில் இருந்து இறந்தன. அவைகள் கி. மு. க்கு பல ஆயிரம் ஆண்டுகள்

முன் இருந்திருக்கவேண்டும். அவைகள் தென்னாட்டில் பிறந்தனவா? இக்கேள்விக்கு ஐரோப்பிய நிபுணர் என்ன விடையளிக்கப்போகிறார்? இவைகளை யெல்லாம் ஆராயாது சில பித்தக் கோட்பாடுகளை [Fad] வெளியிடுவது சரியாகாது. இவைகளை ஊளைக்கோளாறுகள் என்று தள்ளி ஒதுக்குவதே மேன்மை.

மேலும் திராவிடர்கள் தென்னாட்டிற்கு வடநாட்டிலிருந்து குடியேறித்தான் வந்தார்கள் என்று ஏனோ கொள்ளவேண்டும்? ஆதிகாலத்திலிருந்தே தென்னாட்டில் இருந்தவர்கள் என்றுகொள்வதற்கு என்ன தடையோ அறியோம். ஐரோப்பியர்களுடைய பித்துக் கொள்கைகளைப் [Fadist Theory] பின்பற்றி எழுதுவதே ஒருவித அடிமை எண்ணமாகும். தென்னாட்டுப் பல்லவர்களைப்பற்றி எழுதும்போது அவர்கள் பாரசீகத்திலிருந்து காஞ்சி வந்தார்களென்று சில ஆராய்ச்சியாளர்கள் வரைந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் பாஹ்லவி என்ற சொல்லே அடிப்படை ஆகும். ஒரு சொல்லிலிருந்து ஒரு கொள்கையை ஏற்படுத்துவது சரியான முறையாகாது. பல்லவர்கள் வெளிநாட்டார்கள் அல்லர்; நல்ல தமிழர்களே ஆவார்கள். அவ்வரசர்கள் வடமொழியில் தேர்ச்சி பெற்றதற்குச் சமண சமயமே காரணமாகும். அதுகொண்டு அவர்கள் பாரசீகர்கள் என்று கூறுவது சரியன்று. அதுபோலவே தமிழ் மக்களையும் பாரசீகத்திற்குக் கொண்டு செல்லுதல் சரியன்று. அவர்கள் என்றைக்கும் தமிழ் நாட்டு மக்களே யாவார்கள். குடியேற்றக் கொள்கைகளெல்லாம் ஆரியர்களுக்கு விட்டு விட்டுத் தமிழர்களைத் தென்னாட்டு நிரந்தர மக்கள் என்று கொள்வதே சரி என்க.

மொழி ஆராய்ச்சியானது சில கொள்கைகளுக்குக் காரணபூதமாக இருக்கின்றது. ஆரியக் குடியேற்றக் கொள்கைக்கு ஐரோப்பிய மொழிகளுக்கும் வடமொழிக்கும் பொதுவாக உள்ள சில சொற்கள் இந்தியாவில் நடுப்பகுதிகளில் உள்ள பண்டை மக்களின் மொழிகளிலும், வடநாட்டுப் பண்டை மக்கள் மொழிகளிலும், பெலூசிஸ்தானம், ப்ருஹி முதலிய மொழிகளிலும் இருக்கின்றனவாம். இந்தக்காரணத்தைக்கொண்டு இம் மொழிகளைப் பேசுகிறவர்கள் எல்லாம் ஒருகாலத்தில் ஒரே குலத்தவர்கள் ஆக இருந்திருக்கக்கூடும் என்பது ஒரு கொள்கை. ஆம், இருக்கலாம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் இந்தியா முழுவதும் திராவிடமயமாக இருந்தபோது ஏன் இவ்விதமாக மொழி இணக்கம் இருந்திருக்கக்கூடாது? அதைக்கொண்டு மாத்திரம் பாரசீகத்திலிருந்த திராவிடர்கள் இங்கேவந்து குடியேறினார்கள் என்றுகூற வகையில்லை. தமிழ்நாடு குமரிக்குத் தெற்கே வெகு நூற்றுக் கற்கள்வரை எட்டி இருந்ததையும், கடல் கொண்டுபோவதற்கு முன்னிருந்தே அது சிறந்த பண்பாட்டோடு விளங்கியிருந்தது என்பதையும் நோக்கும்போது, திராவிடர்கள் என்ற பழந்தமிழர்கள் இங்கேயே இருந்தவர்களென்றும், பிறநாடுகளிலிருந்து குடியேறினவர்கள் அல்லர் என்றும் கொள்வதிலென்ன தடையோ?

இனி மைசூர்ச் சீமையில் என்ன சான்றுகள் கிடைத்திருக்கின்றன! அவைகள் கி. மு. 300 என்று எப்படிக் கண்டு பிடித்தார்கள்? மைசூரில் கிடைத்த புதை பொருள்கள் போலத் தென்னாட்டில் கணக்கற்ற இடங்களில் உள்ளன. அவைகளை ஆராய்வார் இல்லை. பேரூரில் இருந்த மாண்டவர் குழிகளும், செட்டிபாளையத்தில் கிடைத்த மண்டபக் குகையையும் பற்றித் தென்னிந்திய ஆராய்ச்சிப் பகுதியார் சரியாக வெளியிடவில்லை. வெளியிட்டிருந்தால் அவைகள் எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன் இருந்தவை என்று கூறியிருக்க முடியும். பூம்புகார், கொற்கை, உறையூர், கருவூர், திருவஞ்சைக்களம் முதலிய இடங்களில் தோண்டி ஆராய்ச்சி செய்திருந்தால் பல உண்மைகள் தெரியலாம். இலங்கை ஆராய்ச்சிப் பகுதியார் திருக்கேதீச்சரத்தில் தோண்டி எடுத்த வகையில் பல பண்டைச் சின்னங்கள் கிடைத்தன. அவைகள் கி. மு. பல நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த தமிழ் நாகரிகத்தைக் குறித்தனவாம். இலங்கையின் வடபகுதி முற்றும் தமிழ் மயமே. அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து கி. மு. 5 நூற்றாண்டுகள் முன்னரே சென்றிருக்கிறார்கள். ஏலேல சிங்கனும் அவனுக்கு முன் பல தமிழ் மன்னர்களும் ஈழ நாட்டின் மீது படையெடுத்து அநுராதபுரத்தில் அரசாண்டும் இருக்கிறார்கள் என்று மகாவம்சம் கூறுகிறது. இது கி. மு. 4, 5 நூற்றாண்டுகளில் என்று அறியவேண்டும். அவர்கள் திராவிடர்கள் அல்லரா? மேலும் வடநாட்டிலிருந்து கி. மு. 4ம் நூற்றாண்டிலேயே சந்திரகுப்தனைக் கூட்டிக்கொண்டு பத்திரபாகு என்ற சமண ஆசிரியர் மைசூர்ச் சீமையில் சிரவணபெளகுளத்தில் இருந்ததாகச் சரித்திரம் கூறுவதை இந்த ஐரோப்பிய நிபுணர் மறக்கிறாரா!

★

கடவுள் படம்!

பெரியதொரு நர்ஸரி நிலையம். அங்கே ஒரு சின்னஞ் சிறுமி. அவள் கையில் பலவிதமான வர்ணச் சாக்கட்டிகள்! அவைகளைக்கொண்டு, குறுக்கும் நெடுக்கும், மனம்போன போக்கில் கிறுக்கிக் கொண்டிருந்தாள். இந்த 'வேலைச் சேட்டை'யைக் கண்டார், ஒரு குமாஸ்தா. ஓடினார், அவளிடம்.

"என்னம்மா, பண்ணுகிறாய்?"—என்று, கிறுக்கிக் கொண்டிருந்த சிறுமியைக் கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுமி, "கடவுள் படம் போட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் கூறினாள்.

திகைத்தார், அந்த குமாஸ்தா. ஆச்சரியம் கலந்த குரலில் கேட்டார், "சரி, குழந்தாய்! கடவுள் எப்படி இருப்பார் என்று உனக்கு எப்படித் தெரியும், கடவுள் உருவத்தைத் தீட்ட?"

அதற்கு, அந்த சின்னஞ்சிறு குழந்தை சொன்ன பதில்; "தெரியாது. அதற்காகவே அவர்படத்தை வரைந்துகொண்டிருக்கிறேன். அதைக் கண்டுபிடிக்க எனக்கு ஆசை."

"க்ளோஸ்"

பயபக்தி வேண்டும்!

காலஞ் சென்ற பிரபல எழுத்தாளர் வ. ரா. அவர்கள் 7 ஆண்டுகளுக்கு முன் தீட்டிய கட்டுரை.

பயம் வேறு; பக்தி வேறு, இரண்டும் ஒன்றல்ல. பக்தியிருக்கிற சந்தர்ப்பத்தில், பயத்துக்கு எவ்வாறு இடம் இருக்க முடியும்? பயப்படுகிறவனிடத்தில், அவன் பயப்படுகிற சமயத்தில், பயத்தைத் தவிர, வேறு எந்த உணர்ச்சி இருக்க முடியும்? இருந்தாலும், பயத்தையும் பக்தியையும் சேர்த்து முடிப்புப் போட்டதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

காந்தியினிடம் ஒருவனுக்கு பக்தி இருக்கலாம். ஆனால் பயமே இருக்கவேண்டியதில்லை. ராணுவக்காரனிடம் ஒருவனுக்கு பயம் இருப்பது இயல்பு; அவனிடம் பக்தி செலுத்த வேண்டுமென்பதுண்டா? பயத்தையும் பக்தியையும் ஒருநாளும் ஒன்றுசேர்க்கமுடியாது.

பக்தியினால் ஒருவன் பரவசம் அடைவது சகஜம்; பரவச நிலையில் இருக்கும் ஒருவனிடம் பயம் எவ்வாறு அணுகமுடியும்? பரவசத்தில், எவனும், எவ்வளவு அசாத்தியமான காரியத்தையும் செய்யமுடியும். பயப்படுகிற வேளையில், எதையும் செய்ய முடியாது. சரியாகக்கூட மூச்சு விட முடியாது.

பக்தியோடு,பயத்தைபிணைத்த காரணம்தான் தெளிவாகத் தெரியவில்லை. இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதாக எண்ணி, அவ்வாறு செய்துவிட்டார்களா? அல்லாமல், பயமும் பக்தியும் ஒன்று என்று எண்ணி இவ்வாறு செய்துவிட்டார்களா? நினைக்க நினைக்க வேடிக்கையாக இருக்கிறது. கள்ளி வயிற்றில் அகில் பிறப்பதைப் போல, பக்தியினின்றும் பயம் உண்டாகும் என்று எண்ணினார்களோ, என்னமோ!

பக்தியோடு பிணைத்து, பயத்துக்கு ஒரு வகை கௌரவமும் தேவையும் கொடுத்தது ஒருபுறமிருக்கட்டும். பயத்துக்கே, தனிக் கௌரவம் கொடுத்திருக்கும் வேடிக்கையைப் பாருங்கள்.

அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம் என்பது ஒரு பழமொழி. தனி வழி போக வேண்டுமானால், அஞ்சாமல் தான் போக முடியும் அச்சம் இருப்பின், தனி வழி போகவே முடியாது. இந்தப் பழமொழியில் பொதிந்து கிடக்கும் இரண்டு அபத்தங்களைக் கவனியுங்கள்.

முதல் அபத்தம் என்னவென்றால், அஞ்ச வேண்டுமென்பது. இரண்டாவது அபத்தம் என்னவென்றால், தனிவழிசெல்லப்படாது. தனி வழி செல்லாமலும் அஞ்சிக்கொண்டும் இருந்தால், மனிதன் உருப்பட்டது போலத்தான். தனி வழி செல்லாமல் போனால், மனிதன் ஒரு நாளும் அறிவைச் சேகரிக்க முடியாது. புதிதுபுதிதாக எதையும் அவன் கண்டுபிடிக்கவும் முடியாது. இன்றைக்கு, மனித வர்க்கம் முன்னேறி வந்திருப்பது, எதனாலே? தனி மனிதர்கள், தனி வழி சென்று, அறிவுத்துறையில், புதிது புதிதானவைகளைக் கண்டுபிடித்ததனாலேதான்.

குளிர் காய்ச்சல் வந்தால், மனிதர்கள் உடல் ஆடி நடுங்குவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். குளிர் காய்ச்சல் அவஸ்தைக்குள் அகப்பட்டுக் கொண்டவர்கள், ஆகாரத்தை, ருசியோடு சாப்பிட முடியுமா? எல்லாவித ஆகாரங்களையும் அவர்கள் உட்கொள்ள முடியுமா? உடல் நடுக்கங் கொண்டவர்கள் உலகத்தை எவ்வகையிலும் அனுபவிக்க முடியாது. எனவே, பயபக்தி வேண்டும் என்று சொல்லுவது எவ்வளவு மதியீனம்!

ஆலகால விஷம் என்பது ஒரு கற்பனைச் சரக்கு. அந்த விஷம்தான் மிகக் கொடியது என்று உலகில் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனால், அந்த விஷத்தைக் காட்டிலும் கொடியது பயம் என்று நான் உறுதியாகச் சொல்லமுடியும். பயம் எதற்காக வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. எதைக் கண்டு பயப்படவேண்டும் என்றும் எனக்குத் தெரியவில்லை.

துப்பாக்கியையும் வெடிகுண்டையும் அணு குண்டையும் தொத்து நோயையும் கண்டு, எப்படிப் பயப்படாமல் இருக்க முடியும் என்று சிலர் கேட்கலாம். பயப்படாமல் இருக்க முடியாது என்று வைத்துக் கொள்ளுவோம். பயப்படுவதால், என்ன லாபம்? துப்பாக்கி நம்மைக் குறி தவறி விடுமா? வெடிகுண்டு வெடிக்காமல் பொத்தென்று விழுந்துவிடுமா? அணு குண்டு மண்ணைப்பிளந்துகொண்டு பாதாளத்துக்குப் போய்விடுமா? தொத்துநோய் நம்மைத் தொடாதா?

பயப்படுவது, இவைகளைக்கண்டு பயப்படுவது இயற்கை என்று சிலர் சமாதானம் சொல்லத் துணியலாம். பயப்படுவது எப்படி இயற்கை என்றுதான் எனக்கு விளங்கவில்லை. தைரியமாக இருப்பது ஏன் இயற்கையாக இருக்கக்கூடாது? தைரியமாக ஆயிரத்தில் ஒருவர் கூட இருப்பதில்லை என்ற காரணத்தினாலே, தைரியமாக இருப்பது இயற்கை அல்ல என்று எப்படிச் சொல்லலாம்.

மனிதன் மனித சுபாவத்தோடு இருக்க முயன்றால், தைரியமாக இருப்பதுதான் இயற்கையான மனோபாவமாகும். மனிதன் கண்ணால் பார்ப்பதும், காதால் கேட்பதும், நாவினால் பேசுவதும் எப்படி இயற்கையானதோ, அதைப் போலவே, ஆபத்தைக் கண்டு நடுங்காமலிருப்பது. ஏன்? நடுங்குவதால் யாதொரு நற்பயனும் கிடைப்பதில்லை. மனிதன் விவேகம் உள்ளவன் என்று பெருமை பேசிக் கொண்டானாகில், அவன் நற்பயன் எதுவும் ஏற்படாத நடுக்கத்தை உதறித்தள்ளிவிட்டு, தைரியத்தோடு இருப்பதுதான் அவனுடைய இயற்கையாகும். ஆகவே, பயபக்தி வேண்டுமா? சொல்லுங்கள்.

★

இன்பம் பொங்குமா?

["கருணா"]

★

பொங்கல் புதுநாள்—எங்கணும் மகிழ்ச்சி
தங்கிடக் காணோம்! சங்கதி என்ன?
சிதைந்தநம் வாழ்வைச் சீர்பெறச் செய்ய
சுதந்திரம் வந்ததே; இதந்தர வில்லையா?
எங்கே.........;
மங்காப் புகழுடை எங்கள் தமிழ்மேல்
எங்கிருந் தோவரும் இந்தியின் பாய்ச்சல்;
மக்களின் தயவால் மன்றம் நுழைந்தவர்
மக்களை மறந்து சிக்கினர் சூழலில்;
இந்தியா பெயரில் வந்தவ னெல்லாம்
சொந்த நாட்டிலே சுரண்டுதல் தொலைய
உரிமை கோரினால், பொறுமை யில்லாமல்,
பேசவோ, எழுதவோ, பிடித்ததை நடிக்கவோ,
ஆசைகொண் டவரிடம் நேசமாய் இருக்கவோ
தடைசெயுஞ் சட்டமே விடையெனத் தந்தனர்!
உழைப்பதற் கேற்ற ஊதியம், உயிருடன்
தழைப்பதற் கான சாதனம் தா,எனில்,
தடியடி படைகளின் இடிஉதை பரிசாம்!
இந்நிலை வளர்கையில் இன்பம் பொங்குமா,
என்செய் வோமென ஏங்கிடும் ஏழையின்
இரத்தக் கண்ணீர் பொங்குமா?
உரத்த குரலில் உரைப்பீர் தோழரே!

தஞ்சை வீழ்ச்சி

அண்ணாதுரை

சிங்கம் இரை கிடைக்காது திகைத்தாலும், சிறு நரிக்கு எங்கேனும் ஏதேனும் இரை கிடைத்து விடும் என்பர்! வீரர்கள் வாழ்வு இழந்து, தாழ்வு நீண்டிடும் வேதனை நிலை பெறுவதுண்டு—வஞ்சகர்களோ எப்படியோ, எதைச் செய்தோ, வாழ வழி அமைத்துக்கொள்வர். இந்தச் சோகச் சுமையை, தமிழக வரலாற்றுச் சுவடியிலே காணலாம் — தெளிவாகவும் விளக்கமாகவும் இராது—ஓரிரு வரிகள்—சிறு சிறு சம்பவங்கள்—என்ற முறையிலே!!

முடி தரித்த மன்னர்கள் அரசு இழந்தால், அல்லற்படுவர்.

புதிய மூலாம் பூசப்பட்டவர்கள் மன்னர்களாகி, புதுவாழ்வு துவக்குவர்.

அரசர்கள், வாழ்வு தாழ்வு எனும் இரு நிலைகளிலும் உருட்டப்படுவர் —காலவேகத்தால்—ஆனால், புரோகிதரோ, புன்னகையை இழந்ததில்லை! மன்னன் மாறுவான், மணிமுடி, சிரம் மாறும். மறையவர் குலத்துதித்து அரசவையில் இடம் பிடித்த 'ஜடாமுடி' யின் நிலை, மாறாது.

இவர்களல்லவா, 'பாக்யசாலிகள்' என்பர் யாரும்—இவர்களின் முழு உருவம் இதுமட்டுமல்ல.

நாட்டு நிலை மாறினாலும் தங்கள் நிலையிலே தாழ்வு புகாதபடி பார்த்துக்கொள்ளும் திறமைசாலிகளாக மட்டுமல்ல, புரோகிதர் இருந்தது—நாட்டுநிலை இப்படி இப்படி மாறிவிடக்கூடும் என்று முன்கூட்டியே அறிந்துகொண்டு, அதற்கேற்பத் தங்களைத் தயாராக்கிக்கொள்ளும், யூகசாலிகள்!!

அதுமட்டுமா! நாட்டின் நிலையை, இவ்வண்ணம் மாற்றி அமைத்தால், தமது நிலையிலே இவ்வண்ணம் ஏற்றம் கிடைக்கும் என்று யூகித்து, யாரும் அறியாமுறையில், எவரும் குறை கூறாத தன்மையில், நாட்டு நிலையை மாற்றி அமைப்பர்.

இதன்படி, மணிமுடிகள் உருண்டிடவும், மண்டலங்கள் கை மாறிடவும், மன்னர்கள் ஓடிடவும், மாமிசப் பிண்டங்கள் மன்னர்களாகிடவுமான, 'சம்பவங்களை' உண்டாக்கி வந்தனர், புரோகிதர்கள். குருமார்கள் என்ற நிலைக்குக் குறைவு ஏதும் ஏற்படாத வகையிலே, இந்தச் 'சம்பவங்களை' உண்டாக்குவர்.

அரசுகளுக்குள்ளே சமர் மூளும்—களங்களிலே கழுகுகள் வட்டமிடும் — அரண்மனைகளிலே அழுகுரல் எழும் — கோட்டை கொத்தளங்கள் தூள் தூளாகும் — அகழ்களிலே முதலைகளுக்கு விருந்து கிடைக்கும் — இந்த நாட்டுக்கும் அந்த நாட்டுக்கும் போர் என்று சரிதம் இந்தச் சம்பவத்துக்குப் பெயரிடும் — ஆனால், மிக மிகக் கவனமாகக் கூர்ந்து பார்த்து, விடுபட்ட வரிகள், துண்டாடப்பட்ட நிகழ்ச்சி ஓவியங்கள், ஆகியவற்றைக் கண்டறிந்தால், சரிதம் வெளிப்படையாகக் கூறுமலிருக்கும், உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். வீண் வேலை என்றெண்ணிச் சிலரும், விஷவாடை வெளியாகிவிடுமே என்று சிலரும், விளக்கமறிவது சிரமமான காரியமாயிற்றே என்று சிலரும் இருந்துவிடுகின்றனர்—இதனால் முழு உண்மை மங்கி, மடிந்து விடுகிறது. கமண்டல நீருக்கும் மக்களின் குருதிக்கும் இருந்துவந்த பயங்கரத் தொடர்பு, மறைக்கப்பட்டுவிடுகிறது. மங்கிக் கிடக்கும் உண்மைகள், தேய்ந்து தெரியும் சம்பவங்கள்—இவைகளிலே ஒன்று, தஞ்சைவீழ்ச்சி-வீரம் வஞ்சகத்தால் வதைக்கப்பட்ட விபரீதச் சம்பவம்.

தஞ்சைத் தரணி தமிழகத்தின் பூஞ்சோலை—அன்றும்!

கடல் கொந்தளித்தெழுந்ததால் புயல் கிளம்பி, இன்று அந்தப் பூந்தோட்டம் அழிவுற்றுக் கிடக்கிறதே — அதுபோன்றே — கமண்டல நீர் கொந்தளித்து, வஞ்சகப் புயல் வீசி, தஞ்சைத் தரணியை முன்னமோர் நாள் பிணக்காடு ஆக்கிற்று!

தஞ்சை செல்வோம் — ஆண்டு 1673! ஆள்பவர், வேந்தன் விஜயராகவன்!!

தஞ்சைத் தரணிமட்டுமல்ல, தமிழகமே வைதீக ஆரிய மார்க்கத்துக்கு இரையாகிவிட்டிருந்தது — எனவே, புரோகித வகுப்பாருக்கு, அளவு கடந்த செல்வாக்கு. வீரத்தாலல்ல, பக்தியினால்தான், மன்னர்கள் புகழ் தேடுவது என்ற முறை வலுத்துவிட்ட காலம் அது. இத்தனை களம் கண்டான், வீரப்போரில் ஈடுபட்டு இவ்வளவு தழும்புகளை உடலில் பெற்றான், என்று மன்னர்களைக் குறித்துப் புலவர் பெருமக்கள் வியந்து பாடும் காலம் அல்ல—இன்னின்ன கோயில்களைக் கட்டினான்—இலட்சம் பிராமணர்களுக்கு அன்னதானம் அளித்தவன்—என்று பிராமணோத்தமர்கள்' பாராட்டிப் பேசி, ஆசீர்வாதம் செய்துவந்த காலம்.

மன்னர்மகனுக்கு 'அட்சராப்பியாசம்' (கல்வி துவக்கம்) நடக்கும்-நவரத்னங்களைக் கொட்டி, அதைக் கொண்டு, அரசகுமாரனை, ஒரு அந்தணர், எழுதவைப்பார்! பிறகு நவரத்னங்கள், அந்தணர்களுக்குத் தானமாகத் தரப்படும். அப்போது தான், அரசகுமாரன் புத்தியில் 'பிரகஸ்பதி'யாக வேண்டும் என்று பிராமணர்கள் ஆசீர்வாதம் செய்வர்!

கும்பகோணம் இராமர் ஆலயம், கும்பேஸ்வரர் கோயில், திருவையாறு ஜம்புகேசர் தேர், பசுபதி கோயிலில் தேனுகேசுரர் மண்டபம், மன்னார்குடியில் மணிமண்டபம் —இப்படித் திருப்பணிகள் செய்வர், மன்னர்கள் — மறையவர், வாழ்த்துவர் — மகேசன் அருள் பாலிப்பார்!

துலா புருஷதானம் — ஸ்வர்ண கோதானம்—பூதானம்— இப்படிப் பலப்பல!!

அந்தணர் அகமகிழ இவைகள்—மன்னன் மனமகிழ்ச்சிக்காக, அரண்மனை, கலைக் கூடமாக்கப்பட்டு விளங்கிற்று. கல் பேசும் சிற்பியின் திறத்தால்! கலை, துடியிடையாக, கொவ்வை அதரமாக, கடைக்கண்ணாக, இடை நெளிவாக, இசையாக, நாடகமாக, நானா விதமான உருவிலே, கொஞ்சிக் கூத்தாடி, மன்னர்களைக் களிப்புக் கடலிலே தள்ளும்! அருக்கு மங்கையர் மலரடி வருடுவர் அரண்மனையில், எனினும் ஆலயம் சென்று அரங்கனின் திருவடி சரணம் என்ற பக்தியையும் சொரிவர்! சல்லாபிகளின் சதங்கை ஒலிக்கும், அரண்மனையில்—ஆலய மணியோசை மன்னன் மனதிலே பகவத் நாம சங்கீர்த்தனத்தின் பெருமையைப்பதிய வைக்கும்! கூந்தலைக் கோதும் கரங்கள் அரண்மனையில்—கூப்பிய கரங்கள் ஆலயத்தில்! இங்ஙனம் இன்பத்திலே மூழ்கியிருந்த மன்னர்கள் காலம்!

விஜயராகவனும், மகா பக்தன்—மகா ரசிகன்! கடவுட்காரியமும் கலை ஆர்வமும், ஒத்த அளவு கொண்டிருந்தான்!

காவியம் படித்தலும், ஓவியத்தைக் கண்டு களிப்பதும், தர்க்கம் கேட்பதும், பண்டித சிரோமணிகளிடம் பாடம் கேட்பதும், நாடகம் காண்பதும், நாதன் அருள் பெறும்



மார்க்கத்தை ஆராய்வதும், விஜய ராகவ வேந்தரின், நித்திய நடவடிக்கைகள்.

பிராமணோத்தமர்களின் மனம் கனியும்கோணலாகாதென்ற திடம் கொண்ட தீரன், மகன் மன்னரு என்பான், கள்ளுமத வேட்கைக் கணையாலே தாக்கப்பட்ட நிலையில் ஓர் ஆரியமங்கையிடம் தகாத முறையிலே நடந்து கொண்டது கேட்டு, மகனென்றும் பாராமல், சிறையில் தள்ளிய சீலன்! பூலோக ஸ்வர்க்கத்தில் பூதேவர் புடை சூழ கொலுவீற்றிருந்த கோமான்!! அந்த விஜய ராகவ வேந்தர் மீது போர் தொடுத்தான் மதுரை சொக்கநாதன்! கடும் போர்! விஜயராகவன், வயோதிகப் பருவம் — சொக்கநாதன் படைகளோ சூறாவளி வேகத்தில், தஞ்சைத் தரணியைத் தாக்குகின்றன! மன்னன் மருண்டான் — மகேசனை வேண்டினான்—மறையவர் குலத்துதித்த பெரியவரை நாடினான்—சோமசுந்தரஸ்வாமி என்பாரிடம் சென்று நிலைமையைக் கூறி, மார்க்கம் கேட்கலானான் மன்னன்.

"ஸ்வாமி! அடியேனுக்கு வந்துள்ள இந்த ஆபத்துப்போக மார்க்கம் கூறி அருளவேண்டுகிறேன்"

"விஜயராகவா! விசாரத்தை விடு! பரம பக்தனான உன்னைப் பகவான் கைவிடுவாரா? ஏன் கலங்குகிறாய்?"

"சொக்கன் படை பிரம்மாண்டமானது!"

"துரியனிடம் கூடத்தான் இருந்தது—கண்ணன் பாண்டவரைக் காப்பாற்றினான் — நீ தருமசொரூபன்—தடுமாற்றம் வேண்டாம்—ஜெயம் நிச்சயம்".

மன்னன், திகைத்து நிற்கிறான்—சோமசுந்தர ஸ்வாமிகளின் சீடர்களிலே ஒருவன், குருவாக்யத்தை விளக்கமாக்க விரிவுரை செய்கிறான்.

"மன்னரே! குருதேவர் கூறிய பிறகும், குனிந்த தலை நிமிராமல் இருப்பதோ! கொற்றவனே! நிமிர்ந்து நில்லும்—கூர் வாளை ஏந்திப் புறப்படும் போருக்கு. வெற்றி நிச்சயம். படைபலம் பாண்டி நாட்டானிடம் இருந்து என்ன செய்ய முடியும்! பரமனின் துணை, அதனினும் மேலான பலமன்றோ! விஜயராகவ வேந்தரே! உமது பக்தியின் மேன்மையை உணராதவரன்றோ, இந்தப்போரின் முடிவு என்னாகுமோ என்று கவலை கொள்வர். எவ்வளவு கைங்கரியங்கள் செய்திருக்கிறீர் — ஆலயத் திருப்பணிகள் அனந்தம் — பிராமணருக்குத் தந்துள்ள தான தருமங்கள் கொஞ்சமா—நீர் செய்த சத்காரியம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அக்ரோணிச் சேனையாக உருவெடுத்துக் களத்தில் உமக்கு உதவி புரிந்து, மதுரைப் படையைச் சிதறடிக்கும். இது குருதேவர் வாக்கு—சத்யவாக்கு! சத்யத்தின் முன்பு, எத்தகைய சேனாசக்தியும் நில்லாதல்லவா!

ஆயிரமாயிரம் அந்தணச் சிரேஷ்டர்கள், உமது வெற்றிக்காக அரி பரந்தாமனையும் அரனையும் வேண்டிப் பூஜை செய்தவண்ணம் உள்ளனர், அவர்களின் ஆசி, வெற்றியைத் தரும் என்பதிலே, வேதசாரம் உணர்ந்த உமக்குச் சந்தேகம் வரலாகுமா?

அதோ! ஆலய மணிகள் ஒலிக்கின்றன! உமது வெற்றியை வேண்டி விசேஷ பூஜைகள் செய்யப்படுகின்றன!

நாலு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்திநான்கு கலைக்கியானம் உணர்ந்த பரமனின் அருளைப் பெற்றுள்ளபிராமணோத்தமர்களின் ஆசியுடன் போருக்குக் கிளம்புகிறீர்—வெற்றியுடன் திரும்பிவிடுவீர்—இது நிச்சயம் — சத்தியம்—

ஜெயவீரராக விளங்குவீர், விஜயராகவரே! விசாரம் வேண்டாம், வெற்றி நிச்சயம் புறப்படும்."

விஜயராகவ வேந்தருக்கு—மனம் நிம்மதியாயிற்று—புதிய நம்பிக்கை பிறந்தது—களம் புகுந்தார்—கடும் போர்—போரின் கடுமை வினாடிக்கு வினாடி வளர்ந்தது — நாசம், தஞ்சையை வேகவேகமாகத் தழுவிக் கொள்ளலாயிற்று.

தஞ்சைப் படைகள் தோற்றோடின—மன்னன் களத்திலே பிணமானான்—மகனும் அங்ஙனமே! தேவிமார்கள் தீயில் வீழ்ந்தனர்! விஜயராகவனின் குடும்பமே இறந்துபட்டது—ஒரே ஒரு சிறு குழந்தை தவிர! அந்தக் குழந்தையை, யாரோ, எங்கோ, எடுத்துச்சென்றுவிட்டனர்! தஞ்சை, சொக்கநாதனிடம் சிக்கிவிட்டது. "பக்திக் கவசம் பூண்டிருக்கிறாய், மன்னவா! மாற்றானின் படை உன்னைத் துளைக்காது" என்றார் குரு! சீடர்கள் அதற்கு ஆதாரங்களைக் கூறினர்—தஞ்சை தீயுண்ட நிலை பெற்றது.

மன்னனை, அவனாற்றிய 'புண்யம்' காப்பாற்றும் என்று புகன்ற பூசுரத் தலைவருடைய சீடகோடிகளிலே ஒருவராக உங்களில் யாரேனும், இருந்ததாக எண்ணிக்கொள்ளுங்கள். எனக்கேன், எத்தர் கூட்டத்திலே இடம்? என்று கேட்பீர்—ஒப்புக்கு—உண்மையாகவே, அல்ல! கற்பனை புரிக்குச் செல்ல—அழைப்பு; வேறொன்றுமில்லை.

குருவோ ஆசீர்வதித்தார்—கொற்றவனோ தோற்றான். பிணமானான்! சீடனின் மனம் என்ன நிலைபெறும்—சிறிதளவு சிந்தனையும் கொஞ்சம் மனிதத் தன்மையும் கொண்ட சீடன், என்ன எண்ணுவான்! என்ன எண்ணுவீர்கள், நீங்கள், சோமசுந்தர ஸ்வாமியின் சீடர்களிலே ஒருவராக இருந்திருக்க நேரிட்டிருந்தால்!

பயம் பிடித்துக்கொண்டு, ஓட்டமெடுத்துவிடவேண்டும் தஞ்சைத் தரணியை விட்டு, என்று எண்ணுவீர்களா?

கவைக்குதவாத பேச்சாற்றிவந்த குருதேவனை முகத்தைக் காண்பதும் தீது என்று எண்ணுவீரா?

குழப்பமடையத்தானே செய்யும் மனம்.

இதோ ஒரு சீடன் — கற்பனை உருவந்தான் — கட்டிளங்காளை— காவி உடை—களம் புகுமுன், சோமசுந்தரரின் காலடி வீழ்ந்து ஆசி பெற்ற மன்னனைக் கண்டவன்—தஞ்சை நாசமானதைக் காண்கிறான். கண்ணீர் காவி உடையிலே வீழ்கிறது, கருத்திலே புதியதோர் மலர்ச்சி பிறக்கிறது. மெள்ளக் கூறுகிறான்.

"எங்கும் யாக குண்டங்களை எழுப்பினன்! தேவ ஒளியை நிரப்பினன்! வேள்வித் தீ எங்கும் தோன்றின! உற்சவாதிகள் அமோகம்! கலை கூத்தாடிய கூடம்! கவிதை புரண்டோடிய இடம்! பக்திப் பிரவாகம் மிகுந்த தஞ்சைப்பதி, தோற்றது!

அதோ, கேட்கிறது, தோற்ற துயரால் உயிரை மாய்த்துக் கொள்ளும் தஞ்சை வீரர்களின் மரணக் கூக்குரல்!

அதோ! பாண்டிநாட்டுப் படையின் வெற்றி முழக்கம்.

ஐயோ! அதோ ஜ்வாலை! தஞ்சை அந்தப்புர மாதர்கள் தீயில் வீழ்ந்து மடிகிறார்கள் — படுகொலை — சித்ரவதை—பக்திக்குப் பரிசு இதுவா? பிராமண ஆசீர்வாதப் பலன் இது தானா? ஓம குண்டம் பலனளிக்கும் என்றனரே—அதோ மாதர் மடிகின்றனரே பெரு நெருப்பில்!

குருதேவர் கூறினது... பூதேவர்கள் புகன்றது........ஆலய விசேஷ பூஜைகள்—ஆசிமொழிகள் — அந்தணர்களின் மந்திர பலம்...எல்லாம் எங்கே? ஏன் பொய்த்துப்போயின? —தோல்வியைத் தடுக்க முடியவில்லையே!—பக்திமானான மன்னனைப் பாதுகாக்க, புண்ணியம் அரணாக நிற்கவில்லையே! புகை கிளம்புகிறதே அரண்மனையில்! களத்திலே புலம்பும் குரல் கேட்கிறதே! என்ன சத்தம்! ஆ! என்ன, என்ன?

மன்னன் மாண்டான்!

ஐயோ!

மன்னனும் மாண்டான்!

அடதெய்வமே!

மாதரசியும் மாண்டாள்.

ஆ! என்ன கொடுமை!

வெற்றி பெற்ற பாண்டியன்படை பவனி வருகிறது!

பவனி! வெற்றிப்பவனி! பாண்டியப் படைக்கு! விஜயராகவன் தோற்றான்—குடும்பமே சர்வநாசம் அடைந்தது...கொடுமை-கொடுமை சொல்லொணா வேதனை—தோல்வி! தோல்வி! விஜயராகவனுக்கா தோல்வி. இல்லை! வீணுரை தோற்றது—வேதமும் வேள்வியும்—மானியமும் தானமும்—யாகமும் யோகமும் — திருப்பணியும் திருப்பாசுரமும்—அந்தணரும் அவர்தம் ஆசியும் தோற்றன! ஆஹா! மதிமோசம் போனான் மன்னன்! மதியை மாய்த்தோம், எம் போன்றோர்கள் கூடிக்கொண்டு! மன்னனைப் பக்திமானாக இருக்கச் செய்தோம்—பூரித்தோம் —பாராட்டினோம்—பலவானால் இன்று தோற்கடிக்கப் பட்டான்— ஏமாற்றினோம் மன்னனை—ஏமாளி நானும்—நம்பினேன்—நம்பச் செய்தேன். நாடு அன்னியனிடம்—!

தஞ்சைவீரனின் பிணம்!

பாபம்! வீரனே! களத்திலே நின்று போரிட்டபோது, நீ எவ்வளவு நம்பிக்கைகொண்டிருந்தாயோ, என்னைப் போலவே! நமது மன்னர் பக்திமான், பரமன் அருள்பெற்ற பிராமணோத்தமரின் ஆசி பெற்ற புண்யவான், அவருடைய வெற்றிக்காக ஆலயங்களிலே விசேஷ அபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது, வெற்றிநிச்சயம் நமக்குத்தான், என்று உறுதியுடன் போரிட்டிருப்பாய்—களத்திலே பிணமானாய் கர்ம வீரனே!—உன் காலைத் தொட்டுக் கும்பிடுகிறேன்—என்னை மன்னித்துவிடு — இறந்த வீரர்கள் நீங்கள் அனைவரும் என்னை மன்னிக்கக் கோருகிறேன்.

நான் சோமசுந்தரஸ்வாமிகளின் சீடரில் ஒருவன்—பக்தி வெல்லும் —சத்யம் ஜெயிக்கும் என்ற வெம்பிக்கையை ஊட்டியவர்களில் ஒருவன்.

மன்னன், நாங்கள் காட்டிய மார்க்கத்தைப் பின்பற்றி நடந்தான் — நீங்கள் மன்னனைப் பின்பற்றினீர்கள், தோல்வி கண்டீர்கள்— எம்மால்-யாகத்துக்குச் செலவான பணம், உமக்கு இன்னோர் வாளைத் தந்திருக்கக் கூடும்! திருப்பணிக்குச் செலவான திரவியம், இன்னொரு கோட்டைச் சுவருக்குச் செலவாகியிருந்தால்?-பக்திக்காகச்செலவிட்ட பணம், பயனற்றுப் போய்விட்டது—நீ பிணமானாய்—ஏன்...? போரிட வதற்கு இத்தனைப்பாடு — செல்வம் போகம் தோற்ற பிறகு—என் இந்தக்கோலம்—நண்பா! உன்னை நம்ப வைத்த கூட்டத்திலிருந்து இதோ விலகுகிறேன்-உன் தாளைக் கும்பிட்டேன்-இதோ உன் வாளைப் பெற்றேன்—இனி வீணனல்ல — வீரன் வெற்றிக்காக வீரப்போர்—எங்கே சொக்கநாதன் படை! எங்கே! எங்கே!"

*

இதுதான் சரி — இப்படித்தான் நான் செய்திருப்பேன்! சேர்ந்தே இருந்திருக்க மாட்டேன், காவிக் கூட்டத்தில்-ஏதோ ஒரு காரணத்தால், எப்படியோ சேர்ந்திருந்தாலும், தஞ்சைத் தரணிக்கு அழிவு வந்ததைத் தடுத்திட முடியாது போன, வைதீகக்கூடாரத்தை விட்டு வெளி ஏறித்தான் சென்றிருப்பேன்—வாள் எடுத்து வீரப் போரிடக் கிளம்பியிருப்பேன்— என்று கூறவீர். நான் அமைத்து வந்துள்ள கற்பனைக்காளை, அந்த நிலை பெற்றான் சொக்கநாதன் படையைத் தன்னால் முடிந்த மட்டில், அழித்தொழிக்க எண்ணினான்.

வேந்தன் விஜயராகவனின் தஞ்சைத்தரணி, மதுரை மன்னன் சொக்கநாதனிடம் சிக்கிவிட்டது. சொக்கநாதன், தன் தம்பி, அளகிரி என்பானை அரியாசனம் அமரச் செய்தான்! அளகிரியின் படை தஞ்சைத்தரணியில், எவ்விதமான எதிர்ப்பும் தலைதூக்க முடியாதபடி, காவல்புரிகிறது. காவிப்பைக்காரித்து

விட்டு, கட்கமெடுத்து, நாட்டை மீட்கப்போரிடத்துணிந்த, கற்பனைக் காளை, என்ன செய்ய முடியும்! சமயம் கிடைத்தபோது, மதுரைப் படையினன் எவனேனும் சிக்கிக் கொண்டால், நாட்டை இழந்ததால் கிளம்பும் கோபம் அவ்வளவையும் அவன்மீது காட்டுவான் — தலையை வெட்டுவான்.

அங்ஙனம் அவன் செய்து கொண்டிருந்தான். ஒரு நாள், அவன் சிக்கிக் கொள்ளக்கூடிய நிலை—ஓடினான் பயந்து—துரத்திக் கொண்டு வரலாயினர் துருப்பினர் —இந்தச் சந்து, அந்தச் சந்து, எங்கெங்கோ நுழைகிறான்—விடாமல் துரத்திக் கொண்டு வருகிறார்கள். ஏதோ ஒரு வீடு—உள்ளே நுழைகிறான்—எழில் மங்கை ஒருவள், திகைத்து நிற்கிறாள் — கதவை அடைக்கிறான்—முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொள்கிறான்—அவள் ஓரளவு அவன் நிலைமையை யூகித்துக் கொள்கிறாள்—அவன் அவள் அருகே செல்கிறான். இனி, நாமும், அந்தக் கற்பனைக் காளையின் நடவடிக்கைகளைக் கவனிப்போம்.

"ஆடலழகி! அஞ்சாதே! நான் அறப்போர் புரிபவன். அழகு தஞ்சையை அன்னி!பனிடமிருந்து மீட்க, நான் மறைந்திருந்து போர் புரிபவன். என்னைத் துரத்திக் கொண்டு, படைவீரர்கள் வருகிறார்கள். என்னைக் காப்பாற்று. தயவு செய்! எந்த நிமிஷமும் அவர்கள் வந்துவிடக்கூடும். ஆபத்தான நிலைமை. சத்தம் கேட்கிறது"

"சரி! அதோ அந்த வாத்யத்தை ...."

[தட்டுக் கோலை எடுத்துக் கொள்கிறான் — வாளை மறைத்துவிட்டு. அவள் ஆடுகிறாள்]

"உங்களை நான் இதற்குமுன் தரிசித்திருக்கிறேன் — இப்போது பார்க்கிறேன்"

"உன் மதிமொழி கண்டு நான் மகிழ்கிறேன்—தரிசித்தாய் முன்பு—பார்க்கிறாய் இப்போது! எவ்வளவு நுண்ணறிவுடன் பேசுகிறாய்"

"காவியுடன் இருந்தபோது, தரிசித்தேன், மடத்தில்"

"மடத்தனத்தை விட்டொழித்தேன் மாதரசி!"

"படைத்தொழிலை எடுத்தீர் போலும்"

"ஆமாம்!"

"முன்பு பணிந்தேன்—இப்போது பயப்படுகிறேன்"

"ஏன் பயம்?"

"ஏன் இராது? தஞ்சைசர்வநாசத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது—கோட்டைகள் தூளாகிவிட்டன—கொற்றம் அழிந்தது — சொக்கநாதன் துரைத்தனம் ஏற்பட்டு விட்டது — இந்நிலையில், நீர் கத்தி

தூக்குகிறீர் நாட்டு விடுதலைக்கு—என்ன ஆகும் உம் கதி? வீரம், காட்டவேண்டிய நேரமா இது? யூகம் தேவை! அது தங்களிடம் இல்லையே என்று பயந்தேன்"

"யூகம் வேண்டும்! ஆமாம்! ஆமாம்! நான் ஒருவன் கத்தி தூக்கி என்ன பயன் இப்போது......"

"அதைச் சொல்லிவிட்டுகத்தியை எறிந்துவிட்டு, மறுபடியும் கமண்டலம் எடுக்க உத்தேசமோ?"

"இல்லை! இருக்கலாம்! நான் உன்னைக் கேவலம் தாசி என்று துச்சமாகத் தள்ளிவிடமாட்டேன்"

"உம்! தள்ளிவிடாமல்,,,,,,"

"உன்னுடன், தாய்......மற்றும் வீட்டில்........"

"ஆரம்பமாகிவிட்டதா?"

"என்ன?"

"வழக்கமான விசாரணை......... யாரும் இல்லை என் வீட்டில். தாய், நோயால் மாண்டாள்—சிசு ஒன்று கருவில் மாண்டது—அதுவும், அரண்மனையில் தீ தெரிந்ததே அதைக் கண்டபோது ஏற்பட்ட பீதியால்! அவர்—அவ்வளவு தான் கூறமுடியும் அவரைப்பற்றி—அவர் போரிலே மாண்டார்—நான், வெளியூர் சபை ஒன்றிலே நாட்டியமாடப் புறப்படுகிறேன்—என் பெயர், சகிலேகா"

"சசிலேகாவா?"

"ஆமாம்! விஜயராகவமன்னர்சபையிலே வீற்றிருந்த மகா பண்டிதையின் பெயரையே என் அம்மா எனக்குச் சூட்டினார்கள்"

"அழகான பெயர்"

"ஆனால் பொருத்தமில்லை—நான் பண்டிதையுமல்ல — பாடி ஆடிப் பிழைப்பவள்"

"பாடலும் ஆடலும், கலை—சாமான்யமன்று"

"பொருத்த மற்ற பெயர்எனக்கு இருப்பதில் என்ன ஆச்சரியம்? அதனால் என்ன கவலை—நமது மன்னர் தோற்று இறந்தார்—பெயர்?"

"விஜய—ராகவன்"

"உ...ம்பெயருக்கேற்றபடிஎன்ன நடந்தது — பெயர், பெற்றோரின் ஆசையின் அளவுக்குறி, அவ்வளவு தான். உமது பெயர்......?"

"ஊஹூம். சொல்லமாட்டேன்—அந்தப் பெயர் எனக்குத் துளியும் பொருத்தமில்லை என்று கூறி விடுவாய்—உன் கேலிமொழியை என்னால் தாங்க முடியாது',

"தவவேடத்தைத்தாங்கி யிருந்த உமக்கு, கேலிப்பேச்சைத் தாங்கவா சிரமமாக இருக்கும். கூறுங்கள், என்ன உமது பெயர்?"

"கூற மாட்டேன்! சசி! நீயே, வேறு ஒரு பெயர் வைத்து விடு எனக்கு!"

"தொட்டிலில் படுத்துக் கொள்ளும் முதலில்—கூறுங்களென்றால்..........."

"என்பெயர், எனக்கேஇப்போது பிடிக்கவில்லை. நிச்சயமாகத்தான்—நீயே ஒரு பெயர் வைத்து விடு"

"என்னவென்று பெயர்வைப்பது? விசித்திரம் என்ற பெயர் பொருத்தமாக இருக்கும். சம்மதமா?"

"ஊஹூம்—வேறே பெயர்—கலாதாசன் என்று பெயரிடேன்"

"கலைக்கு, திடீர்த் தாசர்கள் கூடாது"

"உன் இஷ்டம், ஏதாவதுபெயர்"

"சின்னஸ்வாமி"?

"வேண்டாம்! அந்த நிலைதான் வேண்டாம் என்று விட்டு விட்டேனே!"

"சரி! வீட்டிலேயே இரும்-நான் அரண்மனை போய் வருகிறேன்—பிறகு, பெயரிடுகிறேன். ஆமாம்! தவசியாக இருந்தவர் தாசி வீட்டில் தங்குவது..."

"நான் தவசியுமல்ல-இது இனித் தாசி வீடுமல்ல"

"தைரியம் அமோகமாக இருக்கிறது"

"சசி! உன் நெஞ்சில் நான் இடம் பெற்றேனு, ஆனந்தம்—ஆனந்தம்... ப்ரியே!...சசி! நான் புதுவாழ்வு பெற்றேன்..."

"புதுவாழ்வு எனக்குத்தான் கண்ணாளா! புதுவாழ்வல்ல — உண்மையைச் சொல்ல வேண்டுமானல், நான் வாழ்வைப் பெற்றேன்—முன்பு அன்னையிடம் சொர்ணம் தந்தவருக்கு அடிமையாக இருந்தேன் — இப்போது அன்பைக் காணிக்கையாகப்பெற்று என்னையே உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன்"

"நீ தாசியுமல்ல—நான் தவசியுமாகேன் — நீ எனக்கு — நான் உனக்கு—நீ சகி—நான்.......நாம் இனி இல்லறம் நடத்துவோம், இன்பம் பெறுவோம்—கட்டுகளும் கற்பனைகளும் ஒழியட்டும் — கண்ணே!"

"அன்பே!"

*

இப்படி நான், கடமையை மறந்து, காதலில்—அதிலும் ஒரு தாசிப் பெண்ணின் காதலில்—ஈடுபட்டு, வேட்டையாடிக் கொண்டிருந்திருக்க மாட்டேன், என்று சீற்றத்துடன் கூறுவீர்கள். நீங்கள் செய்திருக்க மாட்டீர்கள் — நான் காட்டும் கற்பனைக்காளை அவ்வண்ணம் செய்தான் — அவன் செய்ததும், வெறும் காதல் விளையாட்டு மட்டுமல்ல. சசிலேகா மூலம், அவன் மனதிலே கொண்ட கடமையை நிறைவேற்றிக் கொள்ளவும் வாய்ப்பு கிடைத்தது. எப்படி என்கிறீர்களா? சரி, நாகப்பட்டினம் வரை, சென்று வருவோம், வாருங்கள்!

*

நாகப்பட்டினம், நேர்த்தியான துறைமுகம், அன்று. வணிகர் கோட்டமாக விளங்கிற்று. அந்த நகரிலே, செல்வம் குடி கொண்ட மாளிகை ஒன்றில்,

வேந்தன் விஜயராகவன் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் மாண்டனர்—ஒரு குழந்தை தவிர, என்று கூறப்பட்டிருந்ததல்லவா! அந்தக் குழந்தை, சிறுவனாகி, செங்கமலம் என்ற பெயருடன், அந்த மாளிகையிலே இருந்து வருகிறான்.

வணிகனின் மகன் என்றே நாகப்பட்டினத்தார் அனைவரும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சைத் தரணிக்கு மன்னனாகும் உரிமை கொண்டவன் இந்தச் செங்கமலம் என்பது ஓரிருவருக்குத்தான் தெரியும். சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர், இந்த உண்மையை அறிவிக்க. சிலர், இரகசியமாக, இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். செங்கமலத்தைத் தஞ்சைத் தரணிக்கு மன்னனாக்க வேண்டும் என்பது, நாட்டுப் பற்றும், நல்லெண்ணமும் கொண்ட சிலருடைய எண்ணம். யாரார் அவ்விதம் எண்ணம் கொண்டிருந்தனர்? இரகசியமல்லவா அது? வெளியே தெரியாது! அப்படிச் சிலர் உண்டு—விஷயத்தை விளக்கமாக்குவதற்காக, நான் காட்டியுள்ள கற்பனைக் காளை கலைக் கன்னி மூலம் இதை அறிந்து கொண்டான், என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன தோன்றும் அவனுக்கு! ஆஹா! இது சரியான வழி! தனியாகப் போரிட்டு நாம் அழிவதைவிட, தக்க சமயத்தை உண்டாக்கிக்கொண்டு, தஞ்சைத் தரணிக்கு உண்மையை உரைத்திடலாம்—தக்க சமயம் வருவதற்காக, நாகப்பட்டினத்தில் செங்கமலம் இருந்துவரும் விஷயத்தைத் தக்கவரிடம் கூறி, மெள்ள மெள்ள ஆதரவு திரட்ட வேண்டும் என்று தானே தோன்றும்! தோன்றினும், விஷயம் வெளியாகாவண்ணம், பக்குவமாக நடந்துகொண்டு, ஆதரவு திரட்டும் பணியில் ஈடுபடுவானல்லவா! சரி, நமது கற்பனைக் காளையும் கலை மங்கையும், இந்தக் காரியத்திலே ஈடுபடட்டும், வேறு சிலர், என்ன செய்துகொண்டிருந்தனர் என்பதைக் கவனிப்போம்—வாருங்கள், தஞ்சைக்கு, மீண்டும்,

*

அதோ, செல்கிறான், ஒரு வேதியன்.

கணக்கெழுதுபவன்—ஏழ்மை நிலைமைதான் — என்னமோ, ஏழடுக்கு மாளிகை மீது செல்கிறது—அத்துடனும் நிற்கவில்லை—மேலே மேலே எழுகிறது!

எழுதுகோல்தான் காதில் — எனினும் எண்ணமோ, செங்கோலைப் பற்றிய திட்டங்களிலே பாய்கிறது.

அரசாங்கக் கணக்கெழுத அமர்த்தப்பட்டவன்தான்—ஆனால் அவன் தஞ்சையின் தலை எழுத்தை மாற்றி எழுத வேண்டும்என்ற துணிவு கொண்டிருக்கிறான். வேதியன்—வஞ்சகன் — வேங்கண்ணா எனும் பெயருடையான்—என் கற்பனையில் உதித்தவனல்ல—உண்மை உருவம்—தஞ்சையின் உரிமைக்கு உலை வைத்த உலுத்தன்.

அளகிரி ஆள்கிறான்—பிராமணர்கள் வாட்டமடைகிறார்கள்—அவன் ஆரிய விரோதி அல்ல — எனினும் அவன் விஜயராகவன் அல்ல! விஜயராகவனாக இருக்க வேண்டுமானால், பணம் ஏராளமாக வேண்டுமே! அளகிரியிடம் அதிகமான செல்வம் குவியவில்லை — போரில் சிக்கிச் சீரழிந்த தஞ்சையை மீண்டும் வாழவைக்கும் அளவுக்குத்தான், செல்வம் திரட்ட முடிந்தது. விழாக்கள் இல்லை—விருந்துகள் மிகமட்டம்—தானதிகாரியமோ சரிவர நடைபெறவில்லை—அரண்மனையிலே கலை இல்லை—ஆலயத்திலே முன் போலக்'காணிக்கை' கொட்டவில்லை. எனவே பிராமணர்களின் முகத்திலே மலர்ச்சி இல்லை, மன

திலே புகைச்சல் மூண்டு வந்தது. வெங்கண்ணாவோ, பெரியதோர் திட்டம் போட்டவண்ணம் இருந்து வந்தான். அவனையொத்தவர்களிடம் பேச நேரிட்டபோது, தன் மனதிலுள்ள இரகசியத்தை வெளியிடாமல், 'சூசகமாக'ப் பேசலானான்.

"என்ன ஸ்வாமி! விசாரம்?"

"ஒன்றுமில்லை—விசாரத்துக்குக் காரணம் ஒன்று இரண்டா, கூற.

விஜய ராகவருடைய காலம் போய்விட்டதே என்ற ஒன்றே போதும், நமக்கெல்லாம் விசாரம் தர. மன்னன் என்றால் விஜயராகவனல்லவா மன்னன்! எவ்வளவுதான தருமங்கள்— எவ்வளவு பகவத்ப்ரீதி—எவ்வளவு பிராமண பக்தி — உம்! எல்லாம் பழங்கதையாகிவிட்டது—"

"ஸ்வாமி! அளகிரியின் சுபாவம் எப்படி?"

"அதையேதான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன் — அதே சிந்தனைதான். பாண்டிய நாடு, தமிழ் மரபில் விசேஷ அக்கரை இருக்கிறது—"

"வீரன்!"

"விவேகியுங்கூட! உம்! வேதியருடன் அளவளாவுவதிலே, நாயக்க மன்னர்கள்போல விசேஷ சிரத்தை காணோம்."

"கொஞ்சமும் இல்லை என்று கூறும் வெங்கண்ணா!"

"வெற்றி கிடைத்தது வீரர்களால் —சரி—கிடைத்த வெற்றிக்கு ஒரு சந்தோஷக் கொண்டாட்டம் நடத்தி, பிராமணருக்கு ஒரு தான தருமம் செய்தானா? விசேஷயாகாதிகள் உண்டா? கைங்கரியம் உண்டா?"

'செய்ய உத்தேசமிருக்கிறதா இல்லையா என்று நிச்சயமாகத் தெரியவில்லை."

"இதென்ன அப்படிப்பேசுகிறீர்.

செய்ய மனமிருந்தால், தடைஎன்ன செய்வதற்கு?"

"பணம் இல்லை! கிடைத்தால்செய்வானா? என்பதுபற்றியே சிந்திக்கிறேன."

"எங்கிருந்து இனிப் புதிதாகக் கிடைக்கப் போறது பணம்?"

"பணம் கிடைக்கும்! வழி இருக்கிறது! எனக்குத் தெரியும்! ஆனால் அவனுக்குத் தெரிவிப்பது நல்லதா, ……… தெரிவிக்கலாமா …….தெரிவித்தால், அவன்,……சத்காரியங்களுக்குச் செலவிடுவானா? அதுதான் தெரியவேண்டும்."

அளகிரியோ, நாட்டைத் திருத்தத் திட்டங்கள் தீட்டுவான், பணம் போதுமான அளவு இல்லை என்ற காரணத்தால், கைவிட்டு விடுவான், கவலைப்படுவான். வெங்கண்ணா மனதிலே உருவாகிக் கொண்டு வந்த திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கினான். மன்னன் அளகிரியிடம் சென்றான், மிக முக்யமான விஷயம் பேச.

"அரசே! பொக்கிஷ நிலை சரியாக இல்லை என்று தாங்கள் கொலு மண்டபத்திலே கவலையுடன் பேசினது கேட்டேன்."

"வெங்கண்ணா! நானோ பாண்டிய நாட்டில் இருக்க வேண்டியவன் — போர் மூலம் இப் பகுதியைப் பெற்றேன்—என் ஆட்சி, முன்புஇருந்த ஆட்சியை விட பல மடங்கு அதிக வசதியுள்ளதாக இருந்தாலுங்கூட, அன்னிய ராட்சிதானே என்று மக்கள் எண்ணுவர். நானோ, முன்பு இருந்த ஆட்சியின் சோபிதத்திலே பத்திலோர்பாகமும் செய்து தரமுடியாத நிலையில் இருக்கிறேன் — போதுமான பணம் இல்லை."

"பகவான் கடாட்சிப்பார் வேந்தே! மக்களிடம் அக்கரை கொண்டு, நல்லாட்சி நடத்த விரும்பும் தங்களுக்கு அஷ்ட ஐஸ்வரியமும் தர, ஆண்டவன் தயங்க மாட்டார்."

"வேதியரே! ஆர்வமூட்டும் உமது பேச்சு கேட்டு அகமகிழ்கிறேன். ஆனால், பகவத்கடாட்சம் கிடைப்பது எப்போது?—மக்கள் மனம் மகிழ நான் நல்லாட்சி நடத்துவது எப்போது? உடனடியாகப் பணமன்றோ தேவை."

"சோழநாட்டுச்சிறப்பு, பாண்டிய பரிபாலனத்தால் பலமடங்கு சிறப்புறும்"—

"கவிதை அது—நிலைமை வேறாக இருக்கிறதே"

"கவிதை அல்ல காவலரே! நம்பிக்கை! ஏன்! வரம் என்று கூடக் கூறுவேன். மன்னவா! தங்கள் மனோபீஷ்டம் நிறைவேறும்படி செய்யும்சக்தி எனக்கு இருக்கிறது. தங்கள் காலடியிலே, தங்க மோகராக்களையும், நவரத்னக் குவியலையும், கொட்டுகிறேன் பாரும். இந்தப் பஞ்சைப் பிராமணன் ஏதோ ஏய்க்கிறான் என்று எண்ணாதீர். நான், உமக்கு பெருநிதி கிடைக்கும் மார்க்கம் உரைக்கவே வந்தேன்."

"பெருநிதியா? எங்கிருக்கிறது?"

"பெரும் புதையல்! தங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது"

"புதையலா? எங்கே? மறையவரே! மறைந்துள்ள மாநிதியை நான் பெறுவது எங்ஙனம்?"

"என்னப்பன், எம்பெருமான், அரங்கன் அருளால் பெரும் புதையல் உமக்குக் கிடைக்கும். வாரும்! அண்ணலைச் சென்று வணங்கி வரங்கேட்போம்!"

"திரு அரங்கத்துக்கா?"

"இல்லை. வேந்தன் விஜயராகவனுக்குத் திருவரங்கத்து அண்ணலிடம் அளவு கடந்த பக்தியல்லவா? அதனால், அண்ணல் அரங்கத்தில் சயனக் கோலத்தில் இருப்பது போன்றே, அரண்மனையில், தோட்டக்கோயில் அமைத்து அரங்கனைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்."

"அங்கு சென்று......?"

"சென்று, பெருஞ் செல்வம் பெறுவோம் வாரீர்—ஆனால் நாம் இருவர் மட்டுமே போகவேண்டும்."

*

[இருவரும் தோட்டக் கோயில் சென்றனர் — அரங்கனைக்கண்டனர். வெங்கண்ணு அரங்கனை நோக்கி]

"அரங்கண்ணலே! அரசன் அளகிரி வந்திருக்கிறார், உம்மிடம் வரம் கேட்கிறார். அரசு நிலைக்க, செழிக்க, சிறக்க, பணம் வேண்டும். எல்லாச் செல்வத்திலும் மேலான செல்வமே! எமது அரசருக்குப்பெருநிதி அருள வேண்டுகிறேன். மன்னவா! அண்ணலின் அருளைப்பார், இப்போது" என்று கூறிவிட்டு அருகே சென்று அரங்கனைத் தூக்க, மூடி போல் எழும்புகிறது. உள்ளே பேழை. மன்னன் ஆச்சரியத்துடன் சென்று பார்க்க, பெரும் புதையல் இருக்கக்கண்டு மகிழ்கிறான்.

வெங்கண்ணுவைக் கட்டித் தழுவிக் கொள்கிறான். நவரத்னக் குவியலைப் பிடிபிடியாக எடுத்துப் பூரிக்கிறான். தங்கக் கட்டிகளைத் தூக்கிப் பார்க்கிறான்.

விதவிதமான ஆபரணங்களைக் காண்கிறான் அற்புதம்! அற்புதம்! அந்தணரே! அரங்கன் சயனித்திருந்தது, அந்த அஷ்ட ஐஸ்வரியத்தின் மீது!! தந்திரமான ஏற்பாடு! மறையவரே! தாங்கள் எப்படி இதனை அறிந்தீர்?

"அரங்கன் அடியேனுடைய கனவில் தோன்றி இதனைக் கூறினார்."

"மக்களுக்குக் கூறலாம் மறையவரே! எனக்கு உண்மையைக்கூறும், எப்படித் தெரிந்தது இந்தச் சூட்சமம்?"

"இந்தச் சூட்சமத்தை, என் அண்ணு, முன்பு ஓர் சிற்பி கூறக் கேட்டு என்னிடம் உரைத்தார்"

"நன்றி, மாதவரே! என் மனமார்ந்த நன்றி. இனித் தஞ்சைத் தரணியில் சுகம் கொஞ்சிடச் செய்கிறேன். இடிந்த கோட்டைகளைச் செப்பனிடுவேன் — தூர்ந்த அகழ்களைத் தோண்டிடச் செய்வேன்—கலைக்கும் இடமுண்டு—மக்கள் நிலை உயரச் செய்வேன் — மனதிலே உள்ள பல திட்டங்களையும் நிறைவேற்றுவேன். மாநிதி கிடைத்தது—மகிழ்ந்தேன்—மறையவரே! உமக்கு பொன் வேண்டுமளவு தருகிறேன்."

"தங்கள் தயை போதும் வேந்தே!"

"இல்லை, குடும்பத்துக்கு வேண்டுமானால், கூச்சம் வேண்டாம், கேளும்."

"வேண்டாம் வேந்தே! எனக்கேன் செல்வம்? பெருநிதி தஞ்சை மன்னருக்கு உரியது"

"என் நன்றிக்கு அறிகுறியாகத் தாங்கள் இந்த முத்தாரத்தைத் தடை கூறுமல் அணிந்து கொள்ளத்தான் வேண்டும். மறையவரே! இந்தப் பச்சைகள், தங்கள் செவிகளில், குண்டலமாக இருக்க அருள் புரிந்தாக வேண்டும்"

"வேந்தே! தங்கள் கொடைத்திறனும் அன்பும் கண்டு நான் பிரம்மானந்தமடைகிறேன்"



"என் களிப்பு அளவுகடந்தது வேதியரே! அண்ணலை மீண்டும் சயனிக்கச் செய்வோம்! பெருநிதி காத்து, எனக்குத் தந்தருளிய பெம்மானே! உன் பொன்னடி போற்றுகிறேன்"

கணக்கெழுதி வந்த வெங்கண்ணுவின் நிலை, ஒரே அடியாகத் திடீரென்று உயர்ந்தது. அரசன் அளகிரி, வெங்கண்ணுவுக்குப் புதியதோர் அந்தஸ்தைத் தந்தான். இதன் காரணம் புரியாமல், பலர் பலவாறு பேசிக்கொண்டனர்.

வெங்கண்ணுவைப் பார்த்துச் சிலர் பொறாமைப்பட்டனர்.

பிராமணோத்தமர்கள், வெங்கண்ணுவின் ஜாதக பலன் அப்படிப் பட்டது என்று பேசினர்.

வெங்கண்ணு, விவேகி, எனவே தான் வேந்தன் அவனைத் தன் ஆஸ்தானத்திலே ஆலோசகராக இருக்கச் செய்திருக்கிறார் என்று பேசினர், சிலர்.

தஞ்சை மக்களின் கவனத்தைத் தன் பக்கம் இழுக்கும் அளவுக்கு உயர்நிலை பெற்றான் வெங்கண்ணு—எனினும், அவன் மனம் திருப்தி பெறவில்லை — திட்டம் பூரணமாகவில்லை என்று விசாரப்பட்டான்.

அளகிரி, தஞ்சையை ஆண்டுவந்தான்—எனினும் மதுரைச் சொக்கநாதனே, மேலரசன். எனவே அளகிரி, எதையும் அண்ணனைக் கேட்டே செய்துவருவான். அது தானே முறை! ஆனால் வெங்கண்ணுவுக்கு இது பிடிக்கவில்லை.

அளகிரியை அண்ணனிடமிருந்து பிரித்துவிடவேண்டும்'— தனியனானால்தான், அளகிரியைத் தன் இஷ்டப்படி ஆட்டிவைக்க முடியும் என்று எண்ணினான்—சூது மதி கொழுந்துவிட்டெரிந்தது. கொற்றவனிடம் சென்றான்.

"பேராற்றல் படைத்த மன்னரே! பெருநிதியும் கிடைத்துவிட்டது. ஒரே ஒரு குறைதான்..."

"என்ன குறை?"

"பேராற்றலுள்ள தாங்கள், சிற்றரசாக, பாண்டிய மண்டலத்துக்கு இறை செலுத்தும் அரசாக இருப்பது சரியோ! தனி அரசு நடாத்தத் தகுதியும், திறனும், தீரமும் படைத்திருந்தும், சிற்றரசாக இருப்பது..."

"பாண்டிய நாட்டில் உள்ளவன் என் அண்ணன்தானே! அண்ணனிடம்தானே இறை செலுத்துகிறேன்"

"சகோதர நேசம் சிலாக்கியமானது மன்னவா! ஆனால், சிற்றரசு பேரரசு என்ற தொடர்பு இருக்க வேண்டுமா, அதற்காக? ஏன் இருக்கவேண்டும். தம்பி தனிஅரசு ஆள்வது தகாது என்று பாண்டிய மன்னர் எண்ணுவாரோ! தனி அரசுக்கு என்ன தடை இருக்கிறது"

'தடை ஒன்றுமில்லை. அண்ணன் ஏதாவது தவறாக எண்ணிக்கொண்டால்......"

"அண்ணனின் மனம் என்ன எண்ணும் என்பதைமட்டுந்தானா கவனிக்கவேண்டும்! எதிலே குறைந்தவர் தாங்கள் — வீர தீரத்திலா — அறிவு ஆற்றலிலா—எதிலே குறைந்தவர் மன்னவா!"

"நான் இதுநாள்வரை சிந்திக்கவே இல்லை வெங்கண்ணா! சிற்றரசு என்ற கவனம்கூட இல்லை"

"ஓலை வந்ததே மன்னவா! இறைப்பணம் அனுப்ப ஏன் தாமதம் என்று! தம்பிதானே, சௌகரியப்பட்டபோது அனுப்பட்டும் என்று இருந்துவிட்டார், மதுரை மன்னர். அளகிரிதான் அவருக்குத் தம்பி—தஞ்சை அரசர், கப்பம் கட்டவேண்டிய நிலையிலுள்ள சிற்றரசர்—இதுதான் மதுரை மன்னரின் நினைப்பு"

"அப்படித்தான் இருக்கிறது"

"ஏன் அப்படி இருக்கவேண்டும் என்றுதான் கேட்கிறேன். ஏன் தனி அரசாகக்கூடாது, தஞ்சை? தனி அரசாக இருந்ததுதானே! தஞ்சை மக்கள் மனதிலே இந்தப் பெருங்குறை இருந்துவருகிறது— தஞ்சை, பாண்டிய மண்டலத்துக்கு உட்பட்ட சிற்றரசாகத்தான் இருக்கவேண்டுமா என்று கவலைப் படுகிறார்கள். மேலும், அண்ணன் இன்று ஆள்கிறார் பாண்டிய நாட்டில். நேசம், பாசம் இருக்கிறது. நாளை அண்ணன் மகன் ஆள்வானே —அந்தச் சிறுவனுக்கும் நீர் கப்பம் கட்டிக்கொண்டுதானே சிற்றரசனாக இருக்கவேண்டும். நியாயம் ஆகுமா அது"

"இல்லைதான். ஆனால்..."

"ஆனால் என்ன! மன்னரே தயக்கமின்றித் தஞ்சை தனிஅரசு என்று பிரகடனம் செய்துவிடும். மாசு துடைக்கப்பட்ட மணியாகும் உமது கீர்த்தி. தமிழகத்திலே நீர் ஆட்சி செய்வது, சோழ வளநாடு! சோழநாட்டு வேந்தரான பிறகும், சிற்றரசாக இருப்பது, உமது ஆற்றலுக்கும் அழகல்ல, இந்நாட்டுக் கீர்த்திக்கும் பழிச்சொல்லாகும். வீண் கலக்கமே வேண்டாம்! தஞ்சைத்

தனிஅரசு என்று தெரிவித்துவிடுங்கள்! சுதந்திர பேரிகைச் சத்தம் எழட்டும். முரசு கொட்டுக, தஞ்சைத் தனி அரசு என்று"

"ஆம்! வெங்கண்ணா! தஞ்சை, இனி தனி அரசுதான். பிரகடனம் தயாரிக்கிறேன்"

அளகிரியின் அடாத செயல் மதுரை சொக்கநாதனுக்குக் கோபமூட்டிற்று. வெங்கண்ணாவோ, அளகிரிமீது சொக்கநாதன் படை எடுத்துவந்தாலும், சமாளிக்கமுடியும் என்று தைரியம் கூறிவந்தான். தம்பிமீது மூண்ட கோபம், வெறுப்பாக மாறிவிட்டது—எனவே, சொக்கநாதன், "அற்பன்! அவசர புத்திக்காரன்! என் மனதைப் புண்ணாக்கிவிட்டான். இனி அவனுக்கு யார் துணை! எக்கேடோ கெட்டுத் தொலையட்டும். யார் வார்த்தையையோ கேட்டுக்கொண்டு ஆடுகிறான்" என்று எண்ணி, தொடர்புகளை அறுத்துக் கொண்டான். பெரிய ஆபத்து நீங்கிவிட்டது என்று பூரித்தான், அளகிரி. "மதுரை மன்னன் மருண்டே போய்விட்டான், பார்த்தீர்களா மன்னவா!" என்று உபசாரம் பேசினான், வெங்கண்ணா. கப்பலில் இருந்த நங்கூரம் எடுக்கப்பட்டுவிட்டது — இனி, கடல் கொந்தளித்தால், கலம் ஆபத்திலே சிக்கிச் சீரழியும். இந்நிலையில், அளகிரி, தான் சொல்லுகிறபடி எல்லாம் கேட்டுத் தீரத்தானே வேண்டும் என்று எண்ணினான் வெங்கண்ணா. அந்த வஞ்சகனின் மனக்கண்முன், தஞ்சை மன்னன் அளகிரி தனக்குத் தாசானுதாசனாக நின்று கொண்டு குற்றேவல் புரியும் காட்சி தெரிந்தது—புன்னகை, பெருஞ் சிரிப்பாக மாறிற்று. குரலிலே, ஒருவகை அதிகாரத் தொனி, நடவடிக்கைகளிலே, ஆணவம் படியலாயிற்று. மன்னனுக்கு யோசனைகள் கூறலானான்—விரைவிலே, கட்டளைகள் பிறப்பிக்கலானான். தன் இனத்தாருக்கு, விஜயராகவன் காலத்திலே கிடைத்துவந்தது போலவே காணிக்கைகள், தானங்கள் கிடைத்தாகவேண்டும் என்று கூறலானான். ஆரிய தர்மப் பாதுகாப்புத்தான் அரசனின் முக்கியமான கடமை என்று வலியுறுத்தலானான். செல்வத்தைச் சனாதனக் காரியங்களுக்குச் செலவிடுவதே சரியானது, என்று சட்டம் பேசலானான். தயக்கமடைந்த மன்னனைக் கண்டிக்கலானான்;

அளகிரி ஆத்திரத்தைச் சின்னாட்கள் அடக்கிக்கொண்டான்; வெங்கண்ணாவின் ஆணவமோ வளரலாயிற்று.

அளகிரி, வெங்கண்ணாவின் போக்கைக் கண்டிக்கலானான்— ஆட்சி உரிமை தனக்கு என்பதை நினைவூட்டினான்—ஆற்றல் உண்டு என்பதை வலியுறுத்தினான்.

வெங்கண்ணாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. இனி, அளகிரி, தன் இஷ்டப்படி ஆடமாட்டான். பொன் கொடுப்பான, பட்டாடை நிறையக் கொடுப்பான், விருந்தளிப்பான், உபசரிப்பான், ஆனால் ஆட்சி முறையை மாற்ற இசையான்— ஆரியதாசனாக மாட்டான் என்பது விளங்கிவிட்டது. கோபம் கொப்பளித்தது. இதற்கா, நான் இவனுக்குப் புதையலை எடுத்துத் தந்தேன். என் வார்த்தையை வேதமாகக் கொள்வான், என் சுட்டுவிரல் காட்டும் வழி செல்வான், என்றல்லவா, எண்ணிக்கொண்டிருந்தேன். எதிர்த்துப் பேசுகிறான் — துச்சமாகக் கருதுகிறான்—இனி இவனால் ஆபத்தேகூட ஏற்படக்கூடும், எனவே இவனை ஒழித்தாக வேண்

டும் என்று தீர்மானித்தான். நச்சு நினைப்பு ஓங்கி வளர்ந்தது, சதித் திட்டம் உருவாயிற்று. அளகிரி யும் வெங்கண்ணுவுக்குக் கட்டுப்படு வதில்லை என்ற திட்டமான முடி வுக்கு வந்துவிட்டான். அப்போது:

"மன்னரே! கடைசி முறையாக உம்மைக் காண வந்திருக்கிறேன்"

"கடைசி முறையா? காலதேவ னின் அழைப்பை பெற்றுவிட்டீரா என்ன?"

"மன்னர் கேலி பேசுகிறார்! கால தேவனின் அழைப்பல்ல—புரட்சி பேசுகிறது என்று அறிவிக் கிறேன்"

'ஏ! வெங்கண்ணு! உன் உருட் டல் மிரட்டல் வேலைகளை என்னி டம் காட்டாதே. ஏது அளவுக்கு மீறி ஆர்ப்பரிக்கிறாய். இந்தத் தேசத்தின் மன்னன் முன்பு பேசு கிறோம் என்ற எண்ணம் துளியும் இன்றி, ஆர்ப்பரிக்கிறாய் — விளைவு தெரியாமல்!"

"முன்பு நான், ஆட்சியின் இலட் சணம் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று மட்டுமே கூறி னேன்"

"கூறினாயே! கொட்டிக் கொடு திரவியத்தை எல்லாம், ஆரியக் கும் பலுக்கு என்று: விஜயராகவன் கொட்டிக் கொடுத்து என்ன பலன் கண்டான்? என்று கேட்டேன்"

"இப்போது நான் வந்திருப்பது, ஆரியரை ஆதரிக்கும்படி உம்மைக் கெஞ்சுவதற்காக அல்ல"

"வேறு என்ன காரியமோ! வேதத்தின் உட்பொருளை விளக் கவோ?"

"அரச பீடத்தில் அமர்ந்திருப் போனே!"

(கன்னத்தில் அறைந்து) "ஆண வக்காரா! யாரிடம் மரியாதைக் குறைவாகப் பேசுகிறாய் ...."

(கை தட்டுகிறான் காவற்காரர்கள் வருகிறார்கள்) இந்த வாய்க் கொழிப் புப் பிடித்தவனைச் சிறையில் தள் ளுங்கள்" என்று சீறுகிறான் அள கிரி—வெங்கண்ணு தலை தப்புமா என்று திகில் கொள்ளவில்லை-திமி ருடனேயே நிற்கிறான். ஏன்? உயி ரைத் துரும்பென மதிக்கும் உள் ளத்தான்! இல்லை! இல்லை! அள கிரியை ஒழிக்கச்சதித்திட்டம்தீட்டி விட்டோம், எப்படியும் சிறை

வேற்றி விடுவோம் என்ற தைரியம். மேலும் பிராமணனை தன்னைக் கொன்றால் பிரம்மஹத்தி பிடித்துக் கொள்ளும் என்ற பயம் அளகிரிக்கு இருக்கும், எனவே கொல்லமாட் டான் என்ற தைரியம். மன்ன னுடைய கோபம் சிறிது, தணிந் தது. மண்டைக் கர்வம் பிடித்தாட்டு கிறது இந்த மறையவனுக்கு! எனி னும் இவன் என் மண்டலத்துக்குப் பயனளிக்கும் பெரு நிதி எனக்குக் கிடைக்கச் செய்தவன்—எனவே சிறையில் போட்டு வட்ட வேண் டாம்—இவன் இனி என் அரண் மனைக்குள் நுழையக்கூடாது— வெளியே தூரத்துங்கள் — என்று கூறினான். வெங்கண்ணு, வெளி ஏறினான். அளகிரி! "என்னை யார் என்று அறியாமல் உன் அதிகா ரத்தைக் காட்டத் துணிந்தாய். நீ அரசன்—அவ்வளவுதான்! நான் ஆரியன் — அதன் முழுப்பொருளை நீ அறியாய்.

அரசர்களை உண்டாக்க முடியும், அழகிரி! ஆரியன், பிறக்க மட்டுமே முடியும். வெங்கண்ணு ஓர் வேதி யன் — போர் வீரனு! என்று எண்ணி அல்லவா, என் பேச்சைக் கேட்க மறுத்தாய் — மூடனே! நீ அறியாய் வெங்கண்ணு எந்தப் பரம் பரையைச் சேர்ந்தவன் என்பதை.

நீ அதனை அறியும்படியாகச் செய்கிறேன்!".

"அளகிரி! அந்தணர்களை ஆதரி!"

"ஏன் அந்தணரை மட்டும் குறிப் பிடுகிறீர்? மற்றவர் மக்களல்லவோ"

எவ்வளவு மமதையோடு பேசி னாய்—என்னை மதிக்க மறுத்தாய்— நீ மண்டலாதிபதி — இருந்தால் என்ன? இனி மண்டலத்துக்கு

வேறு அதிபதியைத் தேடுகிறேன், பார். வெங்கண்ணு வீரனல்ல ...... வேதியன்......தசரதனல்ல—சிஷ் டன் — அரசனல்ல......ஆரியன்— பார் அவன் ஆற்றலை.

உனக்கு நான், புதைந்து கிடந்த பொக்கிஷத்தைத் தேடி எடுத்துக் கொடுத்தேன்—எதற்கு?

என் குலத்தவருக்குச் செலவிட மனம் இல்லை உனக்கு. ஆரியசேவை செய்ய மறுக்கும் இந்த அளகிரியை அழித்தொழித்தாகவேண்டும்."

என்று எண்ணமிட்டபடி அரண் மனையை விட்டுக் கிளம்பினான். மூளை வேகமாக வேலைசெய்யத் தொடங்கிற்று—துஷ்டமிருகங் களுக்குக் கண்கள் இரவிலேதானே ஒளி பெறுமாம்—அதுபோல வஞ் சகத் திட்டம் வகுக்கும்போதுதான் வெங்கண்ணுவின் புத்தி மிகக் கூர்மையாக வேலை செய்யலாயிற்று. இனி நாம் நமது கற்பனைக் காளையும் கலைக்கன்னியும், என்ன செய்கிறார் கள் என்று பார்ப்போம்.

*

செங்கமலத்தை அரசனாக்க வேண்டும், என்றல்லவா அவர்கள் ஆதரவு திரட்டிவருகிறார்கள். அவர் கள் திட்டம் ஏதும் கொண்டில்லை. தஞ்சைத் தரணியை ஆளும் உரிமை கொண்ட செங்கமலம், எங்கோ ஓரிடத்தில் இருக்கிறான், அவனை அரசனாக்குவது, நாட்டுப் பற்று கொண்டோருடைய கடமை என் பதை, எடுத்துக்கூறி, மெள்ள மெள்ள ஆதரவு திரட்டிக்கொண்டி ருந்தனர். அவர்கள், அளகிரியிடம் விரோதம் கொண்ட வெங்கண்ணு வின் உதவி கிடைக்கும் என்று ஆவல் கொள்வது இயற்கைதானே! வஞ்சக வெங்கண்ணுவுக்கும் உரிமைக்காக உயிர் கொடுக்கவும் துணிவுடன் பணியாற்றி வந்தவர் களுக்கும் தொடர்பு ஏற்படாமலி ருக்க முடியுமா? செங்கமலம் எனும் அரசகுமாரன், நாகப்பட்டி னம் செட்டியார் மாளிகையில் இருக்கும் 'செய்தி' கிடைத்ததும் கூர்மையான கருவி கிடைத்ததாக எண்ணிக் களித்தான் வெங்கண்ணு. அளகிரியை அழிக்க அபூர்வமான கருவி கிடைத்துவிட்டது, என்று எக்காளமிட்டான். திட்டம் மேலும் உருவெடுத்தது. கூழ்வாணு பாகிடி

மாவது! ஏமாளியா, கூற!! திட்டத்தின்படி காரியத்தைச் செய்யக் கிளம்பினன். எங்கு? நாகைக்கா! ப்பூ! அங்கு, இலட்சிய வாதிகள் செல்லுவர், இவனே காரியவாதி இவன் சென்ற இடம், பீஜபூர்.

*

பீஜபூரில், சுல்தான் ஆண்டு வந்தான். அங்கு மராட்டிய மாவீரன் சிவாஜியுடைய தம்பி, வெங்காஜீ பெரும் பதவியில் வீற்றிருந்தான. படைபலம் கொண்ட வெங்காஜியிடம், வஞ்சகத்தை ஆயுதமாகக் கொண்ட வெங்கண்ணு சென்ருன்!

*

வெங்காஜி, நிலைமையை அறிந்து கொண்டான். வீரவெற்றிகள் பெறலாம் என்ற எண்ணம், தூண்டிற்று. மாவீரன் சிவாஜி போலவேதான் அவன் இளவலும் ரணகள சூரன் எனப் 'பாரத்வர்ஷம்' புகழும் என்று எண்ணினன். அளகிரிக்குத் துணைபுரிய மதுரை சொக்கநாதன் வரமாட்டான், என்ற செய்தி,வெங்காஜிக்கு மேலும் தைரியமூட்டிற்று. கிளம்பின படைகள்! வெங்கண்ணு, ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, தஞ்சை சென்ருன்.

*

மாற்ருனுக்கு இடங்கொடேல்—என்ற முதுமொழிக்கும் மனு வழி பிறந்தவரின் திட்டத்துக்கும், முரணுக இருக்கிறதே — இதனை எங்ஙனம் பிறர் ஒப்புவர் என்று கேட்கத் தோன்றும் எவருக்கும். இலட்சியத்தை முன்வைத்து, அளகிரி ஆண்டுவந்த தஞ்சையை, உரிமை பெற்ற செங்கமலத்துக்குப் பெற்றுத் தருவதைக் கடமை, என்று கருதினர் அவர்கள். வெங்கண்ணு வேற்று நாட்டவனைக் கூட்டிக் கொண்டுவந்து நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிந்து விட்டதை அவர்கள் என்ன கண்டார்கள்? அவர்களுடைய நோக்கமும் நேர்த்தியானது முறையும் சிலாக்கியமானதாக இருக்கவேண்டும் என்று விரும்பினர். சுயநல நோக்கம் கொண்ட வெங்கண்ணு சூழ்ச்சித் திட்டத்தைத்தானே முறையாகக் கொள்வான். யார் தடுத்தாலும் கேட்கவா செய்வான். தடை செய்பவர்களைத் தகர்த்திடத்துணிவான், செங்கமலத்துக்காக அவர்கள்கிளம்பினர்! வெங்கண்ணுவோ, அளகிரியை அழிக்கக் கிளம்பினன்—மற்றவர்கள் அவனுக்கு வெறும் கருவிகள்.

"வெங்கண்ணு! என்ன? போன காரியம் முடிந்ததா? நமது கனவு நனவாகுமா?"

"வெற்றியை வெங்கண்ணு அழைக்கும் போது,. யாரால் அதனைத் தடுக்க முடியும். அளகிரி, அரசு சாஸ்வதம் என்று எண்ணிக் கொண்டு என்னை உதாசீனம் செய்தான்—அலட்சியப் படுத்தினன்—அவமானப் படுத்தினன்......"

"ஆரிய! சுயசரிதத்தைப் பிறகு கூறுமே! என்ன ஏற்பாடு செய்தீர், செங்கமலத்தை மன்னராக்குவதற்கு? அதைச் சொல்லும் முதலில்."

"அளகிரியைத் தூரத்திக் கொண்டு அழிவு வரப்போகிறது—அரசு அவனிடமிருந்து பறிக்கப் பட்டு—நமது செங்கமலத்திடம் தரப்படும்—நீ தான் ஆஸ்தான கலாவாணி—உனக்கு உயரிய அந்தஸ்து—நமது நற்காலம் ஆரம்பமாகிறது ஆயாசமடையாதீர்—நாம் பட்ட கஷ்டம் வீண்போகவில்லை. சசிலேகா! என்னைச் சாமான்யமென்று எண்ணினன் அந்தத் துஷ்டன். வேதிய வெங்கண்ணு வேழப்படை கொண்டுவருவானு, வேற்படைக்காரனு, வேதமோதிதானே என்று எண்ணி இறுமாப்புடன் என்னை எதிர்த்துப் பேசினன். பார்! லேகா! இன்னும் சில நாட்களில்—அடுத்த வெள்ளியன்று—அளகிரியை அழிக்க வரும் பிரம்மாண்டமான படைகிளப்பப் போகும் தூளி, அளகிரிவாழும் அரண்மனையைச் சூழ்ந்துகொள்ளப் போகிறது. பாண்டிய மன்னனின் தம்பி! போரிலே புலி! வருகிருர்கள் இந்தப் புலியைக் கொல்ல, வேட்டைக் காரர்கள்."

"படையா? எவ்விடமிருந்து? யார் அழைத்து வருகிருர்கள்? தஞ்சைப் பதியின் கோடிபாகங்களிலே இருந்து படை திரட்டினீரா?"

"படையைத் திரட்டவேண்டுமா? திரட்டப்பட்டுத் தயாராக இருப்பதும், திக்கெட்டும் வெற்றிக் கொடி நாட்டி வருவதுமான, ஒரு வல்லரசின் படையை அல்லவா, அளகிரியைத் தொலைக்க, வரச் செய்திருக்கிறேன். நாட்டிலே அளகிரி ஒருவன் தானு மன்னன்! இவன் ஒருவனிடம் மட்டுமா படை இருக்கிறது?"

"வெங்கண்ணு! விளக்கமாகக் கூறுங்கள்—எந்தப் படை? நான், விடுதலைப் படையை தஞ்சைத் தரணியிலுள்ள சுத்தவீரர்களைக் கொண்டே அமைக்க வேண்டுமென்றேனே. நீர் கூறும் படை எவ்விடத்தது?"

"விடுதலைப் படைதான் இதுவும்! ஆணவ அளகிரியிடமிருந்து தஞ்சையை விடுவிக்கப்போகும் படை—வீரப் படை—வெற்றிப் படை — இந்த வேதியனின் சுட்டுவிரல் காட்டும் திக்கைச் சுடுகாடு ஆக்கும் சக்திவாய்ந்த சண்டமாருதப் படை — டில்லி பாதுஷாவையும் எதிர்க்கக்கூடிய படை—சசிலேகா!—பராக்கிரம மிகுந்த பீஜபூர் சுல்தானின் படை வரப்போகிறது, நமக்கு உதவி புரிய."

"என்ன? என்ன! வெங்கண்ணு! பீஜபூர் படையா! சுல்தானின் சேனையா?"

"ஆமாம்! வெங்கண்ணுவைச் சாமான்ய மென்ருனே அளகிரி."

"ஆஹா! வெங்கண்ணு! என்ன காரியம் செய்யத் துணிந்தாய். நாசத்தைக் கூட்டிக் கொண்டு வருகிருயே. நமது நாட்டிலே நியாயம் பெறுவதற்கு, நாம் போராடலாம். புரட்சி நடத்தலாம், சதி கூடச் செய்யலாம், நாட்டுப் பற்றுக் கொண்ட வீரர்களை எல்லாம் திரட்டலாம்—நியாயம். ஆனல் இதற்காக அன்னியநாட்டானையா அழைத்து வருகிறீர்! தேசத்தை நாசமாக்கும் காரியமாகுமே அது. தஞ்சை மீது பீஜபூர் படைகள் பாய்ந்தால், பிறகு சர்வநாசம் ஏற்படுமே. அளகிரி மட்டுமா, அழகுதஞ்சையே அழிந்து படுமே. அன்னிய ஆட்சி ஏற்பட்டு விடக் கூடுமே."

"வீண்பீதி! பீஜபூர்படை நமக்குச் செய்யும் உதவிக்காகக் கொஞ்சம் பணம்தர ஒப்புக்கொண்டேன். அவ்வளவுதான். ஆட்சி நமது இஷ்டப்படி செங்கமலத்துக்குத்தான்.

அதிலே சந்தேகம் வேண்டாம். நான் ஏமாளியல்ல.''

"நீ ஒரு எத்தன்!''

"நாவை அடக்கிப் பேசடா, நல்லறிவற்ற நாயே!''

"ஆஹா! அடே வஞ்சகா! தேசத்துரோகி! என்னையா கேவலப்படுத்தத் துணிந்தாய்.''

[வீரன் வாளை வீசி மார்புக்குக் குறிபார்க்கிறான். சசி இடையேநின்றுகொண்டு]

"வாளை என்மீது வீசு முதலில். வெட்கமில்லையா உங்கட்கு. பொது விரோதியை ஒழிக்க வேண்டிய சமயம் இது. இந்தச் சமயத்திலே போர் முறை பற்றிய விவாதத்தில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதா? வெகு அழகு.''

"சசி! உன் மதி கண்டு மகிழ்கிறேன். இவன் கருத்தறியாக்காளை. கண்டபடி பேசுகிறான். கடுங்கோபம் எழச்செய்கிறான். அளகிரியின் படையை, இவனுடையவாள் வென்றுவிடுமா! துள்ளுகிறான் வீரன்! அளகிரியின் படையை எதிர்க்க, அதை விடப் பெரியதும் வலிவுள்ளதுமான படையைக் கூட்டி வருவதுதானே யுக்தம்.''

"அதுதான் இல்லை என்கிறேன். வருகிறபடை, அளகிரியையும் விரட்டிவிட்டு, தஞ்சையையும் ஆக்கிரமித்துக் கொண்டால்........?''

"வீண் சந்தேகம்......!''

"சந்தேகம் வீண், விபரீதம் என்று எது வேண்டுமானாலும் சொல்லு. ஆனால் அப்படி ஒரு நிலை ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது?''

"நேரிடாது.''

"என்ன உறுதியின்மீது அதனைக் கூறுகிறீர்!''

"என் அறிவு எனக்குக் கூறுகிறது.''

"அறிவு! அன்னியனிடம் அடைக்கலம் புகுந்து, நம்நாட்டு அரச விவகாரத்தைத் தீர்த்துக் கொள்வது நியாயமல்ல. கேடு நிச்சயம் நாட்டுக்குத்தான்.''

"பீஜபூர் படையை வரவழைப்பது தவறு என்று பேசுகிறாயே; நியாயம், சரி, அளகிரியின் படையை எதிர்த்து நாம் மூவர் என்ன செய்ய முடியும்.''

"நாம் மூவர், கருத்துடன், சிறிது பொறுமையுடன் வேலை செய்து வந்தால், அளகிரியின் படைவரிசையிலேயே பிளவு உண்டாக்க முடியும். தஞ்சையில் வீரர்கள் கிடைக்காமற் போகமாட்டார்கள். படையில் மட்டுந்தான் போர்வீரர்கள் உள்ளனர் என்று எண்ணுகிறீர் பொதுமக்களுக்குச் சமயம் நேரிட்டால், படைகளையும் எதிர்த்துப் போரிட முடியும்—தெரியும்—நாம் உள்நாட்டிலேயே ஓர் உத்தமப் படையை நிறுவ முடியும் — அதன் மூலம் வெற்றிபெற முடியும்—வெளி நாட்டான் உதவி இன்றி. நீர் செய்திருக்கும் ஏற்பாடு, கடைசியில் தஞ்சையை அன்னியனுக்குக் காட்டிக் கொடுப்பதாகவே முடியும்.''

"நான் உன்னிடம் வாதிடப் போவதில்லை. என் ஏற்பாடு முடிவானது. தீர்மானம் மாற்ற முடியாதது. பீஜபூர் படைகள் தஞ்சைத் திசையை நோக்கிப் புறப்பட்டு விட்டன.''

'பெரிய பாதகம் புரிகிறாய்!''

"எது எப்படி ஆவதானாலும் எனக்கு அக்கரை இல்லை. என்னை அரச அவையிலே, ஆணவத்துடன் அவமதித்த அந்த அளகிரி அழிய வேண்டும்—அவனுடைய கொற்றம் கவிழ வேண்டும் — என்னை விரோதித்ததன் பலன் என்ன என்பதை அந்த அவிவேகி உணர வேண்டும்—அளகிரி—இரு—வருகிறது படை, வேதிய வெங்கண்ணாவின் வீரப் படை—''

"சசி! கேட்டாயா கெடுமதியாளன் பேச்சை! வருகிறதாம் படை — எதற்கு? செங்கமலத்தை மன்னராக்குவது கூட இரண்டாந்தரமான வேலை—முதல் வேலை முக்கியமான வேலை—இந்த மகானுபாவரின் மனோ பீஷ்டத்தை நிறைவேற்றுவது. எவ்வளவு சுயநலம் பார்த்தாயா! அளகிரி மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதிலேதான் இந்த ஆரியனுக்கு அக்கரையே யொழிய, தஞ்சையைச் செங்கமலத்திடம் தருவது அல்ல இவன் குறிக்கோள். செங்கமலம், நான், நீ, யாவரும் இவனுக்குக் கருவிகள்—துரோகி! இவனை நான் துளியும் நம்ப முடியாது.''

"வீராதி வீரனே! இப்படி என்

னைக் கைவிடலாமா? உன்னை மலை போல நம்பித்தானே இந்தக் காரியத்தில் இறங்கினேன்......எப்படி? போதுமா, இன்னமும் கொஞ்சம் பணியவேண்டுமா, உன்னிடம்! மூட்டாள்! உன் உதவியை எதிர் பார்த்தா நான் இந்த விவகாரத்தில் இறங்கினேன். எவ்வளவு பெரிய படை எனக்கு ஏவல்புரியக் கிளம்பி இருக்கிறது, வீர வெங்காஜியின் தலைமையில்! வெங்காஜி யார் தெரியுமோ, சிவாஜியின் தம்பி! சிவாஜி யார் தெரியுமோ? காகுபட்டரின் சிஷ்யன்! காகுபட்டர் யார் தெரியுமோ? என் குலம்—என் இனம்—ஆரியன்! அறிவற்றவனே! உன்னுடைய அட்டகாசத்தை இனி அனுமதிக்கப்போவதில்லை! (கை தட்ட, நாலு பேர் ஓடி வருகிறார்கள்) உம்! முதல் கைதி!''

[கத்தியை வீசுகிறான்—நால்வர் பாய்கின்றனர். சசியின் காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறான் வெங்கண்ணா. வீரன் கைது. கைகால் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்படுகிறது]

"ஆரம்பமே இப்படியா? வெங்கண்ணா! அவரை விடுவிக்கச் சொல்!''

"உன் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளமுடியாமைக்கு வருந்துகிறேன். பீஜபூர் படையினால்தான், அளகிரியைத் தோற்கடித்துச் செங்கமலத்துக்கு அரசு தர முடியும். அதனை உணராது ஆர்ப்பரிக்கும் இந்தக் காளையை அந்தப் படை இங்கு வரும்போது வெளியே விட்டுவைப்பது, ஆபத்தாக முடியும். ஆகவே, நிலைமையிலே உள்ள கொந்தளிப்பு தீரும்வரையில்...''

"சிறையிடத் தீர்மானமா—?''

"சிறையல்ல, சேல்விழியே! சிற்

நம் கொள்ளாதே! என் பாதுகாப்பில் வைத்திருக்க உத்தேசம். அவனைமட்டுமல்ல, உன்னையுந்தான்.'' கை தட்டுகிறான். பணியாட்கள் வருகிறார்கள். அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கிறான். ''உம்! இரண்டாம் கைதி! — இந்த லாவண்யவதியை அழைத்துச் செல்லுங்கள்.''

*

முறையல்ல, நெறியல்ல என்று கூறுவதற்கு எவர் முன்வந்தாலும், இதுதானே நடந்திருக்கும். வெங்கண்ணாவின் வெறி வேறு — இலட்சியவாதிகளின் ஆர்வம் முற்றிலும் வேறானது. நான் காட்டிய கற்பனை வீரன் போன்றாரும் கலைமங்கை போன்றாரும், கபடனும் வெங்கண்ணாவின் பாதையிலே குறுக்கிட்டால், வெஞ்சிறைதானே கிடைக்கும்! மரணமும் கிடைக்கும். இலட்சியத்துக்காக உழைக்க முன்வந்த கற்பனை வீரனும் கலைமங்கையும், சிறையில் இருக்கட்டும். அளகிரியைக் காண்போம். மராட்டியவீரன் வெங்காஜி அழைத்துவந்த, சுல்தானின் படைகளை, எதிர்த்து நிற்கும் ஆற்றல் அளகிரிக்கு இல்லை. துளியும் எதிர்பாராத நேரத்தில், கொஞ்சமும் எதிர்பாராத இடத்திலிருந்து பலமான தாக்குதல் கிளம்பவே, அளகிரி திகைத்துப் போனான். வெளிநாட்டிலிருந்து படைகளைக் கூட்டிவரும் அளவுக்கு வஞ்சகனான வெங்கண்ணா, தஞ்சைத் தரணியிலே, உள்நாட்டுத் துரோகிகளைத் திரட்டிடாமலா இருந்திருப்பான். அளகிரியினால், அழிவைத் தடுக்க முடியவில்லை. மதுரை சொக்கநாதனோ, தம்பி அளகிரியின் புத்திக்குத்தக்க பாடம் கிடைக்கட்டும் என்று இருந்துவிட்டான், பீஜப்பூர் படைகளை ஒழிக்க, அளகிரிக்குத் துணையாக வரவில்லை. தனி அரசல்லவா, தனி அரசு! எவ்வளவு நெஞ்சழுத்தம், அளகிரிக்கு! படட்டும், படட்டும்—எக்கேடோ கெட்டும் கெடட்டும், என்று இருந்துவிட்டான். அளகிரி தோற்றான்—படைகள் சின்னபின்னமாயின — வெங்காஜி வெற்றிமுரசு கொட்டினான்—வெங்கண்ணா வெற்றி வெறியனானான். அளகிரி நாட்டைவிட்டு ஓடி, ஒளியலானான்! வெங்காஜியின்படை துரத்திச் சென்றது, கடைசியில் அளகிரி, அரியலூர் காட்டிலே சென்று ஒளிந்துகொண்டான் — தன்நிலைமையை எண்ணி எண்ணிக் கதறினான்—மனம் குழம்பிவிட்டது — பித்தம் பிடித்தலைந்தான். வேந்தன் பித்தனானான், வேதியன் வெற்றி வீரனாகத் தஞ்சையில் உலவி வந்தான்!!

*

''அந்தோ! அழிந்தேன்! மூடன், கபடனுக்கு இரையானேன்! வஞ்சக வெங்கண்ணாவின் சதியால் வீழ்ந்தேன்.

அரசுகளை ஆட்டிப்படைக்கும் ஆரியனே! உன்னை நான், அரசு அவையிலே வீற்றிருக்க அனுமதித்தேன்—உன்னுடைய மோசமான கருத்தை உணரவில்லை.

அரசு நம்மிடம்! படைபலம் நம்மிடம்! இவனிடம் என்ன இருக்கிறது!

போரில் நாம் புலி! இவனுக்குப் போர்த் தொழில் என்ன தெரியும்! என்று எண்ணி ஏமாந்தேன்.

வாள் என்னிடம், வஞ்சகம் அவனிடம்! படை என்னிடம், கபடம் அவனிடம்! அந்தோ! நான் வீழ்ந்தேன் — விரட்டப்பட்டேன்! என் பரம்பரைக்கே பழி தேடிக்கொடுத்தேன்! முத்தமிழ் முழங்கும் தமிழகத்தை, மராட்டியப் படையிடம் ஒப்படைத்து விட்ட பெரும்பாவியானேன்! எல்லாம் அந்த வஞ்சகனால்!

அவனுடைய பேராசைக்கு இடமளிக்க மறுத்தேன்—அவன் என்னை அரச பீடத்திலே ஓர் பதுமையாக இருக்க அல்லவா ஏற்பாடு செய்தான்—அளகிரி—எப்படி அதற்குச் சம்மதிக்கமுடியும்! வீரக் குலத்தில் உதித்து, எப்படிப் பஞ்சாங்கக்காரனிடம் பணியமுடியும்!

பாவி! படுமோசம் செய்தானே! பீஜப்பூரானை ஏவினான்—நாட்டுக்குத் துரோகமல்லவா என்று எண்ணினானா—மக்களுக்குக் கஷ்டமல்லவா என்று நினைத்தானா — நண்பனுக்குத் துரோகமாயிற்றே என்று நினைத்தானா!

இரத்தத்தைக் குடித்தலையும் புலியே, நீ அவ்வளவு துரோகம் செய்யமாட்டாய்!

நயவஞ்சகத்தைக் கற்றுக் கொள்ள, நாட்டுக்கு ஓடு, நரியே, அங்கே உனக்கு நல்ல ஆசான் கிடைப்பான், வஞ்சக வெங்கண்ணா!

புல்லிலே படுத்திருந்து, நடப்பவரைக் கடிக்கும் பாம்பே! உனக்கு இல்லை அவ்வளவு விஷம்! நீ ஆளை மட்டுமே கொல்வாய்—அவன் அரசைக் கொன்றான்!

அந்த வஞ்சகனுடைய பேச்சைக் கேட்டு, என் அண்ணனுக்குத் துரோகம் இழைத்தேன். தன் வீரதீர பராக்கிரமத்தால், தஞ்சையை வென்று, தம்பிக்குத் தரணி ஆளும் தகுதி கிடைக்கட்டும் என்று அன்புடன் என்னைத் தஞ்சைப் பதிக்கு அரசனாக்கினான்—என் அண்ணன்.

நான் நன்றி கெட்டவன்! துரோகி! என் அண்ணனையே எதிர்க்கத் துணிந்தேன். தஞ்சை தனி அரசு! என்றல்லவா பிரகடனம் செய்தேன். எவ்வளவு ஆணவம் எனக்கு! அண்ணன் என்ன எண்ணுவான், துரோகமல்லவா, என்று நினைத்தேனா! இல்லை! வெறி! வஞ்சகன் ஊட்டிய வெறி என்னைப் பிடித்து ஆட்டிற்று! மதுரை மண்டலத்துக்கு தஞ்சை சிற்றரசு அல்ல என்றேன்—தனி அரசு என்றேன்—தனி அரசு! தனி அரசா? 'சனி' அரசு கண்டேன்! இதோ காட்டு அரசனானேன்.

பீஜபூர் படை, வந்திருக்குமா, தஞ்சையும் மதுரையும் ஒரு சக்தியின் இரு கூறுகள் என்ற நிலை இருந்திருப்பின். வந்திருப்பினும், பாண்டிநாட்டுப் படைகள் பாய்ந்து வந்து மராட்டியரைத் தாக்கி, என் மானத்தைக் காத்திருக்குமே!

துரோகி நான், என் அண்ணனுக்கே கேடுசெய்தேன் — நாடு இழந்தேன்—காடு சுற்றுகிறேன்—காட்டிலே துஷ்டமிருகங்களாவது என்னைக் கொன்றுபோடக் கூடாதா எல்லாம் மிரண்டு ஓடுகின்றனவே!

அளகிரிக்கு, அரியலூர் காடுதான் அரண்மனை!...... அளகிரி!

படு மனமே, படு! பார்ப்பனன் பேச்சைக் கேட்டாய், படு, மனமே, படு!

அளகிரி! அலைந்து திரி, அரியலூர்க் காட்டிலே! ஆரியன் உன் நாட்டிலே அரண்மனையிலே உலவு

கிறான், நீ காட்டிலே அலைந்து கொண்டிரு.

வேண்டும் எனக்கு. இதுவும் வேண்டும், இதற்கு மேலும் வேண்டும்—வஞ்சக வெங்கண்ணாவின் கொஞ்சு மொழியை நம்பிய எனக்கு இது போதாது—அரியலூர்க்காடு!

அண்ணா! சொக்கநாத பூபதி! இதோ, புது ராஜ்யம்! அரியலூர்க் காடு! நான்தான் இங்கே ராஜா! என் பிரஜைகள், ஓநாய், நரி, பாம்பு, புலி, கிரி, காடை, கழுகு......ஏராளம்! ஏராளம்!

அரியலூர் அரசன் அளகிரி வருகிறார், பராக்! பராக்!''

*

பித்தம் பிடித்த அளகிரி பிதற்றினான், கதறினான். அரியலூர்க் காட்டிலே அலைந்து அலைந்து, மாண்டு போனான். மணிமுடிதரித்துப்படை பல திரட்டி வாழ்ந்து வந்தான், வஞ்சக வெங்கண்ணாவால் வீழ்த்தப்பட்டான். வேதிய வெங்கண்ணாவின் மமதை மலையென வளரத்தானே செய்யும். மராட்டிய வீரனுக்குச் சன்மானங்கள் வழங்கினான் — பீஜபூர் படைகளுக்குப் பரிசுகள் வழங்கினான். கேவலம் 'ராயசம்' வேலை, பார்த்து வந்தான் —கணக்கெழுதும் வேலை—அவன், "ராஜாங்கப் பொக்கிஷத்தை"த் திறந்து, சிவாஜியின் தம்பிக்கு வெகுமதிகள் அளிக்கிறான்! வாள் ஏந்தி அறியான்! களத்திலே கிளம்பும் ஒலி கேட்டாலே உயிர் போகும் விதமான மனத்தினன் — அவன். தஞ்சைத் தரணியிலே தன்னிகரில்லா வெற்றி வீரனாக விளங்குகிறான்.

*

செங்கமலம் அரசனானான்—வெங்கண்ணாவின் திறமே இதற்குக் காரணம், என்று வியந்தனர் சிலர்—அவனுடைய ஆற்றலைக்கண்டு பயந்தனர் பலர். பீஜபூர் படை, பெற வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொண்டு, திரும்பிச் சென்று விட்டது. செங்கமல மன்னன் ஆட்சி ஆரம்பமாயிற்று! வெங்கண்ணா, இனித்தன் ஆதிக்கத்துக்குக் குறைவு இல்லை, என்று எண்ணினான். செங்கமலம், பெயருக்கு மன்னனாக இருக்கட்டும் — ஆட்சி, அதிகாரம் நம்மிடம் இருக்கும்—என்று திட்டமிட்டான். முடி அவனிடம், பிடி, நம்மிடம் என்று எண்ணினான். வெங்காஜி, தஞ்சையை விட்டுப் போகுமுன்பே, தஞ்சைத் தரணி, வெங்கண்ணாவின் அதிகாரத்தின்கீழ்த்தான்சிக்கிவிடும் என்பதை அறிந்தான்—யூகமுள்ள எவருக்கும் தெரியக்கூடியதுதானே அது. விடைபெற்றுக் கொள்ளும் போது, வெங்காஜியும் வெங்கண்ணாவும், எவ்வண்ணம் உரையாடல நிகழ்த்தியிருப்பர். எண்ணிப்பாருங்கள்.

"செங்கமலம்! சிறுவன்! சிரத்தில் முடியும், கரத்தில் செங்கோலும் இருக்கிறது. ஆயினும்........."

"ஆட்சி புரிவதற்கான பக்குவம் இல்லையே என்கிறீர்.''

"செச்சே! ஆளத்தான் நீர் இருக்கிறீரே! வெங்கண்ணா! உம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். அரசனாக இருப்பதைவிட அரசனை ஆட்டிப்படைப்பவனாக இருப்பது, இலாபமானது—மேலும், அரசபீடத்தில் இருப்பவன் சிறுவன்—உம்மால் மன்னனானவன். உம்முடைய சிருஷ்டி! உமது கைப்பதுமை! தஞ்சைத் தரணிக்கு உண்மை அரசர், செங்கமலமா! பட்டம் மட்டுமே அவனுக்கு—அதிகாரம் அனைத்தும் உமக்கே!''

"உமது உதவியாலேதான், உரிமையுடைய செங்கமலம் மன்னரானார்!''

"மன்னரானார்—மண் பொம்மை! வேதியரே! பிடி உம்மிடம்தானே இனி. நாங்கள் போரிட்டோம் உன் பொருட்டு—இரத்தம் கொட்டினோம்—பொன் பெற்றோம்; இல்லை என்று கூறவில்லை—ஆனால் அரசரை ஆளும் பதவி உமக்குக்கிடைத்தது. இன்று மட்டுமா! உமக்குமட்டுமா!! தஞ்சையில் விஜயராகவன் அரசாண்டான்—கோவிந்ததீட்சிதருக்குத்தான் செல்வாக்கு. அளகிரி ஆண்டான் உமக்குப் பெருமதிப்பு—செங்கமலம் ஆள வந்திருக்கிறான்—உமக்கேதான் செல்வாக்கு. அரசர்கள் வருவர் போவர் ஆட்டிப்படைக்கும் ஆரியரிடமே அதிகாரம் இருக்கும் என்று ஏற்படுகிறது. இதுவல்லவா அதிர்ஷ்டம். நான் வருகிறேன், வேதிய வடிவில் உலவும் தஞ்சை வேந்தனே! விடை பெற்றுக்கொள்கிறேன்''

*

வெங்கண்ணாவின் மனக்கண்முன், வெங்காஜி, குறும்புப் புன்னகையுடன் தன் எதிரே நின்ற காட்சி தெரியலாயிற்று. வெங்கண்ணா, கேட்க வேண்டியதுதான் தாமதம், செங்கமலம், உடனே முதலமைச்சர் பதவியைத் தன் காலடியிலே வைப்பான், என்று எண்ணினான் வெங்கண்ணா. கேட்கவும் செய்தான். செங்கமலத்துக்கோ ஒரு பெரிய சிக்கல்! பீஜபூர் படையை அழைத்துவந்து, தஞ்சைத் தரணியை அளகிரியிடமிருந்து மீட்டு, முடி தந்தவர், வெங்கண்ணா—அவர் முதலமைச்சர் பதவியைக் கேட்கிறார். அதேபோது, அரசு இழந்து, அனாதைக் குழந்தையாக இருந்த காலம் தொட்டு, அன்போடு தன்னைக் காப்பாற்றி வந்த, வளர்ப்புத் தந்தை, தன்னை முதலமைச்சர் ஆக்கவேண்டும் என்று கேட்கிறார்—அவருடைய பேச்சையும் தட்டி நடப்பதற்கில்லை, சிக்கலாகிவிட்டது பிரச்னை!

வெங்கண்ணா, தனக்கே, அந்தப் பதவி, உரியது; ஏனெனில், செங்கமலம் மன்னனானதே, என்னால் தானே, என்று எக்காளமிட்டான்.

"அரசனானாய், மகனே! ஆனால் எதனால்? உன்னைப் பிழைத்திருக்கச் செய்தோம், நாங்கள், அதனால் தஞ்சை அரசகுடும்பம் அழிந்து பட்டது—உன்னை மரணத்தின் பிடியிலே சிக்கவிடாமல் பாதுகாத்தவர்கள், நாங்கள்—எனவே, உனக்குக் கிடைத்த அரசாட்சியிலே, எங்களுக்குத்தான் முதல் 'பாத்யதை' உண்டு'' என்று வாதிட்டனர் வளர்ப்புப் பெற்றோர்.

"மகனே! நீ உண்மையிலே ராஜா ஆவதற்கு முன்பே — அந்த எண்ணம் வரவே முடியாத காலத்திலேயே—உன்னை, அன்புடன், ராஜா! ராஜா! என்று கொஞ்சியதாய் கேட்கும் பிச்சையை, துச்சமென்று தள்ளிவிடுவது தகுமா?

எவ்வளவு அன்புடன் அவர் உன்னை வளர்த்துவந்தார். உன்னைத் தூக்கிச் சுமந்து சுமந்து தழும்பேறிய தோளிலே, பீதாம்பரம் போர்த்து, பிரதானியாக முதல்வராக இருக்கச் சொல்வதா, உன்னால் முடியாத காரியம்! உனக்காக நாங்கள் பட்டபாடு கொஞ்சமா?'' என்று தாய் கேட்க, அம்மா

என்னை வாட்ட வேண்டாம்........ என்று கதறிக் கூறுகிறான் செங்கமலம். இந்தச்சிக்கலான நிலையிலே, மன்னன் இருந்தான்— மமதை வளர்ந்துவரும் நிலையில் வெங்கண்ணா, இருந்தான். "கெஞ்சிப் பெறவேண்டுமா நான், தஞ்சைத் தரணி, அவனுக்கு என்னால் கிடைத்தது — என்று உறுமிடலானான் வெங்கண்ணா.

பதவிப்பித்தம் பிடித்தாட்டலாயிற்று—சரி—இனி இரண்டிலொன்று பார்த்துவிட வேண்டியதுதான், என்று துணிந்து விட்டான் வஞ்சக வெங்கண்ணா. செங்கமலத்தை, மிரட்டலானான். மன்னன் தனக்கு ஏற்பட்டுள்ள சிக்கலை எடுத்துரைத்தான்—சீறினான் வெங்கண்ணா. அந்தச் சீற்றத்திலே வெங்கண்ணா, மன்னனை எவ்வளவு துச்சமாகக் கருதியிருக்கிறான் என்பது வெட்ட வெளிச்சமாயிற்று.

"மன்னரே!......மன்னரான வரே! மன்னராக்கப்பட்டவர் நீர் என்பதை மறப்பது நன்றல்ல! நன்றிகொன்றவருக்கு நாடாளும் பட்டம் இருந்து என்னபயன்! காட்டுநீதி காட்டுகிறீர்—உமக்கு இந்த நாட்டை பெற்றுத் தந்த என்னை உதாசீனம் செய்கிறீர்..."

"என் அன்னையின் கண்ணீர்..."

"என் கோபம்?"

"இரண்டுக்கும் தான் பயப்படுகிறேன்"

"இரண்டில் ஒன்றுக்குத் தான் கட்டுப்பட வேண்டும். அரசு அமைத்த என்னை அமைச்சனாக்காவிட்டால்........எங்கோ கிடந்த உன்னை தஞ்சைப் பதிக்கு மன்னனாக்கிய என்னை விரோதித்துக் கொண்டால்......"

"மறையவரே! என்சிக்கல் தீர்ந்தது—வேதனை ஒழிந்தது."

"முடிவுக்கு வந்தீரா? முடிதந்த எனக்கு......"

"நலல முடிவுக்கு வந்தேன்"

"என்ன முடிவுசெய்தீர்? அமைச்சர் பதவி......?"

"என் தந்தைக்கு அளிப்பது என்று முடிவு செய்து விட்டேன்."

"ஆ!........அமைச்சுப்பதவியை எனக்கு அளிக்கப் போவதில்லையா—அழிவை அணைத்துக்கொள்ள...."

"ஆணவத்தை அழிக்கத் தீர்மானித்து விட்டேன்.

ஆரியரே! உமது சீற்றமே, என் சிக்கலைப் போக்கிற்று.

கட்டளையிட்டுப் பெறவேண்டிய என்தாய், கண்ணீர் பொழிகிறாள். கபடமே உருவான நீ, என்னை மிரட்டிப் பதவியைப் பறிக்கப்பார்க்கிறாய்.

அரசனானமகனே!என்று அன்னை அன்புடன் அழைக்கிறாள்.

ஆணவத்தோடு நீ பேசுகிறாய், என்னை அரசனாக்கியதாக.

நீயும், என் மனம் உருகப் பேசினால் என்ன செய்வது—இருவருக்கும் நான் கடமைப் பட்டவனாயிற்றே—அன்னையின் கண்ணீர் —ஆரிய நண்பனின் அன்பு மொழி எனும் இரண்டும் என்முன் பொழியப்பட்டால், நான் மனக்குழப்பமடையத்தானே வேண்டிவரும்—யாருடைய மொழிக்குக் கட்டுப்படுவது என்று எண்ணிக் குழம்பினேன்—உன் ஆணவப்பேச்சு எனக்கிருந்த குழப்பத்தைப் போக்கிவிட்டது. என் தாயின் கண்ணீர் வென்றது."

"நிதானமாக யோசித்துச்சொல் —சிரத்தில் இருக்கும் முடி......"

"பரம்பரைப் பாத்யத்தின் சின்னம்—அறிந்துரைத்தாய் — அவ்வளவுதான்—அரசனாக்கினாய்-எதற்கு? உனக்கு அடிமையாக இருக்கவா? இதற்கு நான் ஏன் அரசனாக இருக்கவேண்டும்! இப்போதல்லவா தெரிகிறது உன்போக்கின் காரணம் —தஞ்சைக்கு நீ ஓர் பொம்மை ராஜா தேடுகிறாய் — அதற்கு என்னைப் பொம்மையாக்குகிறாய்—அரசனாக இருப்பேன் — இல்லையேல் சாதாரண மனிதனாக இருப்பேன்—அடிமையாகமட்டும் இருக்கமாட்டேன் — முடி தரிப்பது உனக்குப் பிடி ஆள் ஆவதற்கு என்றால், இது என் காலடி கிடக்கட்டும் — கவலை இல்லை—இதை வேண்டேன்"

"அரசர், எட்டுச்சுரையை நம்புகிறார்!"

"நீ, உன் பரம்பரைக் குணத்திலே நம்பிக்கை வைக்கிறாய்—அரசுரிமை எனக்கு நிலைக்காதபடி செய்துவிட யோசிக்கிறாய்—முடியவும்கூடும் — ஆனால் முடி தான் போகும் — என் தன்மானம் நிலைக்கும்—அரசன் என்றபெயர் இராது; அதேபோது ஆரிய அடிமை என்ற இழிசொல்லும் எனக்கு இராது — அரசபீடத்தில் அமர்ந்திருக்கலாம் ஆனால் ஆரியதாசனாக இருக்கச் சம்மதிக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறாய். கேள், ஆணவம்கொண்டவனே! நான் தாசனாக மறுக்கிறேன்—அதனால் தஞ்சைத் தரணி ஆளும் நிலை போனாலும் கவலை இல்லை.

போ! அரசு இருக்குமட்டும் அரசனாகவே இருப்பேன் — உன் அடிபணியமாட்டேன்.

என் அன்னை வென்றாள்—போ

முடிந்த முடிபு!

ஆம்! முடி போவதானாலும் சரி. என்ற முடிவுக்குவந்தாகிவிட்டது"

"சரி!"

*



எரிமலை வெடித்தது! வஞ்சகம் பீறிட்டுக் கிளம்பிற்று!வெங்கண்ணா சீறினான்! சரி—என்று கூறினானே என்ன அதன் பொருள்! சரி, இவ்வளவுதானா, உன் நன்றி காட்டும் தன்மை, என்று வெறுத்துக் கூறினான், என்பதா! செச்சே! வெங்கண்ணா அல்லவா, சரி என்று சொன்னான். அண்ணன் தம்பிக்குள் பகை மூட்டிய வெங்கண்ணா! அளகிரியை அழிக்க அன்னிய நாட்டுப் படையை அழைத்துவந்த வஞ்சகனல்லவா, சரி, என்றான்! அதன் பொருள் என்ன, சரி, எனக்கு உபயோகப்படமுடியாதா, உன்னால்; இனி, உன்னையும் தொலைத்துவிடுகிறேன், என்பதுதான்! செங்கமலம் என்பேச்சை மறுத்துவிட்டான், எனவே இனி அவன் மன்னனாகவீற்றிருப்பதா, நான் அதைக் காண்பதா, என்று எண்ணினான். நாட்டுப் பற்றுக் கொண்டவனாக இருந்தால், வாளாஇருந்துவிட்டிருப்பான். வெங்கண்ணா போன்ற வன்கணாளர்களுக்கு, நாட்டுப்பற்று, நெறி, முறை, எதுதான் உண்டு, யாரை

அழித்தாகிலும், வாழ்வுபெறவேண்டும்—என்பதுதானே அவன்போன்றோரின் எண்ணம். எனவே, வெங்கண்ணு, செங்கமலத்தை ஒழித்துவிடுவது என்று தீர்மானித்தான். எப்படி என்று ஒரு கணம் யோசித்தான்—உடனே புன்னகைபிறந்தது வெண்ணெயை வைத்துக்கொண்டு, நெய்க்கு அழுவதா, வெங்காஜி இருக்கும்போது, வழி வேறு தேடவா வேண்டும் என்று மெள்ளக்கூறிக்கொண்டான், வேகமாகச் சென்று வெங்காஜியைக் கண்டான்.

*

'வெங்காஜி! வெற்றி உம்மை அழைக்கிறது. தஞ்சை உமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அரசாள்வதற்கேற்ற அறிவாற்றல் படைத்தோனே, அரசுபீடம் தயாராக இருக்கிறது—வருக!"

"வெங்கண்ணு! என்ன பேசுகிறீர்?"

"பேசுகிறேனு! அழைக்கிறேன், மகாப் பிரபோ! அரசாள வருக என்று அழைக்கிறேன்"

"சித்த ஸ்வாதீனமற்ற......"

"நிலை அல்ல!"

"விருந்துக்கு அழைப்பதுபோல ...."

"விருந்துதான்! வெஞ்சமர்தானே வீரருக்கு விருந்து. முன்னம் தஞ்சையினின்றும், தகுதியற்ற அளகிரியை விரட்ட வந்தீர்—வென்றீர்—இம்முறை, தஞ்சைக்கு அரசனாக வீற்றிருக்கும் அறியாச் சிறுவனின் அடாத செயலால் நாடு சீர்குலைந்து நாசமாகாமல் தடுக்க......"

"தடுக்க........"

"தஞ்சையை அவனிடமிருந்து மீட்க வேண்டும்"

"மீட்க வேண்டுமா?"

"ஆம்! பிறகு, அரியாசனத்தைத் தாங்களே அலங்கரிக்க வேண்டும்"

"வெங்கண்ணு, பேசுவது தஞ்சை அரசு பற்றி! வெங்காஜியிடம், மராட்டியனிடம், அன்னியனிடம், வெளி நாட்டானிடம்"

"வெங்காஜியிடம் பேசுகிறேன்—வீரனிடம் பேசுகிறேன் — அன்னியன்! வெளி நாட்டான்! அர்த்தமற்ற வார்த்தைகள். ஆற்றலுள்ளவன் அரசனாவதலே முறை"

"புதியதோர் நீதி நூல்!"

"நீதியல்ல என்றே கூறுவர்—எனினும்........."

"தேசத் துரோகமுமாமே!"

"அப்படியுங் கூறுவர்—யார் எப்படிக் கூறினும், செங்கமலம் இனித் தஞ்சையை ஆளக்கூடாது — செங்கோல், ஓர் வலிவுள்ள கரத்தில் இருக்கவேண்டும்—அந்தக் கரம்—இது — தமிழ் நாட்டிலே அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கும் அரும் பணி புரிய இக்கரம் வேண்டும்!"

"அழைப்பது அமளிக்கன்றோ!"

"அமளிக்குப் பிறகு ஆனந்தமன்றோ!"

"ஆரிய! ராஜ தந்திரப் பேச்சை நிறுத்தும். செங்கமலத்தை ஒழித்து விடத் தீர்மானித்த காரணம்"

"காரணம்! அவனை அரசனாக்கியதே தவறு என்பதை உணர நேரிட்டதுதான்"

"அளகிரி, பாண்டிய நாடு—செங்கமலமே, நாயக்க வம்சம்—தஞ்சைப் பதிக்கு உரிமைக்காரன்—அவன் அரசாள்வதே நீதியாகும்—நீதிக்கு வெற்றி கிடைக்கப் படை பலத்தை உதவும் என்றெல்லாம் முன்பு கூறினீர்."

"உதவியும் பெற்றேன்—ஊர் பேர் இல்லாத அந்த உதவாக்கரையானை, தஞ்சை மன்னனாக்கினேன்"

"அவன் உமது பேச்சை........ மீறி நடக்கத் தொடங்கினனோ?"

"நடந்தால் நாசமாகிறான். என் குறை அது அல்ல. சொந்த லாபத்தை எண்ணியல்ல நான் இப் பணிபுரியக் கிளம்பியது"

"செங்கமலம் என்ன செய்தான்?"

"பஞ்சமா பாதகத்தைக் கொஞ்சமும் தவருமல் செய்கிறான்"

"சிறுவன் செங்கமலமா!"

"சிறு மதியோன் செங்கமலம்! கொடுமை புரிகிறான் கோல கிடைத்த காரணத்தால்"

“அவனுடைய வளர்ப்புத் தகப்பன், ஊர் அலறும்படி ஆட்டமாடுகிறான். அவனுக்கு அரசவிஷயத்திலே ஈடுபட......என்ன அதிகாரம் என்கிறீரா? அவன்தான் அமைச்சன்”

“உம்மை அமைச்சராக்க வில்லையா......”

“அழைத்தான்—மறுத்தேன் — ஆலய வழிபாட்டுக்கு ஆயுளைச் செலவிட நினைத்தேன் — மேலும் நான் பார்த்து அரசனாக்கிவைத்த சிறுவனிடம் நான் சேவகம் செய்வதென்றால், என் மானமும் மதிப்பும் மங்காதோ!”

“அமைச்சரல்லவா நீர்! மற்றவை நீர் கூறாமலே நான் அறிந்துகொண்டேன். வெங்கண்ணா! நான் உமது அழைப்பை ஏற்க மறுத்து—தஞ்சை அரச விவகாரத்தில் தலையிட மறுத்தால், என்னசெய்வீர்...?”

“தங்கள் கூரியமதி மங்கி விட்டதை எண்ணி வருத்தமடைவேன் —ஆயாசப்படுவேன்—ஆனால் அரசபீடத்தை ஏற்றுக்கொள்ளும்படி, வேறு வேந்தரிடம்—வீரரிடம் சென்று வேண்டிக்கொள்வேன். தஞ்சைத் தரணி இயற்கையின் கொஞ்சுமொழியால் சீராட்டப்படுவது—காவிரி பாயும் பொன்னாடு—பொன்விளையும் பூமி—வளமிக்க நாடு”

“உண்மை! செல்வம் கொழிக்கும் தேசம்.. நீர்வளம் நிலவளம் குடிவளம் நிரம்பியது”

“ஆறு அருவிபாட— ஆற்றோரத்தில் அதற்கு ஏற்றபடி தமிழணங்குகள் ஆடுவர்—சோலையிலுள்ள கிளியும் குயிலும், பாட, அதற்கேற்றபடி மயில் ஆட—மன்னவா!—முன்கூட்டியே கூறிவிட்டேன் மன்னா என்று—இத்தகைய இயற்கையின் எழில்மிக்க எமது நாடு”

“துறைமுகங்களும் உள்ளன”

“ஆம்! வெளி உலகுடன் தொடர்பு சுலபம் — வாணிபம், பண்டைக்காலமுதலே உண்டு, தமிழகத்துக்கும் யவனத்துக்கும்”

“வெங்கண்ணா! தஞ்சைத் தரணியைக் காப்பாற்றத் தயங்கேன்...”

“தஞ்சை வேந்தே! மன்னன் வெங்காஜி! வாழ்க!”

“உஸ்! இதற்குள்......”

“ஏன்! இதுமுதல் என்று கூறும் —செங்கமலம் தொலைந்தான்...... வெங்காஜி வேந்தனானான் — வெங்கண்ணா வென்றான்”

*

பிறகு! பிறகா? செங்கலம் விரட்டப்பட்டான், வெங்காஜி வேந்தனானான்! தமிழகத்திலே, மராட்டியர், ஆளவந்தனர்! சாத்பூரா மலைச் சாரலில் பிறந்த வெங்காஜி, காவிரி பாயும் தஞ்சைக்கு மன்னனானான்! மராட்டிய அரசு அமைந்தது, தமிழகத்தில்! இமயத்தில் இலச்சினையைப் பொறித்த வீரன் வாழ்ந்த தமிழகம், கனகவிசயன் தலையில் கல்லேற்றிச் சுமக்கச்செய்த தமிழகம், கடாரம் கொண்ட தமிழகம், மராட்டியரின் ஆட்சிக்கு இடமளித்துத் தாழ்நிலை பெற்றது! எப்படி? வெங்கண்ணாவின் வஞ்சகத்தால்! தஞ்சையின் வீழ்ச்சிக்குக் காரணம், வெங்கண்ணா எனும் வேதியன் என்பது, எவ்வளவு பேருக்குத் தெரியும்! தெரிந்த சிலர் கூறினாலும், எவ்வளவு பேருடைய செவியில் வீழ்ந்து, சிந்தனையைக் கிளறுகிறது!! பிறந்தது தமிழகத்தில், வாழ்ந்தது தமிழகத்தில், பழகியது தமிழருடன், பேசியது தமிழ்மொழி, எனினும், தமிழகத்தின் பூந்தோட்டத்தை, மராட்டியருக்குக் காட்டிக் கொடுத்தான் சுயவன்! அன்னிய ஆதிக்கத்தைப் புகுத்தினான், பொன்னும் பொருளும், போக போக்கியமும், மானியமும் பட்டயமும் பெற்றான் — பேராசை தணிந்திருக்கும். தமிழரின் தன்மானமோ—அழிந்து பட்டது—தஞ்சை வீழ்ந்தது—மராட்டிய அரசு ஆரம்பித்தது, மறத் தமிழர் நாட்டில்.

நாடு, உரிமையாளரிடம் இருக்கிறதா, அன்னியனிடம் ஆட்பட்டுக் கிடக்கிறதா என்பது பற்றிய கவலையற்று, கொடுங்கோலா செங்கோலா எனபதைப் பற்றிய கவலையுமற்று, நமக்கு அந்தஸ்து உயர்வுண்டா, நமது இனத்துக்கு மேலான நிலை இருக்கிறதா, பாடுபடாமல் பிழைக்கவும், பரிமளமிக்க வாழ்வு பெறவும், மேற் குலத்தோன் என்ற நிலை இருக்கவுமான, முறையிலே நாடு நடத்தப்படுகிறதா, என்ற சுயநல வெறி உணர்ச்சி கொண்டு, வெங்கண்ணா, இரு முறை அரசுகளைக் கவிழ்த்தான்—நாட்டை நாசப் படுகுழியில் தள்ளினான்! இதுபோல, பரந்த இந்தத் துணைக்கண்டத்தில், வஞ்சகம் வென்றதைக் காட்டும், வேதனை தரும் நிகழ்ச்சிகள் பலப்பல நடை பெற்றன! அரசுகள் அழிக்கப்பட்டன—அறம் அழிக்கப்பட்டது—நாடு சீரழிவு பெற்றது. சுயநலமும் சூழ்ச்சித்திறனும், இனவெறியும் வைதீக வெறியும் கொண்டவர்கள் நாட்டுக்கு ஏற்படுத்திய நாசம், ஒன்றிரண்டு அல்ல — உள்ளத்தைக் குலுக்குக்கூடிய சம்பவங்கள் பலப்பல! தஞ்சை வீழ்ச்சி, அதுபோன்ற சம்பவங்களிலே ஒன்று! சரிதம், தரும் எச்சரிக்கை!!

மார்பிலே சந்தனம்! கையிலே சேறு!!

[ப. வாணன்]

மனித குலம் முழுதும் ஒரே இனம்!

மனிதனுக்கு மனிதன் ஏது பேதம்?

மனிதனுக்கு மனிதன் சமமானவன்தான்.

கருப்பனுமில்லை; சிகப்பனுமில்லை. எல்லாம் ஒன்றுதான்!

ஆண்டான் அடிமை என்பதெல்லாம், கடந்த காலத்தின் சொற்றொடர்கள்.

முதலாளியும் கூடாது — ஏழையும் கூடாது.

உலக மக்களாகிய நாமெல்லோரும் ஒன்று கூடி, பேச்சு, வாக்கு, எழுத்து உரிமைகள் கொண்ட மக்களாட்சியை நிறுவ உழைப்போம், வாரீர்!

* * *

ஏ, கருப்பனே! நிறுத்து உன் நடமாட்டத்தை உன் தெருவோடு! வெள்ளையர் விளையாடிடும் இந்தத் திடலில் உறங்கிட எண்ணாதே! உன் கடன் உழைத்துக்கிடப்பதே! உரிமை கேட்டால் உனக்குக் குண்டுகளுண்டு!

கருப்புத் தோலுடையவனே! நீ இந்த நாட்டிலே காலடி எடுத்து வைப்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்த ஆஸ்திரேலிய பூபாகத்தையே கண்டுபிடித்தவர்கள் நாங்கள்தான். எங்களுக்குத்தான் இதில் அடையும் லாபத்தை, காணும் இன்பத்தை அநுபவிக்க உரிமையுண்டு. பசியா, உனக்கு? அதற்காக? எங்களோடு கலந்து எங்கள் வாழ்க்கையை பாழ்படுத்தாதே!

கென்யா நாட்டு மக்களே! உங்கள் உரிமையை அளந்து கொடுக்கும் பொறுப்புகளைச் சார்ந்தது, அதை எதிர்த்துப் புரட்சிசெய்வீர்களானால் உங்கள் மார்பிலே குண்டுகளைப் பாய்ச்சிடநேரும்!

தாய்லாந்து நாட்டு மக்களே! உங்கள் பொதுநலப் பொறுப்புகளை நாங்கள்தான் கவனித்துக் கொள்வோம். உங்களுக்கு உரிமை வழங்க, நீங்கள் இன்னும் பக்குவப்படவில்லை. ஆகவே, அடிமைகளாக இருக்கத்தான்வேண்டும், பக்குவம் ஏற்படுகிற வரையில்.

* * *

உரிமை! உரிமை!! என்ற போதனை ஒருபுறம்.

உனக்கு உரிமை பெற பக்குவமில்லை — ஆகவே, நீ அடிமை! அடிமை!! என்ற பல்லவி வேறோர் புறம்.

இரண்டும் ஒரே வாயால் வெளிவரும் வார்த்தைகள்.

மார்பிலே சந்தனம்!

கையிலே சேறு!!

"மக்களின் நல்வாழ்வு—மக்களின் உரிமையின்மீதிருக்கிறது. அந்த உரிமையை அடைய நாங்கள் பட்ட அவதி கேளீர்! எங்கள் நாட்டிலே எங்கள் மூதாதையர் இந்த உரிமையை அடைய சிந்திய இரத்தம் ஏராளம். அந்த நல்வாழ்வை அடைய அவர்கள் கொடுத்த பலி சொல்லொணாதது. ஆயிரக்கணக்கான மாபாதகர்களை தூக்கிலிட்டுப் பெற்றோம், இந்த மக்களாட்சியை. காணீர், அதன் மாண்பை. வாரீர், அந்த ஆட்சியை உலக முழுவதும் நிறுவ!" என்று கூவி அழைத்திடும் ஐரோப்பியனையும் அமெரிக்கனையும் சந்தித்துவிட்டு, அவர்கள் எழுதிய ஏராளமான கருத்துரைகளை அறிந்துவிட்டு, உலக விவகாரங்களில் நம் கவனத்தைச் செலுத்தும்போது, மேற்குறிப்பிட்ட முரண்பாடுகள் நம் கண்முன் வந்து நிற்கின்றன.

ஆங்கில நாட்டில், அமெரிக்காவில், ஐரோப்பிய நாடுகளில் 'மக்களாட்சி' பூத்த வரலாறு — அந்த 'மக்களாட்சி'யின் மகோன்னத கொள்கைகள் எல்லாம் நமக்கு விரித்துரைக்கப்படும்போது அதன் மணம் நம்மை மயக்கி அப்படியே ஆட்கொள்கிறது.

ஆனால், அதே நேரத்திலே, டுனீஸியாவிலே குண்டுகளுக்கு இரையாகும் சுதந்திர வீரர்களின் பட்டியல், மொராக்காவிலே உரிமைக்காக உருண்டோடிடும் தலைகள், ஆப்பிரிக்கக் கண்டத்திலே அவதியுறும் மக்கள் கூட்டம், மலேயாவில் தூக்கிலிடப்படும் கணபதிகள், இந்தோசைனாவிலே ஏனென்று கேட்பாரற்று நடத்தப்படும் ஆணவ ஆட்சி இவைகள் நம் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது, நாம் பார்க்கும் மேலை நாட்டான், கையிலேஏற்பட்ட இரத்தக்கறையை நீக்கச் சேறு பூசிக்கொண்டு நிற்கும் ஆக்ரமிப்பாளனாகத்தான் காட்சியளிக்கிறான்.

இன்பப் பூங்காவிலே நுழைந்த நாம், அங்கே மலர்களின் வாசத்தையும் மீறுமளவுக்குச் சாக்கடையின் துர்நாற்றமிருக்கக் கண்டு, மிரண்டோடி வருவதைப்போல, மக்களாட்சியின் மாண்பில் சிந்தனையைச் செலவிட்டுவிட்டு, மக்களாட்சியை நடத்துவதாகக் கூறும் கூட்டத்தினர் செய்யும் அட்டூழியங்களைக் காணும்போது, நாம், வழி தெரியாத வனாந்தரத்திற்கு விரட்டப்படுகிறோம். உண்மை மக்களாட்சியை ஏற்படுத்த மனித சமுதாயம் இன்னும் எவ்வளவு தூரம் பிரயாணம் செய்யவேண்டுமோ என்ற திகைப்பு ஏற்படுகிறது!

* * *

'மக்களாட்சி' (Democracy) யின் முதல் அத்தியாயம், கிரேக்க நாட்டிலேதான் ஆரம்பிக்கிறது. அழிந்து

போன நாகரிகங்களிலே தலைசிறந்து விளங்குவது, கிரேக்க நாகரிகம். அது விட்டுப்போன செல்வங்களில் உயர்ந்தது 'மக்களாட்சி'.

போருக்குச் சென்ற வீரன், வெற்றி வாகையோடு திரும்பும் பொழுது, அவனுக்குப் புகழ் மாலை சூட்டி வரவேற்றது ஏதன்ஸ் நகரம். கலைக்குச் சிகரமான நாடகம் கற்பனைக் களஞ்சியமாக தீட்டப்பட்டு, தீரர்களுக்குப் பரணி பாடியது. புலவர்கள், கவிவாணர்கள், கற்தச்சர்கள், விஞ்ஞான வித்தகர்கள் எல்லோரும் ஒருங்கு குழுமி, ஏதன்ஸ் நகரின் வளத்தை வளர்த்துக் கொண்டிருந்த நேரம்! நகரின் மேட்டுக் குடியினரும், கலைவாணர்களும், கவிஞர்களும், போர் வீரர்களும் மக்களாட்சியின் அங்கத்தினர்கள். அவர்களுக்குள் பொதுக் காரியங்கள் அனைத்தும் விவாதித்து முடிவு செய்யப்பட்டன.

அந்த, முதல் பாராளு மன்றத்திலே மறைந்து கிடந்த பெருந்தவறு, அங்கே, ஏதன்ஸ் நகரின் பெரும்பாலான மக்கள் அனுமதிக்கப்படவில்லை. நகரின் முன்னேற்றத்திற்காக எலும்பை முறித்துக் காணிக்கையாக்கிய பாட்டாளிகள், 'அடிமைகள்' என்றே அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஏதன்ஸ் நகர மக்களின் ஆட்சி மன்றங்களில் இடம் கிடையாது. அவர்களுக்கு வாழ்க்கையை அநுபவிக்க நேரமே கிடையாது—உழைத்து, உழைத்து உருக்குலைந்துபோய் மக்கள் கூட்டத்திலே சேர்க்கப்படாத காரணத்தால், கிரேக்க நாட்டிற்கும் தங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது என்ற புழுங்கிய மனதினராகி விட்டனர்.

ஒரு பக்கத்திலே உயர்ந்த முறையில் நடந்து வந்த கிரேக்க மக்களாட்சி!

மறு பக்கத்திலே அந்த மக்களாட்சிக்குள் சேர்க்கப்படாமல் என்றும் அடிமைகளாய் இருந்த பரிதாப ஜீவன்கள்!!

இதுதான் ஸ்பார்ட்டா நகரத்துப் படை, கிரேக்க நாட்டை நோக்கி நகர்ந்த போது இருந்த நிலை.

ஏதன்ஸ் நகரைத் தூள் தூளாக்கியது ஸ்பார்ட்டா நகரத்துப் படை.

ஏதன்ஸ் நகர ஆட்சி மன்றங்களிலே இருந்தவர்கள் போர், போர் என்று அலறினர்.

அடிமையாக இருந்த கிரேக்க பாட்டாளி மக்கள், ஏதோ பலவான்களுக்குள் நடக்கும் போராட்டம் என்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். மக்களில் ஒருவனாகப் பாட்டாளி மக்கள் சேர்த்துக் கொள்ளப் படாத காரணத்தினால்தான், அடிமை, ஆபத்து நேரத்தில் ஏதன்ஸையும் அதில் சிறந்து வளர்ந்துவந்த 'மக்களாட்சி'யையும் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணவில்லை. அதன்பலன் கிரேக்க சாம்ராஜ்யம் அழிந்தது — நாகரிகம் அழிந்தது — முதன் முதலில் பரிட்சை செய்து பார்க்கப் பட்ட 'ஜனநாயகம்' தோல்வியடைந்தது.

கிரேக்கர்களின் அழிவுக்குப்பின், ரோமர்கள் அவர்களைப் பின்பற்றினார்கள். கிரேக்க நாகரிகத்தின் வளம், ரோமிலே பரிமளித்தது. ஆனால், அங்கும் 'அடிமை' மக்கள் பகுதியிலே சேர்க்கப்படவில்லை.

பின்னால், மதம் மனிதனின் சிந்தனையைச் சூறையாடியது. காவலன் மத பீடத்தோடு ஐக்கியமானான். வலிமையால் ஆதிக்கம் பெற்ற வீரன், மடத்தலைவர்களோடு பேரம் பேசி, அடிமைப்பட்ட மக்களுக்கு ஆண்டவனால் நியமிக்கப்பட்ட அரசனானான்.

அரச பரம்பரை உதித்தது.

'மக்களாட்சி', மத பீடத்தின் முன்னிலையில் பலியாக்கப்பட்டது. வளர்ந்து வந்த ஜனநாயகம் முளையில் அழிந்தது.

* * *

ஆண்டவனால் நியமிக்கப்பட்ட அரசனும், அவனைப் பாதுகாத்த மத பீடமும், மக்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தி, கிட்டத்தட்ட பத்து நூற்றாண்டுகள் அவர்களை அடிமையாக்கி வைத்திருந்தன.

விளைவித்த பொருள், உற்பத்தியான பண்டங்கள், இயற்கை கொடுத்த எண்ணற்ற செல்வங்கள் எல்லாம் ஆண்டவனுக்கே சொந்தமானது. அடிமையாக்கப்பட்ட மக்கள் வறுமைச் சுமையைத் தாங்க முடியாமல் அவதிப்பட்ட வாழ்க்கையில் நலிந்து போயினர்.

ஆண்டவனைத் தொழு! உன் துயரம் நீங்கும்! என்றான், குரு பீடத்தில் அமர்ந்திருந்தவன்.

அக்கிரமக்காரர்களிடம் அவதிப்பட்ட மனிதன், அதையும் கேட்டான்—அதன்படி நடந்தான்.

தவறாமல் தொழுதான். ஆனால், பலனை அவன் கண்டானில்லை, ஆண்டவனை வேண்டினான்! துதித்தான்!! — ஆனால், அந்த அடிமை கண்ட பலன், மன்னர்களின் அடக்குமுறை அதிகமாவதையும், பிரபுக்களின் கோலாகலத்திற்கு அவன் வாழ்வு பலியிடப்படுவதையும்தான்.

"ஐயோ, நான் உழைத்து உண்டாக்கியதை, பிரபு உண்டு களிப்பது ஏன்?"

'அது உன் தலை விதி' என்றான், மதத் தலைவன்.

"அப்படியா!" என்று கூறிக் கோயிலை நோக்கிப் போனான் ஒரு ஏழை, ஆண்டவனை வேண்டி, தன் விதியை மாற்றிக்கொள்ள.

"அப்படியா?" என்று கேட்டு 'நான் தலை விதியையே மாற்றுகிறேன்" என்று கூறிப்புறப்பட்டான், மற்றொரு ஏழை.

மன்னனையும், அவனுக்குப் பக்கத் துணையாக நிற்கும் படைவரிசையையும் கண்டு பயந்தான்.

ஐயோ! இந்தப்பலம் வாய்ந்த கூட்டத்தை எப்படி அழிப்பேன் என்று பெருமூச்செறிந்தான்.

பெருமூச்சை விட்டுக்கொண்டே சிந்தித்தான். சிந்திக்கச் சிந்திக்க அவன் உள்ளம் தெளிவடைந்தது. அவன் உழைப்பில் உண்டு, அவனையே அடிமையாக்கும் கொடுங்கோலர்கள் யார் என்று அறிந்து கொண்டான். ஆண்டவனின் திருநாமத்தின் மறைவில் எத்தனை விதமான அக்கிரமக்காரர்கள் கூட்டம் இருக்கிறது என்று கண்டுகொண்டான்.

'உரிமை! உரிமை!' என்று உரத்த குரலில் கத்தினான்.

'உரிமை ஏதடா உனக்கு, அடிமையே!' என்று படைகளை ஏவினான், அரசன்.

'படைக்கு அஞ்சோம்' என்று புகுந்தான் — 'அவனது' கூட்டம் புகுந்தது, அரண்மனைக்குள்.

மன்னனின் சர்வாதிகாரம் தகர்க்கப்பட்டது.

இந்த, உரிமைக் கட்டத்தின் ஆரம்பக் காட்சிதான், இங்கிலாந்தில் ஜான் மன்னன், 'மக்களே! உங்கள் சொற்படி நடப்பேன்' என்று கைபொப்பமிட்டது.

விடுதலைப் பயணம் துவங்கிய ஏழையின் சொல் கேளாத சார்லஸ் மன்னனின் தலை உருண்டது. கிராம்வெல், 'அரசனே நாட்டிற்கு வேண்டாம்' என்று கூறி, அதிகாரத்திலமர்ந்தான்.

பிரஞ்சு நாட்டிலே ஏழை எரிமலையானான். 'சமுதாயத்திலே ஏற்றத்தாழ்வு கூறும் எவனையும் ஒழி!' என்று வீராவேசத்தோடு எழுதினான் ரூசோ.

'ஆட்சி முறையிலேயே மாறுதல் செய்—அக்கிரமக் காரனை ஒழி என்று கூறிப் பேனா பிடித்தான்'— வால்ட்டேர்.

'மக்களே! நீங்களே இந்நாட்டுக்குரியவர்கள். உங்கள் சொத்துத்தான் அரண்மனையும், பளிங்கு மண்டபமும், பணிமனைகளும். உங்களுக்கு அறிவு வளராதபடி முட்டுக்கட்டைபோடுகிறது இந்த ஆளும் வர்க்கம். அதை ஒழியுங்கள்' என்று நாடெங்கும் சிந்தனைத் தீயை பற்றவைத்தான் டேட்ராய்ட்.

'சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்துவம்!!!—என்று பிரஞ்சு நாடே முழங்கிற்று.

வரலாற்றிலே காணப்படாத பெரும் புரட்சி பூத்தது.

மன்னனின் தலைமாத்திரமல்ல - அவனைக் கூடி நின்று ஏழையை உறிஞ்சிய ஆண்டான் பரம்பரையைச் சேர்ந்தவர்களின் தலையையும் சேர்த்து உருட்டினர், புரட்சித் தீயில் கொதித்தெழுந்த பிரெஞ்சு மக்கள்.

மக்களுக்கு மக்கள், பேதம் பாராட்டுபவன் அரண்மனை வாசியானாலும், ஆஸ்ரம வாசியானாலும் ஒழிப்போம் என்று எக்காளமிட்டு பவனி வந்தான் எழுச்சி கொண்ட ஏழை.

"மனிதனுக்கு மனிதன் பேதமில்லை. அவர்களில் அடிமையுமில்லை —ஆண்டானுமில்லை. ஆகவே மனிதரெல்லாருக்கும் உரிமை! உரிமை!!" என்று முழக்கமிட்டான் தாமஸ் பேயின்.

அவன் அமெரிக்காவிலே சுதந்திரப் போராட்டத்திலே கலந்து கொண்டு வெற்றிக்கொடி நாட்டினான்.

இங்கிலாந்து நாட்டிலே உரிமைக்குப் போரிட்டு நாடுகடத்தப் பட்டான்.

பிரெஞ்சுப் புரட்சியிலே இரத்தம் சொரிந்தான்.!

ஒரு தாமஸ் பெயினல்ல 18-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலே ஐரோப்பிய அறிவுலகமே, மனிதன் இழந்த உரிமையைத் திரும்பப்பெறுவதிலே ஈடுபட்டது.

'அரசன்' என்றால் "அவனை ஒழி!" என்ற முழக்கம் எழும்பாத நாடே கிடையாது.

கிரேக்கநாகரிகத்தோடு அழிக்கப்பட்ட ஜனநாயகம் புது வாழ்வு பெற்றது.

"தம்பி! உனக்குச் சோறு வேண்டுமா? சுகம் வேண்டுமா? வாழ்க்கை வாடாத மலராக வேண்டுமா? இந்த உலகம் இன்பப் பூங்காவாக வேண்டுமா? எல்லாவற்றிற்கும் பாதை மக்களாட்சிதான்!—வா, போகலாம் அந்த பாதையில்!" என்று கூறி புறப்பட்டனர் வெற்றிவாகைசூடிய மக்கள்.

கிரேக்க நாட்டிலே இருந்து, அழிந்த 'மக்களாட்சி' நாட்டின் போர் முறையைக் கவனிக்கவும், மேட்டுக் குடியினரின் பிரச்னைகளை தீர்க்கவும்தான் பயன்பட்டது. ஆனால் பிரெஞ்சுப்புரட்சிக்குப் பிறகு மக்களாட்சிக்கே புதிய பொருள் கொடுக்கப்பட்டது.

நாட்டைப் பாதுகாக்க மாத்திரமல்ல; அல்லது நாட்டில் திரட்டிய பணத்தைப் பளிங்கு மண்டபம் கட்டி அதில் வீரர்களின் கூத்தைக் களிப்பதற்கு மட்டுமல்ல, மக்களாட்சி.

மறுமலர்ச்சியடைந்த ஐரோப்பாவிலே 'மக்களாட்சி' என்றால் மக்கள் — மக்களால்—மக்களுக்காக— ஏற்படுத்தப்பட்ட ஆட்சிதான் 'மக்களாட்சி' என்று ஏற்பட்டது.

மக்களாட்சியின் வேலைகள், மக்களின் வாழ்க்கையை இன்பமுறச் செய்து, அடிமைத் தளையை அறுத்து, உரிமையைப் பொதுவுடைமையாக்கி ஆண்டான் அடிமை என்ற முறைக்குச் சாவு மணியடிப்பதுதான். இப்படிப்பட்ட உயர்ந்த எண்ணங்களைத்தான் மக்கள் மனதிலே வாரித்தூவி இருந்தனர் வால்ட்டேர், ரூசோ, டேட்ராய்ட், தாமஸ் பெயின் மற்றும் புரட்சி எழுத்தாளர்கள் அத்தனைபேரும்.

இருட்டறையிலிருந்து ஓடிவந்த, அக்கிரமக்கார ஆளும் வர்க்கத்தையே ஒழித்த பாட்டாளி வர்க்கம் அடுத்த கட்டத்திலே திகைத்து நின்றது.

கொடுங்கோல் மன்னனை ஒழித்தாகிவிட்டது. கொடிய படைத்தலைவர்களை ஒழித்தாகிவிட்டது. பிரபுக்களை ஒழித்தாகிவிட்டது. அவர்களுக்குப் பக்கமேளம் கொட்டியவர்களின் தலையை உடலிலிருந்து பிரித்தாகிவிட்டது. இனிச் செய்வது என்ன? பொதுக் காரியத்தை முறைமைப்படுத்தும் அரசாங்கத்தைக் கவனிப்பது எங்ஙனம்?

இரத்தக் கறைகளோடு திரும்பி வந்த மனிதனின் மூளைக்கு எட்டாத பிரச்னையாக இருந்தது இந்த விஷயம்.

"அதைப்பற்றி ஏனப்பா அவ்வளவு விசாரம், உனக்கு. நாங்களிருக்கிறோம் — உன் காரியத்தைக் கவனிக்க" என்று புறப்பட்டது ஒரு சில அரசியல் வாதிகளின் கூட்டம். அதிலே, மறுமலர்ச்சிக்குப் பிறகு இயந்திர உதவியால் வெளிநாடுகளில் வியாபாரம் செய்து புதிய பணக்காரர்களானவர்களும் சேர்ந்து கொண்டனர்.

புரட்சிக்காக இரத்தம் சொட்டிய பாட்டாளி மகன் மறுபடியும் சிந்தித்தான்.

"ஏனப்பா, இன்னும் யோசனை? சில ஆண்டுகளுக்கு நாங்கள் ஆட்சி செய்கிறோம். பிறகு மறுபடியும் உன்னிடம் வந்து ஓட்டுப் பெற்றே ஆட்சி மன்றம் ஏறுகிறோம். அந்த இடைக்காலத்திலே எங்கள் ஆட்சி பிடிக்காவிட்டால் எங்களுக்கு ஆட்சி மன்ற அனுமதிச் சீட்டு கொடுக்காதே!" என்றான் ஆள, முன்வந்தவன்.

இருக்கின்ற நிலைமையில் வேறு வழியில்லாமல் "எங்கள் சார்பில் நீங்கள் ஆளுங்கள். ஆனால் இந்த அதிகாரம் உங்கள் கையில் தொடுப்

பது உலக மக்களின் நல்வாழ்வுக்காக'' என்று கூறிக் கொண்டே மன்னனுக்குப்பதில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை, ஆட்சியை நடத்தச் சொல்லி அனுப்பி வைத்தனர்.

மக்களாட்சியின் மாண்புகளை உலகமெங்கும் நடைமுறையில் கொண்டுவர மக்களின் பிரதிநிதித்துவ அரசாங்கம் நிறுவப் பெற்றது. இங்கிலாந்து முதலிய ஓரிரு நாடுகளில் அரசனிருந்தாலும், அவன் மக்கள் மன்றமாகிய பாராளு மன்றத்திற்கு அடங்கி நடக்க வேண்டியவனே என்ற விதி ஏற்படுத்தப்பட்டது.

'மக்களாட்சி' ஏற்படுத்தி விட்டோம் என்று மகிழ்ச்சியோடு திரும்பினர் புரட்சிவீரர்கள். ஆனால் அவர்கள் மறுபடியும் ஏமாற்றப் பட்டனர் என்பதை உணர வில்லை.

ஆட்சி மன்றங்களுக்கு அனுப்பப் பட்ட அத்தனை பிரதிநிதிகளும் உலக மக்களின் இன்ப வாழ்வுக்காக அதிகாரம் தங்களிடம் கொடுக்கப் பட்டதாகக் கருதவில்லை. அரசனுக்குப் பதில் தங்கள் கையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி அதை நமக்கேவைத்துக் கொள்ள வழியைபார்த்தால் போதுமென்ற முடிவுக்கு வந்து விட்டனர்.

"ஐயோ! பசிக்கிறதே!'' என்று கூறிய ஐரோப்பியனுக்கு "இதோ, தூரக்கிழக்கு நாடுகளிலிருந்து வந்த உணவுப் பொருள்கள்''என்று வாரி வீசினன் ஆட்சி மன்றமேறியவன். "தூரக்கிழக்கிலிருந்தா......? அப்படியானால் அந்தநாட்டு மக்களை நீ சுரண்டினையா?'' என்றான் புரட்சி கீதத்தை மறக்காத அந்த மாவீரன்.

"நாம் சுரண்டவில்லையே! இது பண்டமாற்று. அந்த ஆசிபாக்காரர்களுக்குத் துணி கொடுத்தோம்— அதற்கு பதில் அவனிடமிருந்து உணவு பெற்றோம்'' என்றான் ஆளும் பிரதிநிதி.

சரிதான் என்று கேட்டுக்கொண்டான் புரட்சி வீரன்.

அடுத்தக் கட்டத்திலே "நீ, ஏனப்பா, அந்த நாட்டு மக்களை துன்புறுத்தி, அந்த நாட்டையே அடிமைப் படுத்தி விட்டாயாமே! என்றான் உரிமைக்காகப் போராடிய ஏழை.

"அடிமைப் படுத்த வில்லையே. அந்த நாட்டுமக்கள் காட்டு மிராண்டிகளாகத் தங்களைத்தாங்களே காப்பாற்றிக் கொள்ள முடியாமல் அவதிப் படுகின்றனர். அவர்களைக் காப்பாற்றுவதும்— அவர்களை நாகரிக உலகுக்கு அழைத்து வருவதும் நம் திட்டங்களில் முக்கியமானது தானே?'' என்றான் அரசாங்கத்தை நடத்திய மக்கள் பிரதிநிதி.

இவைகளை உண்மையென்று நம்புவதைத் தவிர வேறு வழியில்லை ஓட்டுக் கொடுத்த ஏழைக்கு.

இப்படி வியாபார நோக்கமும், அதிகார வெறியும் கொண்டவர்கள் புரட்சியில் பூத்த மக்களாட்சியில் நுழைந்த காரணத்தால், மக்களின் உரிமை, சமத்துவம் என்ற ஜனநாயகத்தின் உயிர்க் கொள்கைகள் காற்றில் பறக்கவிடப்பட்டு, புரட்சி நடத்தி, அந்தக் கொள்கைக்காக தியாகம் பல புரிந்த மக்களை ஏமாற்றப்பட்டனர்.

இந்த மாறுதல் நடப்பதற்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகி விட்டன. இதற்குள் மறு மலர்ச்சியில் தோன்றிய 'உலக மக்களின் உரிமை' என்ற எண்ணம் மறக்கடிக்கப்பட்டு, 'மக்களாட்சி' என்றால் மக்களின் ஓட்டுரிமை பெற்ற பிரதிநிதிகள் ஆளும் ஆட்சிதான் என்று பொருள்பட நிலைமைகள் மாறிவிட்டன.

மனிதனை மனிதன் சுரண்டாத, மனிதன் உரிமையை மனிதன் பறிக்காத சுபிட்ச வாழ்வைத்தான் ஜனநாயகத்தைத் துவக்கிய புரட்சி வீரர்கள் அத்தனை பேரும் எக்காளமிட்டுக் கூறினர்.

"மனிதனை, மனிதன் சுரண்டக் கூடாது!'

"மனிதன் உரிமையை மனிதன் பறிக்கக்கூடாது!''

"எல்லோரும் சுபீட்சமாக வாழ வேண்டும்!''

என்கிற அந்தப் புரட்சி வீரர்களின் இன்பக் கனவைச் சிதைத்தனர், ஆளும் மன்றமேறிய சந்தர்ப்பவாதிகள். சாறு நீக்கிய சக்கையாக்கினர், ஜனநாயகத்தை!

மக்களாட்சிக்கு திரையிடப்பட்டு மக்களாட்சி என்றாலே பாராளு மன்றங்களை அமைத்து, அதில் எப்படிச் சட்டமியற்றுவது, யார் எந்த வேலைக்குச் செல்வது என்பதை விவாதிக்கும் கூடம் அமைப்பது தான் என்று மாற்றி விட்டனர். பாராளு மன்றங்கள், மக்களாட்சியின் ஒரு அங்கம். முக்கியமான அங்கம்கூட. ஆனால், அது அமைக்கப்பட்டாலே மக்களாட்சி அமைந்துவிட்டதாக கூறுவது தவறு. மக்களாட்சி மகத்தான தத்துவத்தை உள்ளடக்கியது. அந்தப் பெரும் தத்துவத்திற்காக— அதை நடைமுறையில் கொண்டு வந்து உலக மக்கள் யாவருடைய நல் வாழ்வுக்காக உழைக்க உதவும் சாதனம்தான் பிரதிநிதித்துவ சர்க்கார்.

இந்தநிலை ஏற்பட முடியாதவாறு புரட்சிக் கனலை அடக்கிய ஆதிபத்தியக் கூட்டம், மக்களின் அரசாங்கம் என்று கூறிக்கொண்டே, உலக மக்களின் உரிமைகளைப் பறித்து, ஆண்டான்— அடிமை முறையைச் சட்டபூர்வமாகப் பாதுகாத்துக்கொண்டு ஆட்சி செய்கிறது. அதன் வலையில் விழுந்த மக்களுக்கும், 'மலேயாவில் கணபதிகளை தூக்கிலிடுவது மனித தர்மத்திற்கே விரோதமானதாச்சே! ஆப்ரிக்காவில் அந்த நாட்டு மக்களை அவதிக்காளாக்குகிறாயாமே! உலகம் பூராவும் ஏமாந்தவர்களின் சுதந்திரத்தைத் தட்டிப் பறிக்கிறாயாமே!' என்றெல்லாம் கேட்க முடியவில்லை.

கேட்பதற்கு முன்னாலேயே பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம், "அந்த பிற்பட்ட மக்களுக்கு நாகரிகத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் பொறுப்பு நம்முடைய பொறுப்பாயிற்றே. நாமொன்றும் சுதந்திரத்தைப் பறிக்கும் கொடுங்கோலர்களல்ல. அவர்கள் தங்களைத் தாங்களே ஆளப் பக்குவப்படும்போது கட்டாயம் அந்த அரசபாரத்தை அவர்கள் தலையில் சுமத்துவோம். அதுவரை அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமை'' என்கிறது.

இதேபோலப் பிரெஞ்சுப் பிரதிநிதித்துவ சர்க்கார் "இந்தோசைனாவிலே, மொராக்காவிலே, டுனீஸியாவிலே, இன்னும் எல்லா காலனி நாடுகளிலும், அவர்களுக்கு ஆளும் திறன் கிடைத்தவுடன் கட்டாயம் சுதந்திரம் கொடுப்போம். அதுவரை அந்தப் பரிதாப மக்களை நாம்தானே காப்பாற்ற வேண்டும்'' என்கிறது.

இப்படியே எல்லா ஜனநாயகப் போர்வையிலிருக்கும் வல்லரசுகள் கூறுகின்றன.

'மக்களாட்சி'க்காக உயிர்விட்ட பரம்பரையைச் சேர்ந்த அத்தனை மக்களும், அது சரிதான் என்று நம்பவேண்டிய சூழ்நிலையில் வளர்க்கப்படுகிறார்கள்.

இந்த ஏமாற்றுத்தனத்திலிருந்து விடுபட்டு, ஓரிரு அறிவாளிகள், "உரிமை! உரிமை!! உலக மக்களுக்கெல்லாம் உரிமை!" என்று முழக்கமிட்டால்கூட அதை பயனற்ற கூச்சலாக்குகிறது, அதிகார வர்க்கம். மனித உரிமைக்காக உலக மக்களை ஒன்று சேர்க்க முயலும் எந்தச் சாதாரண மனிதனின் கூக்குரலையும் பக்கத்து நாட்டுக்குக்கூட கேட்க முடியாதவாறு அடக்கிவிடுகிறது, முதலாளிகளின் ஆதிக்கத்திலிருக்கும் பத்திரிகை முதலிய பிரச்சார ஸ்தாபனங்கள்.

இப்படி 'மக்களாட்சி' முறையை முதலாளி வர்க்கம் கைப்பற்றிக்கொண்டு அதன் கொள்கைகளை மறந்து கொடுங்கோலர்களின் இருப்பிடமாக மக்களாட்சி மாற்றப்பட்டதைக் கண்டு மனம் புழுங்கிய புரட்சி வீரர்கள் அதினினும் மேலானதொன்றைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டனர்.

உள் நாட்டிலேயும் முதலாளி ஜனநாயகப் போர்வையில் ஆட்சி செலுத்துகிறான். வெளி உலகத்தையும் ஜனநாயகத்தின் பேரால் அடிமைப்படுத்துகிறான். இந்த அக்கிரமத்தை ஒழிக்க வழி என்ன?

இதற்கு, இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் லண்டன் நூல் நிலையத்திலே இருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களையும் துருவிக்கொண்டிருந்த மார்க்ஸ் கொடுத்த பதில் "உலகப்பாட்டாளிவர்க்கமே, ஒன்று சேர்!" என்பதுதான்.

இந்த விசித்திரமான சூழ்நிலைகள் உற்பத்தியாகும் என்று ஆராய்ச்சி செய்தபின்தான் 'மக்களாட்சி' என்றைக்கும் முதலாளி வர்க்கத்தை ஆட்சியில் வைத்து பாட்டாளிகளை அடிமைகளாகவே வைத்திருக்கும் என்று முடிவு செய்து "உலக பாட்டாளி மக்களே, ஒன்று சேருங்கள்!" என்று முழக்கினான், மார்க்ஸ்.

மார்க்ஸின் தத்துவம் 'மக்களாட்சியை' உதறித்தள்ளி நேரடியாக மாற்றி 'மக்களின் சர்வாதிகார ஆட்சி''யை (Dictatorship of the Proletariat) ஏற்படுத்த வேண்டுமென்பதுதான். மக்களின் தயவால் ஆதிக்கமேறியவர்கள், கடைசியில் மக்களையே ஏமாற்றி அவர்கள் தயவாலேயே வல்லரசுகளாக மாறி மக்களின் உரிமைகளைப் பறித்து, மக்களை மக்களோடு மோதவிட்டு போர், போர் என்ற வெறியை உண்டாக்கி அந்த நேரத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்வதைக்கண்டு மனம் நொந்துபோனவர்கள் அத்தனை பேரும் சென்ற உலகப் போருக்குப் (1914—18) பிறகு கம்யூனிஸ்டுகளானார்கள்.

கொடுங்கோலன் ஜார் வீழ்த்தப்பட்டு ஜனநாயகம் நீக்கிய கம்யூனிஸ்ட் அரசாங்கம் நிறுவப்பெற்றது. மக்களின் சர்வாதிகார ஆட்சியே இது; மக்களின் ஜனநாயக ஆட்சியல்ல என்று தெளிவாகக்கூறி மற்றக்கட்சிகளுக்கு இந்தநாட்டிலே இடமில்லை என்று கூறினான் லெனின். மற்ற நாடுகளிலும் ஆதிக்கக்காரர்கள் ஒழிக்கப்பட்டு, கம்யூனிசம் நிறுவப்படவேண்டியமுயற்சிகளுக்கு பாட்டாளிகளின் தாயகமாக அமைந்த ரஷ்யா உதவி செய்யும் என்று அறிவித்தான. அந்த முயற்சியிலே அன்று முதல் ரஷ்யா ஈடுபட்டது.

இதைக் கண்ட பிறகு தான் மக்களாட்சியைக் காப்பாற்றி வைத்திருப்பதாகக் கூறியவர்கள் திடீரென்று விழித்துக் கொண்டனர்.

'கம்யூனிசம்' சர்வாதிகாரத் தன்மை கொண்டது. மக்களாட்சிக்குக் குழிதோண்டும் ஆபத்தான வியாதி. அதை அழிக்க வாரீர்! என்று கூறிக்கொண்டு புறப்பட்டு விட்டனர் இந்தப் போலி ஜனநாயக வாதிகள்.

'மக்களாட்சி' மக்களின் உரிமைகளைப்பறித்துமுதலாளிகளின் அரசு ஏற்படத்தான் பயன்படுகிறது — வாரீர் அதைஒழிக்க'' என்று முழங்கிக்கொண்டு புறப்பட்டு விட்டனர், கம்யூனிஸ்டுகள், மற்றோர்புறம்.

இந்த இரண்டு நேர் எதிரான சக்திகளிடையே மாட்டிக்கொண்ட அப்பாவி மக்கள் அவதிக்காளாகி ஒன்றும் புரியாமல் நிற்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையிலேநாம் கூர்ந்து கவனிக்கும் போது தென்படுவது இதுதான். மக்களாட்சியை நடத்துவதாகக் கூறிக்கொண்டு மக்களை சூறையாடும் இந்த முதலாளி வர்க்கம் ஒழிக்கப்பட வேண்டியதுதான்.

ஆனால் அதே நேரத்தில் 'மக்களாட்சி' எனும் மாண்புமிக்க தத்துவத்தை ஆதிபத்தியக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர் என்ற காரணத்திற்காக மக்களாட்சியே கூடாது என்று கூறுவதும் தவறு. மக்களாட்சி மிக உயர்ந்த நோக்கங்களோடு மறுமலர்ச்சிக்குப்பின் தோன்றியது. அதன்அடிப்படைக் கொள்கைகள் கம்யூனிசம்தான்.

அப்பேற்பட்ட 'ஜனநாயகம்' இன்று முதலாளிகள்வசம் மாட்டிக்கொண்டிருக்கிறது. அதை மீட்டு உண்மை மக்களாட்சியை நிறுவ முயற்சி செய்து, அதில் வெற்றியடைந்தால் மார்க்ஸ் நினைத்த பாட்டாளிகள் ராஜ்யம் மலரும். இதை விட்டு குறுக்கு வழிகளில் 'பாட்டாளிகள் ராஜ்யம்' அமைக்க முயற்சித்தால், அதனால் அடையும் பயனைவிட, நஷ்டம் தான் அதிகமாகிறது என்பதை சென்ற 25 ஆண்டுகளில் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

இந்த விதமான ஆராய்ச்சி செய்ததின் பலன்தானோ என்னவோ, இன்று இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஜனநாயக மன்றங்களில் நுழைந்து மக்கள் உரிமைக்காக போராடுகிறது. இந்தப் போக்கை நாம் வரவேற்கிறோம்.

மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகத்தில், நாட்டு நிலைமைக்கு ஒவ்வாத போர் முறைகளைப்பற்றி சிந்திப்பதை விட்டு மக்களாட்சி மன்றங்களிலே அவர்கள் உட்கார்ந்திருப்பது நமக்கு வருங்காலத்தில் அதிக நம்பிக்கையைக் கொடுக்கிறது.

மக்களாட்சியின் மாண்புபெரிது.

அதனை இன்றையதினம் வெறும் ஆளும் முறை என்றளவில் தான் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றனர் போலி ஜனநாயக வாதிகள். ஆதிக்கக்காரன், அக்கிரமக்காரன், சுரண்டும் முதலாளி, சூறையாடும் வியாபாரி எல்லோரும் அந்த நிழலிலே சுக வாழ்வு நடத்துகிறார்கள்.

மக்களாட்சி வெறும் ஆளும்

தாயக விடுதலை

'சம்பத்'

தாயகம் — விடுதலை — இந்த இரண்டு சொற்களும் அழகானவை மட்டுமல்ல. வரலாறு முழுவதும் நிரம்பியுள்ள பலபெரும் போர்களுக்கும், பயங்கரப் புரட்சிகளுக்கும் காரணமாய் விளங்கும் அற்புதமான சக்தி பொருந்திய சொற்கள். அன்னியன் ஆளுகைக்கும் ஆதிக்கக்காரர்களின் கொடுமைக்கும், கொள்ளைக்கும் ஓர் இனம் ஆளாகி, "கொள்ளை இனித் தர முடியாது—கொடுமை இனித்தாளமுடியாது—பிறிதொருவர் ஆதிக்கம் இனிப் பொறுக்க முடியாது—அடக்குமுறையை இனி அனுமதிக்க முடியாது" என்ற உணர்வு பெறத் தொடங்கும்போது உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும், நம்பிக்கையோடும், துணிவோடும் உச்சரிக்கப்படும் இந்த இரு சொற்கள் உறங்கிக்கிடந்த பல்வேறு இனங்களுக்குப் பல்வேறு சமயங்களில் விழிப்பைத் தந்து, விசையை முடுக்கி, ஆதிக்கக், கொடுமையை வீழ்த்தப் பயன்பட்டிருக்கின்றன. இந்தச்சொற்களைப்புரிந்து கொள்ளவும், உச்சரிக்கவும் சமுதாயம் அவ்வப்போது அனுபவித்த துன்பங்கள், செய்த தியாகங்கள் கணக்கிலடங்கா.

இந்த வசீகரச் சொற்களை—வரலாற்றிலே பெரும் பெரும் மாற்றங்களை, பெரும் போராட்டங்களை விளைத்த, இந்த வசீகரமான வார்த்தைகளை மக்கள் புரிந்துகொள்வதாலல்லவா தாயகத்தை நேசிக்கவும் அது அன்னியன் வசம் படும்போது அதை மீட்கப் போராடவும் செய்கிறார்கள் என்ற உண்மை தெரிந்த நவீன ஏகாதிபத்தியங்கள் புதுத் திட்டங்களைத் தீட்டும் பணியில் இறங்கிவிட்டன. "இதுவரை எது செய்தாலும் ஏனென்று கேட்காதவன், என்ன கொடுமை விளைத்தாலும் ஏற்றுக்கொண்டவன், இந்த மந்திரச் சொற்களின் பொருள் புரிந்த பிறகு ஏறிட்டுப்பார்க்கிறான். இதுவரை புனல் சொரிந்து வந்த அவன் கண்களில்—கனல் தெறிக்கிறது. 'ஏன்?' என்று கேட்கிறான் 'நீயார்?' என்று வினவுகிறான். "இங்கென்ன வேலை? இனி செல்லாது உன் சபம். கத்தியைக் கீழே போடு. கடையைக் கட்டு. உயிர்மீது ஆசை இருந்தால் ஓடு. திரும்பிப் பார்க்காமல ஓடு, எனக் கட்டளை பிறப்பிக்கிறான். கணம் தாமதித்தாலும் உயிரைத் திரணமென மதித்து வெஞ்சமர் புரிகிறான். புதிய மனிதனாக — புரியாத புதிராக—சீறும் புலியாக மாறிவிடுகிறான்" என்பதைப் பாடமாகப் பெற்ற நவீன ஆதிக்கக் காரர்கள் புது முறைகளைக் கையாளத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்தப் 'புதுமுறைகளைக்'கையாண்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள முயலும் ஏகாதிபத்தியங்களுள், இன்று இன்பத் திராவிடத்தை தமது காலடியில் வைத்து ஆளும் வடநாட்டு ஆதிக்கக்காரர்கள், டில்லி ஏகாதிபத்யம் தமது பிடி தளராமல் இருக்க, கையில் கிடைத்த கொழுத்தவேட்டைக்காடு, போகபூமி—திராவிடம், நழுவிவிடாமல் பாதுகாத்துக் கொள்ளக் கையாளும் முறை மிக விசித்திரமானது. ஆரம்பத்தில் ஓரளவு வெற்றியையும் அவர்களுக்குத் தேடிதந்திருக்கிறது. அந்த 'முறையின்' — 'வழியின்' அடிப்படை சற்று வேடிக்கையானது. 'அடிமைகள்' தங்களை ஆளுவோன் அன்னியன் என அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் ஒரு 'சோந்தத்தை'க் கற்பிக்கவேண்டும். இது பலித்துவிட்டால் தனது தாயகம் அடிமைப்பட்டிருக்கிறது என்ற உண்மை அவனுக்குத் தெரியவே மார்க்கம் இல்லை. மெல்ல மெல்லத் தங்கள் இந்தி மொழியை 'அடிமைகள்' கற்றுக்கொள்ள நயத்தாலும் பயத்தாலும் ஏற்பாடு செய்துவிட்டால் மிக 'நல்ல அடிமைகள்'—கலகம் செய்யாத அடிமைகள், தயாராகி வருவார்கள். பிறகு சவாரி செய்தாலும், சவுக்காலடித்தாலும் 'குதிரை' இடக்கு செய்ய மார்க்கம் இராது. அந்த அடிப்படையின்மீது தான் வடநாட்டு ஆதிக்கக்காரர்களின் ஏகாதிபத்யக் கனவு உருவாகியுள்ளது. இந்த 'முறையின்'

முறையல்ல. உலக மக்களுக்கு நல்வாழ்வு தரக்கூடிய இன்ப பூங்கா! வாரீர், அதனைச்செப்பனிட என்று அழைக்கிறோம், மனித வாழ்வில் அக்கரை கொண்ட எல்லோரையும்,

அந்த மகத்தான காரியத்தைச் சாதிக்க மார்பிலே சந்தனமும் கையிலே சேறும் பூசி நிற்கும் சுயநலமிகளால் முடியாது.

அவர்கள் இருக்கின்ற ஏற்றத்தாழ்வான சமுதாயத்தைப் பாதுகாக்கும்ஏமாற்றுவாதிகள். நீக்ரோக்களுக்கு உரிமைதர மறுக்கும் இனவெறியர்கள்.

பிற்பட்ட நிலையிலிருக்கும் ஆப்ரிக்கருக்கு சுதந்திரம் வழங்கமறுக்கும் சுயநலமிகள்.

மிகச்சாதாரண ஹிந்து சீர்திருத்த மசோதாவைக்கூட நிறைவேற்றமுடியாத பிற்போக்கு வாதிகள். 'மக்களாட்சி' நிறுவப்படும் போது அவர்களும் ஒழிக்கப்பட வேண்டியவர்கள்தான்!

ஆகவே வாரீர்! உண்மை மக்களாட்சியின் மாண்பினை உலகறியச் செய்வோம், என்று இதுபோது ஒரு குரல் எழும்புகிறது— முழக்கமாகவேண்டும் விரைவில் — அதற்கான அணிவகுப்பிலே சேரவாரீர் என்று அனைவரையும் அழைக்கிறோம்.

முதல் கட்டம் உபதேச காண்டம். “நமது தாயகம் இந்தியா. நாமெல்லாம் பாரதமாதாவின் புத்திரர்கள், அன்னியனை—வெள்ளையனை விரட்டியடிக்க இமயம் முதல் குமரிவரை உள்ள ‘நாம்’ அனைவரும் போராடினோம், வென்றோம். வெள்ளையன் வெளியேறி விட்டான், ‘நாம்’ அனைவரும் மொழியால் கலையால், நாகரிகத்தால், உருவத்தால் ஒருவருக்கொருவர் மாறுபட்டிருப்பினும் ‘நாம்’ அனைவரும் ஒன்றே, இதற்குப் பெயர்தான் ‘பேதத்தில் ஒற்றுமை’ (Unity in diversity) என்பது புரியாத சொற்றொடராகக் காணப்படுகிறதா? பாவம்! நீங்கள் என்னசெய்வீர்கள்? படுபாவி வெள்ளைக்காரன் உங்களுக்குப் போதுமான கல்வி யளிக்காமல் சதிசெய்து விட்டான், எதற்கும் நாங்களிருக்கிறோம்! எங்கள் தலைவர் மாகிலாமணி நேரு இருக்கிறார் உங்களைக் காப்பாற்ற, எதற்கும் இந்தி கற்றுக் கொள்ளுங்கள்; எல்லா அறிவும் தானே வரும், நாட்டிற்கு ஒரு பொதுப் பாஷை வேண்டும். நாங்கள் பேசும் இந்தி மொழியை நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு வேற்றுமைக்கு இடமே இருக்காது” என்று இப்படி உபதேசம் திராவிடத்திற்கு தினந்தோறும் தரப்படுகிறது. இது அவர்களுக்கு முழுதும் பலன் தராமல் போய் விடவில்லை, ஓரளவுநம்பிக்கையையும் ஊட்டியிருக்கிறது அவர்களுக்கு,

ஆனால் ,இந்த முறை: அவர்களுக்கு முழுதும் பலன்தர ஆரம்பித்து விட்டால் நமது அடிமைத்தனம் தனக்கு ஈடு இணை உலகில் வேறெங்கும் இருந்ததில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்குச் சிறப்புப்பெறும்! உலகமே நம்மைக்கண்டு பரிதாபப்படும், பலவித நோய்களால் பீடிக்கப்பட்டவர்களைக்காட்டிலும், பித்தனிடத்தில் மட்டும் ஏன் நமது பரிதாபம் அதிகமாக உண்டாகிறது? தொழுநோய் பிடித்தவனானாலும், காச நோய்க்காரனானாலும் அவன் உணர்வான் தன்னைப் பிடித்திருக்கும் நோய் எத்தகையது என்பதை. அதைக் குணப்படுத்திக் கொள்ளச் சதா முயற்சித்துக் கொண்டிருப்பான், ஆனால் பித்தம் பிடித்தவனோ, தனதுமூளையைத்தாக்கி இருக்கும் கொடிய நோய்பற்றி அறியும் வாய்ப்பற்றவனாய், தன்னை நோய் நொடி ஒன்றில்லா ஆரோக்கிய புருஷனாக எண்ணிக் கொண்டு பல இன்னல்களுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டு விரைவில் மாளுவான். நோயின் உச்ச நிலையில்—பெற்றவர்களை, சுற்றத்தை, நண்பர்களை ஏசிப்பேசி எட்டி உதைப்பான். அதே நேரத்தில் பகைவனுக்கு, தன்னைத்தனது வீட்டைக் கொள்ளையடிக்கவரும் திருடனுக்குப் பரிவு காட்டுவான், துணைபுரிவான், சொந்தம் பாராட்டிக் கொஞ்சுவான், உலகோர் அவன் நிலைகண்டு இரங்குவதைத் தவிர வேறென்ன செய்வார்கள்?

அந்தப் பித்தனின் நிலைக்கு திராவிடம் சென்று விடாமல்: தெளிவோடும் துணிவோடும் உண்மைகளைக்காணவும், மானத்துக்கு—விடுதலைக்குப்போராடும் ஆற்றலை வெகு விரைவில் பெறவும் வேண்டும். அன்னிய ஆதிக்கத்தை அப்போதுதான் வேரோடு களைந்தெறிய முடியும்.

எதிரிகளின் கற்பனைகள் — சதி திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளப்போதித்தஉபதேசங்கள், இன்று திராவிடத்தின் குடிகளை—பல்வேறு கூறுகளாக்கி விட்டிருக்கிறது. களைந்தெறியப்பட வேண்டிய பல நச்சுக்கருத்துக்களில் முதலாவது ‘எனது தாயகம் திராவிடமல்ல, இந்தியாதான் போலோ பாரத் மாதாகீஜே!’ என்று கருதச் செய்யும் எண்ணம்தான். அந்த எண்ணத்தில் மூழ்கியவர்கள்தாம் முதலில் கவனிக்கப்படவேண்டிய நோயாளிகள்! அவர்களுக்கு அந்த எண்ணத்தை உண்டாக்கத் துணை நிற்கும் சம்பவம் என்ன என்பதைச் சற்றுக் கவனிக்க வேண்டும். வெள்ளையனை—நமது பழையஎஜமானனை எதிர்த்து இமயம் முதல் குமரி வரை போராட்டம் நடந்தது. அவன் ஒரேசமயத்தில் நமக்கும், வடவருக்கும் எஜமானனாய் இருக்ததால் அவனை எதிர்த்து வடக்கும், தெற்கும் போராடின. அப்போது அடுத்தடுத்துச் . சொல்லப்பட்ட இரு கோஷங்கள் விளைவித்த குழப்பம்தான் நாம்மேலே குறிப்பிட்ட நோய்க்குக் காரணம். ‘வெள்ளையனே வெளியேறு’ ‘சுயராஜ்யம் பெறுவோம்’ என்ற இரு கோஷங்கள் சில சூழ்நிலைகளை ஏற்படுத்திவிட்டன். வெள்ளையன் வெளியேறினான். அனைவருக்கும் அதிலே மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியை அடுத்து நம்மைப் பிடித்தது ஒரு மயக்கம். ‘வெள்ளையனேவெளியேறு’ ‘சுயராஜ்யம் பெறுவோம்’ என்ற இரண்டுக்கும் இடையே ஒரு சந்து இருந்தது. பாக்கிஸ்தானைப் பெற்றுக்கொண்ட புத்திசாலிகளுக்குத் தெரிந்த அளவு நம்மில் பலருக்குத் தெரியாமல் போய்விட்டது. வெள்ளையன் வெளியேறியதும், சுயராஜ்யம் வந்துவிடும் என்று கூட அல்ல, வெள்ளையன் வெளியேறுவதுதான் சுயராஜ்யம் என்ற மயக்கம்தான் இன்றைய வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு முதலில் கிடைத்த ஆதாரம். குஜராத்தில் படேலும், வார்தாவில் காந்தியாரும் அலகாபாத்தில் நேருவும், கல்கத்தாவில் சி. ஆர். தாஸும், சென்னையில் ஆச்சாரியாரும், தூத்துக்குடியில் வ. உ. சியும், ஈரோட்டில் பெரியாரும், பம்பாயில் ஜின்னாவும், வங்கத்தில் போஸும் வெள்ளையனை வெளியேறச் செய்ய முயற்சித்தது உண்மைதான். அந்த முயற்சி ஒரு ஸ்தாபனத்தின் பேரால் நடந்ததும் உண்மைதான். ஆனால் இயற்கையில் எந்த அடிப்படையில் அந்த அமைப்புமுறை தோன்றியது? தாஸும், போஸும், காந்தியாரும் பட்டேலும், நேருவும், தங்கள் உடன் பிறந்தவர்கள் என்ற எண்ணம், அவர்களும் தாங்களும் ஒரே நாட்டைச்சேர்ந்த ஓர் இனமக்கள் என்ற பாசம் ஆச்சாரியாரை, பெரியாரை, ஜின்னாவை அவர்களோடு சேர்ந்து பணியாற்றச் செய்ததா எனில், நிச்சயம் இல்லை. ஒரே சூழ்நிலை, அதை மாற்றிக் கொள்ள அமைந்த ஒரே பரிகாரம். இவை மட்டுமல்ல. பாதிக்கப் பட்டவர்கள் பல இனத்தவராயினும் பாதித்த சூழ்நிலை—வெள்ளையர் ஆட்சி, ஒன்றுதான். அவரவர்களுக்கென பிரத்தியேகப். பிரச்னைகள் பல இருப்பினும் அனைவருடைய எல்லாப் பிரச்னைகளிலும் முதலிடம் வகித்தது வெள்ளையர் ஆதிக்கம். முதற் பிரச்னையைத் தீர்க்க அனைவரும் ஒன்று கூடினர். அனைவரின் கோரிக்கையும் ஒன்றாக அமைந்ததில் வியப்பில்லை. ஒரு தெருவில் உள்ள வீடுகள் அனைத்திலும் கன்னமிட்ட திருடன் ஒருவனை

என்பதனால், அவனைப் பிடிக்க வேண்டும் சொத்துக்களை மீட்க வேண்டும் என்று தான் முழங்குவார்கள். அதற்குத்தான் முயலுவார்கள். கள்ளன் பிடிபட்டு அவன் வசமிருந்த அத்தனை வீட்டுச் சொத்துக்களும் மீட்கப்பட்டு விட்டபின், அவரவர் உடைமையை அடையாளம் காட்டிப் பிரித்தெடுத்து அவரவர் வீடு செல்வது தானே நியாயம்? அதை விடுத்து திருட்டுக் கொடுத்ததிலும், திருடனைப் பிடியுங்கள் என்ற கோஷத்தை ஒரே சமயத்தில் முழக்கியதிலும் நமக்குள் ஒரு ஒற்றுமை உண்டாகி யிருக்கிறது. ஆகவே கள்ளனிடமிருந்து மீட்ட சொத்துக்களின் குவியலில் யாரும் கைவைக்காதீர்கள். உங்களுடையது எனப் பிரிக்காதீர்கள். நாமெல்லாம் இனி வேறல்ல. எல்லாம் ஒன்றே. ஆகவே இந்தச் சொத்துக்கள் அனைத்தும் என்வசம் இருக்கட்டும். என்வசம் என்றால்,நான் வேறு நீங்களெல்லாம் வேறா? ஒரே திசையை நோக்கி, ஒரே சமயத்தில், ஒரே மாதிரியான சத்தம் போட்டுக் கொண்டு சென்றதை மறந்தா விட்டீர்கள்? என்று ஒரு வீட்டுக்காரன் பேசினால், உடைமைகளனைத்தையும் தனது வசப்படுத்த முயற்சித்தால் விடுவார்களா, அந்தத் தெருவார்? பர்மா விட்டுவிடவில்லையே. பாகிஸ்தான் விட்டுவிடவில்லையே. இன்று காஷ்மீரம் விடத்தயாரில் இல்லையே. ஆகவே வெள்ளையன் வெளியேறுபடலத்தில் விழித்திருந்தவன் பிழைத்துக் கொண்டான். வடநாட்டுக்காரன், பிரிந்த நாடுகள் போக மிச்சமிருந்ததையெல்லாம் இந்தியா என்றழைத்துத்தான் விடுதலை பெற்றது மட்டுமல்ல,தனதுவாழ்விற்குத் தேவைப்படும் செல்வத்தைச் சுரண்ட ஓர் நாட்டையும் — திராவிடத்தையும், தனக்கென உழைக்க ஓர் இனத்தையும் — திராவிடர்களையும்—இந்தியா ஒரு நாடு என்ற போலிச்சித்தாந்தத்தால் பிணைத்து இழுத்துச் செல்லுகிறான். இந்நிலை மாற 'இந்தியாவே எமது தாயகம்' என்ற மயக்கத்தில் இருப்பவர்களுக்கு 'எழில் மிக்க திராவிடமே எமது தாயகம்' என்ற தெளிவு பிறக்கவேண்டும் அந்தத் தெளிவை மட்டும் நம்மவர் அனைவரும் பெற்று விட்டால், பிறகு விடுதலை பெறத் தடை ஏது குறுக்கே நிற்கும்? இம்மயக்கம் தெளிவிக்கும் பணிசற்றுச் சிரமமானது தான் எனினும், இம்முதல் வேலை வெற்றிகரமாய் முடிவதில் தான் நமது எதிர்காலவாழ்வு அடங்கியிருக்கிறது.

அடுத்தகட்டம் துரோகச்சிந்தையுள்ள நம்மவரைச் சமாளிப்பது. இது மயக்கத்தைத் தெளிவிப்பதை விடச் சுலபமான பணியேயாகும். திராவிடம் நமது தாயகம் என்பது உணர்ந்தும், ஆளும் கும்பல் அன்னியர்கள் என்பதறிந்தும், நடக்கும் ஆட்சி சுரண்டல், ஆதிபத்ய ஆட்சி என்பதையுணர்ந்தும், இந்த உண்மைகளை உரைத்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டால் தங்கள் பொன்னான உடல் நோகுமே என்றஞ்சும் கோழைகள்,பேராசைப் பெருநோக்காளராகித் தாங்கள் பிறந்த பொன்னாட்டைக் காட்டிக் கொடுத்து அன்னியனுக்கு ஆரத்தி எடுத்து வயிறு வளர்க்கும 'ஜென்மங்கள்' சில உண்டு. அவர்களைச் சமாளிப்பது சிரமமானகாரியமல்ல என்பது மட்டுமன்றி, எங்கும் எப்போதும் விடுதலைப் படையினருக்கு மிக விருப்பமானதொரு காரியமுமாகும்.

அந்தத் துரோகிகள், நமக்கு 'மறுப்பு'க் கொடுக்க, எதிரிகளால் நியமிக்கப் பட்ட ஒரு பிடிகளாய் விளங்குவார்கள். நாம் மக்களின் மனமயக்கம் தெளியவும், விடுதலைப் போராட்ட அணிவகுப்பை அமைக்கவும் நமது வரலாற்றைப் பாருங்கள். நாம் திராவிடர் என்பது தெரியும். நமது கலாசாரம் நாகரிகம், மொழி ஆகியவை மிகத் தொன்மையானது மட்டுமல்ல, மற்ற மொழி, கலாசாரங்களை விடத் தனித் தன்மை வாய்ந்தது! தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் திராவிடமொழிகள். நாம் அனைவரும் ஓரினம். நம்மை இன்று சுயராஜ்யம் என்னும் பெயரால் வடநாட்டு ஏகாதிபத்தியம் ஆட்டிப் படைத்து, நமது செல்வமெல்லாம் அவர்களால் சூறையாடப் படுகிறது. அவிழ்த்து விடப்பட்ட எருமை விளைந்தபயிர்களை அழித்து ஒழிக்க வயல்களில் நுழைவதைப் போல் தமிழ் இலக்கியச் சோலையில் இந்தி எருமை நுழைந்து விட்டது! டில்லி நோக்கி நமதுசெல்வம் வெகு வேகமாகப் போவதற்கு மட்டும் பாதை அமைக்கப் பட்டிருக்கிறதே தவிர, அங்கிருந்து இங்குவரப்பாதை ஒன்றும் இல்லை. ஆனால் நமது வரிப் பணத்தைக் கோடி கோடியாய்க் கொட்டிக் கொள்ளும் டில்லி கஜானாவின் திறவுகோல் வடவர் கையிலே உள்ளது. அவர்கள் அதை அடிக்கடி திறந்து எடுக்கும் பணம், வடநாட்டில் தாமோதர்பள்ளத்தாக்குத் திட்டம், ஹிராகுட் அணைக்கட்டு, கோஸி நீர்த்தேக்கம், காக்ராபூர் அணை, கண்டலா எனும் புதிய துறைமுகம், சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலை — இன்னும் இப்படி. ஒரு பெரிய பட்டியலே தயாரிக்கலாம். அந்த அளவு அபிவிருத்தித் திட்டங்களாக உடனுக்குடன் மாறி விடுகின்றன.

ஆகவே இந்தக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தித் தாயகத்தை விடுவிக்க வாரீர்!! என விடுதலைமுழக்கம் செய்து நின்றால், அந்தத் துரோகிகள், நாம் சித்தரித்துக் காட்டும் நிலைமைகளை மறுக்க முடியாமல், வாதங்களுக்குப் பதில் சொல்ல முடியாமல், வக்கணைகளிலும், வசைமாரி பொழிவதிலும், பதவியிலிருப்பதால் அடக்குமுறை வெறி நாயை நம்மீது அவிழ்த்து விடவுமான திருப்பணிகளில் ஈடுபடுகிறார்கள். சுரண்டும் ஏகாபத்தியங்களுக்கும், சுரண்டப்படும் இனத்திற்கும் இடையே நடைபெறும் போராட்டங்கள் அனைத்திலும் இவை சர்வசாதாரண நிகழ்ச்சிகள்—தாண்டித் தீர வேண்டிய கட்டங்கள். உடைந்தெறியப்பட வேண்டிய தடைக்கற்கள். விடுதலை வீரர்கள் இவைகளைச் சட்டை செய்யக் கூடாது.

"ஆந்திரம் ஆதரிக்கிறதா, கன்னடம் கைகொடுக்கிறதா, மலையாளம் மதிக்கிறதா" எனக் கொக்கரித்தவர்களின் கண்களைத் திறக்கக்கூடிய பற்பல நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடைபெற்றவண்ணம் இருப்பதைச் சுட்டிக் காட்டுவோம். டில்லியிடம் கர்நாடக ராஜ்யத்தின் உயர்நீதி மன்றத்தின் உரிமையைப் பறித்த போது, மைசூர் சட்டசபையில் புயல் வீசிற்று. "இது அநீதி. அக்கிரமம்" என்ற ஒலி இடியென ஒலித்தது. அத்தனை உறுப்பினர்களும், மந்திரிகள் உட்பட, ராஜிநாமாச் செய்துவிடுவதாய்க் குமுறினார்கள். குமுறும் எரிமலை வெடிக்கு

முன் அவசர அவசரமாக அரசியல் சட்டத்தில் சிறு திருத்தமும், சில 'பிரமுகர்களுக்கு' டில்லி பீடத்தில் பதவி தந்தும் ஒருவாறு அந்த முணுமுணுப்பைச் சமாளிக்க டில்லி பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. பெருகிவரும் வெள்ளத்துக்கு மண் அணை! எத்தனை நாள் நிலைக்கும்?

இதைவிட நல்லமுறையில், தெளிவான முறையில் உருவெடுத்திருக்கிறது கேரளத்தின் உரிமைப் போராட்ட ஆரம்பக் கட்டம். டில்லி பீடத்தின் கஜானாவை நிரப்ப 'டாலர்' — இன்றைய உலகில் பொன்னையும் நவரத்தினங்களையும் விட விலைமதிப்பேறிய அமெரிக்க கரன்சி நோட்டுகள், சம்பாதித்துத் தருவதில் பெரும் பங்குகொள்ளும் திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தான சட்டசபையில் விட்டுவிட்டு அடிக்கும் 'அலாரம்'போல் "வடவர்கள் நம்மை மதிப்பதில்லை — கொள்ளையடிக்கிறார்கள்; நமது நாட்டின் ஜீவாதாரமான கயிற்றுத் தொழில் மடியுந் தறுவாயில் இருக்கிறது. நிவாரணமளிக்க — பரிகாரம் தேட, அத்தொழில் வாழ, டில்லிப் பீடம் தடை செய்கிறது. நாளுக்கு நாள் நமது உணவு நிலை, பொருளாதாரம் அத்தனையும் க்ஷீணித்து வருகின்றன. இவற்றையெல்லாம் நோக்கும் போது, நமக்கேன் அவர்கள் தொடர்பு என்றே தோன்றுகிறது. வடநாட்டுக்காரர் கொழுக்க, வடநாட்டில் இருக்கும் டில்லி சர்க்கார் நம்மை யாளுகிறதே யொழிய, நாம் வாழ அவர்கள், அங்கு ஆளவில்லை.

ஆகவே நாம் வாழ, நாமே, இங்கேயே ஆட்சி அமைத்தால்தான் இயலும், என்ற விடுதலை முழக்கம் ஒலிப்பதைக் கேட்கிறோம்.

சட்டசபையில் இந்த முழக்கங்களைக் கிளப்பத் தூண்டும் மனப்போக்கு மக்கள் மத்தியில் உருவாகி வருவதைக் காட்ட ஓர் உன்னத நிகழ்ச்சி சில மாதங்களுக்கு முன் கேரளத்தில் நடைபெற்றது. ஆலப்புழையில், அந்த உல்லாச புருஷர், ஆசியாவின் ஜோதி, அலகாபாத் பண்டிதர், தெருக்களில் ஊர்வலம் வந்தபோது — பட்டியில் உள்ள உழவு மாடுகள் நோய்நொடியின்றியிருக்கின்றனவா எனப் பார்வையிடவரும் எஜமானைப்போல், பவனி வந்தபோது — வீதிகளின் இரு மருங்கிலும் இருந்த சுவர்களில் சுரண்டப்படும் மக்களின் இதயக் குமுறல் சுரண்டும் சுக புருஷர்களின் தலைவனின் உள்ளத்தைச் சுடும் எழுத்துக்கள் காட்சியளித்தன. "குஜராத்தியே வெளியேறு" என்ற இந்த இரண்டே சொற்கள், கேரள மக்கள் மனதில் உருவாகி வரும் புதிய எண்ணங்களின் அறிவிப்பாகத் தோன்றி, பண்டிதரின் மன அமைதியைக் குலைத்ததை, அன்று மாலை கூட்டத்தில் அவர் பேசும்போது தெரிந்துகொண்டது நாடு. அந்த எழுத்துக்கள் அந்தச் சுவர்களை அலங்கரித்து அவரை வரவேற்றதற்கு, யார் காரணம்? எது காரணம்? கேரளத்தின் பெரும் சந்தையான மிளகுச் சந்தை, மிளகுத் தோட்டங்கள் அனைத்தும் வடவர் வசமாகி, உரியவர்கள் வறியவர்களாக மாறிவிட்டனர், கடந்த நான்காண்டுகளில் — 'சுயராஜ்யம்' வந்த பிறகு. இந்நிலை கேரள மக்களின் உள்ளத்தில் எழுப்பை உண்டாக்கியதில் வியப்பொன்றும் இல்லை. 'வெளியேறு' எனக் கட்டளையிடுவது என்பது விடுதலைப் போராட்டத்தின் முதல் அத்தியாயம். அந்த அத்தியாயம் கேரளத்தில் செவ்வனே எழுதப்பட்டுவிட்டது.

'கை கொடுக்காத' கன்னடம் டில்லியின் கன்னத்தில் அறைந்ததையும், 'மதிக்காத' மலையாளம் டில்லித் திருத் தூதருக்குத் தனது உள்ளத்தைத் திறந்து காட்டி அவரைத் திணற அடித்ததையும் கண்ட திராவிடம், சமீபத்தில் 'ஆதரிக்காத' ஆந்திரர்கள் மாகாணம் பெற நடத்திய சில இயக்கங்களின் நடைமுறை கோளாறுடையதாயினும், அவற்றின் அப்பட்டமான அடிப்படையை விளக்கும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளதையும் கவனிக்கவேண்டும். ரயிலைத் தடுத்து நிறுத்தினர். காரணம் சொன்னார்கள். "டில்லியோடு போராடுகிறோம். ரயில்வே டில்லி நிர்வாகத்தில் உள்ள ஓர் வருவாய் வழி" என்று. சென்னையில் சில மார்வாடி கடைகளையும், வடநாட்டுப் பலகாரக் கடைகளையும் தாக்கிச் சூறையாடினார்களாம்.

ஆகவே இவை எல்லாம் எதிர்காலத் திராவிடத்தின் எழிலுருவத்தைத் தீட்ட வரையப்படும் ஆரம்பக் கோடுகள். விரைவில் அந்த அழகிய ஓவியம் பொலிவுடன் விளங்கும்.

'தாயகவிடுதலை' தவமிருந்து பெறக்கூடிய வரப்பிரசாதமல்ல. ஆயிரமாயிரம் வீரர்களின் குருதி பாய்ச்சப்பட்ட பின்னரே விளையக் கூடிய உன்னதத்தரு "குருதியைக் கொட்டி அதை வளர்ப்போம். கோணற் சேட்டைக்காரர்களின் வம்பளப்புக்கு வளைந்து கொடுக்காமல், 'தாயக விடுதலையே' எமது 'தாரக மந்திரம்' எனக் கொண்டு போராடுவோம்' என்ற உறுதியை நாட்டோரே, நீர் கொள்வீரோ?

அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறையை முன்னிட்டு, 18, 25—1—53 நாட்களில் வெளிவரவேண்டிய "திராவிட நாடு" நிறுத்தப்பட்டு அடுத்த இதழ் 1—2—53ல் வெளிவரும் என்பதை ஏஜண்டுத் தோழர்களுக்கும் வாசகர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்.



அடையாளப் பூ!

[க. அன்பழகன்]

தூங்கெயில் எறிந்த தொடித் தோளான்!

கடம்பு எறிந்து கலம் அறுத்தோன்!

கடாரம் வென்றவன்
ஈழம் கொண்டோன்
இமயப் பிடரியில் செண்டால்
அடித்தோன்
கங்கை கொண்டவன்
ஆரியப்படை கடந்தோன்!
கனகவிசயர் தலையில் கல்
ஏற்றினோன்!
வாதாபியைத் தீயிலிட்டோன்!,

இவ்வண்ணம் சிறப்புப் பெயர்களை, அணிகளாகக் கொண்டு தமிழகத்தை ஆண்டனர் மன்னர்கள், முன்னைய நாட்களில்.

காவியத்துறை, களத்துக்கண் கண்ட வெற்றிகளைவிட வியக்கத்தக்க வெற்றிகளின் பட்டியலைத் தருவதாக அமைந்திருந்தது.

தொழில் துறையோ, யவனர் போன்ற பிறநாட்டார் கண்டுமெச்சி தொடர்புவேண்டி நின்றிடும்நிலைக்கு நாட்டை அழைத்துச் செல்வதாக இருந்தது.

மொழித் துறையோ வெனில், இவை அத்தனைக்கும் அரண் அமைத்துத் தரும் திறன் மிக்கதாக விளங்கிற்று.

இத்தகு தமிழகம், ஆரியம் எனும் அயலகப் பண்பாட்டின் நுழைவினால், நலிந்தது.

இதனை, வரலாறு கூறுகிறது; கல்வெட்டுகள் சான்றளிக்கின்றன.

பேரும் புகழும் பெரு வாழ்வும் தனிப் பெருமையும் பெற்றுத் திகழ்ந்த தமிழ் மக்களின் இன்றைய நிலை என்ன? அந்தோ, எண்ணவும் மனம் கூசுகிறதே? சொல்வதெங்ஙனம்? வாழ்கின்றார்கள் என்று வாயளவேனும் கூற முடியுமா? சாகின்றார்கள் என்றேனும் விட்டு விடக்கூடுமா? என்ன செய்வது? எப்படித் தேறுவது? எப்படி மீளுவது? என்பதன்றோ கவலையூட்டிக் கண்ணீர் தேக்குகின்றது,

தமிழ் மொழி, கலை, நாகரிகம், பண்பாடு இவை இன்றளவும் சிதையூாமல், சிதைக்கப்படாமல் வருது-காக்கப்படுகிறதா? தமிழ் மொழி தன்னாட்சி நடத்துகின்றதா? தமிழர் ஓரினமாக வேனும் உள்ளனரா? தமிழரைத் தமிழ் அறமாம் திருக்குறள் ஆளுகிறதா? தமிழருக்கென உரிமையுள்ள ஒரு நாடுண்டா? தமிழ் நாகரிகத்துக்கு இனியும் வாழ்வுண்டா? — என்ற கேள்விகளை எண்ண வேண்டிய நிலையிலன்றோ தமிழர் உள்ளனர்.

“தாம் ஒரு தனி இனம், தமது சமயமும் தனி, தமக்கென ஒரு தனிக்கலை; நாகரிக, பண்பாடு உண்டு, தாமும் தனி உரிமை கொள்ளலாம், தனியரசு நடத்துவதே தமது வாழ்வை நிமிர்த்தும் வழி” என்பதையன்றோ உணர்த்துவதற்கு, அவ்வுறுதியையும் அதற்கான மூலத்தையும் உலகம் எளிதில் ஒப்புக்கொள்ளுவதற்குத் தக்க ஒரு வழி நாம் காண வேண்டாமா? எனவேதான் இவ்வளவு பெருமைகளையும், தனித்தன்மைகளையும் உலகம் என்னவென்று கூறுகிறது? எப்படி அழைக்கிறது என்றுதேடலானோம்.

உலகம் நம்மைக் குறிக்கக் கைக்கொண்டுள்ள ஒரு சொல், நமது பெருமையையும் தனித்தன்மையையும் விளக்குவதை நாம் காண்போம். நம் இனவுணர்வைத் தூண்டவும், அணிவகுப்பை உறுதிடபடுத்தவும், விடுதலைப் போரை ஊக்குவிக்கவும், போர்க்களப்பண்ணை அமையவும், நம் பகைவர் இன்னார் என்பதைப் புலப்படுத்தவும், நமது அண்டை அயலாரான (தெலுங்கர், கர்நாடர், மலையாளர், துளுவர் ஆகியோரை) இனவுறவினரை நம்மோடு ஒன்று சேர்க்கவும்—அந்தச் சொல் துணை செய்யுமானல், அதை எப்படிக் கையாளாமல் இருக்கமுடியும்?

தமிழருக்கு ஆரியமே பகை. தமிழருக்கு—ஆரிய வடவருடன் போர். அந்தப போரில் ஏற்படும் வெற்றியே தமிழரை வாழச் செய்யும். ‘போருக்கு’ முனைவோர்—தமக்கு உறுதுணையாக அமையக்கூடியோர் யார்? நிரந்தரப் பகைவர் யார்? என்று எண்ணாமல் இருக்கமுடியாது—கூடாது.

போருக்குப் புறப்படுபவர்கள், தமது கூட்டத்தை, இனத்தை, அறிந்து கொள்ளவும், ஊக்கம் மிகவும் ஒரு அடையாளப் பூ சூட்டிக் கொள்வார்கள். அப்படியே தமிழர்களாகிய நாமும் ஒரு அடையாளப் பூச்சூடி விடுதலைப்போர் நடத்தி வருகிறோம். அந்தப்பூ வெறுங்காகிதப் பூவல்ல, தற்காலத் தயாரிப்பு அல்ல—மாறுாப் புகழ்கொண்டது, பயன்மிக்கது, உலகெங்கும் மணம் வீசுவது, மகத்தான விளக்கந் தருவது, மானங்காக்கும் பலபோர்களின் அடையாளப்பூவாக விளங்குவது.

பொங்கல்நாள் இது. வறுமையும் வாட்டமும் வருத்தினாலும், பஞ்சத்திற்கோ புயலுக்கோ ஆட்பட்டிருந்தாலும்—பொங்கல் கொண்டாடாவிட்டாலும், நடத்துகிறோம், தமிழருக்குரியதாக உள்ள அந்த ஒரே ஒருவிழா — தெலுங்கருக்கும், கன்னடியருக்கும், மலையாளிகளுக்கும், துளுவருக்கும்கூட உரிய, விழாவாகவே, அமைந்துள்ளது. அவர்களும் பொங்கல் நாளைக் கொண்டாடுகின்றனர். அந்த மக்களோடு தமிழருக்குள்ள — ஒற்றுமையைப் பொங்கல் விளக்குகின்றது.

நாட்டின் நானுவித நலிவுக்கிடையிலேயும் மக்கள் மனத்தில்மட்டும் மேலும் புதுநம்பிக்கை பொங்கவழி வேண்டும். அப்படிப் பொங்குவதே புதுவாழ்வுக்குத் துணையாகும்.

ஆம், அத்தகு புது நம்பிக்கை பிறக்கவே, ‘பொங்கல் நாளில்’ ‘அடையாளப்பூவை’ அன்புடன் அளிக்கிறோம். அந்த ‘அடையாளப் பூவை’ அதன் பயனுணர்ந்து தமிழர்கள் எல்லோரும், பொங்கல் விழாவினைத் தத்தம் இன விழாவாகக்கொண்டுள்ள அனைவரும் சூடி நிற்க விரும்புகிறோம். பொங்கல் நாளில் அதனைத் தம் விழாவாகக் கொண்டாட அனைவரும், தமிழர்கள் எல்லோரும், பூரிப்புடன் சூட்டிக்கொள்ளவேண்டிய அடையாளப் பூவே ‘திராவிடர்’ என்பது.

அந்த “அடையாளப் பூவே” தமிழ் மணத்தை உலகெங்கும்

பரப்ப வழியாகும் என்பதை, சென்ற திங்களில், பாரிசில் கூடிய ஐக்கியநாடு சபையின் கலாச்சார குழுவில், அறிஞர் சி. பி. மாத்யூ அவர்கள், "இந்திய இலக்கியங்கள் என்றாலே சமஸ்கிருத இலக்கியங்கள் மட்டுமே என்று எண்ணவேண்டாம். அதைவிடப், பன்மடங்கு சிறந்த இலக்கியச் செல்வங்களைக் கொண்ட திராவிட மொழிகளும் உள்ளன. அவைகளையும் ஆராய வேண்டுகிறேன்," என்றுகூறியிருப்பதிலிருந்தேஉணரலாம். ஆம், அவர் குறிப்பிட்டஅந்தத் திராவிடச்செல்வம், இன்னும் ஆரியக்கலப்பால் சிதையாமல் காக்கப்பட்டுள்ளது தமிழ்மொழியில்தானே? அதுதமிழ் மக்களுக்குப் பெருமையளிப்பது ஆகாதா? மொழியினால் தமிழர் அல்லாதாரும், "திராவிடத்தைப்" பாராட்டும் முறையில் உறைவிடமான "பண்டைத் தமிழ் இலக்கியங்களை" அன்றோ பாராட்டுகின்றவராவர்.

எனவேதான்—தமிழரின் அடையாளப்பூ, வெற்றிக் கொடி, வாகை மாலை, 'திராவிடம்' என்று கூறுகிறோம்! பொங்கல் நாளில் அடையாளப்பூவினை அன்புடன் வழங்குகிறோம்.தமிழர் எல்லோரும், திராவிடர் எல்லோரும் அடையாளப் பூச்சூடி அணிவதுக்க விரும்புகிறோம் வாழ்க அடையாளப பூ!

★

பரிசும் பலனும்

பிர்லா பிரபு,இந்தியாவின் 'ஜனாதிபதி'க்கு பரிசளித்திருக்கிறார்! தன்னுடைய கம்பெனியில் உற்பத்தி செய்யப்படும் 'இந்துஸ்தான்' மோட்டார்காரை! பரிசைப்பெற்றுக் கொண்ட பிரசாத், மகிழ்ந்தாராம். இனி எல்லோரும் 'இந்துஸ்தான்' சுதேசித் தயாரிப்பையே வாங்க வேண்டும்" என்றும், நாட்டு மக்களுக்கு, அறிவித்துள்ளார், 'ஜனாதிபதி.' பிரபு பரிசு அளிக்கிறார்! பரிசின் கிரயம் ரூ. 10,000 இருக்கலாம்!! அந்தத் தொகையை விடப் பன்மடங்கு செலவழித்தாலும் பெறமுடியாத விளம்பரத்தைத் தந்திருக்கிறார், பிரசாத். பணக்கார மூளையென்றால், இலேசா! அதுவும் 'அமெரிக்காவுடன்' கைகுலுக்கும் வடநாட்டு மூளையாச்சே!! பத்து ஆயிரம்—பரிசு. அதை விடப் பல மடங்கு, விளம்பரம் கிடைத்துவிட்டது. சர்க்காரின் தலைவருக்கே 'தானம்' அளித்தமகாப்பிரபு என்ற கவுரம் வேறு! — பிர்லாவின் 'ஜனாமதி'யைவிட, அந்தப் பரிசைப் பெற்று, அதைப்பற்றி புகழ்ந்தும் பேசுகிறாரே,பிரசாத்;இதைக்கொஞ்சம் சிந்தியுங்கள்! காங்கிரஸ் ராஜ்யம் 'பிர்லா ராஜ்யம்' என்றால் கோபம் வருகிறதே — அவர்களைத் தான் கேட்கிறோம் சிந்தித்துப் பாருங்கள்.

★

திராவிடர் இலக்கியங்கள்

அண்ணாவின் நூல்கள்

காதல் ஜோதி 2-8-0
ஓர் இரவு (அச்சில்)
ரங்கோன் ராதா 2-8-0
வள்ளிநாயகியின் கோபம் 1-4-0
தமிழகம் 1-0-0
சூழ்நிலை 1-0-0
வாழ்க்கைப் புயல் 0-12-0
சாது 0-8-0
ஜேபமாலை 0-8-0
மக்கள் தீர்ப்பு 0-8-0
அறநிலையங்கள் 0-6-0
நூல் நிலையங்கள் 0-4-0
சொல்லும் பயனும் 0-4-0
நல்லதீர்ப்பு 0-4-0

கலைஞர் கருணாநிதியின் நூல்கள்

பெருமூச்சு 1-0-0
களத்தில் கருணாநிதி 1-0-0
பள்ளி வாழ்க்கை 1-0-0
தூக்குமேடை 1-8-0
ஒரே முத்தம் 1-4-0
திராவிட சம்பத்து 0-3-0
சங்கிலிச்சாமி 0-8-0
வர்ணனைகள் 0-10-0

புலவர் குழந்தை நூல்கள்

திருக்குறளும் பரிமேலழகரும் 2-0-0
திருவள்ளுவர் (அச்சில்)

தில்லை-வில்லாளன் நூல்கள்

மல்லிகைத்தோட்டம் 1-0-0
குடும்பம் (அச்சில்)
மனப்போர் (அண்ணா முன்னுரையுடன்) 1-0-0
தங்கத்தாமரை 1-0-0
அவள் 0-8-0

ஆசைத்தம்பி நூல்கள்

மனித தெய்வம் 1-4-0
கிழக்கும் மேற்கும் 1-0-0
வெறுங்கூடு 1-0-0
பிணங்கள் 1-0-0
நினைவுச்சுழல் 0-12-0
தியாகச்சுடர் 0-12-0
"காந்திமார் சாந்திஅடைய" வழக்குத்தீர்ப்பு 0-8-0

இராதாமணாளன் நூல்கள்

அன்னம் 1-0-0
அரக்குமாளிகை 2-0-0
இளவரசி 2-0-0

போர்ச்சிலை 1-4-0
சபதம் 1-0-0
சிந்தனைத்துளிகள் 0-4-0
நீரோ (அச்சில்)

ரா. தணலன் நூல்கள்

செல்வகுமாரி 1-0-0
அழகுநிலா 1-0-0
லீலாராணி 0-8-0
பைத்தியக்காரனின் நாட்குறிப்பு 1-0-0

பிற நூல்கள்

ரஷ்ய பிரச்சினை 1-4-0
(ஸ்டாலின் பரிசு பெற்றது)
மா-சே-துங் 0-8-0
(சீனப் பிரதமர் சரித்திரம்)
தமிழின் தனிச்சிறப்பு 0-3-0
(மறைமலையடிகள்)
கட்டழகி காஞ்சனா 1-4-0
(சேரன்)

குறிப்பு: நூல் நிலையங்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் தேவை உள்ள எல்லாத் தமிழ் நூல்களும் ஒருங்கே கிடைக்கும் விரிவான விலைப்பட்டிக்கு எழுதக் கோருகிறோம்.

பாரி நிலையம் 59. பிராட்வே சென்னை 1.

★ சர்வம் ஊழல்மயம்! ★

[கதிரன்]

காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்று வரும் பண மோசடிகளையும் நிர்வாக ஊழல்களையும் பார்லிமெண்டில் அங்கத்தினர்களும், மக்கள் மன்றங்களில் பொது நலனில் அக்கரை கொண்டோரும் எடுத்துக் காட்டும் போது, பிரதமர் நேருவுக்கு ஆத்திரம் ஏற்பட்டு வருவது சகஜமாகி விட்டது. ஆனால் ஊழல் களையப்பட வேண்டும் என்ற எண்ணத்தாலேயே, கண்டனக் கணைகள் பல வேறு இடங்களிலிருந்தும் கிளம்பியபடி உள்ளன. பண்டிதருக்கு நிலைமையை எடுத்துக் காட்ட, ரசமான ஒரு புது முறையை மத்யப் பிரதேசத்தில் கையாண்டனர். அது இது:—

நாகபூரிலே, அகில இந்திய காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்திற்குப் போட்டியாக, அகில இந்திய ஊழல் காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் தோன்றியிருக்கிறது. ஸ்தாபனத்தின் பெயர் விசித்திரமாக இருக்கிறதல்லவா? வேறுவழி தோன்றாதகாரணத்தால் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பி. என். சயோஜி அவர்களும், அவர்தம் சகாக்களும் இந்த ஸ்தாபனத்தைத் துவக்கி நடத்திவருகின்றனர். ஊழலை இல்லாதொழிக்க 'சர்க்கார் செய்யும் ஊழலை ஆதரிப்பதொன்றுதான் சிறந்த வழி என்று அவர்கள் கருதுகின்றார்கள். தாய் ஸ்தாபனமாகிய காங்கிரஸின் பதவி வேட்டை, குலபட்சபாதம், வேண்டியவர்கட்கு வேண்டியது அளித்தல், ஊழல் ஆகிய நடவடிக்கைகளை மனப்பூர்வமாய் ஆதரிப்பது என்றும் கூறப்பட்டுளது.

வெறும் சொல்லளவில் மட்டும் நின்று விடவில்லை அகில இந்திய ஊழல் காங்கிரஸார். பொதுமக்களால் சர்வாதிகாரம், கொடுமை ஆகிய குற்றங்கள் சாட்டப்பட்ட போலீஸ் அதிகாரிகளுக்கு, மேல் உத்தியோகங்கள் பண்டிதசுக்லா மந்திரிசபையார் அளித்தவுடன், முதன் மந்திரி ஷுக்லாவைப் பாராட்டினர் சயோஜி.

நாகப்பூர் நகரசபையின் முன்னாள் தலைவர் ஜி. ஜே. பதக், ஹிங்கங்காட் காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் விஜயகாராவ் சௌத்ரி, ஜனசங்க ஆர்கனைசர் தெங்டி, தேசிய தொழிற்சங்க காங்கிரசின் முன்னாள் ஊழியர் எல். எய். வக்ரே ஆகியவர்கள் உறுப்பினர்களாகவுள்ள அ. இ. ஊ. கா. சார்பில் சென்ற ஆண்டு அக்டோபர் 31-ம் தேதியன்று பிரதமர் நேரு அவர்கட்கு ஒரு வரவேற்பிதழ் வழங்கப்பட்டது. ஏற்கனவே தாம் அந்த 'வரவேற்பிதழை' வாங்குவதற்கில்லை யென்று மறுத்துவிட்டிருந்தார். நாகப்பூர் நகரசபையின் வரவேற்பிதழைப்பெற்றுக்கொண்டு அவர் தம்காரில் ஏறப்போகும் சமயத்தில், சயோஜி தமது வரவேற்பிதழை அவரிடம் அளித்தார். கவர்னர் பட்டாபி சீதாராமய்யா, முதன் மந்திரி ஷுக்லா திறந்த வாய் மூடாமல் திடுக்கிட்ட நிலையிலிருக்க, நேரு அதைப் பெற்றுக் கொண்டார்.

அந்த 'வரவேற்பிதழி'ல் காணப்படும் பொறுக்கு மணிகள் சில.

"நாட்டிற்கு, காங்கிரஸ் சர்க்கார் அளிக்கும் வெகுமதியே அ. இ. ஊ. கா. ஊழல் முறைகளைக் கையாண்டு, நாணயமற்ற நிலையைக் கண்டித்துப் பேசுவோரை அடக்கி ஒடுக்கி நசுக்கிய கெடுமதியாளருக்குப் பூரண பாதுகாப்பு காங்கிரஸ் ஆட்சியாளர் அளித்திராவிட்டால் ஊழல் காங்கிரஸ் தோன்றியிராது.

ஊழலை ஒழிக்க ஒரேவழி அதை எதிர்ப்பதோ கண்டித்துப் பேசுவதோ அல்ல. அதை ஆதரிப்பதன் மூலமாகத்தான் அது ஒழிந்துவிடும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். ஆகவேதான் இந்தப் 'பரீட்சை'யில் இறங்கியுள்ளோம்."

"இந்த ஸ்தாபனம் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மறுபதிப்பாகவே விளங்கும் மாகாண, ஜில்லா, நகர கிராம கமிட்டிகள் அனைத்தும் ஏற்படுத்த எண்ணியுள்ளோம்."

"மத்தியப்பிரதேசத்தில் ஜனநாயகத்தைக் கொலை செய்து குழி தோண்டிப் புதைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள டாக்டர் பட்டாபி, நிதிமந்திரி பிரிஜ்லால் பியானி, சுகாதார மந்திரி கண்ணம்மவார் ஆகியவர்களை ஊழல் காங்கிரஸ் கண்டிக்கவில்லை, பாராட்டவே துணிகிறது!!"

மத்தியப்பிரதேச மந்திரிகள் நாகப்பூரிலும் பிற இடங்களிலும் நடைபெற்ற முனிசிபல் தேர்தல்களில் செய்த பித்தலாட்டங்களும் வர்ணிக்கப்பட்டிருந்தன அவ்விதழில். கருப்பு மார்க்கட் வியாபாரிகளுடன் பேரம் பேசிய காங்கிரஸ்காரர்களையும் அம்பலமாக்கியிருக்கிறது.

எத்திசை நோக்கினும் காணக் கூசும் காட்சிகளே தோன்றும், கேட்கத்தகாத சம்பவங்களே நிகழ்ந்து வரும் ஒரு ஏற்பாட்டில் ஊழலைக் கண்டித்துப் பேசுவது பைத்தியக்காரத்தனம் ஆகுமென்றும், நேரு அவர்களுடைய கூட்டுறவு கிடைக்கும் பட்சத்தில், ஊ. கா. கருதிய கருமத்தை நிறைவேற்ற முடியுமென்றும், வரலாற்றிலே இடம் பெறவேண்டிய அவ் வரவேற்பிதழிலே இறுதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. காங்கிரசாட்சியிலே உள்ள நிர்வாக ஊழலை நேருவுக்கும் உலகுக்கும் எடுத்துக் காட்ட இதைவிட வேடிக்கையான முறை இருக்க முடியாதல்லவா? இந்த வரவேற்பிதழைக்கண்டு நேரு புருவத்தை நெரித்தாரோ, புன்னகை புரிந்தாரோ, நாமறியோம் — ஆனால்நாட்டவரில் பெரும்பாலோர், காங்கிரசாட்சியை எண்ணி கைகொட்டிச்சிரிப்பார்கள் என்பது மட்டும் உறுதி. ✱

அறிவிப்பு

விரைவில் வெளிவர விருக்கும், மேகலா பிக்சர்சாரின் "நாம்" (மு. கருணாநிதி அவர்களது) திரைப் படகதை—வசன நூல் உரிமைகளனைத்தையும் பெற்றுள்ளோம். படம் வெளிவரும் நாளில் வசன நூலும் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

"திராவிடப்பண்ணை"

(Ad) தெப்பக்குளம் திருச்சி

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.

மக்கள் என்ன கூறுகிறார்கள்?

மாதவிடாய்

(தேவி பில்ஸ்)

Patent Regd. No. CDL. 688

NOTE: Our product DEVI PILLS has been duly analysed by the Director, Central Drugs Laboratary of India under Patent Regd. No CDL/688.

ஆயிரக் கணக்கில் வந்துள்ள கடிதங்களில் சில.

1. வெகுசீக்கிரத்தில் என் மனைவி பூரண குணம் அடைந்தாள்.

Irumattur P. O.
Havur Tk.

ஐயா,

நான் தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை என் மனைவிக்கு 17-5-51 முதல் 21-5-51 வரை கொடுத்ததில் இக்குறுகிய காலத்திற்குள் என்மனைவி பூரணகுணம் அடைந்து விட்டாள். ஆகையால் இம்மருந்தை மற்ற சகோதரிகளும் எவ்வித பயமும் இல்லாமல் உபயோகப்படுத்தலாம்.

Sd. A. Sivanandam
Land-lord.

* *

2. ஒரு சிறந்த துணைக்கருவி.

Sembanar Koil,
Memathur P.O

ஐயா,

மாதவிடாய் கோளாறினால் கஷ்டப்படும் மாதர்களுக்கு விடுதலை பெற தங்கள் "தேவி மாத்திரை" ஒரு சிறந்த துணைகருவி என்பதை என் அனுபவத்திலிருந்து மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எதிர் காலத்தில் தலைசிறந்த தொண்டாற்றும் என்று நம்புகிறேன்.

(Sd.) M. Ratnasabapathy
Karnam.

* *

3. 6 மாதங்களாக நின்று போன மாதவிடாய் எவ்வித கஷ்டமும்இல்லாமல் வெகு சீக்கிரத்தில் சுலபமாக வெளிவரச்செய்தது

Thevaram P.O.

ஐயா,

தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை உபயோகித்ததில் எவ்வித கஷ்டமுமில்லாமல் 6 மாதங்களாக நின்று போன மாதவிடாயை வெகுசீக்கிரத்தில் சுலபமாக வெளிவரச்செய்தது. இதனால் மற்றவர்களுக்கும் இம்மருந்து பயன் படுமென்று நம்புகிறேன்.

(Sd.) M. Sourimuthu Maistry.

4. தொல்லை போக்கும் தன்மையுள்ள திவ்யமருந்து.

Saliamangalam P. O.

ஐயா,

தங்கள் மருந்து "தேவி பில்ஸ்" மன கிலேசம் அடையும் மாதர்களுக்கு தேவாமிர்தம் போன்றதோடு யாதொரு கெடுதலும் இன்றி நன்மையளிக்கும் திவ்ய மருந்தாகும் என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(Sd.) K. K. Chandrasekharam
Pillai.

5. வெகுநாட்களாக தடைப்பட்ட மாதவிடாயை வெளிவரச் செய்தது.

Kamalapuram P. O.
Tanjore Dist.

ஐயா,

நான் தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை உபயோகப்படுத்தியதில் ஆச்சரியமான பலனை அளித்து, வெகு நாட்களாக தடைப்பட்டிருந்த மாதவிடாய் மீண்டும் ஏற்பட்டவுடன் எவ்விதகெடுதலும் இல்லாமல் சௌகரியம் செய்கிறது என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sd. R. Rajagopalan,
Mirasdar.

* * *

6. பூரணகுணம் அடையச் செய்தது.

Khrudwadi P. O.
Shoiapurre Dist.

ஐயா,

தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை நான் உபயோகித்ததில் எனக்கு வேண்டிய அளவு பூரண குணம் அடையச் செய்ததால் இவ்வரிய மருந்தை மாதவிடாய்க்கோளாறினால் அவஸ்தைப்படும் மாதர்களுக்கு எவ்வித தயக்கமும் இன்றி உபயோகப் படுத்தலாம் என்று கூறுகிறேன்.

Sd. Miss Kuriew

* *

7. 3 கேஸ்களில் வெற்றி காண்பித்த அபூர்வ மருந்து.

Madanapalli P.O.
Chittoor Dist.

ஐயா,

சீனு: அண்டு கம்பெனியின் 'தேவிபில்ஸ்' மாத்திரை ஒரு அபூர்வமருந்து என் 3கேஸுகளிலும் கண்ட வெற்றி நிரூபித்துவிட்டது. அப் பெரிய மருந்தை மற்றவர்களும் எவ்வித தயக்கமுமின்றி உபயோகப்படுத்தலாம்.

Sd M V. PapannaGownder
The Niiagiris P. O.

* *

8. பல மருந்துகளினால் பலனில்லாமல் கடைசியில் "தேவி பில்ஸ்" பூரணகுணமடையச் செய்தது.

ஐயா,

தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை உபயோகப்படுத்தியதில் 7-ம் நாளில் சந்தோஷகரமான குணத்தை அளித்தது. இந்த மருந்தினால் பலருக்கு நன்மை ஏற்படும் என்று நம்புகிறேன்.

Sd. E. M. K. Nair.

மாதவிடாய்

தேவி பில்ஸ் (Regd. CDL 688.) எக்காரணத்திலும் எத்தனை மாதமானாலும் நின்றுவிட்ட மாதவிடாயை உடனே வெகு சீக்கிரமாகவும், சுலபமாகவும் வெளியாகும். அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள். உத்தரவாதம் உள்ளது.

விலை சாதா ரூ. 8-8-0. ஸ்பெஷல் ரூ. 10-8-0.

(தபால் செலவு தனி)

MANUFACTURERS:

SEENU & CO.

P. B. No. 1638 (H) MADRAS—1

Branch:
134, SERANGOON ROAD, SINGAPORE.

Agents:
NEW COLOMBO MEDICAL STORES,
82, Main Street, COLOMBO-11-

ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள்?

கர்ப்பத்தடை (ஸ்பெக் பில்ஸ்)

(Regd. No. 266)

ஆயிரக்கணக்கான புகழ்ச்சிக் கடிதங்களில் சில.

முதல் புட்டியை உபயோகித்ததி லேயே கோரியபலன் கிடைத்தது.

Poh Estate Ringlet P. O.,
Cameroon High Lands Malaya-

தங்களுடைய "ஸ்பெக் மாத்திரைகளை" பற்றி அடியிற்கண்ட எனது அபிப்பிராயங்களை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தங்கள் ஸ்பெக் மாத்திரைகள் அடங்கிய ஒரு புட்டியை அதில் கூறப்பட்டபடி உபயோகித்ததில் ஆச்சர்யமானபலன்கள் ஏற்பட்டன. கர்ப்பத்தடை வேண்டுவோருக்கு நிச்சயமாக இது ஒரு வரப்பிரசாதமாகும்.

I.S. Menon

* *

நம்பிக்கை ஏற்பட்டு தன் நண்பர்களுக்கும் சிபார்சு செய்தார்

எம். ஆர். எம். பழனியாண்டி,
730, Main Road,
Kepala Pudas—

14—3—50ல் தாங்கள் அனுப்பிய "ஸ்பெக் மாத்திரைகள்", அவற்றை உபயோகித்ததில் சிறந்த பலன்களை அளித்திருக்கின்றன. இதன் சக்தி பற்றி இங்குள்ள நண்பர்களுக்கும் சிபார்சு செய்திருக்கிறேன்.

எம். பழனியாண்டி.

* *

இதன் அபார சக்திகளை ஒப்புக்கொள்ளுகிறார்.

Malaya—

கர்ப்பத்தடைக்கு "ஸ்பெக் மாத்திரைகள்" மகா அபூர்வமான மருந்து என்பதை சந்தோஷத்துடன் அத்தாட்சியளிக்கிறேன். இதில் கலந்துள்ள மருந்து வகைகள், தங்கள் வாழ்க்கைத் துணைவிகளின் ஆரோக்கியத்தைக் கருதி, கர்ப்பத்தடை அனுஷ்டிக்க ஆவலுள்ளோருக்குஇது.மகத்தான பலனை அளிக்கிறது.

எம். குட்டான் பிள்ளை.

* * *

திருப்திகரமான பலன் கிடைத்தது.

9/3, Velimadai Road,
Pandaravalai—

தங்களிடமிருந்து வாங்கிய "ஸ்பெக் பில்ஸ்" நான் விரும்பிய குணத்தை கொடுத் திருப்பதை மிக மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறேன்,

ஆர். ஏ. சிவன்.

* * *

இதன் நிச்சயமான சக்தி காரணமாக மேலும் ஆர்டர் கொடுக்க தூண்டுகிறது.

Ceylon—

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் அனுப்பின ஸ்பெக் பில்லை உபயோகித்ததில் 3 வருட காலத்திற்கு கர்ப்பத்தை தடுத்ததினால் நான் நிரம்ப திருப்தி அடைந்துள்ளேன், மற்றும் கொஞ்சம் மருந்துக்கு ஆர்டர் கொடுக்க உத்தேசம். எனது நண்பர்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் இதன் மேன்மையை விளக்கியுள்ளேன். இதைப் பிறருக்கு சிபார்சு செய்ய முன்வந்துள்ளது, அதன் சிறந்த குணம், நான் அனுபவித்ததில் கண்ட நன்மை இவையேயாகும்.

(ஒ-ம்.) எஸ். ஆர். ஷண்முகம்,
எயிலபண்டா, கோத்மலே.

* * *

கர்ப்பத் தடைக்கு நம்பிக்கைமிகுந்த சிறந்த மருந்து

Jubbalpore

ஐயா,

கர்ப்பத்தடை

ஸ்பெக் மாத்திரைகள் (Regd.No 266) 12 நாள் உபயோகித்தால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவை தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். உத்தரவாதமுள்ளது. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள். டெம்பரரியாக கர்ப்பத் தடைக்கு மட்டும் ஸ்பெக் ஜெல்லியை உபயோகிக்கவும்.

ஸ்பெக் டாப்ஸ் ரூ. 12-0-0 ஜெல்லி ரூ. 6-8-0

[தபால் செலவு தனி]

SEENU & CO.

P. B. N. 1638 (H) MADRAS—1
Branch: 134, Serangoon Road, SINGAPORE
Agents: NEW COLOMBO MEDICAL STORES
82, Main Street, COLOMBO-11.

NOTE:—
Our Product SPECK PILLS has been duly registered by Government under Patent Regd No 266.

தங்கள் கம்பெனியின "ஸ்பெக் பில்ஸ்" உபயோகப்படுத்தியதில் எனக்கு பூரண சந்தோஷம் ஏற்பட்டிருக்கிறது. நம் நாட்டில் அதிக குழந்தைகளை பெற்று, கஷ்டப்படுவதைத் தடுக்க இம்மருந்து பெரிதும் பயன்படும் என்று இம்மருந்தின் உண்மை குணத்திலிருந்து நம்புறேன்,.

Sd. C S. S. Sexena.

* * *

மருந்தின் வெற்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

Tirupunithura

ஐயா,

தங்கள் "ஸ்பெக் பில்ஸ்" கர்ப்பத் தடைக்கு கொடுத்ததில் பூரண வெற்றி அடையச் செய்தது.

Sd. H. Rama Rao.

* *

விரும்பிய பலன் பெற்றுள்ளது.

Polani P. O

ஐயா,

தங்கள் கம்பெனியின் "ஸ்பெக் பில்ஸ்" கர்ப்பத் தடைக்கு உபயோகித்ததில் நல்லகுணம் காண்பித்தது.

Sd. S. Krishnamurthy.

* *

ஒருமுறை உபயோகித்தால் அதன் பலன் நீடித்து நிற்கும்

Koilkuntla

தங்கள் "ஸ்பெக் பில்ஸ்" மருந்தை ஒருதடவை உபயோகித்ததில் கர்ப்பத் தடைக்குச் செய்த வேலை திறனில் நான் எனது மனப்பூர்வமான சந்தோஷம் அடைந்தேன். இந்த மருந்தை உபயோகப்படுத்துபவருக்கு பூரண பலனை கொடுக்கும் என்பது என் அபிப்பிராயம்.

Sd. K. Masoow Sahib.

* * *

பெயருக்கேற்ப, உண்மையானது.

Puliyila P. O

ஐயா, சீனு அண்டு கம்பெனி அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட "ஸ்பெக் பில்ஸ்" உண்மையிலேயே கர்ப்பத்தடைக்கு நல்ல பலன் தரும்.

Sd. K. V. Nancovaidyan.

WRAPPER PRINTED AT: RAMANATH PRESS, MADRAS - 14

நேஷனல் பிக்சர்ஸ்
பூங்கோதை
அஞ்சலி பிக்சர்ஸ்
தயாரிப்பு
கதை வசனம்:
T.K.கிருஷ்ணசாமி
டைரக்ஷன்:
பிரசாத்